ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஆழ்வாராசாரியர்கள்

வைபவமான

# குருபரம்பரை.

இதில் ஆழ்வார், ஆசாரியர்கள்
வைபவங்களுடன் மற்றுமுள்ள ஆசாரிய
புருஷர்கள் வைபவங்களும் சங்கிரகமாகச்
சேர்க்கப்பட்டிருக்கிறது.

இது

ஸ்ரீமதத்தங்கி திருமலை லக்ஷ்மீந்ருஸிம்ஹ குமார
வித்வத்கல்யாண ஸ்ரீநிவாஸதாதாசாரியர்
அவர்களாலும்,

சே. முத்துகிருஷ்ணநாயுடு அவர்களாலும்
பரிசோதிக்கப்பட்டு,

பத்தி-ராமாநுஜுலுநாயுடவர்கள் குமாரரான
வேங்கடகிருஷ்ணசாமிநாயுடவர்களால்

சென்னை:
ஸ்ரீநிகேதநமுத்ராக்ஷரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

1902

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

இக்கிரந்தமும மற்ற வைஷ்ணவக்ரந்தங்களும் வேண்டுமவர்கள் சென்னை சாவுக்காரபேட்டை அடிபோட்டபிள்ளையார் கோவிலுக்கு மேற்கு விநாயகமுதலிதெரு 6-வது நெம்பர் வீட்டில் பத்தி - வேங்கடகிருஷ்ணஸ்வாமிநாயுடு அவர்களுக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.



ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ஆழ்வாராசாரியர்கள்

## வைபவம்.

நேரிசைவெண்பா.

ஆழ்வார்கள்வாழி யருளிச்செயல்வாழி
தாழ்வியாதுமில்குரவர் தாம்வாழி—யேழ்பாரு
முய்யவவர்க ளுரைத்தவைகடாமவாழி
செய்யமறைதன்னுடனே சேர்ந்து.

ஸ்ரீய:பதியாகியும், ஸ்ரீவைகுண்ட நிகேதனனாகியும், ஸ்ரீமதனந்தமுக நித்யஸூரி பரிஷத் நிஷேவ்யமாணனாகியும், ஸ்ரீபூமி நீளா ஸமேதனாகியும், ஸர்வஜ்ஞனாகியும், ஸர்வவியாபகனாகியும், ஸர்வாந்தர்யாமியாகியும், ஸர்வோத்க்ருஷ்டனாகியும், அவாப்தஸமஸ்தகாமனாகியும், அநாதரக்ஷகனாகியும், ஆஸ்ரிதபலப்ரதனாகியும், ஆதிமத்யாந்தரஹிதனாகியும் லோகஸம்ரக்ஷணார்த்தம் ஹம்ஸமத்ஸ்ய ஹயக்ரீவ கூர்மவராஹாத்யவதாரங்களையுடையவனாகியும், நிரதிசய ஸௌந்தர்ய ஸௌகுமார்ய லாவண்யயௌவநாத்யபரிமிதோதார குணகண திவ்யமங்களவிக்ரஹவிசிஷ்டனாகியும், பரமபாகவதோத்தமர்களது இருதயமாகிய தாமரைமலர்களில் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீமந்நாராயணன்,

அநாதிகர்மவஸ்யர்களான ஜீவாத்மாக்கள், ஜநநமரண துக்கங்களைவிட்டு நீங்கி உஜ்ஜீவிக்குநிமித்தம தமது தேவீபூஷணாயுத பரிஜனங்களை பூலோகத்தில் ஆழ்வார்களாகவும் ஆசாரியர்களாகவும், அவதரிக்கும்படித் திருவுள்ளங்கொண்டருள, அத்திருவுள்ளத்தின்படியே அவர்கள் அவதரித்தார்கள்.



# பொய்கையாழ்வார் வைபவம்.

## தனியன்கள்.

𑌤𑍁𑌲𑌾𑌯𑌾𑌂𑌶𑍍𑌰𑌵𑌣𑍇𑌜𑌾𑌤𑌂 𑌕𑌾𑌞𑍍𑌚𑍍𑌯𑌾𑌂𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑌵𑌾𑌰𑌿𑌜𑌾𑌤𑍍 |
𑌦𑍍𑌵𑌾𑌪𑌰𑍇𑌪𑌾𑌞𑍍𑌚𑌜𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑌂 𑌸𑌰𑍋𑌯𑍋𑌗𑌿𑌨𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑍇 ||

துலாயாம்ஶ்ரவணே ஜாதம் காஞ்ச்யாம்காஞ்சநவாரிஜாத்,
த்வாபரேபாஞ்சஜந்யாம்ஶம ஸரோயோகிநமாஶ்ரயே.

𑌕𑌾𑌞𑍍𑌚𑍍𑌯𑌾𑌂𑌸𑌰𑌸𑌿𑌹𑍇𑌮𑌾𑌬𑍍𑌜𑍇 𑌜𑌾𑌤𑌂𑌕𑌾𑌸𑌾𑌰𑌯𑍋𑌗𑌿𑌨𑌂 |
𑌕𑌲𑌯𑍇𑌯𑌃𑌶𑍍𑌰𑌿𑌯𑌃𑌪𑌤𑌯𑍇 𑌰𑌵𑌿𑌂𑌦𑍀𑌪𑌮𑌕𑌲𑍍𑌪𑌯𑌤𑍍 ||

காஞ்ச்யாம்ஸரஸிஹேமாப்ஜே ஜாதம்காஸாரயோகிநம்,
கலயேயஸ்ஶ்ரிய:பத்யே ரவிந்தீபமகல்பயத்.

ஸ்ரீபாஞ்சஜந்யாம்சரான பொய்கையாழ்வார், துவாபரயுகத்தில் எட்டுலக்ஷத் தறுபத்தீராயிரத்துத் தொளாயிரத்திரண்டாவதான ஸித்தார்த்திவருஷம், ஐப்பசிமாஸம், சுக்லபக்ஷம், அஷ்டமி, செவ்வாய்க்கிழமைகூடின திருவோண நக்ஷத்திரத்தில் கச்சிநகரில் யதோக்தகாரிஸந்நிதிக்கடுத்த பொய்கைபுஷ்கரணியில்விகஸித்த பொற்றாமரைப்பூவினிடமாகத் திருவவதாரஞ்செய்து ஒப்பிலாத பகவத்பக்தியுள்ளவராய் எழுந்தருளியிருந்தார். இவரருளிச்செய்த ப்ரபந்தம் முதல்திருவந்தாதி; நூறுபாட்டு.

## வாழித்திருநாமம்.

செய்யதுலாவோணத்திற்செகதுதித்தான்வாழியே
திருக்கச்சிமாநகரஞ்செழிக்கவந்தான்வாழியே
வையந்தகளிநூறும்வகுத்துரைத்தான்வாழியே
வனசமலர்க்கருவதனில்வந்தமர்ந்தான்வாழியே
வெய்யகதிரோன்றன்னைவிளக்கிட்டான்வாழியே
வேங்கடவர்திருமலையைவிரும்புமவன்வாழியே
பொய்கைமுனிவடிவழகும்பொற்பதமும்வாழியே
பொன்முடியுந்திருமுகமும்பூதலத்தில்வாழியே.



# பூதத்தாழ்வார் வைபவம்.

## தனியன்கள்.

காங்க்ஷாஸ்ய விஷ்ணோஸ்ஸூதம் ஸம்கஜ்ஞாவிஜ்ஞ: |
தீர்லஜ்ஞோ தஜ்ஞோ வாஸ்யா தீவேத்நாஸாஜ்
துலாஸ்ரவிஷ்டாஸம்பூதம் பூதம்கல்லோலமாலிந:
தீரேபுல்லோத்பலே மல்லாபுர்யாமீடே கதாம்ஸகம்.
ஜ்ஞாவை வாரீஸம் ஸாயவீ ஷோஜ்ஞவிஷ்
ஹரிஸம் நமாமியோ விஷ்ணோ: ஜ்ஞாநதீபமகல்பயத்
மல்லாபுரவராதீஸம் மாதவீகுஸுமோத்பவம்,
பூதம் நமாமியோ விஷ்ணோர் ஜ்ஞாநதீபமகல்பயத்.

ஸ்ரீகதாம்சரான பூதத்தாழ்வார், பொய்கையாழ்வாரவதாரத்த தினத்திற்கு மறுதினம் நவமிகூடின அவிட்டநக்ஷத்திரத்தில் திருக்கடன்மல்லை யென்னுந் திருப்பதியில் குருக்கத்திமலரினிடமாக அவதரித்து ஸ்ரீமந்நாராயணனது திருவடிகளில் அத்யந்தபக்தியுள்ளவராய் எழுந்தருளியிருந்தார். இவரருளிச்செய்த ப்ரபந்தம இரண்டாந்திருவந்தாதி; நூறுபாட்டு.

## வாழித்திருநாமம.

அன்பேதகளி நூறுமருளினான் வாழியே
ஐப்பசியிலவிட்டத்திலவதரித்தான் வாழியே
நன்புகழ்சேர்குருக்கத்திநாண்மலரோன் வாழியே
நல்லதிருக்கடன்மல்லைநாதனவன் வாழியே
இன்புருகுசிந்தைதிரியிட்டபிரான் வாழியே
எழில்ஞானச்சுடர்விளக்கையேற்றினான் வாழியே
பொன்புரையுந்திருவரங்கர்புகழுரைத்தான் வாழியே
பூதமுனிதாளிணைகள் பூதலத்தில் வாழியே



# பேயாழ்வார் வைபவம்.

## தனியன்கள்.

துலாஸதபிஷக்ஜாதம் மயூரபுரிகைரவாத் |
மஹாந்தம் மஹதாக்யாதம் வந்தே ஸ்ரீநந்தகாம்ஸஜம் ||

துலாஸதபிஷக்ஜாதம் மயூரபுரிகைரவாத்,
மஹாந்தமமஹதாக்யாதம் வந்தே ஸ்ரீநந்தகாம்ஸஜம்.

த்ருஷ்ட்வா துஷ்டாவ யோ விஷ்ணும் ரமயா மயிலாதிபம் |
கூபே ரக்தோத்பலே ஜாதம் மஹதாஹ்வயமாஸ்ரயே ||

க்ருஷ்ட்வா துஷ்டாவ்யோ விஷ்ணும் ரமயா மயிலாதிபம்,
கூபேரக்தோத்பலே ஜாதம மஹதாஹ்வயமாஸ்ரயே.

ஸ்ரீ நந்தகாம்சரான பேயாழ்வார், பூதத்தாழ்வாரவதரித்ததினத்திற்கு மறுதினமாகச் சனிகூடின சதயநக்ஷத்திரத்தில திருமயிலையென்னுந்திருப்பதியில் ஸ்ரீமாதவப்பெருமாளஸந்நிதிக்கடுத்த திருக்கிணற்றில மலர்ந்த செவ்வல்லிப்பூவினிடமாக வுதயஞ்செய்து ஜகத்ரக்ஷகனான எம்பெருமான் திருவடிகளில் பிரியாவன்புள்ளவராய் எழுந்தருளியிருந்தார் இவர் அருளிச்செய்த ப்ரபந்தம் மூன்றாந்திருவந்தாதி; நூறுபாட்டு.

## வாழித்திருநாமம்.

திருக்கண்டேனெனநூறுஞ்செப்பினான்வாழியே
சிறந்ததுலாச்சதயநாள்செனித்தவள்ளல்வாழியே
மருக்கமழுமயிலைநகர்வாழவந்தோன்வாழியே
மலர்க்குருயர்நெய்தன்மலர்வந்துதித்தோன்வாழியே
நெருக்கிடவேயிடைகழியினின்றசெல்வன்வாழியே
நேமிசங்கன்வடிவழகைநெஞ்சில்வைப்போன்வாழியே
பெருக்கமுடன்திருமழிசைப்பிரான்றொழுவோன்வாழியே
பேயாழ்வார்தாளிணைகள்பெருநிலத்தில்வாழியே.

ஜனனமரண துக்கங்களை நீக்கிப் பரமபதத்தை யடைவிப்பதற்கு ஸ்ரீமந்நாராயணனுடைய திவ்யசரணாரவிந்தபக்தியும் பாகவத ஸேவைகளுந் தவிர வேறு கத்யந்தரமில்லையென்னும் எதார்த்த ஞானமுடையவர்களாய் அந்தத்துக்கங்களுக்குஹேதுவாகிய கிருத்தியங்களைச்செய்து உழலுகின்ற ஆத்மாக்கள் அதையொழித்து ஸ்ரீமந்நாராயணனது திருவடிகளில் பக்திவைத்துப் பரமபதத்தையடையத்தக்க முயற்சி செய்யவேண்டுமென்று திருவுள்ளங்கொண்டு, தங்கள் தங்கள் அவதாரஸ்தலங்களிலேயே எழுந்தருளியிருந்த இந்தமுதலாழ்வார்கள் மூவரும் அநித்தியமாகிய தேகத்தையெடுத்து நிஸ்ஸாரமான ஸம்ஸாரஸாகரத்தில் வீழ்ந்தழுந்தாது ஸதா பகவத் குணானுபவஞ் செய்துகொண் டெழுந்தருளியிருக்கின்ற பாகவதர்களையும், திவ்யதேசங்கள்தோறும் அர்ச்சாவதாரங்கொண்டெழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானையும் ஸேவிக்கவேண்டுமென்னுந் திருவுள்ளமுள்ளவர்களாய்த் தங்கள் தங்கள் அவதாரஸ்தலங்களைவிட்டுத் தனித்தனியாகப்புறப்பட்டு, திவ்யதேசங்கள்தோறுமெழுந்தருளிபகவத்ஸேவைசெய்து, பாகவதர்களைத்தேடிக்கொண்டு எழுந்தருளிவரும்போது இம்முதலாழ்வார்கள்மூவரும் தக்ஷிணபிநாகியென்கிற பெண்ணைநதியின்தென்கரையில் ஸ்ரீயஃபதியான ஆயனாரெழுந்தருளியிருக்கும் திருக்கோவலூருக்குஒருவரையொருவர் அறியாதவர்களாய்வந்துசேர்ந்து, எம்பெருமான் ஸந்நிதிக்கெழுந்தருளி மங்களாசாஸனஞ்செய்த, வெகுவிதமாக ஸ்தோத்ரங்கள்பண்ணி, ஆனந்தபரவசர்களாய்த் திருமந்த்ர ஜபஞ்செய்துகொண்டு தனித்தனியாக வெவ்வேறிடங்களில் எழுந்தருளி யிருந்தார்கள்.

சூரியாஸ்தமயமான பின்பு முதலில்பொய்கையாழ்வார் ஒரு பாகவதருடைய திருமாளிகைக் கெழுந்தருளி அத்திருமாளிகையின் இடைகழியில் சயனித்துக் கொண்டிருந்தார். பின்பு பூதத்தாழ்வாரும் சயனித்துக்கொள்ள இடந்தேடிக்கொண்டு பொய்கையாழ்வார் சயனித்துக்கொண்டிருக்கின்றதிருமாளிகையின்வாசலில்வந்து நின்றுகொண்டு இந்தத்திருமாளிகைக்குள்ளே யிருக்கின்றவர்களார்? அடியேன் படுத்துக்கொள்வதற்கு இத்திருமாளிகையி லிடமுண்டோவென்றுகேட்க, சயனித்திருந்த பொய்கையாழ்வார் கதவைத்திறந்து ஸ்வாமிந் அடியேன்படுத்திருந்தவிடம் ஒருவர்படுக்கவும், இருவரிருக்கவும் தக்கதாயிருக்கின்றது. தே

வரீரெழுந்தருளினால் இருக்கலாமென்றுசொல்ல, இவருமுள்ளே யெழுந்தருளி இருவருமாயிருந்தார்கள். அதன்பின்பு பேயாழ்வாரும் அப்படியே இடந்தேடிக்கொண்டு அந்தத்திருமாளிகையின் வாசலில்வந்து இத்திருமாளிகையிலெழுந்தருளியிருக்கிறஸ்வாமிகளார்? இங்குபடுக்கஇடமுண்டோவென்றுகேட்க, உள்ளேயெழுந்தருளியிருந்த இரண்டுதிருநாமங்களும் எழுந்து கதவைத்திறந்து இந்தத்திண்ணை ஒருவர் படுக்கவும், இருவரிருக்கவும், மூவர் நிற்கவுமேயிடமுள்ளது, தேவரும் எழுந்தருளினால் நிற்கலாமென்று சொல்ல, இவரும் உட்புகுந்து மூவருமாய் நின்றார்கள்.

அப்போது பக்தவத்ஸலரான பகவான் நிற்பதற்குங்கூடாத நெருக்கமுண்டாகும்படிசெய்தருள,—ஆழ்வார்கள் மூவரும் அதை ஸஹியாதவர்களாகி, இதுபர்யந்தமில்லாத நெருக்கம் இப்போதுஸம்பவித்ததற்கு ஹேதுவென்னவென்று ஒருவர்க்கொருவர் ஸந்தேஹித்தது ஞானதிருஷ்டியால் பார்க்கும்போது ஸ்ரீமந்நாராயணன் லக்ஷ்மீஸமேதராய் ஸேவை ஸாதித்தருளக்கண்டு கண்களிலிருந்து ஆனந்தபாஷ்பம் ஆறாகப்பெருகியோட, ஆபத்பாந்தவா! அபாரகருணாம்புதே! ஆஸ்ரித வாத்ஸல்யைகஜலதே! என்று வெகுவிதமாக ஸ்தோத்திரஞ்செய்து ஆனந்தபரவசர்களாய் அநேகந்தடவை தண்டவத்ப்ரணாமங்களைச்செய்து கைகளைக்குவித்துநின்றுகொண்டு, நின்திருவயிற்றில் அகிலாண்டங்களையுந்தோற்றுவித்து அவ்வண்டங்களில் நால்வகையோனி - யெழுவகைத் தோற்றம் - எண்பத்து நான்கு நூறாயிரம் யோனிபேதமான ஜீவகோடிகளை யுண்டுபண்ணுநிமித்தம் நாபீகமலத்தில் பிரம்மாவைச் சிருஷ்டித்து அவைகளை ஸம்ஹரிக்கு நிமித்தம் அப்பிரமனிடமாக உருத்திரனைச் சிருஷ்டித்து ஆத்மாக்களை ரக்ஷிக்கும் ஸத்வகிருத்தியத்தை மேற்கொண்ட லோகாராட்டியனே! உமது திருவடிகளில் ஸதா பக்தி வைத்திருக்கவும பரமபாகவதர்களை ஸேவித்துக்கொண்டு அந்த மஹான்களுடன் கூடியிருக்கவும், தேவரீரது திவ்யமங்கள குணங்களைச்சேர்த்து இனியசொற்களாகிய மலர்களைக்கொண்டு பாமாலைதொடுத்துத் திருவடிகளுக்கு அன்புடன் ஸமர்ப்பிக்கவும், கிருபைசெய்தருளவேண்டுமென்று ப்ரார்த்திக்க, சங்க-சக்ர-கதா-சார்ங்க-நாந்தக-ஸ்ரீவத்ஸங்களையுடையவனும் லக்ஷ்மீவல்லபனுமாகிய ஸ்ரீமந்நாராயணன் தம்முன்கண்ணீர்பெருகிக்கைகுவித்து நின்றுகொண்டிருக்கின்ற

ஆழ்வார்கள் மூவரையும் கிருபையோடு கடாக்ஷித்தருளி நம்மிடத்தில் ஸதாகாலமும் பக்திவைத்திருக்கிற பாகவதசிரேஷ்டர்களே! நாம் உங்கள் இருதயத்தைவிட்டு எவ்விடத்திலும் எக்காலத்திலும பிரிந்திருப்பதில்லை, இனிநீங்கள் லோகத்தில் அஜ்ஞாநாந்தகாரத்திலே அழுந்தி நம்மையடையத்தக்க வுபாயங்களை யறியாத ஆத்மாக்கள் அவ்வந்தகாரத்தினின்று நீங்கி அவ்வுபாயங்களையறிந்து பரமபதத்தை யடையுநிமித்தம வேதார்த்தங்களை வெளியிட்டுப் பின்பு நமதிடம் வந்துசேருங்களென்று திருவாய்மலர்ந்தெழுந் தருளினார்.

அப்போது இம்மூன்று திருநாமங்களும் எம்பெருமான் தங்களிடத்தில் நிரவதிகமான கிருபைவைத்துத் திருவாய்மலர்ந்தருளிய விதத்தை நினைத்துநினைத்து அத்யந்தானந்த பரவசர்களாய் ஸ்வாமி ஸேவைஸாதித்தருளி ஸ்வல்பகாலத்திலேயே அந்தர்த்தானமா யெழுந்தருளிவிட்டதைக்குறித்து மனமுருகிக் கண்கள் நீர்சொரியநின்று ஓமிட்டழைத்த கஜேந்திராழ்வானைக் காத்தருளியகிருபாஸமுத்திரமே! எங்களுக்கு ஸதாவுனதுஸேவைகிடைக்கும்படி கிருபைசெய்தருளவேண்டுமென்று ப்ரார்த்தித்துப் பின்பு பொய்கையாழ்வார் தேஹளீசனென்னுந் திருநாமத்தையுடைய ஸ்ரீமந்நாராயணனைத் தாம்ஸேவித்த வநுபவந்தோன்ற ஜனனமரணமென்னும் வியாதிகளைநீக்குவதற்கு ஒப்பற்ற ஔஷதமாகவும் ஸம்ஸாரமென்னும் ஸாகரத்தினின்று நீக்குவதற்கு அழிவில்லாத கப்பலாகவும் தேவாமிருதம்போன்ற மதுரமானசொற்பொருள்களைக்கொண்டு ஸ்ரீமந்நாராயணனது திவ்ய குணாநுபவங்களையமைத்து மெய்யன்பினால் * (வையந்தகளி) யென்று முதலெடுத்து நூறுதிருவெண்பாக்களாலாகிய திருவந்தாதியென்னுந் திவ்ய ப்ரபந்தம் செந்தமிழினால் பாடியருளினார். பூதத்தாழ்வார் ஸ்ரீமந்நாராயணனை அன்பினால் தாம்ஸேவித்த அநுபவந்தோன்றப் பரமபதத்திலே ஏறுவதற்குத்தக்க ஸோபானமாக வேதஸாராம்சங்களை யமைத்துச் செந்தமிழில் இனிய சொற்பொருள்களால் ப்ரேம புரஸ்ஸரமாய் § (அன்பேதகளி)

---

* வையந் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச்—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினன்சொன் மாலை
இடராழி நீங்கவே யென்று.

§ அன்பே தகளியா வார்வமே நெய்யாக
வின்புருகு சிந்தை யிடுதிரியா—வன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினே னாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்.

யென்று முதலெடுத்து நூறு திருவெண்பாக்களாலாகிய திருவந்தாதியென்னும் திவ்ய ப்ரபந்தத்தைப் பாடியருளினார்.

பேயாழ்வார் லக்ஷ்மீஸமேதனை ஸ்ரீமந்நாராயணனை பக்தி பூர்வமாகத் தாம்ஸேவித்த அநுபவந்தோன்றப்ப்ரபஞ்சதுக்கமென்னுங் கோடையை நீக்கத்தக்க வருஷமாக சுருதியர்த்தங்களையமைத்து ரஸபுஞ்சமான தமிழ்ச்சொற்பொருள்களால் * (திருக்கண்டேன்)என்று முதலெடுத்து நூறுதிருவெண்பாக்களாலாகியதிருவந்தாதியென்னும் ஒருதிவ்ய ப்ரபந்தத்தைச்செய்தருளினார். இந்தப்ரகாரம் முதலாழ்வார்களான இம்மூன்று திருநாமங்களும் ருக்வேத யசுர்வேத ஸாமவேதார்த்தங்களைத் தமிழிற் ப்ரகாசமாகச்செய்து அன்னியமதங்கள் தாழ்வடையவும் ஸ்வமதம் தழைத்தோங்கவும், அனேககாலம் விசேஷமஹிமையுடனெழுந்தருளியிருந்து பின்பு பரமபதத்துக் கெழுந்தருளினார்கள்.

## நேரிசைவெண்பா.

ஐப்பசியி லோண மவிட்டஞ் சதயமிவை
ஒப்பிலவா நாட்க ளுலகத்தீர்—எப்புவியும்
பேசுபுகழ்ப் பொய்கையார் பூதத்தார் பேயாழ்வார்
தேசுடனே தோன்று சிறப்பால்.

## முதலாழ்வார்கள் வைபவம்

முற்றிற்று.

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழு
மருக்க னணிநிறமுங் கண்டேன்—செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கங் கைக்கண்டே
னென்னாழி வண்ணன்பா லின்று.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.



# திருமழிசை யாழ்வார் வைபவம்.

𑌮𑌘𑌾𑌯𑌾𑌂𑌮𑌕𑌰𑍇𑌮𑌾𑌸𑍇 𑌚𑌕𑍍𑌰𑌾𑌂𑌶𑌂𑌭𑌾𑌰𑍍𑌗𑌵𑍋𑌦𑍍𑌭𑌵𑌮𑍍 ।
𑌮𑌹𑍀𑌸𑌾𑌰𑌪𑍁𑌰𑌾𑌧𑍀𑌶𑌂 𑌭𑌕𑍍𑌤𑌿𑌸𑌾𑌰𑌮𑌹𑌂𑌭𑌜𑍇 ॥

மகாயாம்மகரேமாஸே சக்ராம்சம்பார்க்கவோத்பவம்|
மஹீஸாரபுராதீசம் பக்திஸாரமஹம்பஜே||

𑌶𑌕𑍍𑌤𑌿𑌪𑌞𑍍𑌚𑌮𑌯𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑍇 𑌶𑍁𑌕𑍍𑌤𑌿𑌕𑌾𑌰𑌜𑌤𑌚𑌿𑌤𑍍𑌤𑌹𑌾𑌰𑌿𑌣𑍇 ।
𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌦𑌾𑌯𑌕𑌮𑍁𑌰𑌾𑌰𑌿𑌪𑌾𑌦𑌯𑍋𑌃 𑌭𑌕𑍍𑌤𑌿𑌸𑌾𑌰𑌮𑍁𑌨𑌯𑍇𑌨𑌮𑍋𑌨𑌮𑌃 ॥

ஸக்திபஞ்சமயவிக்ரஹாத்மனே ஸூக்திஹாரஜதசித்தஹாரிணே|
முக்திதாயகமுராரிபாதயோர் பக்திஸாரமுனயேநமோநம:||

ஸ்ரீமந் நாராயணனிடத்தில் அவிச்சின்னமான அந்தரங்க பக்தியையுடைய பாகவதாக்ரகண்யர்களான பார்க்கவர் முதலான மஹரிஷிகள், இந்த பூலோகத்திலுள்ள ஜீவாத்மாக்கள் தம்மைச்சேவித்து ஜனனமரணாதி துக்கங்கள் நீங்கிக் கிருதார்த்தர்களாகும் பொருட்டு ஸ்ரீமந்நாராயணன் கிருபையினால் அர்ச்சாவதாரங்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற திவ்யதேசங்களுள் பூர்ணம்சத்துடன் ஸதாகாலமும் ஸ்ரீமஹாலக்ஷ்மீ ஸமேதராய் எழுந்தருளி யிருக்கின்ற திவ்ய தேசத்தில் தாங்கள் ஸதாகாலமும் வாஸஞ்செய்யவேண்டுமென்கிற அபிப்பிராயமுடையவர்களாய் அந்த திவ்யதேசமின்னதென்று அறிந்துகொள்ளும்படி ஸத்யலோகத்திற்குப்போய்ப் பிரமனைக்கண்டு அஞ்சலியஸ்தர்களாய் நின்றுகொண்டு பூலோகத்தில் ஸ்ரீமந்நாராயணன் எழுந்தருளியிருக்கின்ற திவ்ய தேசங்களில் தமது பூர்ணம்சத்துடன்

ஸதா எழுந்தருளியிருக்கின்ற திவ்யதேசமெதுவோ, அதனை யின்னதெனத் தெரிவிக்கவேண்டுமென்று பிரார்த்திக்க அது கேட்டு பிரமாவானவர் உளமகிழ்ந்து பூலோகத்தில் திருமழிசையென்றோர் திவ்யதேசமிருக்கின்றது; அதில் ஸ்ரீமந்நாராயணன் பூர்ணம்சத்தோடு ஸதாகாலமு மெழுந்தருளியிருக்கின்றார். அந்த திவ்யதேசத்திற்குச் சமானமான ஸ்தலங்கள் வேறில்லையென்றுசொல்ல, அதுகேட்டு ரிஷிகள் அதிசந்துஷ்டர்களாய் அந்த திவ்யதேசத்தின் மஹிமையை எங்களுக்குக்காண்பிக்கவேண்டுமென்றுப்ரார்த்திக்க, பிரம்மாவும் அவர்களை அழைத்துக்கொண்டு திருமழிசைக்குவந்து ஒரு தராசுக்கோலில் திருமழிசையை யொருதட்டிலும், மற்ற திவ்யதேசங்களை மற்றோர்தட்டிலும் வைத்து நிறுத்துத் திருமழிசையைவைத்த தட்டு கனத்தினால் மேலெழும்பாதிருந்ததையும் மற்ற திவ்யதேசங்களை வைத்த தட்டு இலேசினால் மேலெழும்பியதையுங்காண்பிக்க, அதைக்கண்டரிஷிகளெல்லாம் அத்யாச்சரியமடைந்து சதுர்முகனைப் புகழ்ந்துகொண்டாட அவர் ஸத்திய லோகத்துக்கு போனார். அவர்போனபின்பு அந்தத் திருமழிசையென்னுந் திவ்யதேசத்தி லெழுந்தருளிய எம்பெருமானது திருவடிகளை யிடைவிடாமல் பக்தி பூர்வகமாகஸ்மரித்துக்கொண்டும், திருமந்திரங்களை ஜபித்துக்கொண்டும் வாஸஞ்செய்திருந்தார்கள். இந்தப்பிரகாரம்வாசஞ்செய்திருந்த ரிஷிகளுள் பார்க்கவரென்பவர் ஓர் யாகஞ்செய்ய அதற்குஉவந்து ஸ்ரீமந்நாராயணன் பிரத்தியக்ஷமாய் பக்தி வைராக்கியங்களுடன் நீர் செய்தயாகத்திற்குஸந்தோஷமடைந்தோம். உமக்குவேண்டுவதுயாதென்றருள அதற்கவர் தேவர்கொடுக்கவேண்டுவதும், அடியேன்பெறவேண்டுவதும், தேவர் திருவுள்ளமகிழ்ச்சியேயென்று விண்ணப்பஞ்செய்ய அதுகேட்டருளி உலகத்திலுள்ள ஜீவாத்மாக்களை அனாதிகர்மத்திலிருந்து நீக்கிப் பரமபதத்தை யடைவிக்கும்படி நம் திருவாழியாழ்வான் உமக்குப் புத்திராக அவதரிக்கஅநுக்ரஹித்தோமென்று திருவாய்மலர்ந்து அந்தர்த்தானமாக எழுந்தருளினார்.

பின்பு ஸ்வாமியநுக்ரஹத்தின்படி முதலாழ்வார்கள் அவதரித்த-யுகவருஷத்தில்-தைமாசம் கிருஷ்ணப்ரதமை - பாநுவாரங்கூடிய மகநக்ஷத்திரத்தில் பார்க்கவருக்குப் புத்திரர் அவதரித்தருள அப்புத்திரனைப்பார்க்கவர் கண்டு களிப்புடையவராய் அவ்

விடத்திலிருந்த ஓர்பிரப்பஞ்செடி நிழலில்கிடத்திவிட்டுத்தாம்தவ ஞ்செய்துகொண்டிருந்தார். அப்போது அந்தக்குழந்தையானது ரோதனம்பண்ண அதுகேட்டு லோகமாதாவான ஸ்ரீமகாலக்ஷ்மீ அவ்விடத்துக்குவந்து தமது திருமுலைப்பாலை ஒருவள்ள ய்துவைத்து அந்தச்சிசுவின்வாயில் ஒவ்வோர்துளியாய் அநுக்ரஹஞ் செய்து அந்தர்த்தானமானாள். அப்படி ளிகளை அப்புத்திரர் உண்டுகொண்டிருக்குநாளில் ஒருநாள் மழிசைக்கடுத்தவிடத்தில் நாள்தோறுங்கூடைகட்டிவிற்று ஜீவ னஞ்செய்துவருகின்றதிருவாளனென்னும் பெயருடைய வேடன் தன் மனைவியாகியபங்கஜவல்லி யென்பவளுடனே பிரம்பு வெட் டிக்கொண்டு போகும்படி அந்தப் பிரப்பங்காட்டில் நுழைந்து அவ்விடத்திற் கிடத்தியிருந்த குழந்தையைக் கண்டு தாம் நெடு நாளாகப் புத்திரனில்லாது வருந்தி யிருந்தவர்களானபடியால் அதிக ஸந்தோஷங்கொண்டு நமக்கு இந்தக் குழந்தையை ஸ்ரீம ந்நாராயணனே கிருபைசெய் தளித்தாரென்று ஆசையுடனேயெ டுத்து உச்சிமோந்து மார்பிலணைத்துக்கொண்டு தம்மிருப்பிடத் திற்கு வந்து சேர்ந்தார்கள். பின்புபங்கஜவல்லி வந்தியையாயிருக் கச்செய்தேயும் முலைப்பாலுண்டாகி ஸ்தந்யங்கொடுக்க ஆழ்வார் முலைப்பாலில் நிராசையுள்ளவராய் ஸ்தந்யபானம் பண்ணாமல் யாவரும் ஆச்சரியப்படும்ப[illegible]ருக்கு நாள் வளர்ந்துவர அது கண்டு அதிசயித்து ஒரு சூத்ர விருத்தன் தன்வீட்டில்கறக்கின்ற பசுவின்பாலைப் பரிசுத்தமாகக் கறந்தெடுத்துக் கொண்டுபோய் அவ்வாழ்வாருக்கு நாள்தோறுங்கொடுத்து சேஷத்தைப் பத்தினி யுந் தானுமாகப் புசித்துவர அதனாலவர்களுக்கு ஒரு புத்திரனுண் டாக அந்தக் குழந்தைக்குக் கணிகிருஷ்ணனென்று பெயரிட்டு அதிக ஸந்தோஷத்துடன் வளர்த்துவர அக்கணி கிருஷ்ணரும் கல்வியென்னுங் கடலைக் கரைகண்டவராக விருந்தார்.

இவரிவ்வாறிருக்கத் திருவாளனும் பங்கஜவல்லியும் வளர்த்து வர அத்புதமாக வளர்ந்துவருகின்ற ஆழ்வாரும் கற்பிக்கின்ற ஆசாரியனில்லாமல் தமக்குத் தாமே எட்டுவயதிலேயே ஸகல சாஸ்த்ர ப்ரவீணராய்த் தம்மை வளர்த்துவந்த திருவாளனையும் பங்கஜவல்லியையும் விட்டு வெளிப்பட்டு பல வேறுவகைப்பட்ட மதங்கள்தோறும் பிரவேசித்து அந்தந்த மதங்களிலும் சிலகாலங் கிருந்து அந்தந்த மதசந்தரங்களை யாராய்ந்து எம்மதத்திலும்

யதார்த்த ஞான முண்டாகாமையினால் இவைகளினால் நித்யவஸ்துவைக்காண்பது குருடனைக்கொண்டு வழிகாண்பதுபோலிருக்கின்றதென்று வெறுத்து ஒன்றிலும் மனம் நிலைபடாமல் சஞ்சலப்பட்டுக்கொண்டு நானூறுவருஷம உறுதியான வழியை யறியாது மகத்தான வியாகுலத்துடன் எழுந்தருளியிருந்தார்.

அப்போது ஸ்ரீமந்நாராயணன் அந்த ஆழ்வாருக்குத் தமது நிஜஸ்வரூபத்தை ஸேவை ஸாதித்தருளி யதார்த்தமாகிய நித்தியவஸ்து தாமேயென்று அறிந்துகொள்ளும்படி ஞானதிருஷ்டியைக்கொடுத்தருள அந்த ஞானதிருஷ்டியைப் பெற்றுக்கொண்ட திருமழிசையாழ்வார் ஸ்ரீமந் நாராயணனுடைய ஸ்வரூபத்தை யுள்ளும் புறமுங் கண்டு அளவிடப்படாத ஆனந்தமடைந்து கைகளைக் குவித்துக்கொண்டு ஸ்ரீமந்நாராயணனே உம்மை நித்தியவஸ்துவென்று அறிந்துகொண்டு நித்தியானந்தானுபவம் செய்யாமல் ஐயோ நெடுங்காலம் கல்பிதமான சமயங்களாகிய குழிகளில் வீழ்ந்து வீழ்ந்து புத்திமயங்கி நிஷ்பலமாகிய அச்சமய சாஸ்திரங்களைக் காக்கைபோற் கதறிக் கற்று வீணாள் கழித்தேன். இனி கடைத்தேறும்படி அடியேனைக் காத்தருளவேண்டும் புருஷோத்தமனே யென்று துதித்துநிற்க அப்போது ஸ்ரீமந்நாராயணன் [illegible] நாமே யும்மைச் சமயங்கள்தோறும் போய் அச்சமயதந்திரங்களை யெல்லாமாராய்ச்சி செய்வித்தோம். இனி உலகத்திலுள்ள ஜீவாத்மாக்களெல்லாம நித்தியவஸ்துவாகிய நமது நிஜஸ்வரூபத்தை யறிந்து பக்திசெய்து பரமபதத்தை யடையும்படி அனேக மகத்துவங்களைச்செய்து பக்திஸாரரென்னும் பெயர் பெற்றுப் பின்பு நமது பரமபதத்தை யடைவீரென்று அனுக்கிரகித்து அந்தர்த்தானமா யெழுந்தருளினார்.

பிறகு ஆழ்வார் யோகத்தி லெழுந்தருளியிருந்து ஒருக்கால் சந்தாசேவநம்செய்யாநிற்க, ருத்திரன் மலைமகளுடன் ஆகாயமார்க்கமாகச் செல்லும்போது அந்த நிழல் தம்மேல்விழாதபடி ஆழ்வார் ஒதுங்கக்கண்டு, அவ்வுருத்திரன் ஆழ்வாரிடத்துக்கு வந்து உமக்கு வேண்டுமவற்றைக் கேட்பீராயின் தருகிறோமென்று சொல்ல, ஆழ்வார் நமக்கொன்றும் வேண்டாமென்ன, ருத்திரன் நம்வருகை வீணாகாமல் ஏதேனுங் கேளுமென்ன, ஆழ்வார் மோக்ஷந்தர வல்லையோவென்ன, ருத்திரன், அது என்னாலாகாதென்ன, ஆழ்வார் இன்று சாவானை நாளை சாகும்படி செய்யவல்லை

யோவென்ன, ருத்திரன் அது கர்மாநுகுணமன்றோவென்ன ஆழ்வார் ஆயின் ஊசிபோகும்வழியே நூலும் வரும்படி வரந்தருவையோவென்ன, ருத்திரன்கோபித்து ஆழ்வாரைத் தகிக்கும்படி நெற்றிக்கண்ணைத் திறந்துவிட, ஆழ்வார் அதற்குப் பிரதியாகத் தமது திருவடியிலிருக்கும் கண்ணைத்திறந்து நெற்றிக்கண்வெம்மையையடக்கிவிட, ருத்திரன் அக்கண்ணின் ஜ்வாலையடங்க மழை பொழியும்படி மேகங்களையேவ அவைகள் மழை பொழிந்தும் ஆழ்வார் சலியாமலிருப்பது கண்டு ருத்திரன் ஆழ்வார் வைபவத்தைக் கொண்டாடிக்கொண்டு சென்றனர். அதன் பிறகு சுக்திஹாரன் என்னும் கேசரனொருவன் வ்யாக்ர வாகனத்துடன் ஆகாயத்திற்செல்ல, ஆழ்வாருக்கு நேரே வ்யாக்ரம் அசையாமல் ஸ்தம்பித்து நிற்க, அவன் அதைக்கண்டு ஆழ்வாரிடத்துக்கு வந்து ஆழ்வாருக்குத் திவ்யமான கவசமொன்று காட்டி இதைத்தரியுமென்று சொல்ல, ஆழ்வார், தமது ஸங்கல்பத்தாலே சூரியபிரகாசமான ஒரு கவசமொன்று காட்ட, மறுபடியுமவன் தான் அணிந்திருந்த ஹாரத்தை ஆழ்வாருக்குக் கொடுக்கவர ஆழ்வாரும் நவரத்னமாலையொன்றை அவனுக்குக்காட்ட, அவன் வெட்கி ஆழ்வாரை வந்தனைவழிபாடுகள் செய்துவிட்டுப்போனான். பிறகு கொங்கணசித்தன் என்னும் ரஸவாதி யொருவன் ஆழ்வாரிடத்துக்குவந்து காணி கோடியை பேதிப்பதான குளிகையொன்றைக் காட்ட ஆழ்வார் தமது திருமேனியின் புழுதியோடு காதுகுறும்பியை யுருட்டிக்கொடுத்து இது காணிகோடாகோடியை பேதிக்குமென்று சொல்ல அவன் அப்படியே பரிக்ஷித்துப்பார்த்து ஆழ்வார் சொன்னது உண்மையாயிருப்பது கண்டு பலவாறு தோத்திரஞ்செய்து கொண்டு சென்றனன்.

அனந்தரம் திருமழிசைப்பிரானும் ஒரு ஏகாந்த ஸ்தலத்தில் யோகஞ் செய்துகொண்டிருக்கும்போது முதலாழ்வார்கள் மூவரும் திவ்ய தேசயாத்திரை பண்ணிக்கொண்டு வரும்போது திருமழிசைக்கெழுந்தருளி அத்திருப்பதியெம்பெருமானைச்சேவித்து அங்கு திருமழிசை யாழ்வாரைக்கண்டு மனமகிழ்ந்து பரஸ்பரம் ப்ரீதர்களாய்ச் சிலநாள் அந்தஸ்தலத்திலே யெழுந்தருளியிருந்து பின்பு நால்வருமாகத் திருவல்லிக்கேணியென்னும் திவ்ய தேசத்திற்குவந்து ஸந்நிதிக்கெழுந்தருளி ஸ்ரீ அழகிய சிங்கரையும், ஸ்ரீ பார்த்தஸாரதி முதலான எம்பெருமான்களையும் ஸேவித்து முத

வாழ்வார்கள் மூன்று திருநாமங்களும் திருமழிசைப்பிரானைத் தனியேவிட்டுத் திவ்யதேச யாத்திரைக் கெழுந்தருளினார்கள்.

திருமழிசைப்பிரானும் எழுநூறு ஸம்வத்ஸரம் திருவல்லிக் கேணியி லெழுந்தருளியிருந்த பின்பு ஸ்ரீமந்நாராயணன் திருவெஃகாவுக்குப் போகும்படி ஆக்ஞாபிக்கத் திருமழிசையாழ்வாரும் திருவல்லிக்கேணியைவிட்டுப் பெருமாள்கோவிலுக்குப் போய் பேரருளாளனைச் சேவித்துத் திருவெஃகாவுக் கெழுந்தருளி அத்திருப்பதி யெம்பெருமானைச்சேவித்து அங்கு எழுநூறு வருஷம் யோகத்தி லெழுந்தருளி யிருந்தார்.

அப்போது முன் திருமழிசைப்பிரான் உண்டு மிகுந்த பாற் சேஷத்தினால் வ்ருத்தவிருத்தனிடத்து ஜனித்து ஸகல சாஸ்திர வல்லவனாகி ஸ்ரீமந் நாராயணனிடத்திலும் திருமழிசைப்பிரானிடத்திலும் ஸதாபக்தி வைத்திருக்கின்ற கணிகிருஷ்ணனென்னும் ஏகாந்தபக்தன், திருமழிசைப்பிரான் திருவெஃகாவி லெழுந்தருளியிருப்பதைக் கேள்விப்பட்டு அந்தஸ்தலத்துக்கு வந்து ஆழ்வாரைக்கண்டு தண்டன் சமர்ப்பித்து அவருக்குக் கைங்கர்யஞ் செய்துகொண்டிருக்கும்போது திருவெஃகாவி லெழுந்தருளிய எம்பெருமான் திருவுள்ளமுகக்கும்படி ஸந்நிதியில் கைங்கர்யங்களைச் செய்துகொண்டிருக்கிற ஒரு விருத்தையைக்கண்டு ஸந்தோஷித்து நாள்தோறும் இளைக்காமல் எம்பெருமான் சந்நிதியில் கைங்கர்யஞ்செய்து வரும்படி யௌவனப்பருவ முடையவளாக ஒரு பாடலால் அனுக்கிரகித்தருள அந்த விருத்தையும் வார்த்திகப்பருவம்போய் யௌவனப்பருவ முடையவளானாள். அதையறிந்த பல்லவராஜனென்னும் அந்நகரத்தை யாளுமரசன் அனேக திரவியங்களும் விலையுயர்ந்த ஆடையாபரணங்களு மெடுப்பித்துக் கொண்டு கணிகிருஷ்ணரிடத்து வந்து எதிரேவைத்து எக்காலத்திலும் வாலிபனாயிருக்கும்படி அடியேன் விஷயமாக ஒருகவி சொல்லவேண்டுமென்றுபிரார்த்திக்க அதுகேட்டு கணிகண்ணன் எம்பெருமானையும் அவரிடத்து பக்திவைத்த பாகவதர்களையும் துதிக்கின்ற என் நாவைக்கொண்டு மற்றவர்களைத் துதிசெய்யேன் நீர் கொடுக்குந் திரவியங்களும் விசேஷமான ஆடைமுதலான வைகளுஞ் சரியாகும்; உமதுசிநேகமும் தயவும் வேண்டுகின்றவர்களிடத்தில் இப்படிப்பட்ட வசனத்தைச் சொல்லும்; எம்மிடத்தில் சொல்லாதேயு மென்றுசொல்ல அதுகேட்டுப்பல்லவராஜன்

நீர் என் விஷயமாகப்பாடுவதற்குச் சம்மதமில்லாதவரானால் என் அரசாட்சிக்குட்பட்ட தேசத்திலுமிருப்பதற்குச் சம்மதமில்லாதவராக வேண்டும். ஆதலால் இனி யித்தேசத்தை விட்டுப்போவதே உமக்குத் தகுதியென்றுசொல்ல அதுகேட்டு கணிகிருஷ்ணர் அரசனே; நீ முழுவதும்ஸ்வதந்த்ரமில்லாத அல்பதேசத்தையிடமாகக்கொண்டு ஆளுகின்றாய்; என்றும் ஸர்வ ஸ்வதந்த்ரமுள்ள ப்ரபலதேசமாகிய பரமபதத்தை யிடமாகக் கொண்டாளுகின்ற ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடிகளைப் பற்றியிருக்கின்ற நாம் உன் ஆக்கினைக் குட்படுவதில்லை; இந்த க்ஷணமே உனது தேசத்தை விட்டுப் போய்விடுகிறோமென்று சொல்லிப்புறப்பட்டுத் திருமழிசையாழ்வாரிடத்து வந்து ஸேவித்து நின்றுகொண்டு தமக்கும் அரசனுக்கும்நடந்தவிருத்தாந்தங்களை விண்ணப்பஞ்செய்து அடியேன் இத்தேசத்தை விட்டுப் போவதற்குத் தேவரீர் திருவுள்ளங்கொண்டு விடைகொடுத்தருள வேண்டுமென்று ப்ரார்த்திக்கத் திருமழிசைப்பிரானுங் கணிகிருஷ்ணரைப்பார்த்து உமக்கு உசிதமில்லாத இந்தத் தேசம் நமக்கும் உசிதமன்று; நாமும் உம்முடன்கூட வருகின்றோமென் றெழுந்து திருவெஃகாவிலெழுந்தருளிய எம்பெருமானை யடிபணிந்து அரசன்சொல்லிய அக்கிரமங்களை ஸந்நிதியில்விஜ்ஞாபனஞ்செய்து ஸ்வாமீ! பக்தர்களுக்குச் சம்மதமில்லாத தேசம் தேவருக்கும் ஸம்மதமிராதாகையால் தகுதியுள்ள தேசத்திற்கு எழுந்தருளவேண்டுமென்று சொல்லிவிட்டுத் தாம் கணிகண்ணன் பின்றொடர்ந்து எழுந்தருளினார். பின்பு அந்தஸ்தலத்து எம்பெருமானும் பிராட்டியுடன் திருமழிசையாழ்வாருக்குப் பின்னே எழுந்தருளினார்.

பின்பு திருவாராதனம் பண்ணும்படி ஸந்நிதிக்குப்போன அர்ச்சகபரிசாரகர்கள் ஸந்நிதியில் எம்பெருமானைக்காணாது அச்சமும்அதிசயமுங்கொண்டு அரசனுக்கறிவிக்க அரசனும்மந்திரிகளோடு திடுக்கிட்டெழுந்தோடிவந்து ஸந்நிதியில் எம்பெருமானில்லாமையைக்கண்டு அளவிடப்படாத வியாகுலங்கொண்டு வீதமனஸ்கனாய் நடுநடுங்கி அருகிலிருந்த ஆமாத்தியர்களைப்பார்த்து ஓ ஆமாத்தியரே இதென்னமாயமாயிருக்கின்றதென்று கேட்க, மந்திரிகள் அரசனே நீர் கணிகண்ணன் திருவடியில் அபசாரப்பட்டபடியால் இந்த அஸம்பவம் ஸம்பவித்ததென்று சொல்ல, அதுகேட்டு அரசன் அதிக பயபக்தியுடனே கணிகண்ணர்

போன திசையைநோக்கி அதிசீக்ரமாகக் கண்களில் நீர் பெருக
வும் உடம்பில் வெயர்வையரும்பவும் மனமுருகவும் பெருமூச்
செறிந்துகொண்டுகிரீடாதிபூஷணங்களும் உத்தரீயமும்கீழேவிழ
வும்கால்வருந்த ஓடோடியும்போய்ப் பிராட்டியுடன் பெருமாளை
யுங்கண்டு திடீலென்று கீழேவீழ்ந்தடிபணிந்தெழுந்து கைகளைக்
குவித்துக்கொண்டு லோகாராட்டியனே பிரம ருத்திராதி தேவர்
களுக்குங் காணப்படாத திருவடிகள் வருந்தவும் நீருண்டமேகம்
போல் விளங்குகின்ற அழகிய திருமேனியின்மேல ஸஹிப்பதற்
குக்கூடாத சூரியகிரணம்படவும், லோகமாதாவாகிய பிராட்டியா
ருடைய செல்வத் திருமேனிக்கு இளைப்பு உண்டாகவும் எழுந்
தருளுவதற்கு ஐயோ, அடியேன் என்ன அபராதஞ் செய்தேனோ
அடியேன செய்த ஸர்வாபராதங்களையும் க்ஷமித்தருளவேண்டும்
பக்தபராதீனா, பரமகாருணிகா, பரப்ரும்ம ஸ்வரூபாவென்று பல
விதமாகத்துதித்துநிற்க அதுகேட்டருளி சொன்னவண்ணஞ்செ
ய்வதரான ஸ்ரீமந்நாராயணன் அரசனே நீ நமக்கபராதியல்ல;
ஆயினும் நமதுபக்தனான திருமழிசைப்பிரானுக்கு அந்தரங்கபக்த
னாகிய கணிகண்ணனுக்கு நீ அபராதஞ்செய்தபடியால் உன்தேச
த்தைவிட்டுக் கணிகண்ணன் புறப்பட்டான். அந்தபக்தனைபபிரிய
மாட்டாது திருமழிசையாழ்வார் அவனுடன் புறபபட்டார்.
அவரைப் பிரிந்திருக்கமாட்டாது நாமும புறப்பட்டோமென்று
திருவாய்மலர்ந்தருள அதுகேட்டு இராஜன் மிகுந்தபயத்துடனே
திருமழிசைப் பிரானுடைய திருவடிகளைத்தொழுது ஸ்வாமீ
அடியேன்செய்த அபராதத்தைப் பொறுத்தருளவேண்டுமென்று
பிரார்த்தித்துநிற்கத்திருமழிசையாழ்வார் அரசனே, நம்மிடத்தில்
ப்ரீதிவைத்திருக்கிற கணிகண்ணனை நீ உதாசீனஞ்செய்தபடியால்
அவர்புறப்பட அவர்பின்னே நாமும்புறப்பட்டோம். அவரிடத்து
ப்போமென்று ஆக்கியாபித்தருள இராஜனும் முன்னடக்கின்ற
கணிகிருஷ்ணருடைய திருவடிகளைப் பிடித்துக்கொண்டு அடி
யேன்செய்த அபராதங்களையெல்லாம் க்ஷமித்தருளி யதாவத்தாக
எழுந்தருளி யிருக்கவேண்டுமென்று பிரார்த்திக்கக், கணிகண்
ணன் அவ்வரசனிடத்தில் கிருபைகூர்ந்து திருவெஃகாவைநோ
க்கி நடக்கப், பின்பு திருமழிசைப்பிரானும் பிராட்டியாரோடு
யுதோக்தகாரியான எம்பெருமானும் நடந்தருளித் திருவெஃகா
வில் யதாவத்தாக எழுந்தருளியிருந்தார்கள்.

பின்பு திருமழிசையாழ்வார் திருவெஃகாவைவிட்டுத் திருக்குடந்தையென்னும் திவ்யதேசத்திலெழுந்தருளியிருக்கும் ஆராவமுதனைச்சேவிக்கத்திருவுள்ளங்கொண்டு எழுந்தருளிப்போகும் போது மார்க்கத்தில் பெரும்புலியூரென்னும் ஸ்தலத்துக்கு எழுந்தருளினார். அந்தஸ்தலத்தில் வேதாத்யயனம் பண்ணிக்கொண்டிருந்த சில ப்ராஹ்மணர்கள் ஆழ்வாரைச் சூத்ரனென்றிகழ்ந்து மற்றொருவழியாலே போகும்படிசொல்ல ஆழ்வாரு மப்படியே அம்மார்க்கமாக எழுந்தருள அந்தப்ராஹ்மணர்கள் ஆழ்வாரையிகழ்ந்தபடியால் வேதாத்யயனத்தில் விட்ட இடந்தெரியாது மயங்கினின்றார்கள். பின்பு அந்தஸ்தலத்திலெழுந்தருளிய எம்பெருமான் ஆழ்வார் எழுந்தருளிய மார்க்கத்துக்கு அபிமுகமாகத் திரும்பிநிற்க அவ்வாச்சரியத்தை அர்ச்சகபரிசாரகர்கள்கண்டு அதிசயித்து அந்த அற்புதத்தைச் சில ப்ராஹ்மணர்களுக்குச்சொல்ல ஆழ்வாரைத் தூஷித்த ப்ராஹ்மணர்களும் அதைக்கேட்டவுடனே ஆழ்வாரைத்தேடிவந்து அவர்திருவடிகளில் வீழ்ந்து க்ஷாபணம்பண்ணிக்கொண்டு நின்று ஸ்வாமீ தேவரீரை நிந்தித்தபடியால் நாங்கள் அத்யயனம் செய்யுமிடத்தில் விட்டவிடந்தெரியாது மயங்குகின்றோம; அந்தமயக்கத்தை நீக்கியருளவேண்டும். இந்த ஸ்தலத்தி லெழுந்தருளிய எம்பெருமானும தேவரீரெழுந்தருளிய திசைக்கு அபிமுகமாக எழுந்தருளியிருக்கின்றார். ஆதலால் எம்பெருமானுக்கும எங்களிடத்தில் திருவுள்ளம் வரும்படிக்குச் செய்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க ஆழ்வாரும் அவ்விடத்திலிருந்த ஒரு கறுப்புநெல்லையெடுத்துத் தமது நகத்தினாலேகிழித்துக்காட்ட அதுகண்ட ப்ராஹ்மணர்களும் அந்தக்குறிப்பினால் தாங்கள் விட்டவிடத்தையறிந்துகொண்டுபோக ஆழ்வாரும் ஸந்நிதிக்குப்போய் எம்பெருமானைச் சேவித்து எம்பெருமான் முன்னேஎழுந்தருளி யிருந்தபடியிருக்க வேண்டிக்கொண்டு புறஞ்செல்ல, அந்தவூரில்யாகஞ் செய்துகொண்டிருந்த ஒரு ப்ராஹ்மணன் இந்த மஹத்வத்தைக்கேட்டு யாகபலஸித்தியுண்டாகும்படி ஆழ்வாரை அவ்விடத்திற் கெழுந்தருளப்பண்ணிக்கொண்டுபோய் உபசரிக்க அதுகண்ட அங்குள்ளசில தூர்த்தர்கள், இந்தப்ராஹ்மணன் சூத்ரனை யாகஞ் செய்யுமிடத்தில் அழைத்துக்கொண்டு வந்ததுமல்லாமல் உபசாரங்களுஞ்செய்கிறான்; இதென்ன விபரீதமென்று ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொள்ள அதுகேட்ட ப்ராஹ்மணன் மிகவு மனநொந்துநிற்க, அதுகண்டு ஆழ்வார் அந்தப்பாகவதன் மனங்குளிரவும் அந்த தூர்த்தர்கள் மனம் நடுங்கவும் தமது திருமார்பில் ஜ்வாலாரூபமாகிய திருவாழியாழ்வானைக் காண்பிக்க அந்ததூர்த்தர்கள் நடுநடுங்கி வந்து ஆழ்வார் திருவடிகளைத்தொழுது ஸ்வாமீ பூர்வமிருந்தபடி ஸேவைஸாதித்தருளவேண்டுமென்று ப்ரார்த்திக்க ஆழ்வாரு மப்படியே ஸேவ

ஸ்வரூபங்கொண்டு ஸ்ரீமந்நாராயணனே பரன்; அவனடியார்களே யதாதிகார பூஜ்யர்களென்று அவர்களுக்கு நன்றாகத் தெரிவித்து அந்த ப்ராஹ்மணனுக்கும் யாகஸித்தியுண்டாகும்படி யனுக்ரஹித்து அவ்விடம்விட்டுத் திருக்குடந்தைக் கெழுந்தருளி ஆராவமுத னென்னும் திருநாமத்தையுடைய ஸ்ரீமந்நாராயணனைச் சேவித்து அவருடைய நித்யகல்யாணகுணங்களிலீடுபட்டு அவர் விஷயமாகவும் ஜீவாத்மாக்களுஜ்ஜீவிப்பதற்காகவும் செந்தமிழால் பாடி அவற்றைத் திருக்காவேரியிலிட எதிர்நோக்கி வந்தவைகளாகிய ‡ நான்முகன் திருவந்தாதி தொண்ணூற்றாறுபாட்டும் *திருச்சந்தவிருத்தம் நூற்றிருபதுபாட்டும் தம்மை ஆசிரயித்தவர்களுக்கு அளித்து இரண்டாயிரத்தெழுநூறு வருஷம் அந்தத் திவ்யதேசத்திலே வாஸஞ்செய்துகொண்டிருந்து பின்பு அவ்விடத்திலேயே பரமபதத்திற்கெழுந்தருளினார். இவர் இந்தலீலாவிபூதியில் [illegible] எழுந்தருளியிருந்தார்.

## வாழித்திருநாமம்.

அன்புடனந்தாதிதொண்ணூற்றாறுரைத்தான் வாழியே
அழகாருந்திருமழிசையமர்ந்தபிரான் வாழியே
இன்பமிகுதையில்மகத்திங்குதித்தான் வாழியே
எழிற்சந்தவிருத்தநூற்றிருபதுளான் வாழியே
முன்புகத்தில்வந்துதித்த முனிவரானோன் வாழியே
முழுப்பெருக்கில்பொன்னியெதிர்மிதந்தசொல்லோன் வாழியே
நன்புவிநாலாயிரத்தெழுநூற்றிருந்தான் வாழியே
நங்கள்பத்திசாரனிருநற்பதங்கள் வாழியே.

## நேரிசைவெண்பா.

தையில் மகமின்று தாரணியீ ரேற்றமிந்தத்
தையின் மகத்துக்குச் சாற்றுகின்றேன் - துய்யமதி
பெற்ற மழிசைப் பிரான்பிறந்த நாளென்று
நற்றவர்கள் கொண்டாடு நாள்.

‡ நான்முகனை நாராயணன்படைத்தான் நான்முகனும்
தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான்—யான்முகமாய்
அந்தாதி மேலிட் டறிவித்தே னாழ்பொருளைச்
சிந்தாமற் கொண்மினீர் தேர்ந்து.

* பூநிலாயவைந்துமாய்ப் புனற்கணின்றநான்குமாய்த்
தீநிலாயமூன்றுமாய்ச் சிறந்தகாலிரண்டுமாய்
மீநிலாயதொன்றுமாகி வேறுவேறுதன்மையாய்
நீநிலாயவண்ணநின்னை யார்நினைக்கவல்லரே.

திருமழிசையாழ்வார் வைபவம்
முற்றிற்று.



# நம்மாழ்வார் வைபவம்.

𑌵𑍃𑌷𑌭𑍇 𑌤𑍁 𑌵𑌿𑌶𑌾𑌖𑌾𑌯𑌾𑌂 𑌕𑍁𑌰𑍁𑌕𑌾𑌪𑍁𑌰𑌿𑌕𑌾𑌰𑌿𑌜𑌮𑍍 ।
𑌪𑌾𑌣𑍍𑌡𑍍𑌯𑌦𑍇𑌶𑍇 𑌕𑌲𑍇𑌰𑌾𑌦𑍌 𑌶𑌠𑌾𑌰𑌿𑌂 𑌸𑍈𑌨𑍍𑌯𑌪𑌂 𑌭𑌜𑍇 ॥

வ்ருஷபேதுவிஶாகாயாம் குருகாபுரிகாரிஜம் |
பாண்ட்யதேஶே கலேராதௌ ஶடாரிம் ஸைந்யபம் பஜே ||

𑌶𑍍𑌰𑍀𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌧𑍇𑌨𑍋𑌤𑍍𑌤𑌰𑍋𑌢𑌹𑌨𑌿𑌕𑌲𑍌𑌲𑌵𑌰𑍍𑌷𑍇 𑌪𑍍𑌰𑌮𑌾𑌥𑌾𑌹𑍍𑌵𑌯𑍇
𑌮𑌾𑌸𑍇 𑌮𑌾𑌧𑌵𑌨𑌾𑌮𑌨𑌿 𑌭𑌾𑌰𑍍𑌗𑌵𑌦𑌿𑌨𑍇 𑌚𑌰𑍍𑌕𑍍𑌷𑍇 𑌵𑌿𑌶𑌾𑌖𑌾𑌭𑌿𑌧𑍇 ।
𑌲𑌗𑍍𑌨𑍇 𑌕𑌰𑍍𑌕𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶𑍀𑌤𑌿𑌥𑌿𑌯𑍁𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌕𑍁𑌰𑌿𑌕𑌾𑌭𑌿𑌧𑍇 (𑌶𑌾
𑌕𑍍𑌷𑌿𑌤𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌦𑍁𑌰𑌭𑍂𑌤𑍍𑌪𑌰𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌕𑌵𑌿𑌰𑍍𑌭𑌾𑌗𑍍𑌯𑍋𑌦𑌯𑌾𑌨𑍍𑌮𑌾𑌦𑍃𑌶𑌾𑌮𑍍 ॥

ஸ்ரீவிஜ்ஞாநநிதேநோத்தரோடஹநிகலௌளவர்ஷே ப்ரமாதபாஹ்வயே
மாஸேமாதவநாமநி பார்க்கவத்தேசர்க்ஷே விசாகாபிதே |
லக்நேகத்கசதுர்த்தசீத்திதியுதே ஸ்ரீமத்குளிம்பித
க்ஷித்யாம்ப்ராதுரபூத்பராங்குச கவிர்பாக்யோதயாந்மாத்ருசாம ||

𑌮𑌾𑌤𑌾 𑌪𑌿𑌤𑌾 𑌯𑍁𑌵𑌤𑌯𑌸𑍍𑌤𑌨𑌯𑌾 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌯𑌦𑍇𑌵 𑌨𑌿𑌯𑌮𑍇𑌨 𑌮𑌦𑌨𑍍𑌵𑌯𑌾𑌨𑌾𑌮𑍍 ।
𑌆𑌦𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨𑌃 𑌕𑍁𑌲𑌪𑌤𑍇𑌰𑍍𑌵𑌕𑍁𑌳𑌾𑌭𑌿𑌰𑌾𑌮𑌂
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌤𑌦𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌯𑍁𑌗𑌳𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑌾𑌮𑌿 𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑌾 ॥

மாதாபிதாயுவதயஸ்தநயாவிபூதி
ஸ்ஸர்வம்யதேவநியமேநமதந்வயாநாம் |
ஆத்யஸ்யந: குலபதேர்வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம ப்ரணமாமிமூர்த்நா ||

ஸ்ரீவைகுண்டத்தில், சோம ஸூர்யாக்னியென்னுஞ்சுடர்களும் மின்மினிப்ரகாசம்போற் சிறுகித்தோன்ற அபரிமிதமாகிய இயற்கையொளி வீசி என்றுமோர்தன்மையாய் அவாங்கமனோகோசரமாய் அப்ராக்ருத திவ்யதேஜோமயமாய் ப்ரகாசிக்கின்ற திருமாமணி மண்டபத்தின்கண், லக்ஷ்மீ ஸமேதனாக எழுந்தருளிய ஸர்வசக்தியுக்தனான ஸ்ரீமந்நாராயணன் தம்மெதிரில் அஞ்சலியஸ்தராக நிற்கின்ற திருவனந்தாழ்வானைக் கிருபைகூர்ந்து கடாக்ஷித்தருளி பூலோகத்தில் அநாதிகர்மவசத்தர்களாகி ஜனனமரணங்களால் வருந்துகின்ற ஜீவாத்மாக்களை முக்தர்களாக்கும் பொருட்டு நம் திருக்குருகூரில் காரியென்பவனுக்கும் அவன் மனைவி உடையநங்கைக்கும் நமசேனைமுதலியாரைப் புத்திரராக அவதரிப்பிப்போம்; நீரும் முன்பாகத் திருக்குருகூரிலே திருப்புளியாக அவதரியுமென்று திருவாய்மலர்ந்தருள, அந்தப்ரகாரமே திருவனந்தாழ்வான் மேற்சொல்லிய யுகவருஷம்-சித்திரைமாசம் மூல நக்ஷத்திரத்தில் தாம்ப்ரபர்ணிதீரத்தில் திருக்குருகூரில் ஆதிப்பிரான் ஸந்நிதிக்கு வடபாரிசத்தில் திருப்புளியாக அவதரித்துக் கண்டவர்களிக்க வளர்ந்துகொண்டிருந்தார்.

இப்படியிருக்கப் பின்பு குறைவில்லாத செல்வப் பெருக்கத்தையுடைய அத்திருக்குருகூரென்னும் நகரத்தில் நாலாம்வருணத்திற்றோன்றி அரசாட்சிக்குரிய அங்கங்களைப்பெற்று நீதிதவறாச் செங்கோல்செலுத்தி வருகின்றவராகியும், இடைவிடாத பகவத்பக்தியுள்ளவராகியும் எம்பெருமான் ஸந்நிதிக்கேற்ற கைங்கர்யங்களைச் செய்கின்றவராகியும் பரமபாகவதர்களைப் பணிந்து உபசரிக்கின்றவராகியுமிருந்த காரியென்னும் பெயரையுடைய அரசன் தமது மனையவளாகிக் கற்புநிலைதவறாது இல்லறதர்மத்தை வளர்த்துவருகின்ற உடையநங்கையென்பவளுடன் புத்திரப்பேறு குறித்துத் திருக்குறுங்குடியென்னுந் திவ்யதேசத்திற்குப்போய் அங்குள்ள திருப்பாற்கடலென்னும் புண்யதீர்த்தத்தில் நீராடி அத்தலத்திலெழுந்தருளிய எம்பெருமான் ஸந்நிதியுட்சென்று தங்கள் மனக்குறையைச்சொல்லி, ஞானமில்லாத எம்போன்றவர்கள் அளவிறந்த குற்றங்களைச் செய்யினும் குறை நீக்கும்பொருட்டுப் பிரார்த்திப்பார்களாயின் அந்தப் பிரார்த்தனையை அங்கீகரித்துக்கொண்டு குற்றங்களைப் பொறுத்தருளிக் குறைகளைத் தவிர்த்தாள்கின்ற கிருபாஸமுத்திரமாகிய எம்பெருமானே அடியோங்களைப் பரமபதத்தில் ஏற்றத்தக்க ஓர் புத்திரப்பேறு கடாக்ஷித்தருள வேண்டுமென்று பலவாறாகத் துதித்துப்

பின்பு அங்கோரிடத்தில் தவஞ்செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள்செய்யுந்தவத்திற்கு உவந்து அடியவர்க்கு எளியனான பரம்பதநாதன் அவ்விருவர்களுடைய ஸ்வப்னத்தில் எழுந்தருளிப் புத்திரப்பேறுகுறித்து நம்மை நோக்கிச் செய்யும் அரிய தவத்திற்கு மகிழ்ந்தோம்; இனிநாம் உங்களிடத்தில் நம்ஸேனைமுதலியாரைப் புத்திரராக அவதரிப்பிப்போமென்று திருவாய்மலர்ந்து எழுந்தருளினார்.

பின்பு இருவரும் ஸ்வப்னம்நீங்கி ஸ்வாமி ஸேவை ஸாதித்துத் திருவாய்மலர்ந்தருளியதை நினைந்து ஆனந்தபரவசர்களாய் அந்தத்திவ்யதேசத்து எம்பெருமானையடிபணிந்து அதைவிட்டுப் புறப்பட்டுத் திருக்குருகூருக்குவந்து சேர்ந்தார்கள்.

அனந்தரம் ஸ்ரீமந்நாராயணன் அநுக்ரஹித்தபடி உடைய நங்கையாரது அழகிய திருவயிற்றில் மானிட உருக்கொண்டு எழுந்தருளி உலகத்திலுள்ள அந்நிய மதங்களின் ஸித்தாந்தங்கள் தாழ்வடைந்து விசிஷ்டாத்வைத ஸித்தாந்தமோங்கவும் அஞ்ஞானமென்னும இருள்நீங்கி ஞானமென்னும் பிரகாசமுண்டாகவும், பக்திமார்க்கம் மாசற்று விளங்கவும் பரமபாகவதர்களுக்கு வலதுதோள் துடிக்கவும் மற்ற ஸமயவாதிகளுக் கிடதுதோள் துடிக்கவும் கலியுகம்பிறந்த நாற்பத்து மூன்றுநாள் பிரமாதிவருஷம் வைகாசிமாசம் பௌர்ணமி வெள்ளிக்கிழமை விசாக நக்ஷத்திரங் கூடிய தினத்தில் கற்கடக லக்கினத்தில் சேனைமுதலியார் அம்சரான ஒரு புத்திரர் அவதாரஞ் செய்தருளினார்.

அந்த தினத்தில் உலகத்திலுள்ள எல்லா ஸமயத்தவர்களுக்கும் ஸ்ரீமந்நாராயணன் பரத்பரனென்னும் எண்ணந் தங்கள் தங்களையறியாமலேயே யுண்டாயிற்று. குருடர் - முடவர் - செவிடர் - ஊமையர்முதலான அவயவ ஈனர்களெல்லாம் அது நீங்கி அழகான வடிவங்களோடு ஸ்வஸ்த சித்தர்களாய் இருந்தார்கள். மலடிகளெல்லாம் கர்ப்பமுடையவர்களானார்கள். ஆகாயந் தெளிவடைந்து விளங்கியிருந்தது. பூமழை வருஷித்தது. இந்தப்பிரகாரம் அனேகமநத்துவங்க ளுண்டாயிருந்தன.

இப்படிப்பட்ட அற்புதங்களுண்டாகப் புத்திர னவதரித்த ஸந்தோஷ சமாசாரத்தைக்கேட்டு அரசன் தன்னை மறந்த மனக்களிப்புள்ளவனுயெழுந்து தீர்த்தமாடி வேதோக்தமாகப் பிராம்மணர்களுக்கு விதைதானம் கோதானம் பூதானம் ஸ்வர்ணதானம்

முதலான தானங்களைச்செய்து ஜாதகர்மம் முடித்துக் காரிமாறனென்று நாமகரணஞ்செய்து குறைவற்ற மனமுடையவரா

அந்நகரத்திலுள்ள ஜனங்களெல்லாம் அரசனைப்பார்க்கிலும் பதின்மடங்கு சந்தோஷமுடையவர்களாக இருந்தார்கள். பிறந்தகுழந்தை வாய்திறந்தழாமலும் கண்விழித்துப் பாராமலும் கைகால்களை யசைக்காமலும் பிரபஞ்சமாயையைக்கடந்து மலர்ந்தமுகத்துடன் பகவத் குணானுபவஞ் செய்துகொண்டிருந்தது. இப்படியிருக்க உடையநங்கையார் கோடி சூரியோதயம்போலப் பிரகாசிக்கின்ற புத்திரனது அழகு ததும்புகின்ற தெய்வத்தன்மையுள்ள வடிவத்தைத் தனது கண்கள் குளிரக்கண்டு எல்லையில்லாத களிப்பை யுடையவளாயிருந்தும் தன் புத்திரனுடைய உண்மையை அறியாதவளாகி மடியிலெடுத்து வைத்துக்கொண்டு முலைகொடுக்க அக்குழந்தை முலைபிடித்து உண்ணாமலும் வாய்திறவாமலும் கண்விழியாமலும் இருப்பதைக் கண்டு எங்களுக்கு இருந்த பிள்ளைக்குறையை நீக்கவந்த அருமைத் திருமகனே நெடுங்காலமாகத் தவஞ்செய்து பகவத் கடாக்ஷத்தால் பெற்றுக்கொண்ட உன்னை மடிமேல்வைத்து முலைகொடுத்து மகிழ்ச்சியையடைவதற்குத் தக்க தவத்தைச் செய்யாமலிருந்தேனோ நீயுன் தாமரைமலர்போன்ற கண்களைத் திறவாமலும் பவளம்போன்ற சிவந்த உதடுகளைக் குவித்து அழாமலும் பார்க்கின்றவர்களது கண்களையும் மனத்தையுங் களிப்படையச் செய்கின்ற சுந்தரமுள்ள கைகால்முதலிய அவயவங்களை யசைக்காமலு மிருப்பதென்ன மாயமோவென்றுசொல்லி வியாகுலமடைந்து அரசனுக்கு அறிவிக்க அரசனும் வந்து புத்திரனைக்கண்டு இதென்ன ஆச்சரியமோ இந்தப் புத்திரன் மானிட வடிவு உள்ளவனாயிருந்தாலும் பகவதம்சமென்பதை நாமறிந்துகொள்ளும்படி செய்விக்கின்றதாகத் தோன்றுகின்றதென் றெண்ணிக்கொண்டு தம்மாளிகைக்குப் போய்விட்டார். பின்பு அப்புத்திரன் உடையநங்கையார் நவரத்நகசிதமான பொற்றொட்டிலினிடத்துங் கிடத்துந்தோறுங் கிடந்தும் எடுத்திருக்க வைக்குந்தோறும் இருந்தும் பாலருந்தாது நாளுக்குள்நாள் திருமேனிவாடாது வளர்ந்துவந்தனர்.

இப்படியிருக்க ஒருநாள் காரியென்பவர் தனது புத்திரனுடைய அபூர்வமான சரித்திரத்தை மந்திரிகளோடு சூழ்ந்தாராய்ந்து இப்புத்திரனுடைய உண்மை எம்பெருமான் திருவுள்ளத்துக்கே தெரியுமாதலால் அவன் ஸந்நிதிக்கெதிரில் கொண்டுபோய்

விடுவதே தகுதியென்று நிச்சயித்து அவ்வாறே கொட்டிலில்
கிடத்தியபிள்ளையையெடுத்துக்கொண்டு உடையநங்கையாருடன்
சென்று ஆதிப்பிரான் ஸந்நிதிக்கெதிரில் இருக்கவைத்தார்.
உடனே அக்குழந்தை மெல்லமெல்லத் தவழ்ந்தது. அதுகண்டு
தாய்தந்தையரும் மற்றவரும் அளவிடப்படாத ஆனந்தமுடை
யவர்களாய்ப்பின்னே நடந்தார்கள். குழந்தை அப்படியே தவழ்ந்
துபோய் ஸந்நிதிக்கு வடக்கேயிருக்கின்ற திருப்புளியின்கீழ் பத்
மாஸனமாக உட்கார்ந்து வலதுகையில் சின்முத்திரை தரித்து
இடதுகையை மடியில் வைத்துக்கொண்டு கண்களைத்திறவாமல்
உடம்பையசைக்காமல் தலையுங்கழுத்தும் நேராகவிருக்கச்சித்ரதீ
பம்போல விருந்தது. பின்னைவந்த அரசன் அரசி முதலானவர்
கள் இந்த அற்புதத்தைக்கண்டு உடம்பு புளகித்து இக்குழந்தை
பகவதம்சமே தவிர வேறல்லவென்று நிச்சயித்துப் பலவிதமா
கத் துதிசெய்து அவ்விடத்திலேயே சூழ்ந்திருந்தார்கள்.

இப்படியிருக்க எம்பெருமானை ஸர்வலோகமாதாவானபெரி
யபிராட்டியார் ஜீவாத்மாக்களுக்கு எளிதில் உஜ்ஜீவிக்கும்படி
யான உபாயத்தை உபதேசித்தருள வேண்டுமென்று பிரார்த்தி
க்க எம்பெருமானும அப்படியே செய்யக்கடவோமென்று திரு
வுள்ளம்பற்றி சேனைமுதலியாரைப் பார்த்து நீர் பூலோகத்தில்
உம்முடைய அம்சமான நம்மாழ்வாருக்கு ரஹஸ்யார்த்தங்களை
உபதேசித்து வாருமென்று நியமிக்க அப்படியே நம்மாழ்வாருக்
குத் திருவிலச்சினைமுதலானதுகளையும் ரஹஸ்யார்த்தங்களையும்
பிரசாதித்தருளினார். இப்படி யிருக்கின்றநாளில் ஒரு நாள்
திருக்கோளூரிலிருந்து திவ்ய தேசயாத்திரைக்குப்போய் திரு
வயோத்தியி லெழுந்தருளியிருக்கிற மதுரகவிகள் தென்றிசை
யில் கோடிசூரியப் பிரகாசமாக வொரு ஜோதியைக்கண்டு இதெ
ன்ன ஆச்சரியம அஃதின்னதென்றறியவேண்டுமென்று நினைத்து
அந்த க்ஷணமே திருவயோத்தியைவிட்டுத் தென்றிசையைநோக்
கிடந்து திருவேங்கடமென்னும் திருப்பதிக்குவந்து திருவேங்க
டமுடையானைச் சேவித்துத் தாம முன்கண்டஜோதியைப் பார்த்
துக்கொண்டே திருவரங்கம பெரியகோயிலையடைந்து ஸ்ரீரங்கநா
தனைச்சேவித்துத் திருமாலிருஞ்சோலைமலைக்குவந்து அழகரைச்
சேவித்துக் கூடலழகிய பெருமானையும் ஸ்ரீவில்லிபுத்தூர் வடப
த்திரசாயியையும சேவித்துத் தாம்ப்ரபர்ணி தீரம்வந்து ஸ்ரீவை
குண்டமென்னும் திருப்பதியி லெழுந்தருளிய கள்ளப்பிரானைச்
சேவித்துத் திருச்சங்கணித்துறையில் நித்திய கர்மானுஷ்டானஞ்

செய்து தென்கரையிலுள்ள திருக்குருகூர்க்குச் சமீபத்தில் வரும்போது காணப்பட்டுக் கொண்டிருந்த தேஜஸ்ஸானது ஆதிப்பிரான் கோவிலுக்குள்ளே ப்ரவேசிக்கக்கண்டு சீக்கிரமாக நடந்து பொலிந்துநின்ற பிரானையும் ஆதிப்பிரானையும் சேவித்துப் பிரதக்ஷணமாகவரும்போது அங்கிருக்கின்ற திருப்புளியில் அந்த திவ்ய தேஜஸ்ஸானது அடங்கியதைக்கண்டு அதன் ஸமீபத்தில் வந்து அவ்விடத்திற் சூழ்ந்திருக்கின்ற கூட்டங்களைக்கண்டு இவ்விடத்தில் அதிசயமெனனவென்றுகேட்க அதுகேட்டுக் காரியார், ஸ்வாமீ அடியேன் மனைவியுடன் புத்திரனைவேண்டித் திருக்குறுங்குடி எம்பெருமானைப் பிரார்த்திக்க அவரது கடாக்ஷத்தால் புத்திரனவதரித்துக் கண்திறவாமலும் அழாமலும் ஸ்தந்யபானம்பண்ணாமலும் வைத்த இடத்திலேயே உடம்பசைக்காமலும் இருந்ததைக்கண்டு எம்பெருமான் ஸந்நிதியில் எடுத்துக்கொண்டுவந்து விட்டோம். ஸந்நிதியிலிருந்து மெல்லமெல்லத்தவழ்ந்துவந்து இந்தத்திருப்புளியினிடத்தே பத்மாசனராக உட்கார்ந்து கொண்டனர். அந்நாள்தொட்டிந்நாள்வரையுமாகிய பதினாறுவருஷமும் கண்விழிக்கவும் வாய்திறக்கவும் உடம்பசைக்கவும் நாங்களொருவருங் கண்டதில்லை. இவ்விடத்திலுள்ள அற்புதமிஃதென்று சொல்லக்கேட்டு மதுரகவிகள் அதிசயித்து மனக்களிப்புடன் திவ்யரூபங்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற ஆழ்வாரைக்கண்டு கண்களிலானந்த நீர் துளிக்கத் தேகமுழுவதும் மயிர்க்கூச்செறியச் சமீபத்தில் போய்க் கைகளைக்குவித்துக்கொண்டுஸ்வாமின் "செத்ததின்வயிற்றிற்சிறியதுபிறந்தாலெத்தைத்தின்றெங்கே கிடக்கும்" என்றுகேட்க அதுகேட்டுத்திருப்புளியின்கீழ் எழுந்தருளிய ஆழ்வார் "அத்தைத்தின்றங்கே கிடக்கும்" என்று திருவாய்மலர்ந்தருள அதுகேட்டுமதுரகவிகள் ஆனந்தபரவசராய் நாம் கேட்ட கேள்விக்கு யதார்த்தமாகிய வேதார்த்தத்தை வெளியிட்ட இவர் மனிதரல்லர்; நம்மையெல்லாங்கடைத்தேற்றும்படி பரமபதத்திலிருந்து பூலோகத்திற்கு எழுந்தருளி நம்மையாளவந்தவரே யென்று யதார்த்தத்தை யறிந்துகொண்டு கீழேவிழுந்து பலமுறைபணிந்து கைகுவித்தெதிர்நின்று பலவாறுஸ்துதிசெய்து பின்பு காரியையும் உடையநங்கையையுந்தொழுது நீங்கள் என்ன தவஞ் செய்தீர்களோ உங்கள் தவமேதவம். பிரமருத்திராதிதேவர்களும் பெற்றுக்கொள்ளுதற்கு அருமையாகிய பேறுபெற்றுக் கொண்டீர்கள். உங்களுக்கு நிகரானவர்கள் திரிலோகத்திலும் இல்லையென்று புகழ்ந்து, பின்பு திரு

ப்புளியினடியில் எழுந்தருளிய நம்மாழ்வாரைச்சேவித்து அம்
ரானிருந்த திவ்ய சரித்திரங்களையுடைய தேவரீர் அடியேனுக்கு
தத்வஹித புருஷார்த்தங்களை யெல்லாம் பிரஸாதித்தருள வே
டுமென்று பிரார்த்தித்து எதிரேநிற்க, அப்போது ஸ்ரீமந்நா
யணன் தேவீபூஷணாயுத பரிஜனங்களோடேகூடபெரிய திருவடி
யின்மீது எழுந்தருளி நம்மாழ்வாருக்குச் சேவை சாதித்த
ஆழ்வாரும் கண்விழித்து நிகரில்லாத செம்பொன்மலைமேல் நீல
நிறமுள்ள நீர்கொண்ட மேகமானது மணமுள்ள செந்தாமரை
மலர்களை வடிவமுழுவதுமலர்த்திக்கொண்டு சுடர்விட்டோங்கு
கின்ற சூரியமண்டலத்தை முடிமேற்கவித்து இடைவிடாது
மின்னுகின்ற மின்னுடன் எதிர்நின்றதுபோல் ஸ்வர்ணமலை போ
லப் பொன்னிறமும் உயர்ச்சியும் பெருமையும்பெற்ற பெரிய
திருவடி திருத்தோள்களினிடத்து மலர்ச்சியும் புன்னகையுங்,
கொண்டு குளிர்ச்சிததும்புகின்ற திருமுகமலரும், அருள்ததும்பு
கின்ற திருக்கண்மலரும், பவளம்போற்சிவந்து அழகு ததும்புகி
ன்ற திருவாய்மலரும், ஸ்ரீபாஞ்சஜன்யாதி திவ்ய ஆயுதங்களைக்
கொண்டு செவ்வண்ணந்ததும்புகின்ற திருக்கைமலர்களும், பிரம்
மாவைச் சிருஷ்டித்துச் சுந்தரந்ததும்புகின்ற திருவுந்தி மலரும்
பரம பாகவதர்களுடைய இருதயங்களில் மலர்ந்து ஆனந்தந்
ததும்புகின்ற திருவடிமலர்களும் பிரகாசிக்க மின்னற்கொடி
போன்றபிராட்டியாருடன் நீலமேக ஸ்யாமளமாகிய திருமேனி
யைக்காட்டி யெழுந்தருளிய எம்பெருமானைக் கண்டெழுந்து,
கண்களில் நீரரும்பவும், உடல்புளகிக்கவும், மனமுருகவும், கீழே
விழுந்து அனேகமுறை சேவித்து இவ்வளவு காலமும் இப்ப
டிப்பட்ட சேவையைச் சேவியாமல் நாள்களெல்லாம் வீணாகக்க
ழிந்தனவே யென்றழுதும், சதுர்முகன் முதலாகியதேவர்கள் நெ
டுங்காலம் அருமையான தவங்களைச்செய்து வருந்தினும் கிடைத்
தற்கு அருமையாகிய எம்பெருமானது திருவடிமலர்களை நிர்ஹே
துவாகச் சேவிக்கும்படி நமக்குக் கிடைத்ததேயென்று ஆனந்தக்
கூத்தாடியும், எண்ணப்படாத இன்பந்தருகின்ற இப்படிப்பட்ட
சேவையைச் சேவிக்கின்ற நாம் இனி க்ஷணகாலமாயினும் பிரி
ந்திருப்போமானால் நமதியற்கையை யென்னென்று சொல்லுவது
என்றுநகைத்தும், சமானமில்லாத அற்புத அமலநிரதிசய மங்கள
குணமே திருமேனியாகக் கொண்டு எழுந்தருளிப் பேரானந்தத்

தைக் கொடுத்தருளிய எம்பெருமானுக்கு என்னகைம்மாறுசெய்வேனென்றுருகியும், ஸ்ரீமந்நாராயணனுடைய திவ்யகுணங்களைப் பாடியும், ஆனந்தபரவசராய்க் கைகளைக் குவித்துக்கொண்டிருக்க அப்போது ஸ்ரீமந்நாராயணன் ஆத்மாக்கள் லோகமாயைகடந்து ஞானமார்க்கத்தில் நடந்து நமது நித்தியானந்தமாகிய பாதபதத்தை யடையும்படி வேதார்த்தங்களைத் திராவிடவேதமாகச் செய்யுமென்று திருவாய்மலர்ந்து எழுந்தருளினார்.

பின்பு நம்மாழ்வார் திருப்புளியின்கீழ் எழுந்தருளியபடி ஸ்ரீமந்நாராயணனே பராத்பரனென்றும், அவனையல்லது ஆத்மாக்களுக்கு வேறுகதிபந்து மில்லையென்றும, அவரது திருவடிகளுக்கு அடைக்கலம் புகவேண்டுமென்றும, அவர், பக்திசெய்கின்றவர்களுக்கல்லது பிரம்மருத்திராதிதேவர்களுக்கும் எளியவரல்லரென்றும, சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரமென்னும முத்தொழில்களுக்கும் மூன்றுரு வெடுத்தவரென்றும், உலகத்தவர்களே! நிலையில்லாத இந்தச்சரீரம அழிந்துபோகுமுன் அவரது திருவடிகளை இடைவிடாது நினையுங்களென்றும பலவிதமாகவுலகத்தவர்களுக்குறுதிகற்பித்து ஸ்ரீமந்நாராயணனாகிய பரமபுருஷனை புருஷனாகவும் அவரது ஸத்வாமிசமாகிய தாமே ஒரு பெண்ணாகவும் எண்ணங்கொண்டு, ஒத்த அன்புள்ள கணவனைப்பிரிந்த கற்புள்ள ஒரு ஸ்திரீயானவள் குழல்சோரவும் வளையல்கள் கழலவும் வடிவம வேறுபடவும் படுப்பதும் நடப்பதும் பேசுவதும் பாடுவதும முதலாகிய தொழில்கள் ஒன்றும் இல்லாமல் கணவன் தன்னிடத்திற்செய்த கரணவின்பங்களை நினைந்து நினைந்து மனம் நெருப்பிலிட்ட மெழுகைப்போலுருகியுருகி கண்களில் நீர்வடித்துக்கொண்டு உன்மத்தம்பிடித்தவளாக வுடம்பசையாது இருந்தபடியே யிருப்பதுபோல் தாமும் ஸ்ரீமந்நாராயணனைப் பிரிந்து அப்பிரிவாற்றாமையால் திருமேனியிலுள்ள திருவாடை முதலானவைகள் சோர்ந்தும் அற்புதமான திவ்ய வடிவும மாசுண்டமணி போல மழுங்கியும் பார்ப்பது பேசுவது முதலாகிய தொழில்கள் ஒன்றும் இல்லாமல் எமபெருமானைத் தாம் அனுபவித்தபேரின்ப சுகானுபவங்களை யெண்ணி மனமுருகிக்கண்களில் நீர்சொரியத் திருமேனி யசையாது இருந்தபடியே சிலநாளிருந்தும், பின்பு அந்த ஸ்திரீயானவள் தன்னருகிலிருக்கின்ற பாங்கி முதலானவர்களை நோக்கித் தன்கணவனது மேன்மையும தனது நிலையும் வெளியிட்டுத்தன்கணவனைக் கூட்டிவரும்படி யிசைவித்துத் தூதனுப்புவதுபோலத் தாமும் தமதருகிலிருக்கும் பறவை முதலானவைகளை நோக்கி ஸ்ரீமந்நாராயணனுடைய திவ்ய குணங்களையும் தமக்கு அவரைப் பிரிந்ததனாலுண்டாகிய சோகத்தையும் அறிவித்து அவரையழைத்துவரும்படி தூதனுப்புவதுபோலப் பேசி

க்கொண்டும் இவ்வாறு பிரிவாற்றாமையால் வருந்துவதைக் குறித்து ஸ்ரீமந்நாராயணன் அடிக்கடி புறத்திலும் அகத்திலும் சேவை சாதித்து இன்பங்கொடுத்தருள அவ்வின்பத்தை யநுபவித்து அவ்வநுபவத்தைப் பிரகாசிப்பிக்கிற சகல வேதார்த்தசாரமான திருமந்திரார்த்தத்தை நாலு பிரபந்தங்களாலே பிரகாசிப்பித்தருளத் திருவுள்ளமாய் ருக்வேதஸாரமான $ திருவிருத்தம், யசுர்வேதஸாரமான † திருவாசிரியம், அதர்வண வேதஸாரமான * பெரிய திருவந்தாதி, ஸாமவேதஸாரமான § திருவாய்மொழி ஆகிய இந்நான்கு பிரபந்தங்களையும் அருளிச்செய்து மதுரகவிகளைப் பட்டோலைகொள்ளும்படி நியமித்தருளினார்.

$ பொய்ந்நின்றஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்பு
மிந்நின்றநீர்மை யினியாமுறாமை யுயிரளிப்பான்
எந்நின்றயோனியு மாய்ப்பிறந்தாயிமை யோர்தலைவா
மெய்ந்நின்றுகேட்டரு ளாயடியேன்செய்யும விண்ணப்பமே.

† செக்கர்மாமுகிலுடுத்து மிக்கசெஞ்சுடர்ப்
பரிதிசூடியஞ் சுடர்மதியம் பூண்டு
பலசுடர்புனைந்த பவளச்செவ்வாய்
திகழ்பசுஞ்சோதி மரகதக்குன்றங்
கடலோன் கைமிசைக் கண்வளர்வதுபோல்
பீதகவாடை முடிபூண்முதலா
மேதகு பலகல னணிந்துசோதி
வாயவுங் கண்ணவுஞ் சிவப்ப மீதிட்டுப்
பச்சைமேனி மிகப்பகைப்ப
நச்சுவினைக்கவர் தலையரவினமளியேறி
யெறிகடல்நடுவு ளறிதுயிலமர்ந்து
சிவனயனிந்திர னிவர் முதலனைத்தோர்
தெய்வக்குழாங்கள் கைதொழக் கிடந்த
தாமரையுந்தி தனிப்பெருநாயக
மூவுலகளந்த சேவடியோயே.

* முயற்றி சுமந்தெழுந்து முந்தித்து நெஞ்சே
இயற்றுவா யெம்மொடு நீகூடி—நயப்புடைய
நாவீன் தொடைகிளவி யுட்பொதிவோம் நற்பூவைப்
பூவீன்றவண்ணன் புகழ்.

§ உயர்வறவுயர்நல முடையவ னெவனவன்
மயர்வறமதிநல மருளின னெவனவன்
அயர்வறுமமரர்க ளதிபதி யெவனவன்
துயரறுசுடரடி தொழுதெழென் மனனே.

இந்தப்பிரகாரம் இவ்வநுபவங்களைப்பிரகாசிப்பித்து ஸர்வவேதாந்தஸாரமான திருமந்திரார்த்தங்களை விளங்கவைத்தருளிய நான்கு பிரபந்தங்களையும் மதுரகவிகள் எழுதிப் படனஞ்செய்து அதிலுள்ள அநுபவார்த்தங்களை யுணர்ந்து ஆனந்த வெள்ளத்தில் அழுந்தி இரவும் பகலும் இடைவிடாமல் நம்மாழ்வார் திருவடியைத் தொழுதுகொண்டு மனங்குளிர்ந்தவராயிருந்தார். இவரிவ்வாறு துதித்துக்கொண்டிருக்க, ஆதிப்பிரான் பிரசாதித்த வகுளமாலையைத்தரித்துவகுளாபரணரென்றும், பரசமயங்களைக் களைந்து பராங்குசரென்றும், சடத்தைக் கோபித்துச் சடகோபரென்றும் திருநாமங்களைப்பெற்ற நம்மாழ்வார் தம்மைச்சூழ்ந்திருந்த காரி-உடையநங்கைமுதலானவர்களைப் பரமபதத்தில் நித்யானந்தாநுபவத்தை யநுபவிக்கக் கடாக்ஷித்தருளி மதுரகவிகளுடன் தாமுமாகச் சிலகாலம் நித்யானந்தாநுபவஞ் செய்துகொண்டு எழுந்தருளியிருந்தார்.

பின்பு ஒருநாள் இந்தச்சரீரத்தை இவ்வுலகத்திற் சுமந்துகொண்டு இன்னுமெத்தனை நாளிருப்பேன்; இனிமேலுன்னைப்பிரிந்து க்ஷணகாலமும் இச்சரீரமாகிய சுமையைச் சுமக்கமாட்டேன் உனதிருவடியறியச்சொல்லுகிறேன்; என்னை யழைத்தருளவேண்டுமெ கிருபாநிதியாகிய ஸ்ரீமந்நாராயணனே யென்று பிரார்த்திக்க அப்போது ஸ்ரீமந்நாராயணன் எழுந்தருளக்கண்டளவிடப்படாத மகிழ்ச்சியோடு எழுந்து பலமுறை வீழ்ந்துவீழ்ந் தடிபணிந்து கண்களி லானந்தபாஷ்பம் பெருகக் கைகளைக் குவித்துக்கொண்டு பலவாறாகத் துதித்துநின்ற நம்மாழ்வாரைப்பார்த்தருளி நம்முடன் பரமபதத்திற்கு வாருமென்று திருவாய்மலர்ந்தருள, அப்போது மதுரகவிகள் அடியேன் நம்மாழ்வாரைப்பிரிந்து எவ்வாறுயிர்வைத்திருப்பேன் அடியேனையு முடன் வரும்படி கடாக்ஷிக்கவேண்டுமென்று பிரார்த்தித்து நம்மாழ்வாரைநோக்கிக் கண்களில் நீர்விட்டழுது கண்ணினுண் சிறுத்தாம்பென்று முதலெடுத்துப் பத்துத்திருப்பாடல்களை நம்மாழ்வார் விஷயமாகப்பாடித் தேவரீரை யெப்படிப் பிரிந்திருப்பேன் என்று வியாகுலப்பட அதுகுறித்து ஸ்ரீமந்நாராயணன் திருவுள்ளமிரங்கி உமது கவி மதுரமாக விருக்கின்றது; ஆதலால் நீர் மதுரகவியென்று பெயர்வகித்துக்கொண்டு இன்னுஞ் சிலநாள் இருப்புளியின்கீழ் அர்ச்சாரூபமாக

நம்மாழ்வாரை யெழுந்தருளப்பண்ணுவித்துத் திருவாராதனஞ் செய்துகொண்டு திருவாய்மொழியை யுலகத்தில் பிரவசனஞ்செய்து பின்பு நமது பரமபதம்வந்து சேருமென்று திருவாய்மலர்ந்தருளி நம்மாழ்வாருடன் ஸ்ரீவைகுந்தத்துக் கெழுந்தருளினார். பின்பு மதுரகவியாழ்வாரும் ஸ்வாமி நியமனப்படி நம்மாழ்வாரை யெழுந்தருளப் பண்ணுவித்துத் திருவாராதனஞ் செய்துகொண்டு அவரருளிச்செய்த திவ்யப்ரபந்தங்களைப் பாராயணஞ் செய்துகொண்டிருந்தார்.

நம்மாழ்வாருக்கு ப்ரதம சிஷ்யரான மதுரகவிகள் ஒருக்கால் ஆழ்வாரை அத்யயன உற்சவத்தில் திருவரங்கத்துக்கு எழுந்தருளப்பண்ணிக்கொண்டு விசேஷ வைபவங்களுடன் வரும்போது மதுரையிலிருந்த சங்கப்புலவர்கள், வந்து "வேதந்தமிழ்செய்த பெருமாள் வந்தார், புவிப்பாவலர் தம்பிரான் வந்தார், மெய்ஞ் ஞான தேசிகர் வந்தார்" என்பது முதலான விருதுகளுடன் வரலாகாதென்று தடுத்தனர். மதுரகவிகள் யாதுக்காகத் தடுத்தீர்களென்றுகேட்க, சங்கப்புலவர்கள் எங்களுடன் சங்கப்பலகை யேறினாலல்லது இங்கு விசேஷ விருதுகளுடன் போகலாகாதென்று சொல்ல, மதுரகவியாழ்வார், ஆழ்வார் உங்களுடன்கூட எழுந்தருளார். அவரது திவ்யஸூக்தி உங்கள் சங்கப்பலகையில் எழுந்தருளிப் பெருமைபெறக்கடவது என்று அருளிச்செய்து "கண்ணன் கழலிணை" என்னும் பாசுரத்தை ஒரு சிறு முறியிலெழுதி அதைச் சங்கப்பலகையிலே வைக்க, அப்பலகை சங்கப் புலவர்களை யெல்லாம் கீழே தள்ளிவிட்டு ஆழ்வார் ஸ்ரீஸூக்தி யொன்றைமாத்திரம் யேந்திநின்றது. அதுகண்டு அவர்களுக்குத் தலைவனானவன்

ஈயாடுவதோ கருடற்கெதிரே யிரவிக்கெதிர் மின்மினியாடுவதோ
நாயாடுவதோ புலிமுன் சரபம்நரகேசரி முன்னுறுமோவீமப்
பேயாடுவதோவெழிலூர்வசிமுன் பெருமான்வகுளாபரணன்னருளும்
ஓராயிரமாமறையின்பொருளி லொருசொற்பெறுமோவுலகிற்கவியே,

என்று பாடினன். பிறகு ஆழ்வார் விஷயமாகத் துதிசெய்யவேண்டுமென்று ஒவ்வொருவரும் தனித்தனியே ஒவ்வொரு பாட்டாகப்பாட அவையாவும்

சேமங் குருகையோ செய்யதிருப் பாற்கடலோ
நாமம் பராங்குசனோ காரணனோ—தாமம்
துளவோ வகுளமோ தோளிரண்டோ நான்கோ
உளவோ பெரும வுமக்கு,

என்னும் ஒரேபாட்டாயிருக்கக்கண்டு பயமும் ஆச்சரியமுமடைந்து அபராத க்ஷாபணம்பண்ணிக்கொண்டு விசேஷ மரியாதைகளுடன் அனுப்பிவிட்டார்கள்.

## வாழித்திருநாமம்.

ஆனதிருவிருத்தநூறருளினான்வாழியே
ஆசிரியமேழுபாட்டளித்தபிரான்வாழியே
ஈனமிலந்தாதியெண்பத்தேழீந்தான்வாழியே
இசைகொண்மறையாயிரநூற்றிரண்டுத்தான்வாழியே
வானணியும்புகழ்மிககாவீறன்வாழியே
வைகாசிவிசாகத்தில்வந்துதித்தான்வாழியே
சேனையர்கோனவதாரஞ்செய்தவள்ளல்வாழியே
திருக்குருகைச்சடகோபன்றிருவடிகள்வாழியே.

---

மேதினியில்வைகாசிவிசாகத்தோன்வாழியே
வேதத்தைச்செந்தமிழாலவிரித்துரைத்தான்வாழியே
ஆதிகுருவாய்ப்புவியிலவதரித்தான்வாழியே
அனவரதஞ்சேனையர்கோனடிபணிவோன்வாழியே
நாதனுக்குநாலாயிரமளித்தான்வாழியே
நம்மதுரகவிவணங்குநாவீறன்வாழியே
மாதவன்பொற்பாதுகையாய்வளர்ந்தருள்வோன்வாழியே
மகிழ்மாறன்சடகோபன்வையகத்தில்வாழியே.

## நேரிசைவெண்பா.

ஏரார் வைகாசி விசாகத்தி னேற்றத்தைப்
பாரோ ரறியப் பகர்கின்றேன்—சீராரும்
வேதந் தமிழ்செய்த மெய்ய னெழிற்குருகை
நாத னவதரித்த நாள்.

நம்மாழ்வார்வைபவம்
முற்றிற்று.



# மதுரகவியாழ்வார் வைபவம்.

𑌮𑍇𑌷𑍇 𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑍂𑌤𑌂 𑌪𑌾𑌣𑍍𑌡𑍍𑌯𑌦𑍇𑌶𑍇 𑌗𑌣𑌾𑌂𑌶𑌕𑌮𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌪𑌰𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌸𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌂 𑌮𑌧𑍁𑌰𑌂𑌕𑌵𑌿𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑍇 ।

மேஷேசித்ராஸமுத்பூதம் பாண்ட்யதேஶே கணாம்ஶகம்,
ஸ்ரீபராங்குஶஸத்பக்தம் மதுரம்கவிமாஶ்ரயே.

𑌸𑍍𑌵𑌸𑍍𑌥𑌸𑍍𑌤𑍁𑌤𑌾𑌨𑌦𑍍𑌵𑌿𑌤𑌯𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 𑌶𑌠𑌾𑌰𑌿𑌵𑌾𑌗𑍍𑌵𑍍𑌯𑌾𑌸𑌮𑍁𑌦𑌾𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌂 ।
𑌮𑌾𑌧𑍁𑌰𑍍𑌯𑌸𑌂𑌶𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌕𑌵𑌿𑌤𑍍𑌵𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌮𑌹𑌤𑍍𑌵𑌸𑌂𑌭𑌾𑌵𑌿𑌤𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌤𑌤𑍍𑌵𑌮𑍍 ॥

ஸ்வஸ்தஸ்துதான த்விதயம் ப்ரபதயேஶடாரி வாகவ்யாச முதாரகீர்த்திம்,
மாதுர்யஸம ஶ்லிஷ்டகவித்வயுக்தம் மஹத்வஸம்பாவித புத்திதத்வம்,

ஸ்ரீஸேனைமுதலியாருடைய கணாதிபதிகள் நால்வரிலொருவரான குமுதாம்சராகிய ஸ்ரீமதுரகவியாழ்வார் த்வாபரயுகத்தில் அ - லக்ஷத்து - சாஉஅஎகூ - ஈசுவர ௵ சித்திரை௴ சுக்லசதுர்த்தசி வெள்ளிக்கிழமைகூடிய சித்திரைநக்ஷத்திரத்தில் திருக்கோளூரில் ஒருபூர்வசிகை ஸ்ரீவைஷ்ணவருக்குப் புத்திரராய் அவதரித்து வெகுகாலமாகத் திவ்யதேச யாத்திரையைப்பண்ணிக் கொண்டுதிருவயோத்தியி லிருக்கும்போது ஒருராத்திரியில் திருக்கோளூர் எம்பெருமானைநோக்கிஸேவிக்கும்போது அத்திசையில் ஒருதேஜஸ்ஸைக்கண்டு அதைச்சோதிக்கத் திருவுள்ளமாய் அவ்விடம்விட்டுப் புறப்பட்டுத் திருநகரியேற வெழுந்தருளி திருப்புளியாழ்வார் அடியில் அத்தேஜஸ்ஸு அடங்க அவ்விடத்தில் நம்மாழ்வாரை ஸேவித்து அவருடைய வைபவத்தைக்கேட்டு அவர் விஷயத்திலீடுபட்டு அடியேனுக்குத் தத்வஹித புருஷார்த்தங்களைக் கிருபைசெய்தருள வேணுமென்று பிரார்த்திக்க, அப்போது ஆழ்வாரும் அப்படியே பிரஸாதித்து தாம்செய்தருளிய திருவாய்

மொழிமுதலான பிரபந்தங்களெல்லையும் இவரைப் பட்டோலை கொள்ளும்படி நியமிக்க மதுரகவிகளும் ஆழ்வார் நியமனப்படி நடத்தி ஆழ்வார்விஷயத்திலீடுபட்டு அவர்விஷயமாகக் * கண்ணிநுண் சிறுத்தாம்பு என்கிற பிரபந்தத்தைச் செய்தருளி ஆழ்வார் நித்தியவிபூதிக்கெழுந்தருளினபின்பு தாம்பிரபர்ணிதீர்த்தத்தை யிறுகவைத்து அதிலுண்டான தாதுவிசேஷத்தாலே ஆழ்வார் திவ்யமங்கள விக்கிரகத்தை யேறியருளப் பண்ணிவைத்து அவருக்குக் கோயிற்றிருப்பணிகளெல்லாஞ் செய்து பலவகை யுபசாரங்களுடன் ஆராதித்துக்கொண்டு நம்மாழ்வார் பிரபந்தங்களான - திருவிருத்தம் - நூறுபாட்டு, திருவாசிரியம்-ஏழுபாட்டு, பெரியதிருவந்தாதி - எண்பத்தேழுபாட்டு, திருவாய்மொழி - ஆயிரத்து ஒருநூற்றிரண்டுபாட்டு ஆகிய இந்த நான்குபிரபந்தங்களையும் உலகமுழுதும் விளங்கும்படிசெய்து ஸந்நிதியை விட்டுப் பிரியாமல் இருநூற்று நாற்பதுவருஷம் இருந்தருளி நம்மாழ்வாரது திருவடியினால் பரமபதத்துக்கு எழுந்தருளினார். இவருடையவைபவம் நம்மாழ்வாருடைய வைபவத்தில் பரக்கக் கண்டுகொள்வது.

## வாழித்திருநாமம்.

சித்திரையிற்சித்திரைநாள்செகத்தில்வந்தான்வாழியே
திருக்கோளூரவதரித்தசெல்வன்மிகவாழியே
உத்தரகங்காதீரத்துயர்தவத்தோன்வாழியே
ஒளிகதிரோன்றெற்குதிக்கவுகந்தவந்தான்வாழியே
பத்தியொடுபதினொன்றுபாடினான்வாழியே
பாரசங்குசனேபரமென்றுபற்றினான்வாழியே
மத்திமமாம்பதப்பொருளைவாழ்வித்தான்வாழியே
மதுரகவிதிருவடித்தாமரையலர்கள்வாழியே.

## நேரிசைவெண்பா.

ஏரார் மதுரகவி யிவ்வுலகில் வந்துதித்த
சீராருஞ் சித்திரையிற் சித்திரைநாள்—பாருலகில்
மற்றுள்ள வாழ்வார்கள் வந்துதித்த நாள்களிலும்
உற்றதெமக் கென்றுநெஞ்சே யோர்.

மதுரகவியாழ்வார்வைபவம்
முற்றிற்று.

* கண்ணிநுண்சிறுத்தாம்பினாற்கட்டுண்ணப்
பண்ணியபெருமாயனென்னப்பனில்
நண்ணித்தென்குருகூர்நம்பியென்றக்கால்
அண்ணிக்குமமுதூறுமென்னாவுக்கே.



# குலசேகராழ்வார் வைபவம்.

[illegible]
[illegible]
கும்பே புநர்வஸௌ ஜாதம் கேரளே சோலபட்டணே,
கௌஸ்துபாம்சம் தராதீசம் குலசேகரமாச்ரயே.
[illegible]
[illegible]
குஷ்யதே யஸ்ய நகரே ரங்கயாத்ரா தினே தினே,
தமஹம் சிரஸா வந்தே ராஜாநம் குலசேகரம்.

மலைவளமுதலான வளங்களையுடைய கொல்லிநகரத்தில் வஞ்சிக்களத்திலிருந்து நீதிதவறாது செங்கோல்செலுத்தி பகவத்பக்தியுடன் அரசாட்சிசெய்த திடவிரதனென்னும் பெயரையுடைய வஞ்சிவேந்தன், புத்திரபாக்கியம் கிடைக்கும்படி ஸ்ரீமந்நாராயணனைக் குறித்துத் தவம்பண்ண அத்தவத்துக்குத் திருவுள்ளமிரங்கி ஸ்ரீமந்நாராயணன் எழுந்தருளி ஸேவைஸாதித்து அரசனை நமது கௌஸ்துபாம்சமே யுனக்குப் புத்திரனாகப் பிறக்குமென்று திருவாய்மலர்ந்தருளிப் பின்பு அந்தர்த்தானமானார். திடவிரதன் மகிழ்ச்சியுடன் நகரத்துக்குப்போய் அரசு செலுத்த, அவ்வரசனது கற்புள்ளமனைவி கர்ப்பவதியாய் தேவர்கள் பூமாரிபெய்து வாழ்த்தவும் முனிவர்கள் ஆசிகூறவும் உலகத்திலனேக அற்புதங்களுண்டாகவும் கலியுகம்பிறந்த இருபத்தெட்டு வருஷங்களுக்கு மேல் செல்லும் பராபவவருஷம

மாசிமாஸம் சுக்லபக்ஷம் துவாதசி வெள்ளிக்கிழமைகூடின பு
னர்பூச நக்ஷத்திரத்தில் கௌஸ்துபாம்சம் திவ்யலக்ஷணமுள்ள
குழந்தைவடிவாக இளஞ்சூரியோதயம்போல அவதாரஞ் செ
ய்தது. அவதரித்தகுழந்தையைத் தாயானவள்கண்டு இக்குழந்
தை தேவர்களிடத்தில் பிறக்கத்தக்கதேயன்றி நம்மிடத்திற் பிற
க்கத்தக்கதல்லவென்று அதிசயமடைந்து பெருங்களிப்புள்ளவ
ளாக விருந்தாள். புத்ரோத்பத்தியைக்கேட்ட அரசன் மனங்களி
த்து ஸ்நாநநியமங்களைமுடித்து ப்ராஹ்மணர்களுக்குக் கிரம
ப்படி செய்யவேண்டிய தானங்களைச்செய்து ஜாதகர்மங்களைச்
செய்து குலசேகரனென்று நாமகரணஞ்செய்வித்து அன்னப்
ராசனம், சௌளம்முதலான கருமங்களை அந்தந்தப்பருவங்களில்
அரசச்செல்வத்துக்குத் தக்கபடி செய்வித்து ரத்னகசிதமாகிய
ஸ்வர்ணாபரணம் முதலானவைகளால் அலங்கரித்துப் பாராட்
டிவளர்த்து ஏழாம்வயதில் உபநயனஞ் செய்வித்து ஆசார்ய
முகமாக வேதாரம்பஞ்செய்விக்கக் குலசேகரர், ருக்வேதம்முத
லாகிய வேதங்களிலும் சாஸ்த்ரங்களிலும் தனுர்வேதம் - ஆயுள்
வேதம் காந்தர்வவேதம முதலானவைகளிலும் - யானையேற்றம்-
குதிரையேற்றம்-ரதாரோஹணம் முதலானவித்தைகளிலும் நிபு
ணராய் அரசாட்சி செய்வதற்குத் தக்க பருவத்துடனிருக்க அப்
புத்திரருக்கு விவாஹ மஹோத்ஸவத்தைச்செய்வித்து முடிசூட்
டித் தம்மரசாட்சியைக்கொடுத்து, அரசன் தன்மனைவியோடும்
தவம் செய்தற்குத்தக்க இடந்தேடிக்கொண்டு போயினான். மு
டிசூட்டிக்கொண்ட குலசேகரர் தமதாளுகைக்குட்பட்ட தே
சங்களில் பிராமணர்முதலான சாதுர்வர்ணங்களும தங்கள் த
ங்களுக்குரிய நித்ய கர்மானுஷ்டானங்களைத் தவறாது நடத்த
வும், மாதந்தோறும்மாறாது மும்மாரிபெய்யவும், மலைபடுதிரவிய
ம் நாடுபடு திரவியமுதலான திரவியங்களெல்லாம் குறைவுப
டாது மேன்மேலும விருத்தியடையவும், குடிகளிடத்துக் கல்
விப்பொருளுஞ் செல்வப்பொருளுங் கலந்து நிற்கவும், சற்கு
ணங்களும் சற்கர்மங்களுமே தலையெடுத்தோங்கவும், நெறிதவ
றாது பகவத்பக்தி பாகவதபக்தியுடன் அரசுசெய்துவருகின்ற
நாள்களில் ஒருநாள் இராத்திரியில் நித்திரைசெய்யும்போது ஸ்வ
ப்னத்தில் ஸ்ரீமந்நாராயணன் தம்முடைய லீலாவிபூதி நித்யவி
பூதியென்னு மிரண்டையும் குலசேகராழ்வாருக்குக் காட்டி

பருளக்கண்டு கண்விழித்துக் கரைபற்ற களிப்புள்ளவராய்க் கண்களி லானந்தநீர்பெருகக் கைகுவித்து நின்றுகொண்டு ஸ்ரீமந்நாராயணனுடைய நித்ய லீலாவிபூதிகளை இன்று ஒரு காரணமின்றியே அனுபவிக்கும்படி நான் என்னதவஞ் செய்திருந்தேனோ என்று சொல்லிச்சொல்லி மகிழ்ந்தும், இப்படிப்பட்ட இவ்யானுபவங்களை அனுபவியாது வீணாகக் காலங்களைக் கழித்து விட்டேனேயென்று சொல்லிச்சொல்லி மனங்கரைந் துருகிச் சோர்ந்தும், பின்பு லோகவியாபாராந்தரங்களில் பிரவர்த்தியில்லாதவராய்ப் படுத்த விடத்திலேயே பகவத்தியானஞ் செய்து கொண்டிருந்தார்.

இப்படியிருக்க அருணோதயகாலத்தில் வழக்கப்படி பள்ளி யெழுப்புகின்றவர்கள் வீணைமுதலாகிய இனியவிசையுள்ள கருவிகளினால் நெடுநேரம் எழுப்பவும் எழுந்திருந்து வெளியில் வாராதிருந்ததையறிந்து மந்திரிமுதலானவர்கள் இதென்ன காரணமோவென்று மனங்கலங்கி உறையறையுள்ளேப்புகப்ப அவர்கள்போய்ச் செந்தாமரைமலர்போல முகமலர்ந்து புன்முறுவல்கொண்டு கண்ணீர்பெருகக் கைகளைக் கூப்பிக்கொண்டிருந்த அரசனைப்பார்த்து அற்புதமடைந்து திரும்பிவந்து மந்திரி முதலானவர்களுக்குத் தெரிவிக்க அவர்களுங்கண்டு ஒருவர்க்கொருவர் காரணந் தெரியாதவர்களாய் அந்தவிஷயத்தில் தங்கள் தங்களுக்குண்டாகிய அபிப்பிராயங்களைப் பேசிக்கொண்டு பெருஞ்சப்தமுண்டாக்க, அதனால் அரசன்தெளிந்தெழுந்து வெளியில்வந்து அங்கு மற்றொருவரையும பாராது பகவத்பக்தியும கூர்மையாகிய அறிவுமுடைய முதன்மந்திரியைப்பார்த்துச் சென்றகாலங்களை யெல்லாம வீணாகச்செலுத்திய என்னையும ஒரு பதார்த்தமாகவெண்ணி இராத்திரி ஜகந்நாதனாகிய ஸ்ரீமந்நாராயணன் ஸேவைஸாதித் தருளப்பெற்றேன். இவ்வாறுபெற்ற நான இன்னும அநித்யமாகிய இந்த ப்ரபஞ்சவாழ்வை நித்யமாகவெண்ணி வீண்பொழுது போக்கமாட்டேன். இன்று தொடங்கி பரமஸாத்விகர்களான பாகவதர்களுடனகூடி ஆத்மலாபத்தை யுண்டுபண்ணுகின்ற எம்பெருமானது திவ்யமங்களகுணங்களை யநுபவித்து ஆனந்தமடையவேண்டும என்றுசொல்லி அந்தக்ஷணமே அம்மந்திரியோடு தாம் பகவத்பக்தர்கள் எங்கிருக்கின்றார்களென்று தேடி அவர்களிருக்கின்ற இடங்க

னிற்சென்று ஸேவித்து அனேக உபசாரங்களைச்செய்து அரண்மனைக்கு எழுந்தருளப் பண்ணிக்கொண்டுவந்து ஸ்ரீமத்ராமாயணம் முதலான கிரந்தகாலக்ஷேபஞ் செய்துகொண்டும் முதலாழ்வார்கள் மூவரும் திருமழிசையாழ்வாரும் திருக்குருகைப்பிரானும் செய்தருளிய திவ்யப்ரபந்தங்களை ஸேவித்துக்கொண்டும் சிங்காசனாதிபதியாய்த் தாமரையிலையில் பற்றியும் பற்றாத நீர்த்துளிபோல இராஜகாரியங்களில் பற்றியும் பற்றாத மனமுடையவராயிருந்தார்.

இக்குலசேகரர், பாகவத ஸமூகத்துடனிருந்து ஸ்ரீமத் ராமாயணகாலக்ஷேபங் கேட்டுவரும்போது "இளைய பெருமாளைப் பிராட்டிக்குத் திருமேனிக்காவலாக நிறுத்தி கரதூஷணத்ரிசிரர்களாகிய பதினாலாயிரம்பேர் துஷ்டராக்ஷஸர்களுடனே தர்மாத்மாவான ஸ்ரீராமபிரானொருவரே யுத்தஞ்செய்யப்புறப்பட்டார்" என்று கேட்டதும் ஆழ்வார் பரமபரவசராய்த் திடீரென்றெழுந்து ஸ்ரீராமபிரான் தனிமையுத்தத்துக்குச் செல்லுகின்றார், அவருக்குச் சகாயமாக நாம் போகவேண்டுமென்று சொல்லி எல்லாச் சேனைகளையும் ஆயத்தப்படுத்தும்படி சேநாதிபதிக்கு நியமித்துத் தாமும் ஆயுதங்களைத்தரித்துக்கொண்டு புறப்பட்டனர். சேனையுடைய மந்திரிகள் இந்தப் பிரயாணத்தைத் தடுப்பதற்காக "பெருமான் அந்தப் பதினாலாயிரம் துஷ்டராக்ஷஸர்களை யெல்லாங் கொன்று மீண்டுவந்து பிராட்டியாரோடு உபசரிக்கப்பட்டார்" என்னுங் கட்டத்தை வாசிக்கச்செய்து அதனை ஆழ்வாருக்கு அறிவித்தனர். கேட்ட ஆழ்வாரும் பிரயாணத்தைவிட்டு ஸமாதான சித்தராயிருந்தனர். பிறகு மந்திரிமுதலானோர் ஆழ்வாருக்கு இவ்விதக்கலக்கம் பாகவத சகவாசத்தினாலே வந்ததென்றெண்ணியிருந்தார்கள்.

இப்படி அரசாட்சி செய்துவரும் நாளில் ஒருநாள் தமது திருவாராதனத்தில் விலையுயர்ந்த ஒரு ரத்நாபரண மில்லாதிருக்கக்கண்டு காரியக்காரர்கள் மந்திரிகளுக்குச்சொல்ல மந்திரிகள் தம்மரசனுக்குச்சொல்ல அதுகேட்டு அதையெடுக்கின்றவர்கள் இவ்விடத்தில் யாரிருக்கின்றார்களென்று மந்திரிகளைவினவ மந்திரிகள் காவற்காரரையழைத்து உங்கள் அஜாக்கிரதையாலல்லவோ ஆபரணம் போய்விட்டதென்று கோபங்கொண்டு சொல்ல, அவர்கள்பயந்து ஐயா நாங்கள் ஒன்றுமறியோம் உடம்பையுயிர்காப்பதுபோல இரவும்பகலும் இடைவிடாது காத்துவருகி

ன்றோம். ஆனால் பாகவதர்களுக்கல்லது இவ்விடத்தில் இடங் கொடுத்ததில்லை. ஆதலால் அவர்களிடத்து எங்களுக்கு ஸந்தேக மிருக்கின்றதென்றுசொல்ல, அரசனதுகேட்டு மிகவும் ஸந்தாபங்கொண்டு மந்திரிகளைப்பார்த்துப் புத்தியில்லாத இந்தக்காவலாளர் சொல்லியது என்னிரண்டு செவிகளிலும் காராசத்தைக்காய்ச்சி விட்டதுபோலிருக்கின்றது. இந்தத்துரோகிகள் கனவிலும் சொல்லப்படாத தகாதவார்த்தைகளை யெதிர்நின்றுசொல்லினார்கள். என்னகதியடைவார்களோ; இந்தப்பாபிகள்சொல்லியபடி இந்தச்சபையி லிருக்கின்றவர்களுக்குள் சிலர்க்கு ஸந்தேஹத்தையுண்டுபண்ணாமலிராது. ஆதலால் அதனைநானே நிவர்த்திசெய்கிறேனென்றுசொல்லி கொடூரமான விஷமுள்ள பாம்புகளைப்பிடித்து ஓர் பெருங்குடத்திலவிட்டு அதனைச் சபையில் கொண்டுவரும்படி ஆக்ஞாபித்தார். அப்படியே உழையர்கள் பாம்புக்குடத்தைக்கொண்டுவந்து சபைமுன்வைக்க அரசன் அக்குடத்தில் தமது கைமோதிரத்தைப்போட்டுக்காவற்காரர்களைப் பார்த்து ஸ்ரீவைஷ்ணவர்கள் எடுத்தார்களென்று இந்தக்குடத்தில் கையிட்டு மோதிரத்தை யெடுப்பீர்களானால் உங்கள்வார்த்தையை யுண்மையென்று கொள்ளுகிறேனென்றுசொல்ல அது கேட்டு நடுநடுங்கிக் காவற்காரர் ஒன்றுஞ்சொல்லாது முகஞ் சோர்ந்திருக்க, அரசன்நகைத்து அந்தச் சபையைநோக்கி இக் காவலாளிகள் முன்சொல்லிய தகாதவார்த்தை பொய்யென்று இந்தக்குடத்தில் நானே கையிட்டு அந்தமோதிரத்தை யெடுக்கின்றேன் பாருங்களென்று சொல்லிக் குடத்திற்கையிட்டு அம்மோதிரத்தையெடுத்தார். அதுகண்டு அச்சபையிலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களும் மந்திரி பிரதானி முதலானவர்களும் ஜனங்களும் ஆச்சரியமடைந்து அரசனைப் பலவிதமாகப் புகழ்ந்து கொண்டாடினார்கள். தேவர்கள் மலர்மாரிபொழிந்தார்கள்.

பின்பு அரசன் காவற்காரர்களைத் தண்டனைசெய்வித்துச் சிலகாலம் அரசாட்சியிலிருந்து அரசாட்சியாகிய இந்தத் துக்க சமுத்திரத்தைநீந்தி என்றைக்கு ஸ்ரீரங்கயாத்திரை செய்து அழகியமணவாளனை ஸேவிப்பதென்று எண்ணியெண்ணி மனமுருகி அதுவிஷயத்தில் தமக்குமழுந்துகின்ற ஆசையையுடையவராய் "ஸ்ரீவல்லபேதி வரதேதி" என்று தொடங்கி ஸ்ரீரங்கநாதன்விஷயமாகக் கீர்வாணத்தினால் முகுந்தமாலையென்கின்ற ஸ்தோத்திரத்தைச்செய்தருளி ஸர்வதா ஸ்ரீரங்கயாத்திரையினிடத்தே சிந்தையைவைத்திருந்தனர். ஒருநாள் ஸ்ரீரங்கநாதனைச் சேவிக்கவேண்டுமென்னு மாசையானதுள்ளேநின்று மேன்மேலு

ம் பொங்கியெழ அரசாட்சியை வெறுத்துவிட்டு வெளிப்பட்டு ஸ்ரீவைஷ்ணவர்களுடனே திருவரங்கம் பெரியகோயிலுக்கெழுந்தருளி அவ்விடத்திலுள்ள பரமபாகவதர்கள் அனைவரும் எதிர்கொண்டு உபசரிக்க அவர்களை ஸேவித்துக்கொண்டு திருக்காவேரிநதியில் தீர்த்தமாடி திருமதிலேழுங்கடந்துட்புகுந்து பிரகாசம்பொருந்திய திருப்பெட்டகத்தை ப்ரதக்ஷிணமவந்து ஸந்நிதியினிடத்துத்திருமணத்தூணருகேநின்று நீலமேகம்போல் சேஷசயனத்தில் திருப்பள்ளி கொண்டிருக்கின்ற அழகியமணவாளனாகிய கருணைக்கடலைக் கண்குளிரக்கண்டு அனந்தமுறை கீழே விழுந்து விழுந்துபணிந்து தன்மையறியாக ஆனந்தஸாகரத்தில் அழுந்தினவராய் எழுந்து கைகளைக்குவித்துக் கண்களில் நீர்சோர ஆனந்தத்துடன் * இருளியச் சுடர்மணியென்று முதலெடுத்துப் பத்துப்பத்துப்பாடலாக முப்பதுபாடல் செந்தமிழால் செய்தருளி நின்ற குலசேகராழ்வாரை ஸ்ரீரங்கநாதன் கடாக்ஷித்தருளி ஆழ்வாரே நீர் நமது திருவேங்கடத்துக்கு வாருமென்று திருவாய்மலர்ந்தருளக்கேட்டுக் குலசேகராழ்வார் பிரியாவன்போடுந் துதித்துப் பணிந்து விடைபெற்றுக்கொண்டு அவ்விடத்தினின்றும் புறப்பட்டுத் திருக்கச்சிக்கெழுந்தருளி அருளாளனையடிபணிந்து அதைவிட்டுத் திருமலைக்கெழுந்தருளி எம்பெருமான் ஸந்நிதியில்வந்து நெருப்பிலிட்ட மெழுகுபோல் மனமுருகவும், கண்களினானந்தநீர் பொழியவும் உடம்பில் மயிர்க்கூச்செறியவும் பணிந்து பணிந்து கைகளைக்குவித்து நின்றுகொண்டு ‡ ஊனேறுசெல்வமென்று முதலெடுத்துப் பத்துப்பாடல் இனியவையாகச் செய்தருளிச்சிலகாலமங்கேயிருந்து வித்துவக்கோட்டம்மானை ஸேவிக்கவேண்டுமென்று அவ்விடத்திற்கு எழுந்தருளி யெம்பெருமானைச் சேவித்து அவ்விடத்திலிருந்து திருவாயர்பாடிக் கெழுந்தருளிக்

---

* இருளிரியச் சுடர்மணிகளிமைக்கு நெற்றி
இனத்துத்தியணிபணமாயிரங்களார்ந்த
அரவரசப்பெருஞ்சோதி யனந்தனென்னும்
அணிவிளங்குமுயர்வெள்ளை யணையைமேவித்
திருவரங்கப்பெருநகருள் தெண்ணீர்ப்பொன்னி
திரைக்கையாலடிவருடப் பள்ளிகொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டுகொண்டென்
கண்ணிணைகளென்றுகொலோ களிக்குநாளே.

‡ ஊனேறுசெல்வத் துடற்பிறவியான் வேண்டேன்
ஆனேறேழ்வென்றானடிமைத் திறமல்லால்
கூனேறு சங்கமிடத்தான் றன்வேங்கடத்துக்
கோனேரிவாழுங் குருகாய்ப்பிறப்பேனே.

கண்ணபிரானை ஸேவித்து கோபிகாஸ்திரீகள் சொல்வதாகப் பத்துப்பாடல் செய்தருளி அவ்விடம்விட்டு வடமதுரைக் கெழுந்தருளி கோபாலகிருஷ்ணனைச் சேவித்துத் தேவகி சொல்வதாகப் பத்துப்பாடல் செய்தருளி அவ்விடம்விட்டுப் புறப்பட்டுத் திருக்கண்ணபுரத்துக்கு எழுந்தருளி எம்பெருமானைச் சேவித்துக் கௌஸலை தாலாட்டுவதாகப் பத்துப்பாடலும் தசரதசக்ரவர்த்தி, புத்ரனைப்பிரிந்து வருந்துவதாகப் பத்துப்பாடலும் பாடியருளி அவ்விடத்திலிருந்து சித்ரகூடத்துக்கு எழுந்தருளி அவ்விடத்தில் ருத்ரன்வணங்கப் பள்ளிகொண்டிருக்குங் கோவிந்தராஜனை ஸேவித்து வால்மீக ராமாயணத்தைப் பத்துப்பாடலாகச் செய்தருளி இப்படி ௱௫-பாடல்கள் பாடி இந்த லீலாவிபூதியில் ௱௨௰-௵ எழுந்தருளியிருந்து அவ்விடம் விட்டுப் பிரம்மருத்ராதி தேவர்களுக்கும அறியப்படாத மகிமையையுடையவரான ஸ்ரீமந்நாராயணன் தேவி பூஷணயுத பரிஜனங்களோடு மெழுந்தருளிய ஸ்ரீ வைகுண்டத்துக்குச் சென்று ஸ்ரீயஃபதியை அடங்காப் பெருங்காதலோடு அனேகமுறை பணிந்து அவரது அற்புத குணங்களைக்குறித்துத் துதித்து மாறாத ஆனந்தத்துடன் திருமாமணி மண்டபத்தில் நித்யஸூரிகளோடு மெழுந்தருளியிருந்தார்.

## வாழித்திருநாமம்.

அஞ்சனமாமலைப்பிறவியாதரித்தான்வாழியே
அணியரங்கர் மணத்தூணையமர்ந்தசெல்வன்வாழியே
வஞ்சிநகரந்தன்னைவாழ்வித்தான்வாழியே
மாசிதனிற்புனர்பூசம்வந்துதித்தான்வாழியே
அஞ்சலெனக்குடப்பாம்பிலங்கையிட்டான்வாழியே
அனவரதம்ராமகதைக்கமகிழ்வோன்வாழியே
செஞ்சொன்மொழிநூற்றஞ்சுஞ்செப்பினான்வாழியே
சேரலர்கோன்செங்கமலத்திருவடிகள்வாழியே.

## நேரிசைவெண்பா.

மாசிப் புனர்பூசங் காண்மினின்று மண்ணுலகிற்
றேசித் துவசத்துக் கேதென்னில்—பேசுகின்றேன்
கொல்லி நகர்க்கோன் குலசேக ரன்பிறப்பால்
நல்லவர்கள் கொண்டாடும் நாள்,

குலசேகராழ்வார் வைபவம்
முற்றிற்று.



# பெரியாழ்வார் வைபவம்.

𑌮𑌿𑌥𑍁𑌨𑍇 𑌸𑍍𑌵𑌾𑌤𑌿𑌜𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑌥𑌾𑌂𑌶𑌂 𑌧𑌨𑍍𑌵𑌿𑌨𑌃 𑌪𑍁𑌰𑍇 ।
𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 𑌶𑍍𑌵𑌶𑍁𑌰𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌪𑍁𑌰𑌃𑌶𑌿𑌖𑌮𑍍 ॥

மிதுநே ஸ்வாதிஜம விஷ்ணோ ரதாம்ஸம் தன்விந: புரே,
ப்ரபத்யே ஸ்வஸுரம் விஷ்ணோர் விஷ்ணுசித்தம புரஸ்ஸிகம.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

குருமுகமநதீத்ய ப்ராஹவேதா நசேஷான்
நரபதி பரிக்லப்தம ஸுல்கமாதா துகாம:,
ஸ்வஸுரமமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத்
த்விஜகுல திலகந்தம் விஷ்ணுசித்தம் நமாமி.

ப்ரஹ்மாதிதேவர்கள் அனந்தகாலம் மஹத்தான தவங்களைச் செய்யினும் அடைவதற்கு அருமையானதாகியும் அப்ராக்ருத திவ்யதேசமாகியும் நித்யானந்த அநுபவஸ்தானமாகியும் விளங்கா நின்ற பரமபதத்தில் ஸர்வலோககர்த்தாவாக எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீமந்நாராயணன் தம்மருகில் ஸேவித்துநிற்கிற பெரிய திருவடியைப் பார்த்தருளி, பூலோகத்தில் ஆத்மாக்களெல்லாம் அஞ்ஞானமென்கிற கிருஷ்ணசர்ப்பத்தின் விஷத் தங்களறிவை

மயக்குவிக்க அதனால் நிஷ்பலமான இதரமதங்களில் விழுந்து உண்மையாகிய நமது பரமபதத்தையறிந்து இச்சியாமல் மயங்குகின்றார்கள். ஆதலால் நீர்போய் உலகத்தில் அவதரித்து அம்மயக்கத்தை நிவர்த்திசெய்து உண்மையையறிவித்து வைஷ்ணவசித்தாந்த ஸ்தாபகம்செய்து அதில் நடக்கும்படி செய்வித்து வாருமென்று திருவாய்மலர்ந்தருள அந்தப் பிரகாரமே பூலோகத்திலுள்ள திவ்யதேசங்களிற் சிறந்த ஸ்ரீவில்லிபுத்தூரென்னுந் திவ்யதேசத்தில் பரலோக வின்பத்தைக் கொடுக்கத்தக்க புத்திரனைப் பெற்றுக்கொள்வதற்கு விரும்பி ஸ்ரீவடபெருங்கோயில் எம்பெருமானைப் பிரார்த்தித்துக்கொண்டிருக்கிற சோழியப்பிராம்மண சிரேஷ்டரான முகுந்தாசார்ய ரென்பவர் மனைவியாய்ப் பதிவிரதா சிரோமணியாகிய பதுமையென்னும் மனைவியின் திருவயிற்றில் எழுந்தருளி கலியுகத்தில் நாற்பத்தேழாவதான குரோதனவருஷம் ஆனிமாசம் சுக்ல ஏகாதசி பானுவாரங்கூடின ஸ்வாதிநக்ஷத்திரத்தில் உலகத்திலுள்ள உயிர்களெல்லாங்குதூகலமடையும்படி திருவவதாரஞ் செய்தருளினார்.

அவ்வாறு அவதாரஞ்செய்தபுத்திரனது கோடிசூர்யோதயம்போல் பிரகாசிக்கின்ற ஸ்வர்ணமயமாகிய வடிவைத் தாயாரானவள் கண்குளிரக்கண்டுமகிழ்ச்சியே வடிவாயிருந்தாள். முகுந்தாசார்யரும் புத்திரனுடைய ஒப்பிடப்படாத சுபலக்ஷணங்களெல்லாங் குறைவில்லாது பொங்குகின்ற திருமுகமுதலான அவயவங்களின் அழகைப்பார்த்துப் பார்த்துக் கண்குளிர்ந்து மனமகிழ்ந்து உடல்பூரித்துத் தமது குலாசாரத்துக்குத் தக்கபடி செய்யவேண்டியவைகளைச் செய்து ஆனந்தமுடையவராய் விஷ்ணுசித்தனென்று நாமகரணஞ்செய்வித்து மற்றவைகளையும் காலாதீதமின்றி மங்களம்பெருகச் செய்வித்து நெடுங்காலந் தவஞ்செய்து அருமையாகப்பெற்ற சிந்தாமணியை ஒருவன் எவ்வாறு உபசாரத்துடன் வைத்துப் பாதுகாப்பானோ அவ்வாறுவைத்து உபசரித்துப் பலபல அலங்காரங்கள்செய்து பாராட்டி வளர்த்து ஏழாம் வயதில் உபநயனஞ்செய்து வேதமுதலாகிய கலைகளைக்கற்பிப்பதற்கு ஆரம்பஞ் செய்வித்தார்.

விஷ்ணுசித்தர் பூர்வக்கியான சம்பந்தத்தால் எளிதில் ஸமஸ்தகலைகளிலும் வல்லவராய் பகவத்பக்தி பாகவதபக்தி என்னும் இருவகை பக்திகளும் உள்ளேநின்று நாளுக்குநாள் ஓங்கி வளர்

க்துவாச் சத்துவகுண மேருவாகி பிரம்மதேவனை நாபிகமலத்தி லுற்பவிக்கச்செய்து அவனால் அண்ட சராசரங்களைச் சிருஷ்டித்தருளிய ஸ்ரீமந்நாராயணனை நித்யமாகிய பரவஸ்துவென்றும் அவரது திருவடிக்கே நாம் அடிமையென்றும் பூர்வபக்தி விசேஷத்தாலறிந்துகொண்டு நாள்தோறும் வடபெருங்கோயிலானைத் தவறாது ஸேவித்தும் சதுர்வேதஸாரமாகிய திருமந்திரார்த்தங்களை யுணர்ந்துணர்ந்தும் பக்தியே வடிவாகக்கொண்டு எழுந்தருளி யிருந்தார்.

அவ்வாறு இருந்தவர் ஒருநாள் வடபெருங்கோயில் பெருமாள் ஸந்நிதியில் நின்று ஸேவிக்கும்போது திவ்யமணமுள்ள மலர்மாலைகள் எம்பெருமான் திருமேனியிற் கண்டு கண்களில் நீர்சொரியக் கைகுவித்துக்கொண்டு இந்தத் திருமாலைகள் எம்பெருமான் திருமேனியிற் சாத்துவதற்கு என்ன புண்ணியங்களைச் செய்திருக்கின்றனவோ! இவ்வாறு திருமாலைகளைச் சாத்தி அலங்காரஞ்செய்து கண்குளிரக்கண்டு களிப்பதல்லவோ இந்த தேஹம் எடுத்ததனாலாகிய லாபம்; நாமிதையறியாது இத்தனை காலமும் இவ்வுடம்பை வீணே வளர்த்திருந்தோமே யென்று எண்ணி யெண்ணி ஸந்நிதியிலே நின்றும் புறத்திலேவந்து அன்றுதொடங்கி எம்பெருமானுக்குத் திருமாலை சாத்தும் கைங்கர்யத்திலேயே எண்ணமுள்ளவராய்த் தமது பூர்வார்ஜிதங்களை யெல்லாம் அது விஷயத்திலே செலவழித்து நல்ல வளப்பமுள்ள நிலங்களில் துளபம்-சுகந்தம்-மல்லிகை - ஜாஜி-பாதிரி - செண்பகம் - பிச்சி - புன்னை - இருவாட்சி-முல்லை-குருக்கத்தி-செவ்வந்தி-முதலான பத்ரபுஷ்பங்களைத் தரும் நந்தவனங்கள் ஏற்படுத்திச், செங்கழநீர்-நீலோத்பலம்-செந்தாமரை-வெண்டாமரை - முதலான நீர்மலர்களுக்கிடமான பலதடங்களும் குளங்களும் கூபமும் எடுப்பித்து, இப்படி அந்த வனங்களில் கோட்டுப்பூ-கொடிப்பூ-நிலப்பூ - நீர்ப்பூவெனும் நால்வகைப்பூக்களும் குறைவில்லாது புஷ்பித்து விளங்கும்படி இரவும் பகலும் நித்திரையாகாரம் முதலானவைகளையும் விடுத்துப் பலவித முயற்சிகளைச் செய்து தமது தேஹம் வருந்த அதற்குத்தக்க கருவிகளைக்கொண்டு கொத்துதல் களையெடுத்தல் நீர்விடுதல்முதலான உழைப்புகளிற் சலியாதவராய்ப் பரிவுமிக்கத் தாயானவள் தன்னருமைமக்களை ஊட்டிவளர்ப்பதுபோல வளர்த்து, நாள்தோறும் பிராதக்காலங்களி லெழுந்து

ஸ்நாநத் யநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு நந்தவனங்களிற்சென்று தமது நாசியில் வாஸனைபுகாதபடி திருப்பரியட்டத்தாற்கட்டி வண்டுகள் வீழ்ந்து எச்சிலாகாமுன்னம் மணமுள்ள நால்வகைப் புஷ்பங்களையும் பத்திரங்களையும் கொய்து திருப்பூக்கூடைகளில் நிரப்பி யெடுத்துக்கொண்டுவந்து தமது திருமாளிகையில் பிரத்தியேகமாக விருக்கின்ற அறையினிடத்து வைத்து பிணையல்மாலை கண்ணிமாலை கோதைமாலை முதலாகப் பலவகை மாலைகளாகக்கட்டி வடபெருங்கோயிலிற் கொண்டுபோய் வடபத்திரசாயியென்னும் எம்பெருமானுக்கு ஸமர்ப்பித்துக் கொண்டு வந்தார்.

இந்தப்பிரகாரம் விஷ்ணுசித்தரென்னும் பெரியாழ்வார் நிச்சலமான நிஷ்டையுடன் காலந்தோறுந் தவறாது ஸ்ரீவடபெருங்கோயிலானுக்குப் புஷ்பகைங்கர்யஞ் செய்துகொண்டிருக்கிற காலங்களில் மதுராபுரியில் பாண்டியதேசத்தை யாளுகின்ற ஸ்ரீவல்லபதேவனென்னும அரசன் ஒருநாள் இராத்திரியில் நகர்சோதனை செய்யும்படி மாறுவேஷங்கொண்டு வீதியில் வரும்போது ஓர் வீதியில் ஒரு கிரகத்தின் திண்ணையில் ஒண்டியாய் ஒருவர் படுத்திருக்கக்கண்டு அவ்விடத்திற்குப்போய் அவரை யெழுப்பி இந்த அர்த்தராத்திரியில் இந்தத்திண்ணையில் ஸஹாயமில்லாமல் படுத்திருந்த நீர் யாரென்றுகேட்க அதற்கு அவர், ஐயா நான் பிராம்மணன் கங்காஸ்நானம பண்ணிக்கொண்டு ஸேதுவுக்குப் போகும்படி வந்தேன்; இவ்விடத்தில் வரும்போது இருட்டிப்போயிற்று. ஆதலால இங்கே படுத்திருந்தேன் என்வரலாறிதுவென்றுசொல்ல, அதுகேட்டு அரசன் ஐயா நீர் பிராம்மணர், உமக்கு வேதமுதலான கலைகளெல்லாம நன்றாய்த் தெரிந்திருக்கும்; அன்றியும அநேக தேசஸஞ்சாரஞ் செய்துவந்தபடியால் அங்குள்ள மஹான்களிடத்தில் ஸத்காலக்ஷேபஞ் செய்திருப்பீர். ஆதலால் தேவர் கேட்டவைகளிலொன்றெனக்குச் சொல்லவேண்டுமென்று பிரார்த்தித்தான். அதுகேட்டு அந்தப் பிராமணர் ஒரு சுலோகத்தைச்சொல்ல அதனை அரசன் கேட்டு இந்த சுலோகார்த்தத்தை வெளிப்படையாகக் கருத்துப் புலப்படும்படி சொல்லுமென்று வேண்ட அந்தப் பிராம்மணரும் இந்த சுலோகம் "இராக்காலத்தில் புசிப்பதற்குவேண்டிய வுணவுகளைப் பகற்காலத்திலேயே ஸம்பாதித்துக் கொள்ளவேண்டும்; வருஷகாலத்

தில் இருந்து ஜீவனஞ் செய்வதற்கு வேண்டிய உபகரணங்களை யெல்லாம் வெய்யற்காலத்திற்றானே ஸம்பாதித்துக் கொள்ளவேண்டும். வார்த்திக்ய காலத்தில் இருந்து தேஹ ஸம்ரக்ஷணஞ் செய்து கொள்வதற்கு வேண்டிய திரவியங்களை வாலிபகாலத்திற்றானே ஸம்பாதித்துக்கொள்ளவேண்டும்; இவைகளைப்போல பரலோகத்தில் இருந்து சுகத்தை யனுபவிப்பதற்கு வேண்டிய புண்ணியங்களை இஹலோகத்திற்றானே ஸம்பாதித்துக் கொள்ளவேண்டும்'' என்றுவெளிப்படுத்தியதென்றுசொல்லஅரசன்அது கேட்டு மனமுருகி - ஆஹா இந்தப் பெரியவர் சொல்லிய சுலோகார்த்தத்தின்படி நாமிதுவரையும் மறுமைக்கு வேண்டிய புண்ணியங்களைச் செய்துகொள்ளாது வீணாள் கழித்தோமேயென்று வியாகுலப்பட்டுப் பின்பு அந்தப் பிராமணரைப் பார்த்து ஸ்வாமி! தேவரீர் ஸேதுயாத்திரை யின்னுஞ் சிலகாலஞ்சென்று செய்வதாகவைத்து இங்கிருந்து அடியேனை நல்வழியில் நடத்தவேண்டுமென்று ப்ரார்த்தித்து அவர்ஸம்மதிக்க அவருடன் தனது அரண்மனைக்குவந்து அவர்க்குத் தக்க வுபசாரங்களில் குறைவுபடாது செய்து நாள்தோறும ஸத்விஷயங்களை அவரால் கேட்டு மகிழ்ச்சியடைந் திருந்தனன்.

அவ்வாறிருக்க ஒருநாள் அந்தப்ராம்மணரிடத்தில்தாங்கேட்ட கேள்விகளால்மறுமையின்பத்தையடைவதற்கு ஹேதுவானமார்க்கத்தை விசாரி லறிந்துகொண்டு அடையவேண்டு மென்னும் ஆசை அதிகப்பட்டு விசாரவசத்தனா யிருக்க, அத்தருணத்தில் ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடிகளில் ஸதா பக்திவைத்தவராகியும் வேதாகம சாஸ்திராதி கலைகளில் வல்லவராகியும் தமக்குப் புரோஹிதராகியு மிருக்கின்ற செல்வநம்பியென்னும் பிராம்மணர் தமது சபைக்குவர அரசன் அவரை யெதிர்கொண்டழைத்துவந்து ஆஸனங்கொடுத்து ஸ்வாமி! அஞ்ஞானாந்தகாரத்தில் அழுந்தி ஞானசூரியோதயத்தையெதிர்பார்த்திருக்குமடியேன் பரலோக ஸாதகதமமாகிய கர்மங்களை யனுஷ்டித்து மறுஜன்மப்பயனையடைய விரும்பினேன்; ஆனால் அவ்விருப்பத்தை முடித்துக்கொள்வதற்குத் தக்க ஸத்கர்மங்களெவையோ அவை இவையென்றறிவதற்கு அசமர்த்தனாகவிருக்கிறேன்; அடியேனுக்கு இது விஷயத்தில் தெளிவுண்டாகும்படி தெரிவிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தான்.

அதுகேட்டுச் செல்வநம்பியானவர் அரசனை ஸ்ரீவைஷ்ணவ அதிகாரிகளாகிய பரமபாகவதர்களை ஸேவிப்பதும் அவர்கள் திருவாய்மலர்ந்தருளுகின்ற வேதார்த்தங்களைச் சிரவணஞ்செய்வதும் அவ்வர்த்தங்களை இருதயத்தில் மனனஞ்செய்வதும் அவர்களுடன் கூடிப் பழகுவதுமாகிய இச்செய்கைகளே அதற்குத் தக்க வுபாயமாமென்று சொல்ல அரசன் அதுகேட்டு ஸ்வாமி! அப்படிப்பட்ட பாகவதோத்தமர்கள் எவ்விடத்தில் எத்தருபத்தோடு எந்தச்செய்கைகளைச் செய்துகொண்டிருப்பார்கள். அது தெரிவித்தால் அடியேன் சென்று தேடிக்கண்டு தேவர் சொன்ன வண்ணம் நடந்துகொள்ளுகிறேனென்று சொல்ல அதுகேட்டுச் செல்வநம்பியானவர் அரசனை அந்த மஹாநுபாவர்கள் இந்த இடத்தில் இந்த உருவோடு இந்த செய்கையைச் செய்துகொண்டு இருப்பார்களென்று நான் சொல்லுவதற்கும் நீர் தேடிக் கண்டுகொள்ளுவதற்கும் முடியாது. ஆதலால் உமது ஸபைக்கு முன்னே ஒரு பொற்கிழியைத்தூக்கிக் கட்டிவைத்து "இந்த உலகத்திலுள்ள பலவகைப்பட்ட மதங்களில் எந்த மதத்தில் உண்மையாகிய வஸ்துவைக்காட்டுகிற நெறியுள்ளதோ அஃதின்னதென்று ஒரு மதத்திலும் எனக்குத் துணிவு பிறவாமலிருக்கின்றது. அதனாலே அந்தந்தச் சமயசாஸ்திரங்களை யுணர்ந்து மோக்ஷநிலையைத்தேடுகின்ற பெரியோர்கள் இவ்விடத்தில் வந்து தங்கள் தங்கள் ஸமயங்களின் உண்மையை வெளிப்படுத்துவார்களானால் எந்த ஸமய ஸித்தாந்தத்தினால் நான் கட்டியிருக்கிற பொற்கிழி அறுந்து விழுகின்றதோ அந்த மதத்தில் நான் உட்பட்டுக் கடைத்தேறுகிறேன்" என்று உலகமுழுதும் வெளிப்படுத்தி அக்கிழியை யறுத்து உண்மையான ஸமயத்தையும் அச்சமயத்தில் நித்யவஸ்துவைக் காட்டுகின்ற மஹான்களையு மறிந்துகொள்வீர்; இதுவே இதற்குத்தக்க வுபாயமென்றுசொல்ல, அதுகேட்டு அரசன் செல்வநம்பியைத் தொழுது ஸ்வாமி! தேவரீர் அடியேனுக்குக் கிடைத்தது குருடனுக்குக் கண்கிடைத்ததுபோலவும் தரித்திரனுக்குச் செல்வங்கிடைத்தது போலவுமல்லது வேறல்ல, ஆதலால் தேவர் திருவாய்மலர்ந்தபடியே செய்கிறேன் என்று அரசன், ஆனந்தபரவசனாகித் தெளிந்து உடனே சபையில் ஒரு பொற்கிழியைத் தூக்கித் தமது கருத்தை ஓலையிலெழுதி உலகத்திலுள்ள தேசங்களிலிருக்கிற எல்லாச் சமயத்தவர்களுக்குந் தூதர்களால் தெரிவிக்க, அதையறிந்து - சமணர் - புத்தர் - சைவர் - சாக்தேயர் - மாயாவாதிகள், வைசேடிகர், சாங்கியர் - பா

சுபதக் - மஹாவீரதர்முதலான ஸமஸ்த ஸமயங்களிலுமுள்ள ஆசாரியர்களும் சீஷர்களும விரதியர்களும் மற்றவர்களும விரைவில் தங்கள் தங்கள் தேசத்தைவிட்டு மதுரையில் வந்து சேர்ந்தார்கள்.

இப்பால் ஸ்ரீவில்லிபுத்தூரில் வடபெருங் கோயிலெம்பெருமானுக்குப் புஷ்பகைங்கர்யஞ் செய்துகொண்டு உலகத்திலுள்ள எவ்வகைப்பட்ட பொருள்களிலும் இச்சாத்வேஷ ரகிதராய் ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடிகளை மறவாமல் நினைத்திருக்கின்ற ஸ்ரீ விஷ்ணுசித்தரென்னும பெரியாழ்வார் அனறு இராத்திரி நித்திரைசெய்யும்போது ஸ்ரீமந்நாராயணன் அவர் நித்திரைசெய்யுமிடத்திற்கு எழுந்தருளி விஷ்ணுசித்தரே எழுந்திருமென்று யெழுப்பியருளக் கண்விழித்து நீலமேகம்போலப் பிரகாசிக்கின்ற எம்பெருமானது திருமேனியைக் கண்டு திடுக்கிட்டெழுந்து கீழ்விழுந்து பலமுறை யடிபணிந்து கண்களில் ஆனந்த நீர்சொரிய மனங்கரைந்து உருகக் கைகளைக் குவித்து நின்றுகொண்டு இந்திராதி தேவதைகள் கனவிலுங் காண்பதற கரிதாகிய திருமேனியை யடியேன் எளிதில் கண்டுகளிக்குமபடி கனவி லெழுந்தருளிய என்னுயிர்க்குயிராகிய எம்பெருமானே என்று ஸ்துதிசெய்துநிற்க, எமபெருமான் அவ்வாறு துதித்து நிற்கின்ற பெரியாழ்வாரைக் கருணைதனுமபப பார்த்தருளி மதுரையில் பாண்டியராஜன் தன்சபையில் ஒரு பொற்கிழியைக் கட்டுவித்து எந்தச் சமயத்தவர்கள் தங்கள் ஸித்தாந்தஸ்தாபகம்செய்து அதனால் இந்தக்கிழி அறுமபடிசெய்கிறார்களோ அந்தச்சமயத்தில் நான் அடிமைபடுகிறேன் என்று தேசங்கள்தோறும் அறிவித்துப் பல சமயத்தாரையும் மதுரைக்கு வருவித்திருக்கின்றான்; ஆதலால் நீர்போய் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம் புருஷஸூக்தப்படி ஸ்தாபகம்பண்ணி அதனால் அந்தக்கிழியை அறுத்து அவனையும் அடிமைகொண்டு நமது நித்ய ஸ்வரூபத்தைப் பிரகாசிப்பிக்கின்ற தத்வார்த்தங்களைப் போதித்து மதோத்தாரணஞ் செய்யுமென்று திருவாய்மலர்ந்தருள அதுகேட்டு ஆழ்வார் என்பெருமானே தேவரீர் திருவடிகளே துணையாக இதோ நடக்கின்றேன் என்று துதிக்கின்றபோது ஸ்ரீமந்நாராயணன் அந்தர்த்தானமாக எழுந்தருளி அந்தத் திவ்யதேசத்தில் இருக்கின்ற பிராமணர்கள் பாகவதர்கள் முதலான ஸமஸ்தமானபேருக்கும் கனவிலெழுந்தருளி நமது பக்தனாகிய விஷ்ணுசித்-

தன் மதுரைக்கு ஸ்வமதோத்தாரணஞ் செய்யப்போகின்றான்; நீங்களனைவரும் அவனைச் சூழ்ந்து உபசாரத்துடன் அழைத்துக் கொண்டு போய்வாருங்களென்று திருவாய்மலர்ந்தருள அவரவர்களும் அளவிறந்த அற்புத ஸந்தோஷமடைந்து அந்த க்ஷணமே ஸ்ரீவைஷ்ணவர்களனைவரும் ஒன்றாகக்கூடிப் பொற்பல்லக்கு வெள்ளைவட்டக்குடை வெண்சாமரை முதலான விருதுகளைக் கொண்டு ஆழ்வாரிடத்திற்குவந்துபணிந்து ஸ்வாமி! ஸ்ரீமந்நாராயணன் ஆக்கினைப்படிவந்தோம்; தேவரீர் இந்தப்பல்லக்கின்மேல் ஆரோகணித்துக்கொண்டு மதுரைக்கு எழுந்தருள வேண்டுமென்று பிரார்த்திக்கப் பெரியாழ்வார் வடபத்ரசாயியைச் சேவித்து விடைபெற்றுக்கொண்டு பொற்சிவிகையின்மேல் ஆரோகணித்துக்கொண்டு வெண்கவிகை நிழற்றவும் வெண்சாமரை வீசவும், வேதவேதியர் ஆசிகூறவும், பாகவதர்கள் சூழ்ந்து துதிக்கவும் ஸ்ரீவில்லிபுத்தூரைவிட்டு மதுரைக்கு எழுந்தருளி அரசனுடைய கொலுமண்டபத்துக்கு அருகே யெழுந்தருளிவரும்போது சுருதி ஸ்மிருதி இதிஹாஸ புராணாதிகளில் ஸமர்த்தர்களாகிய பிராமணர்களும் முனிவர்களும் மந்திரி புரோஹிதர் முதலான ஏனைச்சுற்றங்களும் தங்கள் தங்கள் தரத்துக்குத்தக்க ஆஸனங்களில் சூழ்ந்திருக்கவும் சைவர்-அருகர்-புத்தர்-மாயாவாதியர் முதலான சமயத்தோர் தங்கள் தங்களுக்கு நியமித்த ஸ்தானங்களில் கூடியிருக்கவும் ஸிம்மாசனத்தின்மேல் பரமபாகவதர்களது வரவுபார்த்து வீற்றிருக்கின்ற ஸ்ரீ வல்லபதேவராஜனுக்கு முன்பு ஒற்றர்கள் வந்து இறைவனே பார்க்கின்றவர்களது கண்களுக்கும் மனத்துக்கு பேரின்பத்தையுண்டாக்குகின்ற அற்புதமான ரூபத்தையுடைய ஓர்மஹாத்மா அநேகம்பக்தஜனங்கள் சூழ்ந்துவரப் பொற்சிவிகையின்மேல் ஆரோகணித்துக்கொண்டு தமது கொலுமண்டபத்துக்கு ஸமீபத்திலெழுந்தருளி வருகின்றாரென்று விண்ணப்பஞ்செய்துகொண்டார்கள்.

அதுகேட்டுப் புரோஹிதராகிய செல்வநம்பியும் அரசனைப் பார்த்து நீர்செய்த சுகிர்தவிசேஷம இன்று பலித்ததாகத்தோன்றுகின்றது; எழுந்தருளிவருகின்ற பெரியவர் தேவர்கள் முனிவர்கள் முதலான பூஜ்யர்களாலும் பூஜிக்கத்தக்க பரமபாகவதோத்தமர்; ஆதலால் இனிகாலவிளம்பஞ் செய்யாது எதிர்கொண்டு எழுந்தருளப் பண்ணிக்கொண்டுவந்து ஷோடசோபசாரமுஞ் செய்து அவரனுக்கிரகத்தைப் பெற்றுக்கொள்வீரென்று சொல்ல அரசனும் அதிசீக்கிரமாக எழுந்து செல்வநம்பியாரோடும் போய்த்

# பெரியாழ்வார் வைபவம்.

திருப்பல்லக்கின்மேல் எழுந்தருளி வருகின்ற பெரியாழ்வாரையெதிர்கொண்டு அழைத்துவந்து ரத்னகசிதமாகியஸிம்ஹாஸனத்தின்மேல் எழுந்தருளப்பண்ணி அர்க்கியம்-பாத்யம - ஆசமநாதி உபசாரங்களைச் செய்து அநந்தமுறை கீழேவிழுந்து தண்டன் சமர்ப்பித்து எழுந்து கைகளைக்கூப்பிக்கொண்டு கண்களில் நீர்வடிய நின்று ஸ்வாமி! கரசரணாதி யவயவங்களில்லாத முடவனுக்குமலையுச்சியிலுள்ள வ்ருக்ஷத்தின் உயர்ந்தகிளையினிடமாகக்கட்டிய இனிய சுவையுள்ளதேன் தெய்வானுகூலத்தால் வலியக்கிடைத்ததுபோல பாகவதர்களைச் சேவிக்கவேண்டுமென்னும் இச்சையும் அவர்களது மேன்மையை யறியத்தக்க அறிவும் எள்ளளவுமில்லாமல் அரசச்செல்வத்தி லழுந்தி மயங்குகின்ற அடியேன் தேவரீர் ஸேவைகிடைக்கும்படி பெற்றேன்; இது பெறுவதற்குப் பூர்வஜன்மத்தில் என்ன சுக்ருதஞ் செய்திருந்தேனோ வென்று சொல்லிச்சொல்லிப் பலவகையாகத் துதிக்க அப்பொழுது அந்தச் சபையில் நடக்கும் சமயவாதிகளின் முடிவையறிந்துகொள்ளும்படி அந்தரத்தில் வந்திருக்கின்ற பிரமமாதிதேவர்களுள் தேவேந்திரன் தனதுகுருவாகிய ப்ரஹஸ்பதியைப் பார்த்து ஸ்வாமி! நீர் மானுஷதேகங்கொண்டு விஷ்ணுசித்தரோடு வாதுசெய்து அவரதுமஹிமையை யாவரும் நன்றாய்த்தெரிந்து கொள்ளும்படி செய்யீரென்றுசொல்ல அந்தப்பிரகாரமே அவர் ஒருபிராமமணனைப்போல ராஜசபையில்வந்து அரசனைப்பார்த்து உமக்கு எந்தச் சமயத்திலும் நிச்சயஞானமுண்டாகாமல் ஒருபொற்கிழியைக் கட்டி அந்தக்கிழி யெந்தச்சமயத்திலுள்ளபெரியோர் தங்கள் சமயசித்தாந்த ஸ்தாபநத்தினால் அறுந்து விழும்படி செய்கின்றார்களோ அவர்களுக்கே நானடிமையென்று தெரிவித்திருக்கிற நீர் இப்பொழுது இந்தப்பிராமணர் வாராமுன்னமே யெதிர்கொண்டு உபசரித்து ஆசனத்திலிருத்தி யடிபணிந்து பக்திசெய்தீர்; ஆனால் இவரிடத்து என்னமகிமையைக் கண்டீரென்றுசொல்ல அங்கிருந்த இதர சமயத்தவர்களனைவரும் அந்தப்பிராம்மணரோடு கூடிக்கொண்டு அரசனைப்பார்த்து அரசனே இனி யெங்களாலாவது ஒன்றுமில்லை, இந்தப் பிராம்மணரே ஸ்வமத ஸ்தாபகஞ்செய்து நீர்கட்டி யிருக்குங்கிழி அறுந்துவிழும்படி செய்யவேண்டியதென்று திசைகள் செவிடுபடும்படி ஆரவாரித்தார்கள்.

அதுகேட்டு அரசன் தன்னருகிலிருக்கின்ற செல்வநம்பியைப் பார்த்து உண்மையறியாத இச்சமயிகள் விஷயத்தில் நாமென்ன சொல்வதென்றுகேட்க செல்வநம்பியும் அவ்வரசனைப்

பார்த்து நீர் ஒன்றுக்கும் அஞ்சவேண்டுவதில்லை, இக்ஸபையில் வந்திருக்கின்ற எல்லா ஸமயத்தாரும் வெட்கங்கொள்ளும்படி விஷ்ணு சித்தரென்னுந் திருநாமத்தையுடைய இந்தப்பெரியவரே நீர் கட்டியிருக்குங் கிழியறுந்துவிழும்படி செய்வாரென்று சொல்லி விஷ்ணுசித்தரது திருமுகத்தைப்பார்க்க விஷ்ணுசித்தரும் தேவேந்திரனனுமதிபெற்றுவந்த ப்ராஹ்மணரது முகத்தைப்பார்த்து நீர் மாத்சர்யத்தினால் விழுங்கப்பட்டவராக விருக்கின்றீர்; உமது சமயம் யாது? அச்சமயத்திற்குக் கர்த்தாவெவன்? அக்கர்த்தனை அடைந்தவர்களனுபவிக்கின்ற அனுபவம்யாது? சொல்லுமென்று கூறியருளினார்.

அதுகேட்டு அந்த ப்ராஹ்மணன் எனது ஸமயமுதலானவைகளைக் குறித்து நீர் கேட்ட கேள்விகளையே நான் கேட்குங் கேள்விகளாகக்கொண்டு நீரே உத்தரஞ் சொல்லுமென்று சொல்ல விஷ்ணுசித்தர் அந்தச் சபையிலுள்ள ஸமயத்தவர்களெல்லாம் கேட்கும்படி எமது ஸமயம சதுர்வேத நிச்சயமான தத்வார்த்தங்களை ப்ரதிபாதிக்கின்ற விசிஷ்டாத்வைத ஸித்தாந்தமாகிய ஸ்ரீ வைஷ்ணவஸமயம். மாயாதீதனாகியும ஆத்யந்தரஹிதனாகியும் ஸர்வவல்லவனாகியும்-ஸத்வகுணைகமயனாகிப் புத்புத ப்ரபஞ்சங்களையெல்லாந் தனது திருவயிற்றில்வைத்து பரஹ்மாவைத் திருவுந்தியிலும ருத்ரனைப் பிரமனது நெற்றியிலுந் தோற்றுவித்துச் சிருஷ்டியாதி கிருத்தியங்களைச் செய்விக்கின்ற ஸ்ரீமந்நாராயணனே எமது ஸமயதெய்வம. அப்ராக்ருதலோகமாகிய ஸ்ரீவைகுண்டத்தில திருமாமணிமண்டபத்தில் நித்தியசூரிகளோடு அமர்ந்து அக்கடவுளின் நித்திய சின்மய குணானுபவஞ்செய்வதே அநுபவம என்று திருவாய்மலர்ந்தருள அதுகேட்டு அந்த ப்ராம்மணன் உமது ஸமயசரித்திரம நிற்கட்டும். அச்சமயதெய்வத்தினுண்மையை மாத்திரம் விரித்துச்சொல்வீரென்று கேட்க, விஷ்ணுசித்தரும் இந்திரஜாலஞ் செய்கின்றவன்போல் ஆத்மாக்களை ப்ராக்ருதியினால் பக்குவப்படுவதற்கு மயக்கஞ்செய்வித்துத் தான் அம்மயக்கத்துக் குட்படாமல் நின்றபடியால் மாயாதீதனென்றது. ஆத்மாக்களை சிருஷ்டி ஸம்ஹாரங்களுக்குட்படுத்தித் தானவ்விரண்டினு முட்படாமல் நின்றதினால் ஆத்யந்தரஹிதனென்றது. அண்டங்களையும் அவ்வண்டங்களில் சராசரங்களையும் திருவுள்ளத்தில் நினைத்தமாத்திரையா லுண்டுபண்ணலும் அவை

களை நிலைகுலையாது ரக்ஷித்தலும் ரக்ஷித்தவைகளைத் திருவயிற்றி லடக்கலும் இவைமுதலாகிய ஸர்வசக்திகளையு முடைத்தாயிருக்தலால் ஸர்வவல்லவனென்றது. என்றுசொல்ல அந்த ப்ராமமணன் விஷ்ணுசித்தரைப்பார்த்து நீர் நாராயணனே ஸர்வவல்லவனென்றீர்; அப்படியல்ல, ப்ரம்ஹதேவனே ஸர்வவல்லமையுள்ள கடவுளென்று சொல்லுகிறேனென்று சொல்ல, விஷ்ணுசித்தர் தனக்குள்ள ஐந்துதலைகளிலொன்றை ருத்ரன நகத்தினாற்கிள்ள அத்தலையைமீட்டும் சிருஷ்டித்துக்கொள்வதற்கு வல்லமையில்லாதவனை ஸர்வவல்லவனென்று சொலவது தகுதியன்றென்று சொல்ல, அதற்குப்ராமமணன் ஆனால்ருத்ரனே ஸர்வவல்லவனென்றுசொல்ல, விஷ்ணுசித்தர் புன்னகைகொண்டு ஆஹா நீர்சொல்லியது நன்றாயிருந்தது. ப்ரமமாவின் சிரத்தைக்கிள்ளியதனால்தனக்குஸம்பவித்தப்ராஹ்மஹத்திதோஷத்தைப்பரிஹரித்துக் கொள்ளமாட்டாது நெடுங்காலம ஆயாதத்துடனே திரிந்து பின்பு ஸ்ரீமந்நாராயணனது அனுக்ரகத்தால் தீருமபடி பெற்றுக்கொண்டவனையா ஸர்வவல்லவனென்பது என்றுசொல்ல, அதற்கு ப்ராம்மணன் காலதத்வத்தினால் அவ்வாறு நேரிட்டது; ஆதலால் அதுவே ஸர்வவல்லமையுடையதென்றுசொல்ல, விஷ்ணுசித்தர் காலதத்வம்ஜடமாகையால் அதற்கு ஸர்வவல்லமை யெவ்வாறுண்டாகுமென்றுசொல்ல, ப்ராம்மணனும அக்காலதத்வத்தை விளங்கச்செய்கின்ற ஆதித்தியனே ஸர்வவல்லவனென்றுசொல்ல விஷ்ணுசித்தர் ஸ்ரீமந்நாராயணனது நேத்திரங்களி லொன்றானவனை யெவ்வாறுஸர்வவல்லமையுடையவனென்பதென்றுசொல்ல அதற்குத்தரமொன்றுஞ் சொல்லாதுஊமைபோல் ப்ராமமணன் மவுனமாயிருந்து விட்டான். அந்த ப்ரகாரமே மற்றச்சமயத்தவர்களும் தங்கள் தங்கள் சமயதெய்வங்களைக் குறித்து வாதுபேசி தோல்வியடைந்து மனஞ்சோர்ந்து முகம்புலர்ந்து மரப்பாவைகளைப்போ லிருந்தார்கள்.

அப்பொழுது விஷ்ணுசித்தரென்னும பெரியாழ்வார் அந்தச் சபையிலிருக்கின்ற பரசவர்களென்னும யானைகளுக்குச் சிங்கம்போலவும் சமணரென்கின்ற அஜங்களுக்குப் புலியைப்போலவும் புத்தரென்ற இருட்கூட்டத்துக்குச் சூரியனைப்போலவும் மற்றச்சமயங்களாகிய சர்ப்பங்களுக்குக் கருடனைப்போலவும் ப்ரகாசித்தார். தேவர்கள் மலர்மாரிபெய்யவும் விசிஷ்டாத்வைதஸித்

தாந்தத்தைப்பலருமறியும்படி திருவாய்மலர்ந்து ஸ்தாபித்தருள, அப்பொழுது அங்கு கட்டியிருந்த பொற்கிழியானது அறுபட்டுப் பெரியாழ்வாரது திவ்ய திருவடிகளுக்கு ஸமீபத்திலவந்து விழுந்தது. அதுகண்டு அவ்விடத்திலுள்ள ஸ்ரீவைஷ்ணவர் முதலான ஸகலரும் ஆச்சர்யமடைந்து மனங்கரைந்துருகக் கைகளைக் கூப்பிப் பலவிதமாகத் துதிசெய்து வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கை விரித்தருளின விஷ்ணுசித்தராகிய பெரியாழ்வார் திருவடிகளில் விழுந்து தண்டன் ஸமர்ப்பித்து ஆனந்த பரவசரானார்கள்.

இதரஸமயத்தவர்களெல்லாம் தங்கள் தங்கள் ஸமயங்களில் வைத்த நம்பிக்கையைவிட்டு விசிஷ்டாத்வைதமே மேலான ஸமயமென்றும் ஸ்ரீமந்நாராயணனே நித்யவஸ்துவென்றும் தெளிந்து விஷ்ணுசித்தரது திருவடிகளில் விழுந்து அவரனுக்ரகத்தைப் பெற்றுக்கொண்டார்கள். செல்வநம்பி அப்பொற்கிழியை யெடுத்து அரசன்முன்வைக்க அரசனதையெடுத்துக் கண்களிலொத்தி இதுவல்லவோ பெறுதற்கரிய இப்படிப்பட்ட பேறுபெற்றேனென்று சொல்லி ஆனந்தமடைந்து விஷ்ணுசித்தருடைய உபய சரணாரவிந்தங்களிலும் அனந்தமுறை விழுந்து விழுந்து தண்டன ஸமர்ப்பித்து ஸ்வாமி! தேவரீர் இவ்விடத்தில் எழுந்தருளுவதற்கும் அடியேனுக்கும் மற்றச் சமயிகளுக்கும் நெடுங்காலம் விடாதிருந்த அஜ்ஞானத்தை நீக்கும்படி தத்வார்த்தங்களைத் திருவாய்மலர்ந்தருளுவதற்கும் அடியேனும் அடியேனதரசாட்சியும் எப்படிப்பட்ட பெருந்தவத்தைச் செய்திருந்தேமோவென்று ஸ்துதித்து நிற்க, அப்பொழுது ப்ராம்மணரூபங்கொண்டு வாதுபோவந்த ப்ரஹஸ்பதியும், ஸகலரும் பார்க்க விஷ்ணுசித்தரது திருவடிகளில் விழுந்து பணிந்து ஸ்வாமி! தேவரீர் ஸந்நிதியிலிருந்து வாதிப்பதற்குத்தக்க சக்தியில்லாத அடியேன் இந்திரனது வேண்டுகோளால் உண்மையையறியாதவன்போல்வாதித்ததனால் நேரிட்ட குற்றங்களையெல்லாம் க்ஷமித்து கடாக்ஷித்தருளவேண்டுமென்று துதித்து ஆழ்வார் நியமனம் பெற்றுக்கொண்டு மறைந்துபோயினர்.

பின்பு அரசன் ஆழ்வாரை ஸேவித்து ஸ்வாமி! தேவரீர் இந்நகரமுழுதும் புனிதமாகும்படி நகர்வலம்வர க்ருபைசெய்ய வேண்டுமென்று ப்ரார்த்திக்க அப்படியே அரசனது பட்டத்து

யானையின்மேலேறியருளி ஸகலருஞ் சூழ்ந்துவரும்படி மங்கள
வாத்தியங்கள் முழங்க நகர்வலமாக வெழுந்தருளும்போது
ஸ்ரீமந்நாராயணன் கருடாரூடராய் ஸேவைஸாதித்தருளப் பெரி
யாழ்வார் யானையைவிட்டிறங்கி எம்பெருமான் திருவடிகளைப்
பணிந்து அவ்யானையின்மணியே தாளமாக வைத்துக்கொண்டு
*பல்லாண்டு பல்லாண்டென்று முதலெடுத்துப்பதினொரு திருப்
பாடலால் எம்பெருமானை மங்களாசாஸனம் செய்தருளி நானெ
ன்னதவஞ் செய்தேனோவென்று துதித்துநிற்க, யாவரும்ஸ்ரீமந்நா
ராயணனை பார்த்தோமென்று ஒருவர்க்கொருவர்சொல்லிக்கொண்டு
ஆனந்தமடைந்தார்கள். அரசனும்செல்வநம்பியும் ஆழ்வாரனு
க்ரஹத்தாலல்லவோ பகவத்ஸேவை நமக்குக்கிடைத்ததென்று
மகிழ்ச்சியடைந்து பலமுறை ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடிக
ளைப் பணிந்து கண்களில் நீர் சொரியக் கைகளைக்குவித்து நின்றா
ர்கள். அப்பொழுது ஸ்ரீமந்நாராயணன் ஆழ்வாரைப் பார்த்த
ருளி விஷ்ணுசித்தரே இன்றுதொட்டு உமக்குப் பட்டர்பிரா
னென்று பெயர் விளங்குவதாக நீர் இன்னுஞ் சிலகாலம் இவ்வுல
கத்திலிருந்து பூமாலை நமக்குச் சாத்துவதுமல்லாமல் வேதார்த்த
ங்களை யமைத்து அநேகம் பாமாலைகளுஞ் சாத்தி உலகிலுள்ள
ஜீவாத்மாக்களை நல்வழியிற்செலுத்திப் பின்னர் நம்மிடம்வந்து
சேருமென்று திருவாய்மலர்ந்தருளி யெழுந்தருளினார்.

பின்பு பெரியாழ்வாரும் நகர்வலம்வந்து அரசனாற் செய்ய
ப்பட்ட ஷோடசாத்யுபசாரங்களுக்குத் திருவுள்ளமுகந்து அவ்
வரசனையும் மற்றவர்களையும் நல்வழியில்நிறுத்தித்தாம் ஸ்ரீவில்லி
புத்தூருக் கெழுந்தருளி முன்போல் நாள்தோறும் புஷ்ப கைங்
கர்யங்களில் குறைவுபடாது செய்துகொண்டு திருப்பல்லாண்டு
தொடக்கமாக நானூற்றெழுபத்து மூன்றுபாமாலைகளையுஞ் செ
ய்துசாத்தி அனேககாலம் ஸ்ரீவில்லிபுத்தூரிலேயே பகவத்குணா
நுபவஞ்செய்துகொண்டு எழுந்தருளியிருந்தார்.

பெரியாழ்வார் ஸ்ரீவில்லிபுத்தூரில் விசேஷ பிரபாவமுடைய
வராயெழுந்தருளி யிருக்கையில் வடக்கேயுள்ள ஒருநாட்டில்
மழையின்றி துர்ப்பிக்ஷம் தலையெடுத்திருக்க அந்நாட்டரசன் பல
விதப்பிரயத்தனங்கள் செய்தும் துர்ப்பிக்ஷம் நீங்காதிருக்கக்கண்டு
சோகித்திருக்கையில், "பிரமநிஷ்டர் ஒருவர் நம் நாட்டுக்குவரின்
சுபிக்ஷமுண்டாகும்" என்று சிலபெரியோர் கூறக்கேட்டு அத்த
கையினரை எங்கும் விசாரிக்கையில் ஆழ்வாரது பிரபாவத்தைக்

---

பல்லாண்டுபல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பல்கோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணாவுன்
சேவடிசெவ்வி திருக்காப்பு.

கேட்டு ஸ்ரீவில்லிபுத்தூருக்குவந்து ஆழ்வாரை ஆசிரயித்துத் தானும் தன்னாட்டாருமவாழும்படி எழுந்தருளவேண்டுமென்று வேண்டிக்கொள்ள, ஆழ்வாரும்இணங்கி, அந்நாட்டுக்கெழுந்தருளினவுடன் மேகங்கள், ஆழியுட்புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி, ஊழிமுதல்வனுருவம் போல் மெய்கறுத்துப், பாழியந்தோளுடைய பற்பநாபன்கையில் ஆழிபோல்மின்னி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து, தாழாதே சார்ங்கமுதைத்தசரமழைபோல் வாழவுலகினிற்பெய்ய, அந்நாடெங்கும் சுபிக்ஷமுண்டாயிற்று. பிறகு ஆழ்வார் அவ்வரசனாலும் அந்நாட்டாராலும பூஜ்யராய்ப் பலவிதமாகக் கொண்டாடப்பெற்றுத் திருக்கண்டமென்னுங்கடிநகரென்னும் திவ்யதேசத்தையடைந்து அங்கெழுந்தருளியிருக்கும் எம்பெருமானை மங்களா சாசனஞ்செய்து "தங்கையைமூக்கும்" என்றாரம்பித்துப் பத்துத்திருப்பாடல்கள் அருளிச்செய்து,

பொங்கொலிகங்கைக்கரைமலிகண்டத்துறைபுருடோத்தமனடிமேல்
வெங்கலிநலியாவில்லிபுத்தூர்க்கோன்விட்டுசித்தன்விருப்புற்று
தங்கியவன்பாற்செய்தமிழ்மாலைதங்கியநாவுடையார்க்குக்
கங்கையில்திருமால்கழலிணைக்கீழேகுளித்திருந்தகணக்காமே.

என்று இறுதிச்செய்யுளையருளிச்செய்து "வெங்கலிநலியா வில்லிபுத்தூர்க் கோன்விட்டுசித்தன்" என்று அக்காலத்து நிகழ்ந்த விஷயந்தன்னைக் குறிப்பிட்டருளிச்செய்தவராய் மீண்டும ஸ்ரீவில்லிபுத்தூருக்கு எழுந்தருளினார்.

## வாழித்திருநாமம்.

நல்லதிருப்பல்லாண்டுநான்மூன்றோன்வாழியே
நானூற்றறுபத்தொன்றுநமக்குரைத்தான்வாழியே
சொல்லரியவானிதனிற்சோதிவந்தான்வாழியே
தொடைசூடிக்கொடுத்தாளைத்தொழுந்தந்தைவாழியே
செல்வநம்பிதன்னைப்போலச்சிறப்புற்றான்வாழியே
சென்றுகிழியறுத்துமால்தெய்வமென்றான்வாழியே
வில்லிபுத்தூர்நகரத்தைவிளங்கவைத்தான்வாழியே
வேதியர்கோன்பட்டர்பிரான்மேதினியில்வாழியே.

## நேரிசைவெண்பா.

இன்றைப்பெருமையறிந்திலையோவேழைநெஞ்சே
இன்றைக்கென்னேற்றமெனிலுரைக்கேன்—நன்றிபுனை
பல்லாண்டுபாடியநம்பட்டர்பிரான்வந்துதித்த
நல்லானியிற்சோதிநாள்.

பெரியாழ்வார் வைபவம்
முற்றிற்று.



# ஆண்டாள் வைபவம்.

𑌆𑌷𑌾𑌢𑍇 𑌪𑍂𑌰𑍍𑌵𑌫𑌲𑍍𑌗𑍁𑌨𑍍𑌯𑌾𑌂 𑌤𑍁𑌲𑌸𑍀𑌕𑌾𑌨𑌨𑍋𑌦𑍍𑌭𑌵𑌾𑌮𑍍 ।
𑌪𑌾𑌣𑍍𑌡𑍍𑌯𑍇 𑌵𑌿𑌶𑍍𑌵𑌂𑌭𑌰𑌾𑌂 𑌗𑍋𑌦𑌾𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑌨𑌾𑌯𑌕𑍀𑌮𑍍 ॥

ஆஷாடே பூர்வபல்குந்யாம் துலஸீகாநநோத்பவாம்
பாண்ட்யே விஶ்வம்பராம கோதாமவந்தே ஸ்ரீரங்கநாயகீம்.

𑌨𑍀𑌳𑌾𑌤𑍁𑌙𑍍𑌗𑌸𑍍𑌤𑌨𑌗𑌿𑌰𑌿𑌤𑌟𑍀𑌸𑍁𑌪𑍍𑌤𑌮𑍁𑌦𑍍𑌬𑍋𑌧𑍍𑌯 𑌕𑍃𑌷𑍍𑌣𑌂 ।
𑌪𑌾𑌰𑌾𑌰𑍍𑌥𑍍𑌯𑌂 𑌸𑍍𑌵𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌶𑌤𑌶𑌿𑌰𑌸𑍍𑌸𑌿𑌦𑍍𑌧𑌮𑌧𑍍𑌯𑌾𑌪𑌯𑌨𑍍𑌤𑍀 ।
𑌸𑍍𑌵𑍋𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌾𑌯𑌾𑌂 𑌸𑍍𑌰𑌜𑌿 𑌨𑌿𑌗𑌳𑌿𑌤𑌂 𑌯𑌾 𑌬𑌲𑌾𑌤𑍍𑌕𑍃𑌤𑍍𑌯 𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇 ।
𑌗𑍋𑌦𑌾 𑌤𑌸𑍍𑌯𑌐 𑌨𑌮 𑌇𑌦𑌮𑌿𑌦𑌂 𑌭𑍂𑌯 𑌏𑌵𑌾𑌸𑍍𑌤𑍁 𑌭𑍂𑌯𑌃 ॥

நீளாதுங்கஸ்தநகிரிதடீஸுப்தமுத்போத்யக்ருஷ்ணம்
பாரார்த்யம்ஸ்வம்ஶ்ருதிஶத ஶிரஸ்ஸித்தமத்யாபயந்தீ
ஸ்வோச்சிஷ்டாயாம்ஸ்ரஜிநிகளிதம்யாபலாத்க்ருத்யபுங்க்தே
கோதாதஸ்யைநமஇதமிதம் பூயஏவாஸ்துபூய:.

பராத்பரனாகிய ஸ்ரீமந்நாராயணன் திருப்பாற்கடலில் யோக நித்திரைதெளிந்து ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவிகளாகிய பிராட்டிமார் மூவரோடு நவரத்னகசிதமாகிய சிங்காஸனத்தின்மேல் எழுந்தருளியிருக்க, அப்பொழுது பிராட்டிமார்மூவருள் பூமிப்பிராட்டியார் எழுந்து எம்பெருமான் திருவடிகளை வணங்கிக் கைகுவித்து நின்றுகொண்டு ஸ்வாமி! பூலோகத்தி[illegible]மாக

களில் யாரிடத்தில் தேவரீர்பிரியங்கொள்வீரென்று கேட்க, ஸ்ரீமந்நாராயணன் பிராட்டியாரது திருமுகத்தைக் குளிரநோக்கிப் புன்னகைகொண்டு அநித்யமாகியபிரபஞ்சத்தில் பற்றுவையாமல் நித்யமாகிய நமது பரமபதத்தினிடத்துப் பற்றுவைத்து இடைவிடாது பக்திபூர்வகமாக நம்மைநினைத்து நமது விஷயமாகப் பாமாலையும் பூமாலையுந் தொடுத்துச் சாத்துகின்ற பாகவதர்களிடத்தே பிரியங்கொள்ளுவோமென்று திருவாய்மலர்ந்தருள அதுகேட்டு பூதேவியார் ஸ்வாமி! அடியேனும் அந்தப்பிரகாரம் தேவரீர் விஷயமாகக் கைங்கர்யங்களைத் திருவுள்ள முவக்கும்படி செய்து வந்தாலல்லவோ இத்தேக மெடுத்ததனாலாகிய பயனைப் பெற்றுக்கொள்வேன். ஆதலால் அடியேனையும் அவ்வாறு செய்வித்தருளவேண்டுமென்றுபிரார்த்திக்க ஸ்ரீமந்நாராயணன் பூலோகத்தில் நமது பெரியதிருவடி அம்சராகிய விஷ்ணுசித்தனென்னும விப்ரோத்தமன் ஸ்ரீவில்லிபுத்தூரென்னுந் திவ்யதேசத்தில் இருந்துகொண்டு அந்தக் கைங்கர்யங்களைச் செய்துவருகின்றார். அவருக்குப் புத்திரியாகவுதித்து உன்னுடைய மனோபீஷ்டத்தை நிறைவேற்றிக்கொண்டுவருவாயென்று அருள, அதுகேட்டுத் தேவியார் அதிக ஆனந்தமடைந்து ஸ்வாமி! வில்லிபுத்தூரென்னுந் திவ்ய தேசத்தின் வரலாறும அவ்விடத்தில் எழுந்தருளியிருக்கின்ற தேவரீரது லீலையும அந்த பாகவதரது பெருமையும் அடியேனுக்குத் தெரிவித்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க, ஸ்ரீமந்நாராயணன திருவுளமுவந்து பூலோகத்தில் ஜம்பூத்வீபத்தில் தக்ஷிணதிசையிலுள்ள பாண்டியதேசத்தில் ஒரு திவ்யக்ஷேத்திரமுண்டு. அதனிடத்து அர்ச்சாவதாரமாக இருந்த நாம் பூர்வம் உனக்குத் துன்பமுண்டாக்கிய இரணியாக்ஷனை வராகவடிவங்கொண்டு வென்று உனக்குப் பலதர்மங்களையும் உபதேசம் பண்ணினோம். அப்பொழுது நீ இவ்விடத்தில் இவ்வுருவோடு எழுந்தருளியிருக்க வேண்டுமென்றுநம்மைப் பிரார்த்தித்தபடி நாம் அத்தலத்தில் வராகவுருவத்துடன் அனேக கற்பங்கள் உன்னோடு கூடியிருந்தோம். பின்பு ஆரண்யமாக அனேககால மிருந்தது. அதில் பிருகு மார்க்கண்டேயர் முதலான ரிஷிகள் இருந்து நம்மிடத்தில் அன்புவைத்துத் தவஞ்செய்யும்போது காலநேமியென்னும் ராக்ஷஸன் அவர்கள்செய்யுந் தவத்துக்கு இடையூறுசெய்ய, அவர்கள் நம்மைத்துதித்து முறையிட நாம் திருப்பாற்கடலைவிட்

டுவந்து அவனைச் சக்ராயுதத்தால் ஸம்ஹரித்தோம். பின்பு அவனது இரத்தந் தோய்ந்திருந்த சக்கரத்தைக் கழுவும்படி வருணனுக்கு ஆக்ஞாபித்தோம். அவன் கங்கை-யமுனை-ஸரஸ்வதி என்னும் மூன்றுநதியையும் அவ்விடத்தில் அழைத்து அவைகளில் சக்கரத்தில் படிந்த இரத்தத்தை அகற்றினன்; அன்றுதொட்டு அந்தத்தீர்த்தமூன்றும் திருமுக்குளமென்று பேர்பெற்று அந்த க்ஷேத்திரத்திலிருக்கன. அந்த ரிஷிகள் எங்கள் நிமித்தம திருப்பாற்கடல்விட்டு எழுந்தருளியபடியே இந்த க்ஷேத்திரத்தில் சேஷசாயியாய் ஸேவை ஸாதித்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க அவ்வாறே வடபத்ரத்தில் சேஷசயனத்தின்மேல் படுத்திருக்கும பாவனையாக ஸேவைஸாதித்தோம. அதனால அத்தலத்திற்கு வடவேசுவரபுரமென்றும நமக்கு வடவேசுவரனென்றும் பெயருண்டாயிற்று அவ்வாறு அறுபத்தநாலு சதுர்யுகம தேவர்கள் முனிவர்கள் ஆராதிக்க உன்னோடும லக்ஷ்மியோடுங்கூடியிருந்தோம். இவ்வாறு பலயுகங்கள்சென்றபின்பு திரும்பவும ஆரண்யமாக, சமீபத்தில் கொஞ்சமபாகத்தைப்புத்தூரென்றபெயரா லுண்டாக்கி வேடர்கள் அனேகர்குடிகொண்டு அவர்களே அவ்வூருக்கு அதிகாரிகளாக இருந்தார்கள். அவ்வேடக்குடியில் மல்லியென்னும் ஸ்திரீயினிடத்தில் வில்லியென்றுங் கண்டனென்றும இரண்டுபிள்ளைகள் பிறந்தார்கள். அவர்கள் வலியுள்ளவர்களாகையால் அவ்வேடச்சேரியில் அதிகாரிகளாக விருந்தார்கள்.

அவ்வாறிருந்தவர்கள் ஒருநாள வேட்டையாடப் புறப்பட்டு அந்த ஆரண்யத்திற்புகுந்து புதல்மூடிக்கொள்ள நாம சயனித்திருந்த இடத்திற்குச் சமீபமாகவருமபோது அங்கொரு புலியைக் கண்டு இளையவனான கண்டனென்பவன் அதைத் துரத்தியோட அப்புலியானது ஓர் புதல்மறைவிற் பதுங்கிநின்று அவன் ஸமீபத்தில் வரக்கண்டு அவன்மேற்பாய்ந்து கொன்றுவிட்டது. அதையறியாமல் தமையனான வில்லியென்பவன் தம்பியைத்தேடிப்போய்த் தம்பி யிறந்துகிடக்கிறதைக்கண்டு அழுதழுது கீழ்விழுந்து புரண்டு புரண்டு மூர்ச்சையாயினான். அவன் கனவில் நாம்போய் அப்பா! இவ்விடத்தில் நாம்சேஷசயனத்தில்சயனித்திருக்கிறோம்; நீ நமக்குக் கோயில் முதலானவைகளைக் கட்டுவித்து நால்வகைக் குடிகளையும் ஏற்றி நித்தியமாக ஆராதனம் திருவிழா முதலியவைகளும் நடத்தென்றுசொல்ல, அவனும் ஸ்வாமி! புலியினாலிற

ந்த என் தம்பியை எழுப்பிக்கொடுத்து வேண்டிய திரவியங்கள் வரும் வழியுங் காட்டியருளவேண்டுமென்று பிரார்த்திக்க, அதற்கு நாம் உன்தம்பி உயிர்பெற்றெழுவான்; நீயுமவனுமாகக்கூடி அவனைக்கொன்ற புலி ஓர் குகையில் இறந்துகிடக்கின்றது அந்தக் குகைக்குள்ளிருக்கின்ற அளவிறந்த திரவியங்களை எடுத்துக்கொள்ளுங்களென்று ஆக்கியாபித்தோம். அவனுங்கண்விழிக்கத் தம்பியும் உயிர்பெற்றெழுந்துவரக்கண்டு அதிசயமடைந்து ஸந்தோஷத்துடன் தம்பிக்குத் தான்கண்ட கனவைத்தெரிவித்து அவனுடன் சிலதூரம் போகும்போது அங்கு ஒருகுகையில் அந்தப் புலியானது அடிபட்டு இறந்திருக்கின்றதைப்பார்த்து ஆச்சரியமடைந்து அக்குகையிலுள்ள அளவிறந்த திரவியங்களைக்கண்டு ஸந்தோஷித்து அந்தக் குகையை முற்றுகையிட்டுக் காவல்செய்து பின்பு ஸ்வாமி எங்கே சயனித்திருக்கின்றதென்று தேடிக்கொண்டுபோக அங்கோரிடத்தில் ஓர் ஆலவிருக்ஷத்தினடியில் மூடிய புதலினிடமாக நம்மைக்கண்டு ஆனந்தமடைந்து அந்தத் திரவியங்களைக்கொண்டு நமக்கு விமானம்-மண்டபம்-மதில்-கோபுரம் முதலியவைகளுங் குறைவில்லாமல் கட்டுவித்துத்திருவீதி முதலானவைகளும் ஏற்படுத்திப் பின்பு அதையடுத்த கொஞ்சம் தூரத்தில் புத்தூரென்னும் ஊரிலிருந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் முதலானவர்களை வருவித்து அதில் குடியேற்றித் திருவாராதனம் திருவிழா முதலானவைகளை விபவமாக நடப்பித்துக் குடியேறிய பிராமணர் முதலானவர்கள் முன்னிருந்த புத்தூரும் தன்பெயராகிய வில்லியென்பதுஞ் சேர்த்து வில்லிபுத்தூரென்றும், பழமையாகவிருந்த க்ஷேத்திரத்தைத் தான் புதுக்கியபடியால் புதுவையென்றும் பேர் விளங்கவைத்தான். இவ்வாறு திருவிழாமுதலான சிறப்புகளைத் தேவர்களுங் கண்டு அதிசயிக்கும்படி நெடுநாள் செய்வித்துவந்து பின்பு தன் தம்பியுடன் ஸ்ரீவைகுண்டம் பெற்றான். இப்பால் பட்டர்பிரானாகிய விஷ்ணுசித்தர் உலகத்தவரைத் திருத்தும்பொருட்டு ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்து ஐந்து வயதிலேயே நித்யவஸ்து நாமென்று அறிந்து அதுதொட்டு நந்தவனங்கள் வைத்து வளர்த்து நமக்குப் பூமாலைகட்டிச் சாத்திக்கொண்டு பாண்டியனது சபையிற்கட்டிய பொற்கிழியையறுத்துப்பரசமயங்களைக் களைந்து ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸ்தாபனஞ்செய்து அரசன்முதலான ஸமஸ்தஜனங்களையும் திருத்தி மற்றவர்களையுந் திருத்தும்பொருட்டு நமது லீலைகளையமைத்துச் செந்த

மிழாற் பாமாலைகளுந் தொடுத்துச் சாத்திவருகின்றாரென்று திருவாய்மலர்ந்தருள பூதேவியார் அதுகேட்டு ஆனந்தமடைந்து எமபெருமானிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தேவர்கள் முனிவர்கள் பூமாரிபொழிந்து ஸ்துதிக்கவும் ஸ்ரீமந்நாராயணனுடைய திருவுள்ளந் தொடர்ந்துவரவும் உலகத்திலுள்ள ஜீவாத்மாக்களெல்லாங் கடைத்தேறவும் அனேக அற்புதங்கள் உண்டாகிவிளங்கவும் ஸ்ரீவில்லிபுத்தூரிலே விஷ்ணுசித்தராகிய பெரியாழ்வார் வைத்து வளர்த்துவருகின்ற நந்தவனத்திலுள்ள திருத்துழாயினிடமாகக் கலியுகம் தொண்ணூற்றேழுக்குமேற் செல்லுகின்ற நளவருஷம் ஆடிமீ சுக்லபக்ஷம் சதுர்த்தி செவ்வாய்க்கிழமைகூடின பூரநக்ஷத்திரத்தில் ஒருபெண்குழந்தை வடிவமாக ஆவிர்பவித்து கோடிசூரிய பிரகாசம்போற் பிரகாசித்திருந்தார்.

விஷ்ணுசித்தர் காலையில் நந்தவனத்திற்குவந்து கைங்கரியஞ் செய்துகொண்டு வரும்போது ஓர் துளஸியின்கீழ் பிரமிக்கத்தக்க பிரகாசமயமாக விருக்கின்ற பெண்சிரோமணியைக்கண்டு ஆச்சர்யமும அன்புங்கொண்டு ஓகோ இந்த ஸ்திரீரத்நம் நமது கணமணிபோன்ற எம்பெருமானுக்கு அர்ப்பிதமாகத்தக்கதேயல்லது வேறல்ல. ஆதலால் இதைக்கொணடுபோய் வடபத்ரசாயியின் சந்நிதியில் செலுத்துவோமென்று அந்தப் பெண்மணியைத் தமது உபய கராம்புஜங்களாலும் மெல்லெனத் தாங்கிக்கொண்டு உள்ளங்களிக்கவும் உடல்புளகிக்கவும் போய் ஸந்நிதியில நின்று எமபெருமானே! இநதபிரகாசமயமானபெண்ணமுதமாகிய அரும்பொருள் தேவரீருக்கு உரித்தாகத் தக்கதன்றி மற்றவர்க்கு உரித்தாகத் தக்கதல்ல. ஆதலால் தேவரீர் அங்கீகரித் தருளவேண்டுமென்று பிரார்த்திக்க எமபெருமான் அசரீரியாக இந்தபபெண்மகவைக் கோதையென்று பெயரிட்டு உமது புத்திரியாகக்கொண்டு வளர்த்து வாருமென்று திருவாய்மலர்ந்தருளி அந்தஸ்தலத்திலுள்ளார்க்கும் இந்தப்பெண்குழந்தையைச் சிவிகையின்மேல் ஏற்றிப் பல வுபசாரங்களுடன்போய் விஷ்ணுசித்தரது திருமாளிகையில் விடுத்து வாருங்களென்று ஆக்கியாபித்தருள ஸ்ரீ வைஷ்ணவர்களெல்லாம் மனங்களித்து அந்தப்பெண்ணரசை ஒரு பொற்சிவிகையில்வைத்து சத்ரசாமராதியலங்காரங்களுடன் மங்கள வாத்தியங்கள் முழங்கப் பலவித வுபசாரத்துடன் அத்தலத்தை வலமாகக்கொண்டுபோய் பெரியாழ்வாரது அஷ்டமங்களங்களுமநிறைந்த திருமாளிகையில் விடுத்தார்கள். பின்பு விஷ்ணுசித்தர்

பலங்கரித்து, பகவதனுக்கிரகத்தால்கிடைத்த புத்திரியைப் புனி
தமான வாஸனைகலந்த நீரினால்மஞ்சனஞ்செய்வித்துப் பரிமளமே
றிய மிருதுவான ஆடையால் திருமேனி கசங்காமல் மெல்லெ
னவொற்றிப் புனைபறச்செய்ந்து செறிந்து மெல்லென்று நெய்
த்து இருண்டமயிர்க்கற்றையைக் கோதிச்சிக்கறுத்து ஏலசசாந்த
ணிந்து சூழியமுடித்துச் சுட்டி தூக்கிச் சில்முதலிய அணிகளிட்
டு பின்னல்செய்தும் இளம்பிறைபோன் றொளிபொருந்திய நெ
ற்றியினிடத்து இலாடபகம் திருவுத்திமுதலிய அணியணிந்து மூன்
றாம்பிறைபோல விளங்கிச் சிறுகித்தோன்றத் திருமண்ணிட்டு
இடையில் ஸ்வர்ணரேகைபோலப் பிரகாசிக்க ஸ்ரீசூர்ணமிட்டும்
அழகிய காதுகளில் தாடங்கமுதலிய ஆபரணங்களை யணிந்தும் எள்
ளின்பூவையொத்து விளங்குகின்ற நாசியினிடத்து முத்தணிகளை
ணிந்தும் காதளவுநீண்டு கருநெய்தற்போன்று கருணை ததும்பு
கின்ற கண்களில் அஞ்சனந்தீட்டியும் கமுகையொத்து அழகு
பொங்குகின்ற கழுத்தினிடத்து முத்துமாலை நவமணிமாலை பவள
மாலை கட்டுவடம் பட்டடைமுதலிய அணிகளணிந்தும் பசிய
வேய்போன்ற தோள்களினிடத்துச் சூடகம் தோட்சரி தோள்வ
ளைமுதலிய அணிகலனணிந்தும் தாமரைமலர்போன்ற முன்கை
யினிடத்து ரத்நகடகம் பொன்வளைமுதலிய பணிதியணிந்தும்
காந்தள்மலர்போன்ற மெல்லிய விரல்களினிடத்து ரத்நகசிதமா
கிய பொன்னாழியிட்டும் கொடிபோன்ற இடையில் விலையுயர்ந்த
ஸ்வர்ணமயமாகிய ஆடையுடுத்தி அதன்மேல் கலைமுதலிய அணி
களணிந்தும் செந்தாமரைமலர்போன்ற சிற்றடியில் செம்பஞ்சூ
ட்டிப் பொற்சிலம்பு பொற்றண்டை பொற்பாடகமுதலிய அணிக
ளணிந்தும் இவ்வாறு பலவகையான அலங்காரங்களைச் செய்து
மணமுள்ள மல்லிகைக்கொடியை வளர்ப்பதுபோல் செல்வம்பெ
ருகச் சீராட்டிவளர்த்துவர இளம்பிறைக் கொழுந்துபோல் வளர்
ந்துவருகின்ற கோதையார் அப்பருவத்திற்றானே ஸ்ரீமந்நாராய
ணனது திருவடிகளில பக்திவைத்து, தமது தகப்பனாராகிய பெ
ரியாழ்வார் எம்பெருமான் விஷயத்தில் செய்துவருகின்ற கைங்க
ர்யங்களைத் தாமுஞ் செய்யவேண்டுமென்கிற ஆஸக்தி யுடையவ
ராய்ப் பிரதிதினமும் பெரியாழ்வாருடன் நந்தவனத்துக்குச்செ
ன்று பூஞ்செடிகட்குத் தண்ணீர்மாறியும் புஷ்பங்களெடுத்தும
தந்தையாகிய விஷ்ணுசித்தர் அதிசயிக்கும்படி வேறுவிளையாட்
டொன்றுமின்றி இவையே விளையாட்டாகக் கொண்டும் ஸ்ரீமந்

நாராயணனது திருநாமங்களை அடிக்கடி வாயினுற்சொல்லியும் திருமந்திரத்தை ஜபித்தும எம்பெருமான் திருவடியை நினைந்து நெஞ்சம் நெகிழ்ந்துருகியுங் கண்களில் ஆனந்த பாஷ்பங்களைச் சொரிந்தும் அந்நகரிலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்முதலிய யாவரும ஆச்சரியமடையத்தக்க ஸத்காரியங்களைச் செய்துகொண்டிருந்தார்.

இவ்வாறிருந்த கோதையார் மங்கைப்பருவத்தை யுடையவராய்ப் பிதாவின்பிறகு நந்தவனத்துக்குப் போகின்றதை யொழிந்து, திருமாளிகையினிடத்தே யிடைவிடாது எம்பெருமான் திருவடிகளை நினைந்துகொண்டு இருக்கின்ற நாள்களில் ஒருநாள் பெரியாழ்வார் நந்தவனத்திலிருந்து கொண்டுவந்த புஷ்பங்களையெல்லாம் பலவகைப்பட்ட திருமாலைகளாகத் தொடுத்துத் திருப்பூக்கூடையில் வைத்துவிட்டுப் புறத்திற்சென்ற ஸமயத்தில், கோதையார் அத்திருப்பூக்கூடையை யெடுத்து அதிலுள்ள ஓர்வகை மாலையைத் தூக்கி அதனிடத்திலுள்ள பரிமளவிசேஷத்தை ஆக்கிராணித்து வியப்படைந்து அதைத்தமது அளகபாரத்தில் சூட்டிக்கொண்டு கண்ணாடியில் அழகுபார்த்து இது எம்பெருமானுக்கு உசிதமான மாலையென்று நினைத்துத் தந்தையார் திரும்பி வருவதற்குள் அதனைக்களைந்து முன்போலவே அத்திருப்பூக்கூடையில் வைத்து முன்னிருந்தவிடத்தில் தூக்கிவிட்டார். ஆழ்வார் எழுந்தருளி அத்திருப்பூக்கூடையை யெடுத்துக்கொண்டு போய், புஷ்பமாலையெல்லாம் வடபெருங்கோயிலானுக்கு ஸமர்ப்பித்துத் தீர்த்தமும்பிரஸாதமும வாங்கிக்கொண்டுதிருமாளிகைக் கெழுந்தருளினார். அன்றையதினம் சாத்திய புஷ்பமாலைகளில் தெய்வத்தன்மையுள்ள பரிமளம் நெடுந்தூரமட்டும வீசுவதை அந்தஸ்தலத்திலுள்ள அர்ச்சகர்முதலானவர்கள் அறிந்து வியப்படைந்தார்கள். எம்பெருமானும் திருவுளமுவந்தருளினார்.

இந்தப்பிரகாரம் நெடுங்காலம் கோதையார் சூட்டிச்சூட்டி அழகுபார்த்துக் களைந்துவைத்துவர ஆழ்வாரும அதையறியாமல் வடபத்ரசாயிக்குப் பிரதிதினமும் ஸமர்ப்பித்துக்கொண்டுவருகின்ற நாள்களில் ஒருநாள் ஸ்ரீமந்நாராயணன் பூப்பிராட்டியார் கோதையாராக அவதரித்துத் தமது கைங்கர்யங்களைச் செய்கின்றதும் அவரது பக்தி விசேஷத்தையும் எல்லவர்க்கும் அறிவிக்கும்படி திருவுள்ளங் கொண்டருளியபடி பெரியாழ்வார் புஷ்ப

மாலைகளை ஒவ்வொன்றாக எடுத்து அர்ச்சகர் கையில்கொடுக்க
அவர் அதை வாங்கி வடபத்ரசாயிக்குச் சாத்தும்போது ஒரு மா
லையில் மயிர் ஒன்றிருக்கக்கண்டு மனஸ்தாபமடைந்து ஆழ்வா
ரைப் பார்த்து! ஸ்வாமி இதென்ன அபசாரம்? திருமாலையில் மயிர்
சிக்கிக்கொண்டிருக்கின்றதே எம்பெருமான் திருமேனிக்குளப்படி
ஸமர்ப்பிக்கப்படும்; தேவரீர் செய்துவருகின்ற கைங்கர்யங்களிலே
இப்படிப்பட்ட அசுத்தம் நேரிடுமானால் மற்றவர்கள் செய்கின்ற
தில் என்ன நேரிடாது; இது விஷயத்தில் தேவரீர் திருவடிகளில்
அபசாரப் பட்டவனாகவும் ஆகின்றேன், இம்மாலைகளை யினி ஸ்
வாமிக்கு ஸமர்ப்பிக்க மாட்டேனென்று கீழே வைத்துவிட்டார்.
ஆழ்வாரும் அதுகண்டு அதிக பயமும் துக்கமும் நடுக்கமுமடை
ந்து அர்ச்சகரை நோக்கி ஸ்வாமி! இந்த அபராதத்தை க்ஷமித்த
ருளவேண்டுமென்று சொல்லி அந்தக்ஷணமே நந்தவனத்திற்குச்
சென்று புஷ்பங்களைத் தேடித்தேடிக் கொய்து மாலைகள் கட்டிக்
கொண்டு விரைவாகவந்து அர்ச்சகர் கையிற்கொடுத்து ஸ்வாமி!
இதனைச் சாத்துமென்று பிரார்த்திக்க அர்ச்சகரும் அதைவாங்கி
ஸமர்ப்பித்து ஆழ்வாரை நோக்கி ஸ்வாமி! சிலநாளாகத் தேவரீர்
கொண்டுவருகிற மாலைகள் அதிக பரிமளம் வீசியும் வாடியது
போலிருந்தன. அதை வெளியிடுதற்கு அஞ்சி ஸந்தேகத்தோடே
சாத்திவந்தேன். இன்றையதினம் அதனோடுமயிருமிருந்தது. இப்
படி யிருக்கவேண்டியதென்ன இதை நன்றாகக் கண்டறியவேண்
டுமென்று சொல்ல, ஆழ்வார் அதுகேட்டு, கிலேசத்துடனே ஸ்
வாமி! என்புத்தி பூர்வகமாக அணுவளவு மபசாரமுண்டாகக் கை
ங்கர்யங்களை நடத்தினவனன்று. இன்றேதோ எம்பெருமான் லீலை
யாகத் தோன்றுகின்றது. இதற்கென்னசெய்வேனென்று மனம்
நொந்துநொந்துரைத்து விடைபெற்றுத் திருமாளிகைக்கு எழு
ந்தருளி அன்றிராத்திரி அடங்காத் துயரத்தோடு சயனித்து நித்
திரையுங்கொள்ளாது ஐயோ இப்படிப்பட்ட அபசாரம் நேரிட்ட
தற்குக் காரணம் எதுவோவென்று எண்ணி யெண்ணி நாம் தின
ந்தோறும் திருப்பூக்கூடையைத் தூக்கி வைத்துவிட்டு நந்தவன
கைங்கர்யத்தைக் குறித்துப் போகின்றோமே நாம் வருவதற்குள்
ஏதாகிலும் ஓர் குற்றம் நேரிட்டிருந்தாலும் இருக்குமென்று
ஒருவாறு துணிந்து அருணோதயமான வுடன் நித்ய கர்மானுஷ்
டானங்களை முடித்து நியதிப்படி நந்தவனத்திற்குச் சென்று

அதிஜாக்கிரதையாகப் புஷ்பங்களைக்கொய்துவந்து மாலைகள் தொடுத்துத் திருப்பூக்கூடையில் வைத்து ஓரிடத்திற்றாக்கி மற்றோரிடத்தில் மறைவாயிருந்துபார்த்துக்கொண்டிருந்தார். அப்போது கோதையார் வழக்கப்படி அத்திருப்பூக்கூடையையெடுத்து அதிலுள்ள மாலைகளைத் தமது அளகத்தில் சூட்டிக்கொண்டு அழகுபார்க்கிற சமயத்தில் பெரியாழ்வார் கண்டு அதிககோபிஷ்டராய்வரக் கோதையார்கண்டு பயந்து சூட்டின புஷ்பமாலைகளைக் களைந்து திருப்பூக்கூடையில் வைத்துவிட்டுக் கண்களில் முத்து முத்தாக நீர்பெருகச் சோர்ந்த முகத்தோடு நின்றார். ஆழ்வார் அதுகண்டு அம்மா! என்னகாரியஞ் செய்தாய்? எம்பெருமான விஷயத்தில ஸ்வப்னத்திலும அபசாரம செய்யக்கூடாதென்று நன்கு அறிந்த வுனக்கு இப்படிப்பட்ட மதிமயக்கம ஸம்பவித்ததென்ன? பக்தியில்லாத ஸாமான்யர்களும இப்படிப்பட்ட காரியஞ் செய்யார்களே யென்று இனியவசனங்களால் புத்திசொல்லி உடனே நந்தவனத்திற்குச் சென்று புஷ்பங்கள்கொய்து மாலைதொடுத்து வடபெருங்கோயிலான் ஸந்நிதியிற்கொணடுபோய்க் கொடுத்துத் திருமாளிகைக்கு எழுந்தருளினார்.

அன்றிராத்திரி பெரியாழ்வார் ஸ்வப்னத்தில் வடபெருங்கொயில் எம்பெருமான் எழுந்தருளி ஆழ்வானைக் கடாக்ஷித்தருளி, பூப்பிராட்டி நமது விஷயத்தில் பூமாலை பாமாலை கைங்கர்யஞ்செய்ய விருபபி உமமிடததுப் புத்திரியாக அவதரித்தனள்; ஆதலால் அவள் சூட்டிககொண்டு அழகு பார்த்துககொடுத்த மாலைகளெநமக்கு உவப்பாகவிருக்கும். நீர் இன்று கொண்டுவந்து கொடுத்த பரிமளமில்லாத வெறுமாலையை நாம அங்கீகரிக்கவில்லை. ஆதலால் நாளைதொடங்கி நீர்கட்டுகிற மாலைகளையெல்லாம் அந்தக் கோதையைச சூட்டிக்கொள்ளச் செய்வித்துப் பிறபு, களைந்தமாலைகளைக் கொண்டுவந்து நமக்குச் சாத்தக்கடவீரென்று திருவாய்மலர்ந்தருளி அவ்வாறே அந்தத்திவ்விய தேசத்திலுள்ள யதிகள் ஸ்ரீவைஷ்ணவர்கள் அர்ச்சகர் முதலாகிய யாவருக்கும் கோதையார் சூட்டிக்கொடுத்த மாலைகளே நமக்கு உவப்பாகவிருக்குமென்று ஸ்வப்னம் ஸாதித்து எழுந்தருளினார். சூரியோதயமானவுடன் அந்நகரத்திலுள்ளவர்கள் யாவரும் ஒருவர்க்கொருவர் தாங்கள் தாங்கள் கண்ட ஸ்வப்னங்களைச் சொல்லிக்கொண்டு ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்து ஆழ்வார் திருமா

ளிகைக்குவந்து கோதையாரையும் ஆழ்வாரையும் பலவாறு துதித்து வணங்கினார்கள். ஆழ்வாரும் அளவிடப்படாத அதிசயமும் அன்புமுடையவராய், கோதையாரைத் தழுவியெடுத்து மடியில் வைத்து உச்சிமோந்து அவரது திருமுகத்தை நோக்கிக் குருடன் கையில் விலையுயர்ந்த மாணிக்கங் கிடைத்ததுபோல் நான்செய்த தவப்பயனால் பெறுதற்கரிய பேறாகக்கிடைத்த வுனது மஹத்வத்தைச் சிறிதும் அறியாமற் போனேனேயென்று இவ்வாறு பலவிதமாகத் துதித்து அந்நாள்தொடங்கி எம்பெருமானருளியபடி கோதையார் சூட்டிக்கொடுத்த பூமாலைகளைக் கொண்டுபோய் வடபத்ரசாயிக்கு ஸமர்ப்பித்துக்கொண்டுவந்தார். கோதையாரும் ஸ்ரீமந்நாராயணனது திவ்யவிபவங்களை யனுபவிக்கத்தக்க பருவமுடையவராய் எம்பெருமானுடன் கலந்து சுகானுபவஞ் செய்யுமவகை யெவ்வகையென்று எண்ணி யெண்ணி மனமுருகியும் நித்திரை நீங்கியும் திருமேனி வெதும்பியும் குழல் சோர்ந்தும் ஒவ்வொருபோதும் ஸ்ரீமந்நாராயணனோடு தாம் பூர்வத்திலனுபவித்த அனுபவந்தோன்ற உள்ளங் கரைந்து கரைந்து மோஹித்தும் பிரிவாற்றாதவராய்த் தமது உயிர்ப்பாங்கிகளை நோக்கிப் பெண்களே எனது கண்மணிபோன்றும் உயிர்க்கு உயிர்போன்றும் என்மனதில் அந்தரங்கமாகவெழுந்தருளியிருக்கின்ற எனதுபிராணநாயகனாகிய அழகிய மணவாளனை பஹிரங்கமாகக் கலந்து களிப்பதற்கு உபாயமொன்று சொல்வீர்களானால் நான் உயிர்தரித்து வாழுவேனென்று குறையிரந்தும் பூர்வம் கோபிகாஸ்திரீகள் கண்ணபிரான் விஷயமாக நோன்பு நோற்றதுமுதலிய ஸத்கர்மங்களைத் தாமும் அனுஷ்டித்து அவாவெளிப்பட * மார்கழித்திங்கள் என்று தொடங்கி திருப்பாவை முப்பது பாட்டும் பாடி எம்பெருமான் தம்மை யணைவதற்கு உபாயஞ்செய்யவேண்டுமெ

---

* மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப்போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர்மல்குமாய்ப்பாடிச் செல்வச் சிறுமியர்காள்
கூர்வேற்கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்தகண்ணி யசோதை யிளஞ்சிங்கம்
கார்மேனிச்செங்கட் கதிர்மதியம்போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறைதருவான்
பாரோர்புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்.

களையெல்லாம் நிரப்பி பேரிகை மத்தளம் தாளமுதலிய மங்கள வாத்தியங்கள் கோஷிக்கவும் நாடகக் கன்னிகையர் நடிக்கவும் கீதம்பாடவும் அழகிய மணவாளனை யெதிர்நோக்கியிருந்தார்.

பின்பு ஸ்ரீமந்நாராயணன் ஆக்ஞைப்படி பிரமன் ருத்திரன் தேவேந்திரன் முதலான தேவர்களும் கந்தர்வ-கிம்புருட-கின்னரர்-சித்த-முனிவர் முதலான பதினெண்கணத்தாரும் ஸ்ரீவில்லிபுத்தூரையடைந்து அழகாரந்த திருமாளிகையிற்சென்று கோதையாரையும் ஆழ்வாரையும் வணங்கிப் பலவிதமாகப் புகழ்ந்து கோதையாரை யலங்காரஞ்செய்வித்து வடபத்திரசாயியின் கோயிலில் அலங்கரித்து ஸேவித்திருந்தார்கள். இவ்வாறிருக்கக் கோதையார் அழகிய மணவாளனை இன்னும் எழுந்தருளக் காணோமில்லையே யென்செய்வேனென்று மனமுருகி, பெரிய திருவடியைக் குறித்து ஸ்தோத்திரஞ்செய்ய அவர் வந்து எதிர்நிற்க அவரை நோக்கி என்னுயிர்த்துணைவனாகிய ஸ்ரீரங்கநாதனை சீக்கிரமாய் அழைத்துவரவேண்டும்; அப்படிசெய்தால் நாமும் அவருக்கிணை ஆஸனத்தில் நீ இருப்பாய் என்று சொல்ல அதுகேட்டு அவர், இதோ அவ்வாறே செய்கிறேனென்று அந்தக்ஷணமே ஸ்ரீரங்கத்திற்குப்போய் ஸ்வாமியை ஸேவித்து, [illegible] களும் எழுந்தருளத் தாமதித்தால் கோதையார் உயிர்தரியாரென்று விண்ணப்பஞ்செய்ய, அதுகேட்டருளி எம்பெருமான் அவர் திருத்தோள்களில் ஏறிக்கொண்டு ஸ்ரீவில்லிபுத்தூருக்கெழுந்தருளினார். அதுகண்டு பிரமாதிதேவர்களும் முனிவர்களும் ஆனந்தபரவசராய்த் துதித்து ஸ்தோத்திரஞ்செய்ய ஸ்வாமியும் கருடனைவிட்டிறங்கி வடபெருங்கோயிலுக்கெழுந்தருள, பெரியாழ்வார் கோதையாருடனே வந்து எம்பெருமானையடிபணிந்து என்புத்திரியாகிய கோதையாரை தேவரீருக்குக் கொடுத்தேனென்று தாரைவார்த்து விவாகோத்ஸவத்துக்கு வேண்டிய சடங்குகளைச்செய்விக்க எம்பெருமானும் கோதையாருக்குத்திருமங்கலியதாரணஞ் செய்தருளினார். அதுகண்டு தேவர்கள் புஷ்பமாரிபெய்தும், முனிவர்களாசீர்வதித்தும், ஆனந்தபரவசத்தராயிருந்தார்கள். திருக்கலியாணத்தை ஸேவித்த ஸ்ரீவைஷ்ணவர்கள் முதலிய பலரும் விசேஷமாக மனமகிழ்ந்து, ஆத்மலாபத்தை யடைந்தவர்களாயிருந்தார்கள். சுமங்கலிகள் மங்களம்பாட மற்றச் சடங்குகள் முழுதும் முடிக்க, எம்பெருமான் நாய்ச்சி

யாருடனே ஸகலஸம்பிரமங்களுடன் வெள்ளையானையின்மேல் எழுந்தருளி ஊர்க்கோலம் வந்தருளித் திருக்கல்யாணத்தை ஸேவிக்க வந்த தேவர் முனிவர்-பாகவதர்-முதலிய யாவருக்கும் அனுக்ரஹஞ்செய்து விடைகொடுத்தருளி, பெரியாழ்வாரை நோக்கி ஆழ்வாரே நீர் நமது மாமனாராகக் கடவீரென்று நியமித்து ஸ்ரீரங்கத்துக்கு வாருமென்று திருவாய்மலர்ந்தருளிச் சூடிக்கொடுத்த நாய்ச்சியாராகிய கோதையாருடன் திருவரங்கம் பெரியகோயிலுக்கு எழுந்தருளினார்.

பின்பு ஆழ்வாரும் வடபத்ரசாயியை ஸேவித்து அங்கு நின்றும் புறப்பட்டு ஸ்ரீரங்கத்துக் கெழுந்தருளி எம்பெருமான் ஸந்நிதியிற்சென்று தண்டன்ஸமர்ப்பித்துக் கைகுவித்து ஸ்தோத்திரஞ்செய்துகொண்டு நிற்க, அழகியமணவாளன் பெரியாழ்வாரை நோக்கி நீர் இவ்விடத்தில ஒரு கோயில்கட்டி ஓராஸநத்தில நம்மையும் கோதையையும் கருடனையும் எழுந்தருளப்பண்ணி ஆராதனஞ்செய்துகொண்டிருமென்று ஆக்கியாபித்தருள அந்தபடியே கட்டுவித்து அதில் எம்பெருமான் முதலாக மூவரையுமெழுந்தருளப்பண்ணி இந்த லீலாவிபூதியில்-௮௫-ஸம்வத்ஸரம் எம்பெருமானை ஆராதித்துக்கொண்டிருந்த பெரியாழ்வார் பின்பு சூடிக்கொடுத்த நாய்ச்சியாருடனே யோகத் திருமந்திரத்தையோதி ஸ்ரீமந்நாராயணனது திருவடிகளையடைந்தார்.

## வாழித்திருநாமம்.

திருவாடிப்பூரத்திற் செகத்துதித்தாள்வாழியே
திருப்பாவைமுப்பதும் செப்பினாள்வாழியே
பெரியாழ்வார்பெற்றெடுத்த பெண்பிள்ளைவாழியே
பெரும்பூதூர்மாமுனிக்குப் பின்னானாள்வாழியே
ஒருநூற்றுநாற்பத்து மூன்றுரைத்தாள்வாழியே
உயரரங்கர்க்கேகண்ணி யுகந்தளித்தாள்வாழியே
மருவாருந்திருமல்லி வளநாடிவாழியே
வயதஞ்சிறப்பழுத்தாள்செய்ய மலர்ப்பதங்கள்வாழியே

## நேரிசைவெண்பா.

பெரியாழ்வார்பெண்மணியா யாண்டாள்பிறந்த
திருவாடிப்பூரத்தின் சீர்மை—ஒருநாளைக்
குண்டோமனமே யுணர்ந்துபாராண்டாளுக்
குண்டாகிலொப்பிதற்கு முண்டு.

ஆண்டாள்வைபவம் முற்றிற்று.



# தொண்டரடிப்பொடியாழ்வார்
## வைபவம்

---

𑌕𑍋𑌦𑌣𑍍𑌡𑍇 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑍇 𑌮𑌣𑍍𑌡𑌙𑍍𑌗𑍁𑌡𑌿𑌪𑍁𑌰𑍋𑌦𑍍𑌭𑌵𑌮𑍍 ।
𑌚𑍋𑌳𑍋𑌰𑍍𑌵𑍍𑌯𑌾𑌂 𑌵𑌨𑌮𑌾𑌲𑌾𑌂𑌶𑌂 𑌭𑌕𑍍𑌤𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌰𑍇𑌣𑍁𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑍇 ॥

கோதண்டே ஜ்யேஷ்டநக்ஷத்ரே மண்டங்குடி புரோத்பவம
சோளோர்வ்யாம் வனமாலாம்சம் பக்தபக்ரேணு மாஸ்ரயே

𑌤𑌮𑍇𑌵𑌮𑌤𑍍𑌵𑌾 𑌪𑌰𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌂
𑌰𑌙𑍍𑌗𑍇𑌶𑌯𑌂 𑌰𑌾𑌜𑌵𑌦𑌰𑍍𑌹𑌣𑍀𑌯𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌬𑍋𑌧𑌿𑌕𑍀𑌂 𑌯𑍋𑌽𑌕𑍃𑌤 𑌸𑍂𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌲𑌾𑌂
𑌭𑌕𑍍𑌤𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌰𑍇𑌣𑍁𑌂 𑌭𑌗𑌵𑌨𑍍𑌤𑌮𑍀𑌡𑍇 ॥

தமேவமத்வா பரவாஸுதேவம
ரங்கேஸயம் ராஜவதர்ஹணீயம்
ப்ராபோதகிம யோக்ருத ஸூக்திமாலாம்
பக்தாங்க்ரிரேணும் பகவந்தமீடே.

பலவகைவளங்களிலுங் குறைபாடில்லாத சோளதேசத்தில் திருமண்டங்குடியென்னும் நகரத்தில் லக்ஷ்மீவல்லபனாகிய ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடிகளில் பக்திவைத்து வர்ணாச்ரமவொழுக்கத்தவறாது கற்புள்ளமனைவியுடன் இல்லறத்தை நடத்துகின்ற பிராம்மணகுல திலகராகிய வோர் புரசூடப் பிராம்மணர்புத்திரப்பேறுவேண்டி பகவத்விஷயமான புண்யங்களைத் திரிகரணசுத்தியாகச் செய்துகொண்டுவர ஜகத்ரக்ஷகனாகிய ஸ்ரீமந்நாராயணன் அந்த பிராம்மணர் தமது விஷயமாகச் செய்துவரும் புண்யங்

களுக்குக் கிருபைகூர்ந்து தமது ஸ்ரீவனமாலாம்சத்தை அவர்க்குப் புத்திரனாக வுதிக்கும்படித் திருவுள்ளங்கொண்டருள அவ்வாறே அந்த பிராம்மணரது மனைவியார் திருவயிற்றில் கருவாகத்தரித்தருளி கலியுகம்பிறந்த இருநூற்றெண்பத் தொன்பதாவதான ப்ரபவ வருஷம் மார்கழிமாஸம கிருஷ்ணசதுர்த்தசி செவ்வாய்க்கிழமைகூடின கேட்டைநக்ஷத்திரத்தில் பாகவதர்களுக்கெல்லாம் ஸந்தோஷத்தைத் தருகின்ற சுபசூசகங்கள் தோன்ற ஒருகுமாரர் திருவவதாரஞ் செய்தருளினார்.

அவதரித்த அற்புதவடிவமுள்ள குழந்தையைப பிராம்மணரும் அவரது மனைவியாருங்கண்டு மனங்கொள்ளாத மகிழ்ச்சியடைந்தார்கள். பின்பு அக்குழந்தைக்கு வேதோக்தமாகச் செய்யத்தக்க சடங்குகளைச் சுபகாமாகச் செய்வித்து விப்ரநாராயணரென்று நாமகரணஞ்செய்து பலவகைச் செல்வங்களிலுங் குறைவுபடாதுவளர்த்து ஏழாமவயதில் உபநயனஞ்செய்வித்து வேதாதிகலைகளை போதுவிக்க விப்ரநாராயணருமம ஸமஸ்தகலைகளையுங்குறைவறக்கற்று, தாய்தந்தையர்க்குமம மற்றவர்கட்கும் மகிழ்ச்சியையுண்டாக்கத்தக்க நற்செய்கைகளுமம-பகவத்பக்தி - பாகவதபக்தி ஜீவகாருண்யம-பொறுமை-வாய்மை -முதலான ஸத்குணங்களிலுஞ் சிறந்தவராகவிருந்தார்.

இவ்வாறிருக்கின்ற புத்ரருக்கு விவாகஞ் செய்தற்குத்தக்க பருவநேரிட்டதைத் தந்தையாரறிந்து தமது குலத்திற்கும் ஆசாரத்திற்கும் பெருமைக்குந்தக்க பராம்மணகுலத்தில் அறிவும், அடக்கமும் - அன்பும் - அழகும் - குறைவில்லாது வளர்கின்ற ஓர்கன்னிகையை வேதவிதிப்படி மங்களவாத்தியம்முழங்க விவாகஞ் செய்வித்தார்.

பின்பு விப்ரநாராயணர் அம்மங்கையுடன் ஐம்பொறிகட்கும் இன்பத்தை விளைக்கும் லீலைகளைச் செய்துகொண்டு சிலகாலமவரையில் விஷயபோகங்களிலே மூழ்கியிருந்தார். இவரிவ்வாறு ஸ்த்ரீலோலராயிருக்க இவர்க்குத் தமது திருவடிக்குப் பாமாலையும், பூமாலையும், ஸமர்ப்பிப்பதற்குத்தக்க பருவம் ஸமீபித்ததை ஸ்ரீமந்நாராயணன் திருவுள்ளத்திலுணர்ந்து ஸ்த்ரீயின் விஷயமாகச் சென்றழுந்திய கருத்தைத் தமது திருவடியின் விஷயமாகச் செல்லுமபடி அனுக்ரகித்தருளினார்.

அவ்வனுக்ரகத்தினால் விப்ரநாராயணர்க்கு அறிவுவிளங்கி அசுத்தமும் அநித்யமுமம அக்ஞானமுமாகிய ஸ்த்ரீ விஷயமான

சிற்றின்பமென்னுஞ்சேற்றிலாழ்ந்திச் சுத்தமுநித்யமும் ஞானமுமாகிய பகவத்விஷயமான பேரின்பமெனனும் அம்ருதஸாகரத்தில் அழுந்துவதை மறந்திருந்தேனே, ஐயோ! நானென்ன காரியஞ் செய்தேனென்று தம்மை வெறுத்துக்கொண்டு அதுதொடங்கி ஜனனமரணங்களுக்கு வித்தாகிய விஷய இன்பத்தையும் அது பெறுதற்குச் செய்யுமுயற்சியையும் முழுதும் வெறுத்து என்றும் பிறவாமைக்கேதுவாகிய மோக்ஷவின்பத்தையும் அது பெறுதற்குத்தக்க ஸத்காரியங்களையும் விரும்பி ஸ்ரீமந் நாராயணனுடைய திருமந்த்ரங்களை ஜபித்தலும் அவரது திருவடிகளை நினைத்தலும் எம்பெருமான் அர்ச்சாவதாரங்கொண் டெழுந்தருளிய திவ்ய தேசங்களிற் சென்று ஸேவித்தலும் பாகவதர்களைப் பணிதலும் அவர்கள் திருவுள்ளக் குறிப்பின்படி நடத்தலுமாகிய நன்முயற்சிகளில் இரவும்பகலும் இடைவிடாமற் ப்ரவேசித்திருந்தார்.

இவ்வாறிருந்தவர் ஒருநாள் [illegible] இருந்து கொண்டு தாவரம் - ஊர்வன பறவை - விலங்கு - நீர் - மனிதர் - தேவர் - என்னும் எழுவகையான ஜனனங்களில் மானிட ஜனனங் கிடைப்பதரிது. அதனிலும் ஆண் பெண்ணென்னு மிரண்டில் ஆணாகப்பிறப்பதரிது. அதனிலும் கூன் குருடு முதலிய பழுதில்லாமற் பிறப்பதரிது. அதனிலும் இப்புவியிலுள்ள எழுவகைத் தீவுகளுள் நாவலந்தீவில் பிறக்கக் கிடைத்தலரிது. அதனிலும் அத்தீவிலுள்ள நவவருஷங்களில் பாரதவருஷத்திற் பிறத்தலரிது. அதனிலும் அவ்வருஷத்திலுள்ள நவகண்டங்களில் குமரிகாகண்டத்தில் பிறத்தலரிது. அதனிலும் அக்கண்டத்திலுள்ள நால்வகை வர்ணங்களில் ப்ராமணவர்ணத்தில் பிறப்பதரிது. அதனிலும் அறிவுள்ளவனாகப் பிறப்பதரிது. அதனிலும் ஸ்ரீவைஷ்ணவஸம்பந்தமான மரபிற்பிறப்பதரிது. ஐயோ இவ்வளவரிதிற் பெற்றுக்கொண்ட நமது வாழ்நாளை நெடுங்காலம் ஜனன ஸம்பந்தமான ஸ்திரீவிஷயங்களிற் செலுத்தி அவரது அளகத்தைச்-சைவலமென்றும், முகத்தைப்-பூர்ணசந்திரபிம்பமென்றும், கண்களைக்-காவிமலரென்றும், நாசியைக்-குமிழென்றும், செவிகளை-வள்ளையென்றும், இதழைப் - பவளமென்றும், பற்களை - முல்லையரும்பென்றும், கழுத்தைக் - கமுகென்றும், தோள்களை - மூங்கிலென்றும், கைகளைக் - கமலமென்றும், முலைகளை - ஸ்வர்ணகலசங்களென்றும், வயிற்றை-ஆலிலையென்றும்,

உந்தியை - நீர்ச்சுழியென்றும், இடையை - உடுக்கையென்றும், அல்குலை - அரவென்றும், தொடையை - வாழைத்தண்டென்றும், அடியை - அரவிந்தமென்றும், இவ்வாறு பலபலவிதமாகப் புகழ்ந்து புகழ்ந்து மனங்கரைந்து அவளது கண்களாகிய வலையிலகப்பட்டுக் கொங்கைகளாகிய குன்றுகளின்மேலேறிக் குறியாகிய குழியில் வீழ்ந்து மயங்கினேனல்லாமல் கிருபாநிதியாகியும், ஸர்வ ஜீவ ரக்ஷகனுகியும், ஸ்ரீவைகுண்டவாஸனுகியும், ஸர்வோத்க்ருஷ்டனுகவும் விளங்குகின்ற ஸ்ரீமந்நாராயணனது திருவடிகளில் அன்பு வைத்து அந்தப்பரமனுடைய திருமுகத்தைக் குறைபடாத அமுதசந்திரனென்றும் திருக்கண்களைத் திவ்யமான செங்கமலங்களென்றும் திருவாய்மலரைச் செங்குமுதமென்றும் திருமேனியை நீர்கொண்ட மேகமென்றும் இவ்வாறு பலவகையாகப் புகழ்ந்து மனங்கரைந்து உடல் புளகமரும்பிக் கண்களில் நீர்சொரிந்து கைகளைக் கூப்பிநின்று எம்பெருமானே! எளியேனை ரக்ஷிப்பாயென்று ஸ்துதிசெய்தேனில்லையே! இதற்கென்னசெய்வேனென்று எண்ணியெண்ணிச் சிந்தாக்ராந்தராயிருந்தார்.

அப்பொழுது ஸ்ரீமந்நாராயணன் திருவுள்ளத்தில் கிருபை கூர்ந்து கருடாரூடராக எழுந்தருளி ஸேவைஸாதித்தருள, வியாகுலசித்தராக எண்ணமிட்டிருந்த விப்ரநாராயணர் பட்டினி கிடந்தவன் பாற்சோறு கண்டதுபோல ஸ்வாமி எழுந்தருளியதைக்கண்டு திடீரென்றெழுந்து ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடிகளில் பலமுறை விழுந்து விழுந்து தண்டஸமர்ப்பித்து ஆனந்தபரவசராகித் தெளிந்து ஆனந்தபாஷ்பங் கண்களிலிருந்து தாரைதாரையாகவர நெருப்பிலிட்ட வெண்ணெயைப்போல மனம் நெகிழ்ந்து நெகிழ்ந்துருகத் தேஹமுழுதும் புளகாங்கிதங் கொள்ள அஞ்சலிஹஸ்தராக நின்றுகொண்டு காமமென்னுங் கருங்கடலில் விழுந்து அறிவுமயங்கி அழுந்திக்கிடந்த அடியேனையும் ஒருபதார்த்தமாகத் திருவுள்ளத்திற்குறித்து எழுந்தருளி ஸேவைஸாதித்த தேவரீரது கிருபைக்கு என்ன கைம்மாறு செய்யமாட்டுவேன்? ஓஹோ இப்படிப்பட்ட இரக்கமுள்ள எம்பெருமானை நினைந்துநினைந்துருகி ஆனந்தஸமுத்திரத்தி லாடாமல் ஆபாசமான ஸம்ஸாரஸமுத்திரத்தில் தலைதெரியாது அழுந்தினேனே என்னறிவை யென்னென்று சொல்வேனென்று பலவாறு பரிதபிக்க ஸ்ரீமந்நாராயணன் அவரது முகத்தைப்பார்த்தருளி உம்மை

# எஉ தொண்டரடிப்பொடியாழ்வார் வைபவம்.

ஸம்ஸாரத்தில் முன் அழுந்தும்படி செய்ததும், பின்பு எழும்படி செய்ததும், நாமேயல்லது உமது செயலல்ல. ஆகையால் நீர் அஞ்சவேண்டுவதில்லை என்று திருவரங்கம் பெரியகோயிலுக்கு வாருமென்று திருவாய்மலர்ந்தருளி எழுந்தருள, பின்பு ஆழ்வாரும் அப்பெருமான் திருவாய்மலர்ந்தருளியபடி [illegible] திருவரங்கத்தில் எழுந்தருளி அந்த திவ்ய [illegible] பாகவதர்களையெல்லாம் எதிர்கொண்டு [illegible] உட்புகுந்து அழகிய மணவாளப்பெருமானை ஸேவித்து [illegible] யில் விழுந்து [illegible] பக்திபரவசராக [illegible] [illegible] சேஷசாயியாகிய அப்பெருமானை [illegible] [illegible] முதலான [illegible] [illegible] [illegible]

தொண்டரடிப்பொடியாழ்வார் [illegible] [illegible]

* [illegible]

‡ கதிரவன்குணதிசைச் சிகரம்வந்தணைந்தான்
கனையிருளகன்றது காலையம்பொழுதாய்
மதுவிரிந்தொழுகின மாமலரெல்லாம்
வானவரரசர்கள் வந்துவந்தீண்டி
எதிர்திசை நிறைந்தனர் இவரொடும்புகுந்த
இருங்களிற்றீட்டமும் பிடியொடுமுரசும்
அதிர்தலிலலைகடல் போன்றுளதெங்கும்
அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே.

[illegible]ள்வைத்துத் துளபம் - மல்லிகை - முல்லை - சண்பகம்முதலிய புஷ்பங்களையெடுத்துப் பலவகை மாலைகளாகத்தொடுத்துத் தினந்தோறுந் தவறாது ஸ்ரீரங்கநாதனுக்கு ஸமர்ப்பித்துக்கொண்டு வந்தார்.

அவ்வாறு கைங்கர்யங்களைச் செய்துகொண்டு வருகிற நாட்களில் ஒருநாள் தொண்டரடிப் பொடியாழ்வார் ஸந்நிதிக் கெழுந்தருளி எம்பெருமானுக்குப் பூமாலை ஸமர்ப்பிக்கும்போது எம்பெருமான் பக்தாங்க்ரிரேணுவாகிய ஆழ்வாரைக் கடாக்ஷித்தருளி ஆழ்வாரே நீர் நமது விஷயமாகப் பாடிய பாடல்களை இன்னுமொருதரம் நாம் கேட்கும்படி சொல்லுமென்று திருவாய்மலர்ந்தருளத் தொண்டரடிப்பொடியாழ்வார் அதுகேட்டு ஆனந்தவசத்தராய்த் தண்டன் ஸமர்ப்பித்துக் கைகளைக்குவித்து நின்று ஸ்வாமி! தேவரீர் அடியேனிடத்தில்வைத்த க்ருபாவிசேஷத்தை வெளிப்படுத்தவல்லவோ இவ்வாறு திருவுள்ளம்பற்றியது. ஆயினும் அந்தப்பாடல்கள் அடியேன் ஸ்வதந்த்ரத்தால் பாடினவையல்ல; தேவரீர் பாடுவிக்க அடியேன் பாடினேன். ஆதலால் இப்பொழுதும நியமனப்ரகாரம பாடுகிறேனென்று பாடி ஆனந்தபாஷ்பஞ்சொரிய அன்பினால் உருகி நின்றார்.

அவ்வாறுநின்ற ஆழ்வாரை அழகிய மணவாளனாகிய எம்பெருமான் உவந்தருளி தமது திருமார்பிலிறுகத் தழுவிக்கொள்ள ஆழ்வாரும் இரும்புண்ட நீர்போல எம்பெருமான் திருமேனியிற் கலந்துநின்றார்.

## வாழித்திருநாமம்.

மண்டங்குடிப்பதியில்வாழவந்தோன்வாழியே
மார்கழியிற்கேட்டைநாள்வந்துதித்தோன்வாழியே
தெண்டிரைசூழரங்கரையேதெய்வமென்றான்வாழியே
திருமாலையொன்பான்செப்பினான்வாழியே
பண்டிருப்பள்ளியெழுச்சிபத்துரைத்தான்வாழியே
பாவையர்கள்கலவிதனைப்பழித்தசெல்வன்வாழியே
தொண்டுசெய்துதுளவத்தால்துலங்கினான்வாழியே
தொண்டரடிப்பொடிப்பெருமானதுணைப்பதங்கள்வாழியே

## நேரிசைவெண்பா.

என்னெஞ்சேயின்றைக்கென்னேற்றமெனவுன்னுதியேல்
அன்னஞ்சேர்மண்டங்குடியிற்—றுன்னுஞ்சீர்த்
தொண்டரடிப்பொடிமுன் றோன்றியருண்மார்கழியிற்
கண்டதிருக்கேட்டைநாள்காண்.

தொண்டரடிப்பொடியாழ்வார் வைபவம் முற்றிற்று.



# திருப்பாணாழ்வார் வைபவம்.

𑌵𑍃𑌶𑍍𑌚𑌿𑌕𑍇 𑌰𑍋𑌹𑌿𑌣𑍀𑌜𑌾𑌤𑌂 𑌶𑍍𑌰𑍀𑌪𑌾𑌣𑌂 𑌨𑌿𑌚𑍁𑌳𑌾𑌪𑍁𑌰𑍇 ।
𑌶𑍍𑌰𑍀𑌵𑌤𑍍𑌸𑌾𑌂𑌶𑌂 𑌗𑌾𑌯𑌕𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌮𑍁𑌨𑌿𑌵𑌾𑌹𑌨𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑍇 ॥

வ்ருஸ்சிகே ரோஹிணீஜாதம ஸ்ரீபாணமநிசுளாபுரே |
ஸ்ரீவத்ஸாம்ஸமகாயகேந்த்ரம முநிவாஹநமாஸ்ரயே.

𑌶𑍍𑌰𑍀𑌲𑍋𑌕𑌸𑌾𑌰𑌙𑍍𑌗𑌮𑌹𑌾𑌮𑍁𑌨𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑌾𑌧𑌿𑌰𑍂𑌢𑌂 𑌕𑌲𑌯𑌾𑌮𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍍 ।
𑌕𑌲𑌙𑍍𑌕𑌹𑍀𑌨𑌂 𑌕𑌮𑌨𑍀𑌯𑌭𑌕𑍍𑌤𑌿𑌂 𑌕𑌵𑍀𑌶𑍍𑌵𑌰𑌂 𑌗𑌾𑌯𑌕𑌸𑌾𑌰𑍍𑌵𑌭𑍌𑌮𑌮𑍍 ॥

ஸ்ரீலோகஸாரங்கமஹாமுநீந்த்ர ஸ்கந்தாதிரூடம்கலயாமிநித்யம
களங்கஹீநமகமநீயபக்திம கவீஸ்வரங்காயகஸார்வபௌமம்.

𑌆𑌪𑌾𑌦𑌚𑍂𑌡𑌮𑌨𑍁𑌭𑍂𑌯 𑌹𑌰𑌿𑌂 𑌶𑌯𑌾𑌨𑌂
𑌮𑌧𑍍𑌯𑍇 𑌕𑌵𑍇𑌰𑌦𑍁𑌹𑌿𑌤𑍁𑌰𑍍𑌮𑍁𑌦𑌿𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 ।
𑌅𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍃𑌤𑌾𑌂 𑌨𑌯𑌨𑌯𑍋𑌰𑍍𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌣𑌾𑌂
𑌯𑍋 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌕𑌾𑌯 𑌮𑌨𑌵𑍈 𑌮𑍁𑌨𑌿𑌵𑌾𑌹𑌨𑌂 𑌤𑌮𑍍 ॥

ஆபாதசூடமநுபூயஹரிமஸயாநம்
மத்யேகவேரதுஹிதுர்முதிதாந்தராத்மா
அத்ரஷ்ட்ருதாம்நயநயோர்விஷயாந்தராணாம்
யோநிஸ்சிகாயமநவைமுநிவாஹநந்தம்.

கலியுகத்தில் முந்நூற்றுநாற்பத்திரண்டுக்கு மேற்செல்லுகின்ற துர்மதிவருஷம் கார்த்திகைமாசம் க்ருஷ்ணபக்ஷம் த்விதியை புதன்கிழமைகூடின ரோஹிணிநக்ஷத்திரத்தில் ஸ்ரீவத்ஸாம்சம், பல

வகைச் சிறப்புகளுக்கு மிடமாகிய நிசுளாபுரமென்று *சொல்லப்பட்ட வுறையூரின்புறத்தில் பொன்னுமவிளையும் நன்னிலமாகிய புறம்பணையில் கரும்பென்று சொல்லுமபடி யோங்கிவிளைந்த செஞ்சாலிப் பயிரினிடமாக நெற்கதிரில் ஸ்ரீமந்நாராயணனுடைய அனுக்கிரகத்தினால் ஸௌந்தர்யமுள்ள ஓர் குழந்தையாக அவதரித்து சூர்யோதயம்போல ப்ரகாசித்திருந்தது. அப்பொழுது பூர்வஞ்செய்த தவக்குறைவினாலே இழிகுலமாகிய பாணர்குடியிற் பிறந்தவனாயினும் பகவத்பக்திமுதலான ஸத்குணங்களிலே சிறந்தவனாகிய ஓர் பாணன் தன்மனையாளுடன் அச்செஞ்சாலி வரப்பின்மார்க்கமாக வருகின்றவன் எமபெருமான் அனுக்கிரகத்தினால் தெய்வத்தன்மையோடு பாகாசிக்கின்ற அந்தக் குழந்தையைக்கண்டு நெடுநாளாகப் பிள்ளையில்லாமல் வருந்துகின்றவனாதலால் அளவில்லாத மகிழ்ச்சியுடையவனாகித் தனது இரண்டு கைகளாலுந் தழுவியெடுத்து மார்பிலணைத்துத் தன் மனைவிகையிற்கொடுக்க அவளும் மனக்களிப்புடன் வயிறு வருந்திப்பெற்ற புத்ரனை வாரியணைத்துக் கொள்வதுபோல மார்பிலணைத்துக்கொண்டு பாலூட்ட அந்த முலைப்பாலை யுண்ணாமலிருந்ததைக்கண்டு இதென்னகாரணமென்றுஇருவருமஆலோசித்துக் கொண்டே சேரியிலெடுத்துக் கொண்டுபோய் அவ்விடத்திற் பலவகை யுபசாரங்களுஞ்செய்து பசுவின் பாலைக்கறந்து பரிவோடு புகட்ட அதையுண்டது கண்டு ஆச்சர்யமடைந்து அதுதொட்டு சுத்தமான பசுவினபாலைக்கறந்து புகட்டிவளர்த்துவந்தார்கள்.

அவ்வாறு வளர்ந்துவருகின்ற ஆழ்வாரும பகவதனுக்கிரகத்தினால் மூன்றுவயதிற்றானே ஸமஸ்தமு முணர்ந்து தம்மை வளர்த்துவருகின்ற பாணர்குலத்தொழிற்கு ஏற்ற வீணைகானத்திற்சிறந்தவராகி ஸதாபகவத்பக்தியும் பகவந் நாமகீர்த்தனமுஞ் செய்துகொண்டிருந்தார். இவ்வாறிருந்தவர் ஒரு நாள் தமது சேரியைவிட்டுக், காவிரி நதிக்கெழுந்தருளி அந்நதியில் தீர்த்தமாடி அங்குநின்று பெரிய பெருமாளெழுந்தருளிய விமான சேவை செய்துகொண்டு ஸ்ரீமந் நாராயணனது திவ்ய திருவடிகளின் மகிமையை வீணாகானத்திற் றொடுத்துப் பாடவேண்டுமென்னும் விருப்பமுண்டாக அந்தக்ஷணமே தமமிடத்திற்குவந்து வீணையையெடுத்துக்கொண்டு அக்காவிரிக்கரையிற்போய்ப் பெரியபெருமாள் விமானத்தைப் பார்த்துக்கொண்டே மேற்போர்த்த

பொல்லுஞ்சைக்கீப் பந்தர் இட்டுத் தோட்கவறுகுப் பின்கிட்டப் பக்கிட்டத்தி மாட்டுத்திருத்திக் காந்தருவ லக்ஷணத்திற் சொல்லிய க்ரமத்திற் சிறிதுந்தவறாது ஸ்ரீமந் நாராயணனது திவ்யகுணங்களையே இசைப்பாட்டாகத் தொடுத்துக் கண்களிலானந்த நீர் பெருகவும் கேசத்தில் மயிர்க்கூச்செறியவும் வாசித்துக்கொண்டிருந்தார்.

இவ்வாறு ஆழ்வார் வீணையைக்கொண்டு பாடுகின்ற இசைப் பாட்டை விஞ்சையாருங் கந்தர்வர்களும் யக்ஷர்களுங் கேட்டு மனமுருகி அந்தரத்தே வந்து அசைவற்றிருந்தார்கள். பிரமன் உருத்திரன் இந்திரன் முதலானவர்களாம் மற்றுந் தேவர்களும் அவ்விசையைக்கேட்டு அந்தரத்தில் நின்றபடியே ஆனந்த பரவசர்களாயிருந்தார்கள்.

அவ்விசையைக்கேட்ட மனிதர்களில் அஞ்ஞானமுள்ளோர் அவ்வஞ்ஞானம் நீங்கி ஸந்தோஷஸாகரத்தில் மூழ்கியிருந்தார்கள். மிருகம் ஊர்கின்றவை முதலான சராசரங்களும் அவ்விசையைக் கேட்டு மூடம் நீங்கி அறிவுவிளங்கி இன்பமயமாக விருந்தன. சமுத்திரமுதலானவைகளெல்லாம் நிலைதடுமாறியிருந்தன. பெரியபெருமாளாகிய ஸ்ரீமந்நாராயணனும் மஹாலக்ஷ்மீஸமேதராய்ப் பெரிய திருவடியின்மேலெழுந்தருளி அந்தரத்தினின்று அவ்விசையைத் திருச்செவிசாற்றிக்கொண்டு திருவுள்ளமுவந்தருளினார்.

இத்தகைய பெருமையுடைத்த திருப்பாணாழ்வார் நெடுநேரம் அந்தரத்திலிருந்து இசைபாடிப் பின்பு தம் சேரிக்கெழுந்தருளினார். உலகத்திலுள்ளவர்கள் அதிசயிக்கவும் உலகமுழுவதும் பகவத்பக்தி நிரம்பவும் ஆழ்வார் இந்தப்படியே யாழ்வாசிக்கத்தொடங்கி நெடுங்காலம் காவிரியில் நீராடிப் பெரியபெருமாளது ஸ்ரீரங்கவிமானத்தை ஸேவிக்குங் காலந் தவறாது நாடோறும் இசைபாடிக்கொண்டு வருகிறநாளில் ஒருநாள் ஆழ்வார் பகவத்விஷயமாக உள்ளன்புடன் பாடுகின்ற இசையைக்கேட்டு மகிழ்ச்சியடைந்த ஸ்ரீமஹாலக்ஷ்மி, ஸ்ரீமந்நாராயணனது திருமுகத்தைநோக்கி ஸ்வாமி! இந்தப்பக்தன் என்மனத்தை அன்புடன் பாடுகின்ற இசையினால் உருக்குகின்றான்; தேவரீருக்கும் அவ்வனுபவம் உண்டாயிருக்கின்றதென்று எனக்குத்தெரிகின்றது. நீயோர் இப்படிப்பட்ட பக்தனை இவ

னும் புறம்பாக வைத்திருப்பது தேவரீர் க்ருபைக்கு அழகுதானோவென்று சொல்ல, ஸ்வாமியும் பிராட்டியாரது திருமுகத்தைநோக்கிப் புன்னகைகொண்டு உனதிஷ்டப்ரகாரம நாளைக்கு அப்படியே செய்துகொள்ளுகிறோ மென்று திருவாய்மலர்ந்து கோயிற்கெழுந்தருளி திருக்கோயிலைக் காத்திருக்கின்ற திருவாசற்காரர்களுக்குக் காவிரிதீரத்தில் இசைபாடிக்கொண்டிருக்கிறநமது பக்தனாகிய திருப்பாணாழ்வாரை நமமிடத்துக்கு அழைத்து வாருங்களென்று அர்ச்சகமுகேன திருவாய்மலர்ந்தருள, அது கேட்டு அவர்கள் அற்புதமும் ஆனந்தமுங்கொண்டு அந்தக்ஷணமே விரைந்து காவிரிதீரத்திற்போய் திருமுகத்துறையிலே இசை பாடிக்கொண்டிருக்கின்ற ஆழ்வாரைக்கண்டு ஸேவித்து ஸ்வாமி! தேவரீரை நமபெருமாள் அழைத்துவரும்படி ஆக்கியாபித்தருளினார்; தேவரீர் எழுந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, அதுகேட்டு ஆழ்வார் அதிக பயத்துடனே அவர்களை ஸேவித்துக்கொண்டு ஓகோ அந்தியகுலத்தில் இழிவாகிய தொழிலைச்செய்கின்ற அடியேன் ப்ரமமாதிதேவர்களுக்குங் கிடைத்தற்கருமையான ஸந்நிதியில எவ்வாறு வருவேனென்று பலவகையினும் மறுக்கத் திருவாசற்காரர்கள் ஆழ்வாரை பலாத்காரஞ்செய்வதற்கு அஞ்சி மீண்டுவந்து பெரியபெருமாளிடத்தில் விண்ணப்பஞ்செய்ய ஸ்ரீரங்கநாயகன் பூர்வம வேதமுதலாகிய கலைகளையும் ப்ராம்மணர் முதலான குலாசாரங்களையும ஏற்படுத்திய நமது பக்தர் எந்தக்குலத்திற் பிறந்தாரகளோ அந்தக் குலமே மேலான குலமென்று நாம சொன்னதாகச்சொல்லி அழைத்து வாருங்களென்று மீட்டும நால்வரை அனுப்பியருள அவர்களும் ஆழ்வாரிடத்திற்குப்போய் எமபெருமான் திருவாய்மலர்ந்தருளியதைச் சொல்லி யெழுந்தருளவேண்டுமென்று ஸேவிக்க அதுகேட்டு ஆழ்வாரும் எமபெருமான் திருவாய்மலர்ந்தருளியது பற்று முழுதுமற்ற பரமபாகவதர்களுக்கேயல்லது ஆசைக்கடலில் அழுந்திய அடியேனிடத்துச்செல்லுமோ ஐயோ! புலைத்தன்மையுள்ள சிறியேன் புருஷோத்தமனாகிய பெரியபெருமாள் எழுந்தருளிய பெரிய திருக்கோயிலுக்கு வரத்தகுமோ வென்று மறுக்க, அதுகேட்டு அந்நால்வரும பெரியபெருமாள் நியமனப்படி வந்தோம் தேவரீரை யினி விட்டுப்போகோம எந்தப்ப்ரகாரமாயாவது எழுந்தருளப்பண்ணிக் கொண்டுபோவோ மென்று சொல்ல,

அதைக்கேட்ட ஆழ்வார் பயந்து அந்தக்ஷணமே காவிரியைக் கடந்து அக்கரையிலோடினார்.

அதுகண்டு வந்த அந்நால்வரும் அஞ்சிமீண்டும்பெரியபெருமாள் ஸந்நிதியில் வந்து விண்ணப்பஞ்செய்தார்கள். பெரியபெருமாளும் தம்மை யர்ச்சிக்கின்ற சாரங்கமாமுனிவின் கனவிலெழுந்தருளி காவிரிக்கரையில் இசை பாடிக்கொண்டிருக்கிற நமது அந்தரங்க பக்தனை திருப்பாணாழ்வாரை உமது தோளிமேலெயெடுத்து வைத்துக்கொண்டு வீதிவய வலமாகவந்து நமது ஸந்நிதியில் விடுமென்று திருவாய்மலர்ந்தருள, சாரங்கமாமுனிவரும் கண்விழித்து அதிகமாக அன்பும ஆனந்தமும மேலிட எழுந்து அந்தக் கோயிலுள்ளார்க்கும மற்றவர்களுக்கும் அறிவித்து அவர்களனைவருஞ் சூழ்ந்துவரக் காவிரியின் கரையிற் சென்று ஆழ்வாரைக்கண்டு சாரங்கமாமுனிவரும் மற்றவர்களும பணிய அவர்கள் பணியுமுன் ஆழ்வாரும பயந்து கீழ்விழுந்து ஸேவித்து எழுந்து தூரநிற்க, சாரங்கமுனிவர் பெரியபெருமாள் தமக்கு ஆக்ஞாபித்தபடி சொல்லி அடியேன் தோளினிடமாக எழுந்தருள வேண்டுமென்று ப்ரார்த்தித்து ஸமீபமாகப்போக ஆழ்வாரும் ஐயோ! இதென்ன அபசாரமென்று கண்களில நீரொழுக, ஸ்வாமி! இது அடியேன் நினைப்பதற்குங் கூடாததாயிருக்கின்றதென்று சொல்லியோட ஆழ்வார்க்கு முன்னதாக அனந்தமபேர்களோடிச் சூழ்ந்துகொள்ள அப்பொழுது ஆழ்வாரும அடங்காத் துக்கத்தோடும எமபெருமானே இதென்ன திருவிளையாடலென்று சொல்லி யழுதுகொண்டே திருக்கோயிலை நோக்கி ஸாஷ்டாங்கமாக ஸேவித்தார்.

அப்பொழுது ஸமீபத்திலிருந்த சாரங்கமுனிவர் இன்றைக்கு எனது தோள் என்ன புண்யஞ் செய்ததோ வென்று சொல்லிக் கொண்டே தமது இரண்டு கைகளாலும ஆழ்வாரைத் தழுவி யெடுத்துத் தோள்களின்மேலெழுந்தருளப் பண்ணிக்கொண்டு தேவர்கள் பூமாரிசொரிய முனிவர்கள் இருடிகள் முதலாயினோர் வந்து துதிக்க ஸ்ரீ வைஷ்ணவர்களோடு பாகவதர்களும மற்றவர்களுஞ்சூழ்ந்துபுகழ்ந்துவர மங்களவாத்தியங்கள் முழங்க ஸ்ரீரங்கமென்னுந்திவ்ய தேசத்தை ப்ரதக்ஷணமாக வந்து திருக்கோயிலுக்குள்ளே எழுந்தருளப்பண்ணிக்கொண்டுபோய் ஸ்ரீபாதாதி கேசபர்யந்தம ஸேவையாகுமபடி அழகிய மணவாளரான பெரிய பெருமாள் திருவடிக்கு ஸமீபத்திலேவிட்டார்கள். அப்பொழுது

திருப்பாணாழ்வார் எம்பெருமானை ஸேவித்து அனேகமுறை கீழ் விழுந்து தண்டன் ஸமர்ப்பித்து எம்பெருமானே பரமபாகவதர்களது திருவடியிற்படும் இரேணுவும்பெற்றபேற்றில் கோடியிலொரு கூறுயினுமில்லாத இழிந்தவனாகிய அடியேனிடத்தில் என்ன கருணையோவென்று நாத்தழும்பேறத் துதித்துக்கண்ணும்மனமுங் குளிர்ந்து ஆனந்த பரவசராகி, பெரிய பெருமானுடைய திருவடி முதலாகிய அவயவங்களில் தமது அன்புநிறைந்திருப்பதை யமைத்து * அமலனாதிபிரானென்று முதலெடுத்துப் பத்துப்பாடல் செய்தருளி ஆனந்தபாஷ்பம் பொழிய நின்றுகொண்டிருந்தார். அவ்வாறு நின்ற திருப்பாணாழ்வார் சிரஸின்மேல் அழகிய மணவாளர் தேஜோமயமாகிய தமது உபய சரணாரவிந்தங்களையும் வைத்தருள, ஆழ்வாரும் அந்தத்திருவடிகளிலே தமது திருமேனி முழுதும் இன்பமயமாக அந்தர்ப்பவித்தருளினார். இவர் லீலாவிபூதியில் இருபது திருநக்ஷத்திர மெழுந்தருளி யிருந்தார்.

## வாழித்திருநாமம்.

உம்பர்தொழுமெய்ஞ்ஞானத்துறையூரான்வாழியே
உரோகிணிநாள்கார்த்திகையிலுதித்தவள்ளல்வாழியே
வம்பவிழ்தார்முனிதோளில்வந்தபிரான்வாழியே
மலர்க்கண்ணைமற்றொன்றிலவையாதான்வாழியே
அம்புவியில்மதிளரங்கரகம்புகுந்தான்வாழியே
அமலனாதிப்பிரான்பத்துமறளித்தான்வாழியே
செம்பொனடிமுடியளவுஞ்சேவிப்போன்வாழியே
திருப்பாணன்பொற்பதங்கள்செகதலத்தில்வாழியே.

## நேரிசை வெண்பா.

கார்த்திகையில்ரோகிணிநாள் காண்மினின்றுகாசினியில்
வாய்த்தபுகழ்ப்பாணர் வந்துதிப்பால்-ஆத்தியர்கள்
அன்புடனேதானமலனாதிப்பிரான்கற்றதற்பின்
நன்குடனே கொண்டாடுநாள்.

திருப்பாணாழ்வார் வைபவம் முற்றிற்று.

* அமலனாதிப்பிரானடியார்க்கென்னையாட்படுத்த
விமலன்விண்ணவர்கோன்விரையார்பொழில்வேங்கடவன்
நிமலனின்மலனீதிவானவனீண்மதிளரங்கத்தம்மான்திருக்
கமலபாதங்கள்வந்தென்கண்ணினுள்ளனவொக்கின்றதே.



# திருமங்கையாழ்வார் வைபவம்.

𑌵𑍃𑌶𑍍𑌚𑌿𑌕𑍇 𑌕𑍃𑌤𑍍𑌤𑌿𑌕𑌾𑌜𑌾𑌤𑌂 𑌚𑌤𑍁𑌷𑍍𑌕𑌵𑌿𑌶𑌿𑌖𑌾𑌮𑌣𑌿𑌮𑍍 ।
𑌷𑌟𑍍𑌪𑍍𑌰𑌬𑌨𑍍𑌧𑌕𑍃𑌤𑌂 𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌂 𑌕𑌲𑌿𑌹𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑍇 ॥

வ்ருஶ்சிகேக்ருத்திகாஜாதம் சதுஷ்கவிஶிகாமணிம்
ஷட்ப்ரபந்தக்ருதம்ஶார்ங்க மூர்த்திம் கலிஹமாஶ்ரயே.

𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌾𑌬𑍍𑌦𑌾𑌨𑌾𑌮 𑌕𑌲𑌿𑌯𑍁𑌗𑌭𑌵𑌾𑌨𑌾𑌮𑌪𑌗𑌮𑍇
𑌕𑍍𑌷𑍋𑌣𑌾𑌵𑌰𑍍𑌷𑍇𑌮𑌾𑌸𑍇 𑌸𑌾𑌤𑌿𑌚𑌰𑌮𑍇𑌸𑍍𑌤𑌤𑌵𑌤𑍍𑌗𑍁𑌰𑍋𑌃
𑌤𑌿𑌥𑍌𑌤𑌾𑌰𑍇𑌵𑌹𑍍𑌨𑍇𑌸𑍍𑌸𑍍𑌥𑌿𑌰𑌕𑌿𑌰𑌣𑍇 𑌪𑍂𑌰𑍍𑌣𑌕𑌿𑌰𑌣𑍇
𑌕𑍁𑌲𑌿𑌤𑌾𑌵𑌾𑌵𑌿𑌰𑍍𑌭𑍂𑌤𑌃 𑌕𑌲𑌿𑌰𑌿𑌪𑍁 𑌰𑌮𑍇𑌯𑌾𑌤𑍍𑌮𑌮𑌹𑌿𑌮𑌾 ॥

ஸாதாரணாப்தாநாம கலியுகபவாநாமபகமே
க்ஷோணாவர்ஷேமாஸே ஸாதிசரமேஸ்ததவத்குரோ:
திதௌதாரேவஹ்நேஸ்ஸ்திரகிரணே பூர்ணகிரணே
குலிதாவாவிர்ப்பூத: கலிரிபு ரமேயாத்மமஹிமா.

𑌕𑌲𑌯𑌾𑌮𑌿 𑌕𑌲𑌿𑌧𑍍𑌵𑌂𑌸𑌂 𑌕𑌵𑌿𑌲𑍋𑌕𑌦𑌿𑌵𑌾𑌕𑌰𑌮𑍍 ।
𑌯𑌸𑍍𑌯 𑌗𑍋𑌭𑌿𑌃 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌾𑌭𑌿 𑌰𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑌂 𑌨𑌿𑌹𑌤𑌂 𑌤𑌮𑌃 ॥

கலயாமிகலித்வம்ஸம் கவிலோகதிவாகரம்
யஸ்யகோபி: ப்ரகாஶாபி ராவித்யம்நிஹதம்தம:

ஸ்ரீமந்நாராயணன் அர்ச்சாவதாரமாக எழுந்தருளிய திருவாலியென்னுந் திவ்யதேசத்திற்கடுத்த திருக்குறையலூர் என்னும் பதிக்கு அதிபதியாகியும் தனதானியாதி ஸம்பத்துக்களிற் சிறந்த குலத்தில் மன்னனாகியும் கள்ளக்குடி மரபிற்றலைவனாகியும் சைவஸம்ப்ரதாயத்தவனாகியும் மிகுந்த சிவபக்தி செய்துகொண்டிருந்த நீலனென்பவனிடத்தில் ஸ்ரீமந்நாராயணனுடைய திவ்யாயுதமாகிய ஸ்ரீசார்ங்காம்சம், அஷ்டாக்ஷர பராயணனாகிய ஸ்ரீமந்நாராயணனே நித்யமாகிய பரவஸ்துவென்றும் மற்ற பிரமருத்ராதி தேவதைகள் அவனுக்குச் சரீரங்களாய சேஷபூதராயிருப்பவர்களென்றும் அந்த நித்ய வஸ்துவாகிய ஸ்ரீமந்நாராயணனுடைய நித்ய மங்கள குணானுபவஞ்செய்து நித்யானந்தத்தையடைவிக்கும் ஸமயம் ஸ்ரீவைஷ்ணவ ஸமயமென்றும் மற்ற ஸமயங்களெல்லாம் அநித்யமான பலன்களைத்தரும் ஸமயங்களென்றும் உலகத்திலுள்ள ஆத்மாக்களுக்கு அறிவித்து அவர்களை மீட்டருளும்படி கலியுகத்தில் ௩௯௭-க்குமேற் செல்லுகின்ற நள வருஷம் கார்த்திகைமாஸம் பௌர்ணமி வியாழக்கிழமை கூடின கிருத்திகா நக்ஷத்திரத்தில புத்ரனாக அவதரித்தருளினார்.

அவதரித்தருளிய புத்ரசிகாமணியைக் கள்ளக்குலத் தலைவனாகிய நீலனென்னுஞ்சைவன் தனது செல்வப்பெருக்கத்துக்குத் தக்கபடி மங்களவாத்தியங்கள் முழங்கச் சாதகர்மமுதலிய சடங்குகளைச் செய்வித்து நீலனென்னும் தனபெயரே பெயராக நாமகரணஞ்செய்து சௌளம அன்னப்ராசனமுதலான மற்றக் கர்மங்களையும் நடத்தி அன்புடன் அருமையாக வளர்த்துவந்தான். அவ்வாறு வளர்த்துவந்தவர் ஏழுவயதுதொடங்கிப் பதினொருவயதிற்குள் பூர்வஜன்ம விசேஷத்தால் குருமுகமாக ஸகலசாஸ்த்ரங்களையும் இலேசிலே கற்றுணர்ந்து பின்பு யானையேற்றங் குதிரையேற்றந் தேரூர்தல் வாள்வித்தை மல்லர்வித்தை வில்வித்தை முதலியவும் சங்கிராமாலோசனை முதலான ஸகல லக்ஷணானுபவங்களும் குறைவில்லாதவராய் நற்குணபூஷணராய் நுண்ணறிவிற்சிறந்து யாவருக்கும் மகிழ்ச்சியை யுண்டாக்கிக் காமனைப் பார்க்கிலுங் கட்டழகுள்ள வடிவத்துடன் இளமைப்பருவத்தை யடைந்து வீரசிங்கம்போற் பிரகாசித்திருந்தார். இவரிவ்வாறிருக்கின்ற நாள்களில் தந்தையாகிய நீலனென்பவன் காலஞ்சென்றபின் சோழராஜன் அவனது தலைமையைச் செலுத்துதற்குத்தக்க

புத்ரனுண்டோவென்று விசாரித்து மந்திரியாயிருந்த இந்தப் புத்திரனைத் தனது சமூகத்திற்கு வரவழைத்து சகல சாஸ்திரங்களிலும் பலவிதமான வித்யைகளிலும் வியாபாரங்களிலும் யுக்திகளிலும் மதிநுட்பத்திலும் இவனைச் சோதித்து ஒன்றிலுங் குறைபடாத அவரது வல்லமையைத் தெரிந்து ஆச்சரியமடைந்து மனங்களித்து ரத்னகஜ துரக பதாதிகளாகிய நாலுவகைச் சேனைகளையும் அவருக்குக்கொடுத்து முன்னுள்ள தலைமையுடனோர் தேசத்தையும் ஆளும்படி அதிகார பட்டமுங்கட்டி அனேக பரிசுகளுங் கொடுத்தனுப்பினான்.

அவ்வாறே நீலனென்பவர் அளவில்லாத ஐஸ்வர்யவைபவத்துடன் அதிகாரஞ் செலுத்தி வருகின்ற காலங்களில் ஸ்ரீமந்நாராயணனே கதியென்றும் அவன் திருவடியே நமக்குத் தான செல்வமென்றும் அவரது திவ்யதரிசனமே நமக்குரிய இன்பமென்றும் அவரெழுந்தருளிய ஸ்ரீ வைகுண்டமே நமக்குப் பிராப்பிய ஸ்தானமென்றும் ஒவ்வொருபோது பூர்வ ஸம்பந்தத்தால் நினைப்பித்தும் ஒவ்வொருபோது மறப்பித்தும் அந்தமயமாகிய ப்ரபஞ்ச விஷயங்களில் அழுத்தியும் ஸ்ரீமந்நாராயணன் மாயைஞ்செய்விக்க அம்மாயையினால் மயங்கி ஸ்த்ரீபோக லோலராகவிருந்தார். இவரிவ்வா றிருக்கின்றகாலத்தில் திருநாங்கூர் பாகவதோத்தமனை திருவாலியென்னும் ஸ்தலத்திற்கு வந்து அவ்விடத்திலிருக்கின்ற திவ்யதீர்த்தமாகிய தாமரைத்தடாகத்தில் தீரமுககரையிலேறி பகவத்த்யானஞ்செய்துகொண்டிருந்தார். அப்பொழுது தேவலோகத்தி லிருந்து ஓர் தெய்வ விமானத்தின்மேலேறிக்கொண்டு சில தேவகன்னிகைகள் அத்தடாகக்கரையிலிறங்கி அத்தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி மணமுள்ள புஷ்பங்களைக் கொண்டு திருவாலிநாதனை அர்ச்சித்து வணங்கிப் பின்பு விமானத்திலேறிக்கொண்டு போய்விட்டார்கள்.

அத்தெய்வ கன்னிகைகளில் பத்து வயதுள்ள இளங்கன்னிகையான ஒரு அப்ஸரஸ்திரீ அந்தத் தாமரைத் தடாகத்தில் அருமையாகப் புஷ்பித்த ஒரு செங்குமுத மலரைக் கொய்யும்படி போய் மீண்டு வந்து கரையிற் பார்க்குமளவில் தன்னுடன் வந்த அப்ஸரஸ்திரீகளையும் விமானத்தையுங் காணாமல் திகைப்படைந்துநின்றாள். அந்தத் தீர்த்தக்கரையி லிருந்து பகவத்தியானஞ் செய்துகொண்டிருந்த பாகவதோத்தமன் அந்த அப்ஸரஸ்திரீ

யாகிய இளங் கன்னிகையைப் பார்த்து அதிசய மடைந்து ஸமீபத்திற் போய் கண்ணிமையாமலும் நிலத்திற் காலபடியாமலும் மாலை வாடாமலும் அதிசயிக்கத்தக்க வுருவத்துடன் இங்கு நிற்கின்ற நீ எவ்விடத்தி லிருப்பது உன் வரலாறு என்னவென்று கேட்க, ஐயா! நானிருப்பது தெய்வலோகம்; இவ்வுலகத்தில் திருவாலிநாதரை ஆச்ரித்து வணங்கிப்போகும்படி சில அப்ஸரஸ்திரீகளுடன் வந்தேன்; நான் புஷ்பம் பறித்துவந்து பார்க்குமளவில் என்னுடன் வந்தவர்களையும் விமானத்தையு மிவ்விடத்திற் கண்டிலேன். அதனால் திகைக்கின்றேனென்று சொல்ல அதுகேட்டு அந்த பாகவதோத்தமன் அம்மா! அவர்கள் உன்னை மறந்துவிட்டு இரண்டுநாழிகைக்கு முன் விமானத்திலேறிக்கொண்டு போய் விட்டார்களென்று சொல்ல, அதுகேட்டு இனி யென்னசெய்வேன் எவ்வாறு தேவலோகத்திற்குப் போவேனென்று வருந்த, அதுகேட்டு அம்மா! நெடுநாளாகப் பிள்ளைவேண்டித் திருவாலிநாதரைப் பிரார்த்தித்துக்கொண்டுவருகின்றேன்; ஆதலால் என் குறை நிறைவேறும்படி எனக்கு நீ புத்ரியாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள அக்கன்னிகையும் ஐயா ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடிகளில் பக்திவைத்திருக்கின்ற பாகவதராகிய வுமக்கு நான் புத்திரியாக எப்படிப்பட்ட தவஞ்செய்தேன்; ஆனால் இது திருவாலிநாதரைச் சேவைசெய்த பலனென்று நினைக்கின்றேன்; உமக்கு நான் புத்திரியானேனால் இடைவிடாது திருவாலிநாதரை அர்ச்சிக்கவும் அடிபணியவும் எளிதிற் கிடைக்குமாதலால் உமது இஷ்டப்படியே உமக்குப் புத்திரியாயினேனென்றுசொல்லி அவரை அடிபணிந்து பகவதனுக்கிரகத்தால் மானிடவடிவங்கொண்டிருக்க அதுகண்டு பாகவதோத்தமனும் மனமகிழ்ந்து அணைத்து உச்சிமோந்து தமது திருமாளிகைக்கு எடுத்துக்கொண்டுபோய்த் தமது மனைவியாரிடத்தில் வந்த வரலாறு சொல்லி இந்தக் கன்னிகையைக் கொடுக்க அம்மனைவி மனங்கொள்ளாத மகிழ்ச்சியுடன் வாங்கியணைத்து குமுதமலர் வைத்திருந்தகாரணத்தால் குமுதவல்லி யென்று பெயரிட்டு அருமையாக வளர்த்துவந்தாள்.

குமுதவல்லியும் ப்ராதக்காலத்தி லெழுந்து தாமரைத்தடாகத்தில் ஸ்நானஞ்செய்து தாமரைமுதலான புஷ்பங்களைக்கொய்து அநந்தரங்கமான பக்தியுடன் திருவாலிநாதரை அர்ச்சித்து அடி-

பணிந்து பகவத் பக்தியே வடிவாக விருந்தாள். இவ்வாறிருந்கின்ற குமுதவல்லி திரிலோகங்களிலுமுள்ள எவ்வகைப்பட்ட மேலான அழகுள்ள ஸ்த்ரீகளிலும் மேலான அழகுள்ளவளாகவும் அதிக குணசாலியாகவு மிருந்தபடியால் உலகத்திலுள்ள அரசர்களெல்லாம் கேள்விப்பட்டுத் தனித்தனியாக வந்து அவளது அழகைக்கண்டு மனமுருகித் தங்கள் தங்களை விவாகஞ்செய்துகொள்ளும்படி நானாவுபாயங்களாலும் முயற்சி செய்தும் ஸம்மதியாமையை யறிந்து மனம்நொந்து முகம் வாடித் தங்கள் தங்களிருப்பிடஞ்சேர்ந்து வருந்தியிருந்தார்கள். இந்தச்செய்தியைத் திருக்குறையலூர் அதிபதியாகிய நீலனென்பவர் அந்தபாகவதோத்தமனிடத்திற்குப்போக அவரும் உபசரித்து ஐயா நீர் வந்த காரியமென்னவென்று கேட்க உமது புத்ரியாகிய குமுதவல்லியை விவாகஞ்செய்துகொள்ள விரும்பி வந்தேன். எவ்விதத்திலும் என்னெண்ணத்தை நீர் முடித்துக் கொடுக்கவேண்டுமென்று சொல்ல, அதுகேட்டு பாகவதோத்தமன் ஐயா நீர் யௌவனத்திலும் அழகிலும் கல்வியிலுஞ் செல்வத்திலும் ஆண்தமையிலுஞ் சிறந்தவராயிருந்தும் அந்ய மதஸ்தராக விருக்கின்றீர். என் புத்ரியோ கனவிலும் அந்யமத ஸம்பந்தமென்றா லஞ்சுவாள், இதற்கென் செய்யலாமென்று சொல்லிக்கொண்டிருக்குந்தருணத்தில் கட்டிலிருக்குந் திரைமறைவி லிருந்த குமுதவல்லி, நீலனென்பவரது வாக் சாதுர்யத்தைக்கேட்டு இப்படிப்பட்ட ஸாமர்த்யமுள்ள புருஷனும் இவ்வுலகத்திலுண்டோவென்று அதிசயித்து அவரைப்பார்ப்போமென்று திரையின வழியாகப்பார்த்து அவரது அழகைக்குறித்து ப்ரமித்து நிற்க, நீலரும் குமுதவல்லியின் அழகு ததும்புகின்ற முகத்தைக்கண்டு மனங்கலங்கி காமந் தலைக்கேறி விரஹவசத்தராய் ப்ரமித்திருந்து பின்பு தெளிந்து ஐயா பாகவதோத்தமரே யௌவன பருவமும் அழகும் பெற்ற பெண்கள் புருஷனில்லாது தனித்திருந்து காலங்கழித்தல் மணமும் மலர்ச்சியுமுள்ள புஷ்பங்கள் பறித்து முடிப்பாரில்லாமல மணங்குறைந்து வாடுதல்போலவென்று சொலலுகின்ற பெரியோர் வாக்கியம் உமக்கும் உமது புத்ரிக்குந் தெரிந்ததுதானே. இது விஷயத்தில் எனனிஷ்டத்துக்கு முழுதுமிடங்கொடாம லிருப்ப தென்னவென்று சொல்ல, அதுகேட்டு பாகவதோத்தமன், இதுவிஷயத்தில என் ஸம்மதம் வேண்டுவதென்ன? என் புத்ரியின் ஸம்மத மாத்ரம் நீர் பெற்றுக்கொள்வீ

ரானால் போதுமென்று சொல்ல அப்பொழுது குமுதவல்லியும் குழந்தைகொண்டு தனது தந்தையார் முகத்தை நோக்கி ஐயா இவர் கல்வியறிவுள்ளவர் ஆனால் சுரநோய் கொண்டு புலனற்ற வாய்க்குக் கரும்பின் கட்டியாயினும் கைப்பாக விருக்கு மென்பதை மாத்திரம் அறியாதவரல்லவே இவரோ அந்யமாகிய சைவ சமய மென்னும் பிணியி லகப்பட்டு மயங்குகின்றவர். இவருக்கு ஞான மெவ்வாறு கிடைக்கு மென்று சொல்ல, அதுகேட்டு நீலனென்பவர் நான் தவக்குறைவினால் சைவ சமயத்துக்குட்பட்ட கள்ளக்குடியிற் பிறந்தவனானாலும் அறிவு தெரிந்தது தொடங்கி இதுவரையிலும் என்மனம் ஸ்ரீமந்நாராயணனது திருவடிகளை இடைவிடாது நினைக்கின்றதே யல்லது அச்சைவ சமய தெய்வத்திற் சிறிதேனும் பற்றுண்டாகியதில்லை. ஆதலால் நான் சைவ சமயத்திருக்கினும் வைஷ்ணவ ஸமயத்தவனாகவே அந்தரங்கத்திலிருந்தேன். இனி உன்னின்பங்கிடைக்கப் பெறுவேனானால் பஹிரங்கமாக வைஷ்ணவனாவதற்குத் தடையென்னவென்று சொல்லி அப்பொழுதே தமது இடத்திற்குப்போய்த்தமக்குரியானை யனைத்துக்கொண்டு திருநறையூருக்குப் போய் அவ்விடத்திலுள்ள ஓர் ஸ்ரீவைஷ்ணவரிடத்தில் ஸமாச்ரயண முதலானவைகளைப் பெற்றுக்கொண்டு திருமுகத்தில ஊர்த்வ புண்ட்ரமாகிய திருமண்காப்பும் திருமார்பில திருத்துழாய் மணிமாலையும் விளங்க ஸ்ரீமந்நாராயணனது ஸந்நிதியில் நின்று கண்களிலானந்த பாஷ்பமுண்டாகத் தண்டன் ஸமர்ப்பித்து எழுந்து நின்று நெடுநாளாக சைவசமயமென்னும் சேற்றிலழுந்தி உண்மையை யறியாதிருந்த அடியேனை யின்று ஒரு பெண்முகமாக அச்சேற்றினின்று எடுத்து ஸ்ரீவைஷ்ணவ மென்கிற நன்மார்க்கத்தில்விட்டு ஆட்கொண்டருளிய கிருபாநிதியாகியதேவரீருக்கு என்ன கைம்மாறு செய்வேனென்று அன்போடுதுதித்து அங்கு நின்று புறப்பட்டுத் தமது செல்வத்துக்குத் தக்க மங்களகோலத்தோடு குமுதவல்லியா ரிருக்குமிடத்திற்குப்போய் ஸம்மதியோடு விவாகஞ்செய்துகொண்டு மணவறையு ளிருவரும் புகுந்து அணையிலிருக்கின்றபோது திருமங்கையாழ்வார் குமுதவல்லியைத்தழுவிக்கொள்ள குமுதவல்லி அவரது கைகளை விலக்கி அணையை விட்டிறங்கி தூரத்தில நின்றுகொண்டு நீர் வேஷமாத்திரத்தில் வைஷ்ணவ சம்பந்தமுள்ளவராகத் தோன்றுகின்றீரோ யல்லது அந்த வைஷ்ணவ சம்பிரதாயத்துக்கு உரித்தான நற்செய்கை

கள் ஒன்றும் உம்மிடத்திலில்லை. ஆதலால் உம்மைத் தீண்டேனென்று சொல்ல, அதுகேட்டு இனி எந்தப்பிரகாரம் நீ சொல்லுகின்றாயோ அந்தப்பிரகாரம் நடப்பதற்கு ஸித்தமாக விருக்கின்றேன்; அந்த நற்செய்கைகளை இன்னதென்று வெளியிடவேண்டுமென்று கேட்கக் குமுதவல்லியார் நாள்தோறும் அஷ்டாக்ஷர பராவர்த்தகர்களான ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆயிரத்தெட்டுத் திருநாமங்களுக்கு ஆராதனம் பண்ணுவித்து அவர்களது ஸ்ரீபாத தீர்த்தமும் பிரஸாதமும் ஸ்வீகரித்துக்கொண்டு வருவீரானால் அந்தச் செய்கையே நற்செய்கையென்று சொல்ல, ஆழ்வாரும் அப்படியே செய்கின்றேனென்று அந்தக்ஷணமே அவ்விடம் விட்டுப் புறப்பட்டு அந்தத் திருவாலியி லிருக்கிற பரமபாகவதர்களான ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆயிரத்தெட்டு திருநாமங்களுக்கு மிக்க உபசாரத்துடன் ஆராதனம் பண்ணுவித்து ஸ்ரீபாத தீர்த்தமும் ப்ரஸாதமும் வாங்கிக்கொண்டு பரிசுத்தராயத் திரும்பிக் குமுதவல்லியிடத்துக்குவர அதுகண்டு குமுதவல்லியும் அளவில்லாத மகிழ்ச்சியுள்ளவளாய் அவரது மலைபோன்ற தோள்களில் தமது மார்புகளழுந்த இன்பமனுபவித்தாள். ஆழ்வாரும் குமுதவல்லியினிடமாக ஐம்புல னுகர்ச்சியாகிய இன்பமனுபவித்து எண்ணிறந்த மகிழ்ச்சியை யடைந்து மனங்குளிர்ந்திருந்தார்.

அவ்வாறு குமுதவல்லியுடன் கூடி யின்பானுபவஞ் செய்துகொண்டு பகவத்பக்தியிலும் பாகவதபக்தியிலுஞ் சிறந்திருக்கின்ற நாள்களில் சோழராஜன் இவரது சரித்திரத்தை விசாரித்து ஆச்சர்ய மடைந்து தனக்குப் பகுதி கட்டும்படி சிலரை அனுப்ப, அவர்கள் வந்து கேட்கும்போதும் அரசனிடத்தில் அலக்ஷிய முள்ளவராய்த் தக்க உத்தரஞ்சொல்லாமல் காலஹரணஞ்செய்ய அவர்கள் அதனை அரசனுக்கு அறிவிக்க அரசன் தனது சேனைகளிற் சிலரை அனுப்பி எந்தவிதத்திலாயினும் பகுதிப்பணத்தை வாங்கிவரும்படி ஆக்ஞாபிக்க அவர்கள்வந்து நிர்த்தாக்ஷிண்யமாகக் கடினமான வார்த்தைகளைச் சொல்லிப் பகுதிப்பணங்கேட்க ஆழ்வாரும் அது ஸஹியாதவராய் அவர்களெல்லாம் ஒருக்ஷணத்தில் ஓடிப்போகும்படி யுத்தஞ்செய்து துரத்திவிட அதுகேட்ட அரசன் நால்வகைச்சேனைகளுடன் கூடித் தானே யுத்தஸன்னத்தனாக வந்து நெடுநாள் பெரும்போர் செய்து வளைத்துப் பகுதிப்பணங் கட்டும்படி ஆழ்வாரை மந்திரிகள் வசஞ் செய்வித்துப் போனான்.

அப்பொழுது மந்திரிகள் ஆழ்வாரைப் பகுதிக்காகப் பட்டினியாக வைக்க அந்த ஸ்ரீயாமள பக்த ரக்ஷகனாகிய எம்பெருமான் அவர்தம் ஸ்வப்னத்தில் எழுந்தருளி உமக்கு வேண்டிய திரவியங்களை நாம் தருகிறோம். நீர் நமது காஞ்சிபுரிக்கு வாருமென்று திருவாய்மலர்ந்தருள, ஆழ்வாரும் கண்விழித்து அதிசயமும் அன்பும் மேற்பட மெழுந்து மந்திரிகளைப் பார்த்து நானே செலுத்தவேண்டிய பகுதியைக் காஞ்சிபுரத்திலே என்னை அழைத்துக்கொண்டு போவீர்களானால் அவ்விடத்தில் தடைபடாது செலுத்துகிறேனென்று சொல்லி அவர்கள் ஸம்மதம் பெற்று அவர்களோடு காஞ்சிபுரத்துக்கெழுந்தருளி பேரருளாளனை யடிபணிந்து அவரது நியமனத்தின்படி வேகவதிதீரத்திற் புதைத்து வைத்திருந்த நிக்ஷேபத்தை யெடுத்துப் பகுதி கட்டி மிகுந்த திரவியத்தைப் பாகவதர்கள் விஷயமாகச்செய்யும் ஆராதனத்துக்கு வைத்துத் திரும்பவும் திருவாலிக்குவந்து குமுதவல்லியோடு இன்புற்றிருந்தார்.

இச்செய்தியைச் சோழராஜன் மந்திரிகளால் கேள்விப்பட்டு ஐயோ! இப்படிப்பட்ட மஹாத்மாவை ஸாமாந்யனாக நினைத்துத் தண்டனைக்குட்படுத்தினேனே. இந்த அபசாரத்தை யெவ்வாறு தீர்த்துக்கொள்வேனென்று மனம் வருந்தி ஆழ்வாரிடத்திற் குடிபோய் ஸேவித்துத் தான் செய்த குற்றத்தை க்ஷமித்துக் கொள்ளும்படி பிரார்த்தித்துப் பட்டினி வைத்த தோஷந் தீரும்படி அளவில்லாத திரவியங்களை ஆழ்வாருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் கொடுத்து விடை பெற்றுக்கொண்டு தன் நகரத்தை யடைந்தான்.

பின்பு ஆழ்வார் தம்மிடத்திருந்த தனங்களை யெல்லாம் குமுதவல்லியுடன் ததீயாராதனங்களைச்செய்து செலவு செய்து பின்பு சிலகாலம் வரையில் கடன் வாங்கியும் அந்தக் கைங்கர்யத்தைக் குறைவுபடாது நடத்தி வந்தார். அதன்பின்பொருநாள் கடன் கொடுப்பாரு மில்லாமல் ததீயாராதனஞ் செய்தற்குத் தடைபட்டுத் திருமாளிகைக்குவர அதை யறிந்து குமுதவல்லியார் கதவை மூடிச் சாப்பிட்டுக்கொள்ள அதுகண்டு ஆழ்வார் நிர்ஹேதுவாகக் கதவை மூடிய தென்னென்று வெளிப்புறத்து நின்று கேட்கக் குமுதவல்லி நீர் இன்று ததீயாராதனஞ்செய்வியாது வந்தபடியால் இத்தனை நாளும் உம்முடன் எழுந்தருளி

வருகின்ற திருவாலிநாதர் இன்று உம்முடனெழுந்தருளாதபடியால் உள்ளே வரக்கூடாதென்று கதவை மூடினேனெனச் சொல்ல, ஆழ்வார் என்னசெய்வேன் இன்று கடன் கொடுக்கின்றவர்கள் ஒருவரும் வெவ்விடத்திலு மகப்படவில்லையே யென்று சொல்ல, குமுதவல்லி கடன் கொடுப்பாரில்லை யென்று கைங்கர்யத்தை விட்டு விடலாமோ வழிகட்டிப் பறித்தாவது செய்யவேண்டுவதென்று சொல்ல, ஆழ்வாரு மதுகேட்டு ஆறு லவ்வாறே செய்கின்றேனென்று சொல்லித் திருமபித் தமது சொற்கடவாத உறவினர் சிநேகர் முதலானவர்களை யழைத்து அவர்களிடத்துத் தமது கருத்தை வெளியிட்டு அவர்களில் நிர்த்தாக்ஷிண்யமாக வழிபறிக்கத்தக்க திடங்கொண்டு ஸம்மதித்தவர்களைத் தமமுடன் கொண்டு வாள்-வில்-அம்பு - முதலிய ஆயுதங்களோடும் அந்நகரை யடுத்த ஆரண்யத்திற்சென்று அதன் வழியாகப் போகின்ற வழி நடப்பவரைத்தடுத்து மூன்றுமுறை தமதுகருத்தை வெளியிட்டு தர்மமாகக்கேட்டு அதற்கு ஸம்மதித்துக் கொடாதவர்களை வலிந்து அச்சமுறுத்தி அவர்கள் கையிலுள்ள பொருள்களை யபஹரித்துக் கொண்டுபோய்த் ததீயாராதனஞ் செய்வித்துக் குமுதவல்லியாரிடஞ்சென்று தாம செய்த காரியங்களையெல்லாஞ் சொல்லி மகிழ்வித்துக்கொண்டிருந்தார்.

பின்பு அந்தப்ரகாரமே நாள்தோறும் மேருமலைக்குத் தெற்கு தென்கடலுக்கு வடக்கு உதயகிரிக்கு மேற்கு அஸ்தமனகிரிக்குக் கிழக்கு இவ்வெல்லைக்குள் எந்தெந்த மார்க்கங்களில் அடவிகளுள்ளதோ அந்தந்த மார்க்கங்களில் வழி கட்டிப்பறிக்கும்படி தம்முடன் கூடினவர்களுக்கு ஆக்கியாபித்துத் தாமும் சோழதேசம பாண்டிய தேசமென்னு மிவ்விரண்டிற்கும் மத்யமாகிய காட்டுவழிகளில் ஓர் மரத்தினடியி லிருந்துகொண்டு அவ்வழியாக நடக்கின்றவர்களைத் தமது ஏவற்காரர்களைக்கொண்டு வழிகட்டிப் பறிக்கும்படி செய்து தாமும நடக்கின்றவர்களை யழைத்து உபசாரவார்த்தைகளைச்சொல்லி அவர்களிடத்தில் பழஞ் சிலையுங் கோவணமும் ஒருபோது போஜனமுந்தவிர மற்றவைகளைக் கொள்ளைகொண்டு அவைகளால் ததீயாராதனங் குறைவுபாடில்லாது செய்து ப்ரஸாதமும் அவர்களது ஸ்ரீபாததீர்த்தமும் வாங்கிக்கொண்டு குமுதவல்லியுடன் இன்பங்களை யனுபவித்திருந்தார்.

இவ்வாறு நெடுங்காலம் கைங்கர்யங்களை நடத்தி வருகின்ற ஆழ்வாருக்கு மாயா நிக்ரஹமும் பகவத் அநுக்ரஹமும் பெறுதற்குத் தக்க பருவம் ஸமீபிக்க, ஒருநாள் ஸ்ரீமந்நாராயணன் ஆழ்வாரிடத்தில் ஓர் லீலை செய்யும்படி திருவுள்ளங்கொண்டு ருத்ரனையும் பார்வதியையும் ஜங்கம குலத்தவராகவும் பிரஹ்மாவையும் ஸரஸ்வதியையும் க்ஷத்ரிய குலத்தவராகவும் இந்திரன் முதலானவர்களை வைசியகுலத்தவராகவும் சித்தர் இருடிகள் முதலானவர்களை சூத்ரகுலத்தவராகவும் தம்முடன் சூழ்ந்து வரும்படி ஆஜ்ஞாபித்தருளித் தாம் ஒரு பிராஹ்மணனாகவும் ஸ்ரீமஹாலக்ஷ்மி பிராஹ்மண மகளாகவும் திருவுருக்கொண்டு திருமங்கையாழ்வார் இருக்கின்ற காட்டுவழிக்கு ஸமீபத்திலே எழுந்தருளி வரும்போது அக்காட்டில் ஓர் அரசமரத்தின்மேலேறிக்கொண்டு வழி நடப்பவர்களுடைய வரவு பார்த்துக்கொண்டிருந்த திருமங்கையாழ்வார், தாமிருக்கும் இடத்திற்கு நேராக வருகின்ற பெருங் கூட்டத்தைக்கண்டு மிகுந்த களிப்புடன் கீழிறங்கினார். அப்பொழுது எம்பெருமான் திருவுள்ளக் குறிப்பின்படி ஜங்கம வேஷங் கொண்ட ருத்ரன் ஜங்கம ஸ்த்ரீவேஷங்கொண்ட பார்வதியுடன் முன்னே வர அதுகண்ட ஆழ்வார் அவர்கள் ஸமீபத்திற்போய் எங்கே போகிறீர்கள் நில்லுங்களென்று அதட்ட அதுகேட்டு, பார்வதி பயந்து ருத்ரனுடைய சரீரத்தில் மறைந்துவிட அதைக் கண்ட ஆழ்வார் ஜங்கமனே உன்னுடைய ஸ்த்ரீ எங்கே யென்று ஆச்சர்யமடைந்து கேட்க, அப்பா எனக்குத் தெரியாதென்று அவர்சொல்ல, இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும்போதே பிரஹ்மா முதலானவர்களும் தங்கள் தங்கள் பத்நிமாருடன் சேர்ந்து ஸமீபத்தில்வர ஆழ்வார் அவர்களையெல்லாந் தடுத்துப் பயமுண்டாக அதட்டி, நான் நடத்திவரும் கைங்கர்யத்துக்காக நீங்களனைவரும் கட்டியிருக்கின்ற பழைய வஸ்த்ரமுங் கோவணமுந் தவிர மற்றப் பொருள்களையெல்லாம் இங்கே வைத்துவிடுங்கள்; அவ்வாறு செய்யாமற் றடைசெய்வீர்களானால் உங்களுயிரைக் காணமாட்டீர்களென்று சொல்லி வீராவேசங்கொண்டு நிற்க, அவ்வாறே பிரமன்-ருத்ரன்-இந்த்ரன்-தேவர்-முனிவர்-சித்தர்-ஸரஸ்வதி-இந்திராணி-முதலான ஸகலரும் தாங்கள் தாங்கள் கட்டியிருந்த வஸ்திரந்தவிர மற்ற ஆபரண முதலான ஸமஸ்த வஸ்துக்களையும் அவர் முன்பு வைத்துவிட்டார்கள்.

ஆழ்வார் அவர்களை யெல்லாம அனுப்பிவிட்டு அந்தப்பொருள்களையெல்லாந் தமது ஏவலாளர் வசமாகக் குமுதவல்லியா ரிடத்திற்கு அனுப்பித் தனியே நின்றுகொண்டிருக்க, ஸ்ரீமந்நாராயணன் பிராட்டியாருடன் ஸர்வாபரணாலங்கார மணக்கோலமுடையவராய் எழுந்தருளி வர அதனைப் பரகாலராகிய ஆழ்வார் கண்டு ஸந்தோஷத்துடன் ஸமீபத்திற்சென்று நில்லும் நில்லும் மனக்களிப்போடு மனைவியுடன் கைகோத்துக்கொண்டு எங்கே போகின்றீர்; உமது மனைவி உடுத்த வஸ்திரந் தவிர உங்களிருவர் மேலு மிருக்கின்ற ஆபரணங்கள் முழுவதையும் கழற்றி வையுங்களென்று கோடையிடிபோற் பேரொலி யுண்டாக அதட்டி யுருக்க, அதுகேட்டு ப்ராம்மணனாகிய எம்பெருமான் ஆழ்வாரைப் பார்த்து அப்பா நான் ப்ராமமணன், என்னிருப்பிடம் திருவாலி, என் ப்ராணனை யொத்த மனைவியைத் தாய்வீட்டி லிருந்து என் கிருகத்துக்கு அழைத்துப்போகிறேன். இப்படிப்பட்ட காலத்தில் நீ வழிபறிக்கத் தொடங்குவது தகுதியோ? மற்றக்குலத்தவரைப் பயங்காட்டிப் பறிக்கின்றதனால் வரும் பாபத்தைவிட மனுஷ்யர்களில் தேவர்களாகிய ப்ராமமண குலத்தவரைப் பயப்படுத்திப் பறிக்கின்ற பாவம் பெரிதென்று நீ கேட்டதில்லையோவென்று சொல்ல, அதுகேட்டு ஆழ்வார் நான் வஸ்திராபரணங்களைக் கழற்றி வைக்கச் சொன்னால் வீண் கதைகளைப் பேசுகின்றீர்; நான் செய்துவருந் ததீயாராதனம ஒருநாள் தவறுமானால் என்மனைவியான குமுதவல்லி வீட்டுக்கு வரவொட்டாள். ஆதலால் நான் இந்தத் தொழிலை மேற்கொண்டேன். இதனா லென்ன பாவம் வந்தாலும் வரட்டும்; கைங்கைர்யமாத்திரங் குறைபடாது நடந்தாற்போதும்; இனி பலவாறு நான் சொல்வதென்ன? தாமதஞ்செய்வீர்களானால் இதோ என் கையிலிருக்கின்ற வாளினால் இருதுண்டாக்குவேனென்று வாளை யுருவிக்கொண்டார்.

அப்போது எம்பெருமான் பிராட்டியாரைப்பார்த்து இவன் கடின சித்தனாக விருக்கின்றான்; ஐயோ! இந்தப்ப்ரகாரம வழிபறிக்கின்ற பாவம் இவனைச்சேருமோ அல்லது அந்தப் பொருளகளை யனுபவிக்கின்றவர்களைச் சேருமோ வெனறு சொல்ல, அதுகேட்ட ஆழ்வார் வாளை யுறையிலிட்டு ஓர் தடியை எடுத்துக்கொண்டு அடிக்கும்படியாகவர, அதுகண்டு எமபெருமானான ப்ராம்மணர், பயந்தவர்போல் தமது மனைவியார் திருவாபரணஙகளை ஒவ்

வொன்றாகக் கழற்றும்போது ஆழ்வார், திருமாங்கல்யத்தையும் அவர் கட்டியவஸ்த்ரத்தையும் அவிழ்க்கவேண்டுவதில்லையென்று சொல்லி அந்த ஆபரணங்களையெல்லாம் வாங்கி ஒரு புறத்தில் வைத்துவிட்டு இனி உமதிடத்திலிருக்கும் பொருளையெல்லாம் எடுத்து வையுமென்று அதட்ட, ஸ்வாமியும தமது திருமேனியிலுள்ள திருவாபரணங்களைக் கழற்றி வைத்து உடுத்த வஸ்திரத்தையும அவிழ்த்துக்கொடுக்க ஆழ்வாரும் அவரது கைவிரலில் ஒரு திருவாழி யிருக்கக்கண்டு இந்த ஆழியைக் கழற்றிக்கொடுமென்று கேட்க, எமபெருமானான ப்ராம்மணரும இந்த ஆழி அழுத்தமாக விருக்கின்றதால் கழற்றுவதற்குக் கூடாததாக விருக்கின்றதென்றுசொல்ல, ஆழ்வார் ஆனாலப்படி காட்டுமென்று கையைப் பிடித்து அவ்விரல் மோதிரத்தைத் தமது வாயில்வைத்துப் பற்களால் கடித்திழுக்கும்போது எம்பெருமான் நமது "கலியனோ" வென்று தமது மற்றொரு திருக்கை மலரை ஆழ்வார் சிரஸின் மேல் வைத்தழுத்த அது ஸஹியாது ஆழ்வார் அவர் திருக்கரத்தை விடுத்து ஆபரணாதிகளை யெடுக்க அது எடுக்கக்கூடாம லிருக்கின்றதை யறிந்து அதிசயமுங் கோபமுங் கொண்டு, ப்ராம்மணரைப்பார்த்து இவைகளை யெடுக்க வாராமலிருக்கின்றது ; நீர் ஏதோவொரு மந்திரஞ் செய்தீரென்று எண்ணுகிறேனாதலால் அம்மந்திரத்தை எனக்குக் கற்பித்தா லல்லது உம்மை உயிரோடு விடமாட்டேனென்று உறுத்துச்சொல்லி, வாளையெடுத்து வீசப்போக, அதுகண்ட ப்ராம்மணனாகிய எம்பெருமான் ஆனால் சொல்லுகிறேன் வாவென்று ஸமீபத்தி லழைத்து ஆழ்வாரது திருச்செவியில் திவ்ய மந்த்ரமாகிய திருவஷ்டாக்ஷரத்தை க்ருபைகூர்ந்து உபதேசித்தருளினார்.

ஆழ்வார் ஸ்ரீமந்நாராயணனுடைய நித்யமங்கள குணங்களையும ஸர்வலோகாதார நிலைகளையும் பரமபதத்திலேற்றுகின்ற உபாயங்களையும்அந்த மந்த்ரார்த்தத்தில் கண்டுகொண்டு, அனலிலிட்ட மெழுகுபோல உள்ளங்கரைந்து கரைந்து கண்களி லானந்தபாஷ்பஞ் சொரிந்து ஆனந்தக்கூத்தாடிக்கொண்டிருந்தார். வேஷங்களை மறைத்து ஸ்ரீமந்நாராயணன் லக்ஷ்மீ ஸமேதராய்ப் பெரிய திருவடிகளின்மேலேறியருளி ப்ரம்ம ருத்ராதி தேவதைகள் சூழச்சேவை ஸாதித்தருளினார்.

அதுகண்ட ஆழ்வார் கண்டபோதே கீழே விழுந்து விழுந்து அநேகாவர்த்தி தண்டன் ஸமர்ப்பித்து அஞ்சலிஹஸ்தராய் நின்றுகொண்டு, அப்பழுமண்டபம் பொருந்த எம்பெருமானது கோடி சூரியோதயம்போல் பிரகாசிக்கின்ற திவ்ய திருமேனியை இமையாது பார்த்துக்கொண்டே ஐயோ! அறிவில்லாத அடியேனன்னகாரியஞ் செய்தேன். என்னையுமொரு பொருளாகத் திருவுளத்திலெண்ணி எமதன்னையாகிய பெரிய பிராட்டியாருடன் ப்ராமண வேஷங்கொண்டெழுந்தருளியதை யெண்ணாமல் வழி கட்டிப் பறித்தேனே! லோகமாதாவாகிய பிராட்டியாரது திருமேனியிலிருந்த திருவாபரணங்களையெல்லாம் வாங்கவுந் துணிவுகொண்டேனே! எம்பெருமானது திருமேனியிலிருந்த திவ்யாபரணங்களைக் கழற்றவும் ஸம்மதித்தேனே! எம்பெருமான் திருவாய்மலர்ந்தருளிய நன்னெறிக்கேதுவாகிய இனியமொழிகளைக் கதையென்று அவமதித்தேனே! தேவர்களுக்குங் காண்பதற்கு அரிதான திருமேனிக்குப் பழுதுண்டாக வாளால் வெட்டவுந் தடியாலடிக்கவும் ஏற்பட்டேனே! எம்பெருமானது திருக்கைகளை எனது அசுத்தமாகிய கைகளாற்பற்றி ஊத்தைவாயில் வைத்துங் கடித்துக் கடித்து வசிலாக்கினேனே! ஐயோ! இந்த அபசாரத்துக்கு நன்ன செய்வேன். இப்படிப்பட்ட பாதகனாகிய நான் இனி உயிரை வைத்திருக்க மாட்டேனென்று விம்மி விம்மி அழுதழுது புலம்புகின்றபோது ஸ்ரீமந்நாராயணனை, ஆழ்வாரது திருமுகத்தைக் குளிர நோக்கியருளி, நீர் அந்த வேளையிலேதானே உமதிடத்திலே நமக்கிருக்கின்ற கடாக்ஷத்தையும் நம்மிடத்தில் உமக்கிருக்கின்ற பக்தியையும் பலர்க்கு மறிவிக்குமாறு நாமே இவ்வாறு செய்வித்தோம். நீ செய்ததெல்லாம் நமக்கு இஷ்டமாகிய உபசாரமேயல்லாது வேறல்ல. ஆகையால் இனி இந்த விஷயங்களிற் சேர்கின்ற திரவியங்களைக்கொண்டு நமது திருவரங்கம் பெரிய கோயிற்றிருமதில் முதலான கைங்கர்யங்களைச் செய்துகொண்டு உண்மை நிலைபெறியாது ஊழி பலவு முழுதுமவர்களுக்கு ஒன்று கோல்போன்ற விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை யாவரு மறிய ஸ்தாபனஞ்செய்து நமது விஷயமாகத் தமிழ்ச்சொற்களால் நாலாயிரம் பாடல்களையும் பாடி வேதார்த்தத்தை வெளியிட்டுக் [illegible]டன் கூடிக் களித்துப் பின்பு நமது பரமபதத்திற்கு வாருமென்று திருவாய்மலர்ந்து எழுந்தருளினார்.

திருமங்கையாழ்வாரும் பின்பு எம்பெருமானநுக்ரஹம் பெற்று மனமுருகி யுருகி யெம்பெருமான ஸேவை ஸாதித்தருளிய அழகிய திருமேனியை இனி யெங்கே காண்பதென்று எண்ணி யெண்ணி ஏங்கங்கொண்டு கைங்கர்யங்களில் குறைவு வாராமல் நடத்திக்கொண்டு வேதார்த்தங்களை யமைத்து * "வாடினேன் வாடி" யென்று தொடங்கி பெரிய திருமொழி-திருக்குறுந் தாண்டகம்-திருநெடுந்தாண்டகம்-திருவெழுகூற்றிருக்கை-சிறிய திருமடல்-பெரியதிருமடல் என்கிற ஆறு ப்ரபந்தங்களையும் ஆசு-மதுரம்-சித்ரம்-விஸ்தாரமெனனும் நால்வகைகளால் பாடியருளி எம்பெருமான் நியமனத்தின்படி குமுதவல்லியுடன் திருவாலியிலிருந்தும் புறப்பட்டுத் திவ்ய தேசங்கள் தோறுஞ்சென்று எம்பெருமானது அர்ச்சாவதாரங்களை ஸேவித்துக்கொண்டு சத்ர சாமரங்களோடு நாலு கவிப்பெருமாள் வருகிறானென்று பிருது சொல்லித் திருச்சின்ன கோஷத்துடன் சோழதேசத்திற் கெழுந்தருளி சீர்காழிக்கு ஸமீபத்தில் வந்தருளும்போது அச் சீர்காழியி லிருக்கின்ற சம்பந்தனென்னும் சைவரது சிஷ்யர்கள் அதையறிந்து ஈர்ஷையால் மனம் பொறாதவர்களாய் அவர்களைத் தடுக்க அதறிந்த பரகாலராகிய திருமங்கையாழ்வார் நீங்கள் எதுபற்றி விருதைத் தடுக்கின்றீர்கள் உங்களுக்கு நால்வகைக் கவிகளில் ஒன்றாவது பாட வல்லமை யுண்டாயின் பாடித் தடை செய்யலாமென்று திருவாய் மலர்ந்தருளித் தாடாளன் ஸந்நிதிக்கெழுந்தருளினர்.

பின்பவர்கள் பிரதியுத்தரமொன்றுஞ்சொல்லமாட்டாது தங்கள் ஆசார்யராகிய சம்பந்தரிடஞ்சென்று ஆழ்வாரருளியதைச் சொல்லி அவருடன் ஆழ்வார் முன்பு வந்து நிற்க, அங்கிருந்தவர்கள் நடந்த விருத்தாந்தங்களை யெல்லாம் சம்பந்தருக்குத் தெரியச்சொல்ல, சம்பந்தர் ஆழ்வாரை நாமொரு கவி சொல்லுகிறோம் அதற்கு உரை செய்யும் பார்ப்போமென்று ஒரு கவி சொல்ல, அக்கவியின் குற்றங்களை அந்தக்ஷணமே எளிதி லுணர்ந்தருள, சம்பந்தரதுகேட்டு ஆச்சர்யமடைந்து நீரொரு கவி சொல்லும் பார்ப்போமென்று சொல்ல ஆழ்வாரும் குறுங்கை கொண்டு

*வாடினேன் வாடிவருந்தினேன் மனத்தால் பெருந்துயரிடும்பையிற் பிறந்து
கூடினேன் கூடியிளையவர்தம்மோடவர் தருங் கலவியேகருதி
ஓடினேனோடியுய்வதோர் பொருளாலுணர்வெனும் பெரும்பதந்தெரிந்து
நாடினேன் நாடி நான் கண்டுகொண்டேன் நாராயணாவென்னும் நாமம்.

நாடாளன் விஷயமாக "ஒரு குறளாய்" என்றெடுத்து ஸ்வமதஸ்தாபநமாகவும் இதரமத நிரஸநமாகவும் ஒருபது கவி சொல்லி, முடிவில் தமது பெருமை தோன்ற ஆலிநாடன் - அருண்மாரி - அரட்டமுக்கி - அடையார்சீயம - கொங்குமலர்க்குழலியர்வேள்- மங்கைவேந்தன் - கொற்றவேற்பரகாலன் - கலியன் சொன்ன தமிழென்று முடித்தருள, சம்பந்தரும அதுகேட்டு வியப்படைந்து நம்மிடத்துக் கவிவாது வென்றவர் நீரே ஆதலால் நாலுகவிப் பெருமாளென்பது உமக்கே தகுமென்று சொல்லி ஆழ்வாருக்கு வேலாயுதமும் வீரகண்டாமணியும அளித்து, விசேஷமர்யாதை செய்து அனுப்பத் திருமங்கையாழ்வார் அப்பதியைவிட்டு எழுந்தருளி காவிரிக்கரைக் குடந்தையிற்சென்று தமதம்சத்துக்கு அதிபதியாகிய ஆராவமுதனிடத்தில் ஈடுபட்டு அவர் குணங்களைப்பல ப்ரபந்தங்களிலும பலமுறை அநுஸந்தித்து அவ்விடம் விட்டு எம்பெருமான் அர்ச்சாவதாரங்கொண் டெழுந்தருளியிருக்கும் திவ்யதேசங்களனைத்துக்கும் சென்று மங்களாசாஸனஞ்செய்து வருகையில் ஒருகாலத்தில் தில்லைத்திருச்சித்திரகூடத்தெழுந்தருளினார். அங்கு அதற்குமுன் சம்பந்தர்வந்திருந்ததினால் விசேஷ ஜனநெருக்கமாயிருந்தது. அப்போது ஆழ்வார் தலைவனைக்காணாதுவருந்திய தலைவியின்றன்மையைச்செவிலித்தாய் பாங்கனுக்கறிவிப்பதாக,

* வருக்கைநறுங்கனிசிதறிச்செந்தேன்பொங்கி
வழிக்கரையின்குழிக்கரையின்மதகிலோடப்
பெருக்கெடுத்தவண்டோலஞ்செய்யுங்காழிப
பிள்ளையாரசம்பந்தப்பெருமாள்கேண்மோ
அருட்குலவுமயிலைதனிலனலாலவெந்த
அங்கத்தைப்பூம்பாவையாக்கினோமென்
றிருக்குமதுதசவனறுநிலவால்வெந்த
இவளையும்பெண்ணாக்கலுமக்கியல்புதானே.

என்று தலைவனாகிய ஸ்ரீகோவிந்தராஜப் பெருமானைக் காணாதுசந்திரனாற் கொளுத்தப்பட்டாள்; அப்படிப்பட்டவளைப் பெண்ணாக்கவேண்டும்; முன்பு திருமயிலையில, நெருப்பினால்வெந்த எலும்பைப்பெண்ணாக்கினது போதுமான பெருமையென்றெண்ணாமல் நிலவாலேவெந்த இத்தலைவியையும் முன்போலப்பெண்ணாக்கவேண்டும் என்னும் கருத்தமைத்துப்பாடியனுப்ப, அதுகண்ட சம்பந்தர், தலைவன் உலாப்போதலைக் கண்டதலைவி, வருந்துவதைச்செவிலித்தாய் தலைவனுக்கு அறிவிப்பதாக

கடியுண்டநெடுவாளைகராவிற்றப்பிக்
கயத்துக்குளடங்காமல்விசும்பிற்பாய
அடியுண்டவுயர்தெங்கின்பழந்தாறுபூகம்
அலையுண்டுகுலைசிதறுமாலிநாடா
படியுண்டபெருமானைப்பரிந்துபாடிப்
பரிசுபெற்றபெருமானேயடியேனைபெற்ற
கொடியொன்றுநின்பவனிக்கெதிரேசென்று
கும்பிட்டாளுயிரொன்றுங்கொடுவந்தாளே.

என்று ஆழ்வாராகிய தலைவரதுவரவைக்கண்ட மாத்திரத்தில் தலைவி அனையின்பெருங்கால்நெக்குநெக்குருகி உயிரொன்றேயுடையவளானாளை என்னுங் கருத்தமைந்துப் பாடியனுப்பி, ஆழ்வார் வருகையையெதிர் நோக்கி எதிர்கொண்டுசென்று உபசரித்தனர். ஆழ்வாரும், திருத்தில்லைச்சித்திரகூடத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை மங்களாசாசனஞ்செய்து, அங்குநின்றுமீண்டு பலதிவ்யதேசங்களையும் மங்களாசாசனஞ்செய்து, திருவரங்கத்தில் திருமதில் கட்டல் முதலான கைங்கர்யங்களைச் செய்யும்படி ஸ்ரீமந்நாராயணன் ஆக்கியாபித்ததை நினைந்து நினைந்து தம்மருகிலிருக்கின்றவர்களை நோக்கி நாம ஸ்ரீரங்கத்தில் கைங்கர்யஞ் செய்யவேண்டும்; அதற்குத் தக்க திரவியங்களுக்கு என்செய்வோமென்றுகேட்க, அவர்களிற் சிலர் ஆழ்வாரை வணங்கி ஸ்வாமி! நாகபட்டணத்தில் புத்தர்கள் பொன்னினாலே பிரதிமைகளைச் செய்துவைத்து வணங்குகின்றார்கள்; அதுகளை யெடுத்துவந்தால்தேவரீர் திருவுள்ளப்படி செய்துகொள்ளலாமென்று சொல்ல, ஆழ்வாரும் அதேப்ரகாரமே தம் பரிஜனங்களாகிய தாளூதுவான், நீர்மேல் நடப்பான், நிழலிலமைறவான், தோலாவழக்கன் என்கிற நாலுமந்திரிகளோடேகூட ஆடல்மாவலவனையுக்கொண்டு நாகபட்டணத்திற்குச்சென்று அங்கிருக்கும் புத்தர்கள் கோவிலில் ஒருவரும் உள்ளே போகக்கூடாமல் வாசற்படியில் எப்போதும சுழன்றுகொண்டிருக்கும்படி செய்யப்பட்டிருந்த சக்கரத்தை நிறுத்தி உள்ளே புகுந்து அந்த ஸ்வர்ண விக்ரஹங்களை யெல்லாமெடுத்துக்கொண்டு அத்க்ஷணமே திருவரங்கம வந்து சேர்ந்து அந்தத்திரவியங்களைக் கொண்டு சிற்ப சாஸ்திரப்படி திருமதில் திருக்கோபுரம் முதலான அனேக கைங்கர்யங்கள் செய்துவந்தார்.

---

* இவ்விரண்டு பாடல்களும் தனிப்பாடற்றிரட்டிலுங் காண்க.

அவ்வாறு செய்துவரும்போது சில சிற்பிகளுக்குக் கூலி கொடுப்பதற்கில்லாமையால் அந்தச் சிற்பிகளைப் பரமபதஞ்சேர்க்கிறேனென்று அவர்கள் ஸம்மதத்துடனே படகிலேற்றிக் காவிரி ப்ரவாஹத்தில் கொண்டுபோய்க் கவிழ்க்க அதில் விழுந்த சிற்பிகளெல்லாம அந்தக்ஷணமே திவ்ய தேகம்பெற்று விமானங்களிலேறிக்கொண்டு கரையில் நின்று பார்த்தவர்களெல்லாம ஆச்சயப்படும்படி பரமபதத்துக்குச் சென்றார்கள்.

பின்பு நாகபட்டணத்திலிருக்கின்ற பௌத்தர்களெல்லாம் தங்கள் ஸ்வர்ண விக்ரகங்களை யெடுத்துப்போனவர் யாரென்று கேள்விப்பட்டுச் சோழராஜனிடத்திற்போய்ச் சொல்லி முறையிட்டுக்கொண்டார்கள். அரசன் திருமங்கையாழ்வாரை யழைப்பித்துக்கேட்க, ஆழ்வாரும் நாமே அந்த விக்ரஹங்களை யெடுத்துக்கொண்டுபோய் எம்பெருமானை ஸ்ரீரங்கநாதனுடைய கைங்கர்யங்களுக்கு உபயோகித்தோம். அதனாலே ஆற்றுப் பெருமதிள் முதலாயாகிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டு நித்யமாக ஜனங்கள் வணங்குகின்றபடிக்கு விக்ரஹம் பெருமைபெற்றதேயல்லாமல், பௌத்தர்கள் அரசனைப்பார்த்து நாங்கள் இதுவரையில் தோற்றதுமல்லாமல் எங்கள் ஸமயம் பொய்யென்று நிரூபிக்கப்படவுமில்லையென்று தெரிவித்தார். இவர் ஸமயம் எப்படிப்பட்டது? இவ்விருஸமயங்களையும் குறித்து உமது ஸமூகம் சாஸ்திரீயமாக வாதிக்கலாம். அதில் இவர் தோற்றால் அதற்குத்தக்க தண்டனை செய்யவேண்டியது, நாங்கள் தோற்றால் எங்களுக்குத்தக்க தண்டனை செய்யத்தக்கது அல்லாமல் எங்கள் விக்ரஹங்களையெடுத்துப்போனதற்குக் கேள்வியின்றிவிடுவதில்லை என்று சொல்ல அரசன் திருமங்கையாழ்வாரைப்பார்த்து இது விஷயத்தில் உமது கருத்தென்னவென்று கேட்க ஆழ்வாரும் பௌத்தர்களைப்பார்த்து உங்கள் ஸமய லக்ஷணங்களைச் சொல்லுங்களென்று சொல்ல, அவர்கள் அவைகளைச் சொல்லுந்தோறும் அவைகளிலுள்ள அபாஸங்களையெல்லாம் விளங்கும்படி தெரிவிக்க அவர்கள் எங்கள் ஸமயம் நிற்கட்டும் உமது ஸமய லக்ஷணங்களைச் சொல்லுமென்று கேட்க, ஆழ்வார் நித்ய வஸ்துவைக் காட்டுகின்ற ஸ்ரீவைஷ்ணவ ஸமய ஸித்தாந்தத்தை யாவருமறிந்து அன்புகொள்ளத் திருவாய்மலர்ந்தருளி அப்புத்தர்களை வாயெடுக்கவொட்டாமற் செய்து வென்று ஆண் சிங்கம்போலப் பெருமிதத்துடன் முகமலர்ந்திருந்தார்.

அரசன் மனமகிழ்ந்து ஆழ்வாரை வணங்கி அளவிறந்த திரவியங்களையும் அபாரமான வஸ்திராபரணங்களையும் ஸமர்ப்பித்து மதம் பொழிகின்ற யானையின் பிடரிமேலெழுந்தருளப்பண்ணிக்கொண்டு நகர் வலஞ்செய்வித்து மங்களவாத்யங்கள் கோஷிக்கத் தனது மந்திரி முதலானவர்களுடன் சூழ்ந்துபோய்த் திருவரங்கத்துக்கு எழுந்தருளச்செய்து தான் விடைபெற்றுக்கொண்டு திரும்பி, தன்னகரத்துக்குப் போய்விட்டான். ஆழ்வாரும் திருவரங்கத்தை யடுத்து யானையைவிட்டிறங்கி ஸந்நிதியிற் சென்று ஸ்ரீரங்கநாதனை யடிபணிந்து புறம்வந்து ததீயாராதனஞ் செய்வித்து ப்ரஸாதமும் ஸ்ரீபாததீர்த்தமும் பெற்று, குமுதவல்லி யிடத்திற்குவந்து அரசன் கொடுத்த பரிசுகளைக்காட்டி ஸந்தோஷஞ் செய்வித்து இன்புற்றிருந்தார்.

இப்படியே நாள்தோறும் சேஷசாயியான ஸ்ரீரங்கநாதனை ஸேவித்துவருகின்றவர் ஒருநாள் ஸந்நிதியில் திருநெடுந்தாண்டகமென்னும்) ப்ரபந்தத்தை தேவகானத்தினால் பாடிக்கொண்டு மனமுருகி நிற்க ஸ்ரீரங்கநாதனும் திருவுள்ளமுவந்துமது இஷ்டத்தைக் கடாக்ஷித்தருளி உமக்கென்ன வேண்டியதென்றருள அந்த வாய் மலர்ந்தருள ஆழ்வாரும எம்பெருமானை முடைய நியஸ்வாமி! முன் ஸ்ரீசடகோபாழ்வார் திருவாய்மலர்ந்தருளின் று மனைடவேதங்களாகிய நாலையும திருவத்யயனோத்ஸவத்தில் ருக்கும் திரு வேதங்களுடன் ஸ்ரீவைஷ்ணவர்கள் பாராயணம் பண்ணும் லீலை... பைசெய்ய வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொள்ள ரியபெருமாளும் அவ்வாறே அனுக்ரகஞ் செய்தருளினார். திருக்குருகூரிலிருக்குஞ் சடகோபரும், ஸ்ரீரங்கத்துக் கெழுந்தருளும்படி திருமுகப் பட்டயமெழுதி ஸந்நிதியிலிருக்கின்ற ஸ்ரீவைஷ்ணவரிடத்தில்கொடுத்தனுப்ப அவர்கள்திருமுகத்தைக் கொண்டுபோய்த் திருக்குருகூர்நம்பி ஸந்நிதியில் கொடுக்க ஆழ்வார் பரிஜனங்கள் அநியமனப்படி ஆழ்வாரைஸ்ரீரங்கத்துக் கெழுந்தருளப்பண்ணத் திருமங்கையாழ்வாரும் நம்மாழ்வாரை யெதிர்கொண்டு திருவடிதொழுது ஸந்நிதிக்கு எழுந்தருளப்பண்ணிக் கொண்டு போய்நிற்க எம்பெருமான் ஆழ்வாரை க்ருபைகூர்ந்து நம்மாழ்வாரே யென்றழைத்தருளித் திருப்பரிவட்டம் திருமாலை முதலான வரிசைகளை ப்ரஸாதித்தருளினார்.

ஆழ்வாரும் விடைபெற்றுக்கொண்டு திருமங்கையாழ்வாருடன் எழுந்தருளியிருந்தார். பின்பு திருமங்கையாழ்வார் மறுநாள் ஏகாதசி தொடங்கிப் பத்துநாள்மட்டும பகலில் கீர்வாணவேத பாராயணமும இரவில் திருவாய்மொழியாகிய திராவிடவேதபாராயணமும செய்வித்துப் பத்தாவது நாளிரவில் திருவாய்மொழியோதிச் சாத்துமபோது ஸ்ரீசடகோபர் ஸ்ரீரங்கநாதனைத் திருவடி தொழுமபடியான வழியை ஜீவாத்மாக்கள் அநுசரிக்கருளும்படி செய்வித்துப் பினபு வருஷந்தோறும இவ்வாறே எழுந்தருளும்படி சடகோபாது திருவுள்ளம பெற்றுக்கொண்டார். சடகோபரும் பெரியபெருமா ளடிபணிந்து விடைகொண்டு திருக்குருகூருக் கெழுந்தருளினார். பினபு திருமங்கையாழ்வார் உலகிலுள்ளவர்க ளியாவரும கடைத்தேறுமபடியாக ஸ்ரீரங்கநாதனுடைய திருவுள்ளபபடி அந்த திவ்யதேசத்திலொரு
...கத்தில் சிறிது நிலம வளைத்து முதுகாடாக்கி இந்நிலத்தில்
யங்க ...த்மாக்களே யல்லது பாபிகளாயினும தபனமபணணப்
யாகிய ...ர்களாலும் பரமபதம அடைவார்களென்று உண்மையா
வணங்குக ...த்தருளினார்.
ல்ல, பெள,

தூமல்லாமல் சிலகாலம் ஸ்ரீரங்கத்திலே யிருந்தருளி பூர்வம் திவ்ய
தார். இவரை செய்யும்போது மந்தரகிரிக்கு ஸமீபத்தில் பதரா
குறித்து ...று சொல்லபபட்ட திருக்குறுங்குடியிற் சென்று நம்
தோற்று ...ழகைக் கணடு களித்து நித்தியவாஸஞ் செய்யவேண்டு
கள் தே... எணணியும் அவ்வெண்ணத்தை முடிக்காது ஸ்ரீரங்கத்
மல்லங்... கைங்கர்யஞ் செய்யவேணடி வந்தவாரானபடியால் அத்திருக்
டுவதி... றுங்குடிக்கு எழுந்தருளவேண்டுமென்று திருமபவும் ஆசைமேற்பட்டு, ஸ்ரீரங்கநாதனிடத்தில் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டு குமுதவல்லியாருடன் பரிஜனங்கள்சூழ, பரசமய கோளரி வந்தாரென்று சின்னங்களூத வெழுந்தருளி சோலைமலையழகரையும கூடலழகரையும ஸ்ரீவில்லிபுத்தூர் வடபத்ரசாயியையும் பெரியாழ்வாரையும் திருப்பொருநை வடகரையில் ஸ்ரீவைகுண்டநாதனையும் எமமிடர்கடிவார் காசினிவேந்தர் அரவிந்தலோசனர் மாயக்கூத்தர் வைத்தமாநிதி என்கிற திருநாமங்களையுடைய எம்பெருமான் அர்ச்சாவதாரங்களையும அவ்வவ்விடங்களி லெழுந்தருளி ஸேவித்துக்கொண்டு திருக்குருகூர் வான

மாமலை முதலான திவ்யதேசங்களிற் சென்று எம்பெருமானை அடிபணிந்து திருக்குறுங்குடிக்கு எழுந்தருளினார்.

ஆழ்வார் எழுந்தருளுவதைக்கேட்ட அந்த ஸ்தலத்திலுள்ளபரிசனங்களுடன் ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாருந்திரண்டு எதிர்கொண்டுபணிய அவர்களுடன்சென்று திருப்பாற்கடலில் தீர்த்தமாடி கோபுரவாயிலுக்குட் புகுந்து காண்டமாடு பொய்கையின் கரையில் கரும்பனைப பெரும்பழம விழுவதும் வாளைபாய்வதும் பார்த்துமகிழ்ந்து ஆனந்தபரவசராய்ப் பேரன்புடன் உடல்முழுதும புளகமெழக் கைகளைக் குவித்துக்கொண்டு கண்களில் ஆனந்த பாஷ்பம பொழிந்து ஆனந்தமுடையவராய் விழுந்து விழுந்து தண்டன் ஸமர்ப்பித்து நின்றநம்பி இருந்தநம்பி கிடந்தநம்பி திருப்பாற்கடல்நம்பி திருமலைநம்பி என்கிற ஐந்து நம்பிகளையும ஸேவித்து அடியேனுக்கு இன்று பரமபதம ப்ரஸாதித்தருள வேண்டுமென்று அழகிய நம்பியின் பொன்னடியிரண்டையும பற்றிக் கீழ்விழுந்துருகியுருகி அன்பே வடிவாகக் கிடந்தார். அப்பொழுது எம்பெருமான் ஆழ்வாரே உமது இஷ்டபபடியே கொடுத்தருளினோமென்று திருவாய்மலர்ந்தருள அந்த க்ஷணமே திருமங்கையாழ்வார் ஸ்ரீமந்நாராயணனுடைய நியமனப்படி அவர் ஸந்நிதியில் ஸகல வரிசைகளையும் பெற்று மணவாளபபிள்ளையைப்போலே ஸ்ரீவைகுந்தமாநகரத்திலிருக்கும் திருமாமணி மண்டபத்தைச் சேர்ந்தருளினார். இவர் இந்த லீலாவிபூதியில்-௧௦௫ - திருநக்ஷத்திர மெழுந்தருளியிருந்தார்.

திருமங்கையாழ்வார் வைபவம முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

## வெண்பா.

பேதைநெஞ்சேயின்றைப்பெருமையறிந்திலையோ
ஏதுபெருமையின்றைக்கென்றியேல்—ஓதுகின்றேன்
வாய்த்தபுகழ்மங்கையர்கோனமாநிலத்தில்வந்துதித்த
கார்த்திகையிற்கார்த்திகைநாள்காண்.

## திருமங்கையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய பிரபந்தங்கள்.

| | | |
|---|---|---|
| பெரியதிருமொழி | பாசுரம | ௧௦௮௪. |
| திருக்குறுந்தாண்டகம் | பாசுரம | ௨௦. |
| திருநெடுந்தாண்டகம் | பாசுரம | ௩௦. |
| திருவெழுகூற்றிருக்கை | பாசுரம் | ௧. |
| சிறியதிருமடல் | பாசுரம் | ௪௦. |
| பெரியதிருமடல் | பாசுரம | ௭௮. |
| | ஆக பாசுரம் | ௧௨௫௩. |

கலந்ததிருக் கார்த்திகைக் கார்த்திகைவந்தோன்வாழியே
காசினியிலொண்குறைய லூர்காவலோன் வாழியே
நலந்திகழாயிரத்தெண்பத்து நாலுரைத்தான் வாழியே
நாலைந்துமாறைந்தும் நமக்குரைத்தான் வாழியே
இலங்கெழுகூற்றிருக்கை யிருமடலீந்தான் வாழியே
இம்மூன்றில்பாட்டெழுநூற்றிருபத்தேழிசைத்தான வாழியே
வலந்திகழும் குமுதவல்லி மணவாளன வாழியே
வாட்கலியனபரகாலன் மங்கையர்கோன்வாழியே.

## ஆழ்வார்கள் வைபவம் முற்றிற்று.

ஸ்ரீ

# ஆசாரியர்கள்

## வைபவம்.

ஸ்ரீவைகுண்டத்தில் நித்யமுக்தர்களோடு எழுந்தருளியிருக்கும் அப்ராக்ருததிவ்யமங்கள விக்ரஹஸ்வரூபியாகிய ஸ்ரீமந்நாராயணனுடைய அநந்த கல்யாணகுணானுபவங்களை யிடைவிடாமலனுபவித்து பகவந்முகோல்லாஸமாக திவ்யப்ரபந்தப்ரவசனமுதலாகிய கைங்கர்யங்களைச்செய்து ஆத்மாக்களுஜ்ஜீவிக்கும்பொருட்டுச்செய்தருளி அனேகவத்புதங்கள் விளங்கப்பெற்றெழுந்தருளியிருந்த ஆழ்வார்கள் திருவாய்மலர்ந்தருளிய திவ்யப்ரபந்தங்களும திருவத்தியயனோத்ஸவமுதலாகிய கைங்கர்யங்களும் காலவைஷம்யத்தினால் ஜீர்ணமானபடியால் இந்த திவ்ய ப்ரபந்தங்களையும் அவற்றால் போதிக்கப்பட்ட ப்ரபத்திஸம்பிரதாயத்தையும் இடையறாமல் மறுபடி வழங்குவிக்கும்பொருட்டு எம்பெருமான் திருவுள்ளங்கொண்டு தமதுபரிஜனங்களையும் ஆசாரியர்களாகப்பூலோகத்தில் அவதரிக்கும்படி நியமித்தருளினான்.

ஸ்ரீமந்நாராயணன் மேற்குறித்த ஆசாரியர்களுக்குப் பரமாசாரியனாக எழுந்தருளி யிருக்கிறபடியால் ஆசார்யர்களுள் ப்ரதமாசாரியனாக பூஜிக்கப்படுகின்றான்.

பெரியபெருமாள் முதல் பெரியபிராட்டியார் சேனைமுதலியார் நம்மாழ்வார் நாதமுனிகள் உய்யக்கொண்டார் மணக்கால்நம்பி ஆளவந்தார் பெரியநம்பி ஸ்ரீபாஷ்யகாரர் எம்பார் பட்டர் நஞ்சீயர் நம்பிள்ளை வடக்குத்திருவீதிப்பிள்ளை பிள்ளைலோகாசாரியர் திருவாய்மொழிப்பிள்ளை ஸ்ரீமணவாளமாமுனிகள் வரையில் உள்ள ஆசாரியர்களில் ப்ரதமாசாரியரான பெரியபெருமாள் திருநக்ஷத்ரம திருவோணம். பெரியபிராட்டியார் திருநக்ஷத்ரம் உத்திரபல்குனி. சேனைமுதலியார் திருநக்ஷத்ரம் பூராடம். மற்ற ஆசாரியாகள் திருநக்ஷத்ரங்கள் அவர்களின் வைபவத்தில் கண்டுகொள்ளவேண்டியது.



# ஸ்ரீமந்நாதமுனிகள் வைபவம்.

ஸ்ரீவீரநாராயணபுரத்தில் நித்திய வாஸம்பண்ணிக்கொண்டிருந்தவராயும் சடமர்ஷண குலதிலகராயும் சொட்டைக்குலத்தாரென்று பேர்பெற்றவருமான ஈச்வர பட்டாழ்வாருக்கு கலி-௩௬௮௪-க்குமேல் சோபக்ருது வருஷம் ஆனி மீ சுக்லத்ரயோதசி புதன்கிழமை கூடின அநுஷ நக்ஷத்ரத்தில் ஸ்ரீகஜாநநாம்சரான ஒரு குமாரர் அவதரிக்க, அவருக்கு ஜாதகர்மம் செய்தருளி ஸ்ரீநாதனென்று திருநாமம்சாத்தி அந்தந்தக்காலங்களிலே செய்யவேண்டியவைகளைச் செய்து வங்கிபுரத்தாய்ச்சியார் குமாரத்தியான அரவிந்தபாவையாரென்கிற பெண்ணை விவாகஞ்செய்து வைத்தார். இவர் மகாபரசித்தராக ஸித்தாந்த ப்ரவசனஞ் செய்துகொண்டுவருங்காலத்தில் ஒரு குமாரர் அவதரிக்க அவருக்கு ஈச்வரமுனியென்று திருநாமம்சாத்தி உபநயனஞ்செய்வித்து அத்யயனாதிகளையும் யோகாப்யாஸத்தையும் கற்பித்துத் தாமும் யோகநிஷ்டராக எழுந்தருளியிருந்தார்.

இந்நாதமுனிகள் தமது பிதாவுடனும் புத்ரனுடனும் வீரநாராயணபுரத்தில் மன்னனாரை ஸேவித்துக்கொண்டு நித்யவாஸஞ் செய்திருக்குநாள்களில் ஒருநாள் வடதேசயாத்ரைசெய்யத் தொடங்கி ப்ருந்தாவன முதலாகிய திவ்ய தேசங்களையெல்லாம் ஸேவித்துக்கொண்டு கோவர்த்தனமென்னும் ஸ்தலத்தில் யமுனைத்துறைவரென்கிற எம்பெருமானை யடிபணிந்து அவ்விடத்தில் வஸித்திருந்தார். ஒருநாள் நாதமுனிகளுடைய ஸ்வப்நத்தில் மன்

னுரெழுந்தருளி வீரநாராயணபுரத்துக்கு வாருமென்று ஆக்ஞா
பிக்க எழுந்து யமுனைத்துறைவரது நியமனம பெற்றுக்கொ
ண்டு வாராணசி வழியாக ஸ்ரீஜகந்நாதம ஸ்ரீஅஹோபிலம திருவே
ங்கடம் பெருமாள்கோவில் ஸ்ரீமுஷ்ணம் திருச்சித்ரகூடமுதலா
கிய திருப்பதிகளிலெழுந்தருளிய எம்பெருமான்களை ஸேவித்துக்
கொண்டு வீரநாராயணபுரத்துக்குவந்து மன்னனாரை ஸேவித்து
அவரது நியமனத்தினால் அவ்விடத்தில் நந்தவன கைங்கர்யமுதலா
ன கைங்கர்யங்களும்செய்துகொண்டிருக்கும்போது மேல்நாட்டி
லிருந்து சில ஸ்ரீவைஷ்ணவர்கள் எழுந்தருளி மன்னனாரை ஸேவி
த்து "ஆராவமுதே" யெனகிற திருவாய்மொழியைச்சொல்லிய
நாதமுனிகள் அது கேட்டருளி ஆனந்தமடைந்து ஆயிரத்துளிப்
பத்தென்றிருக்கின்றதே ப்ரபந்தங்கள் முழுதும் தேவரீர்களுக்
குத் தெரிந்திருக்குமோவென்று கேட்க, அதற்கவர்கள் இவ்வி
டல் பத்துமே தெரியுமென்றுசொல்ல அவர்களிடத்திலதைக் [illegible]
தரித்துப் பெற்றுக்கொண்டு மற்றவைகள் சடகோபரவதரித்த
திருக்குருகூர்ப்ரதேசத்திலேயிருக்கவேண்டுமென்று நிச்சயித்து
அப்ரதேசத்துக்கெழுந்தருளி நம்மாழ்வாரை ஸேவித்து மதுரகவி
யாருடைய சிஷ்யரான பராங்குசதாஸரைக்கண்டு தண்டன் ஸமர்ப்பி
த்து, ஸ்வாமி! இந்த ப்ரதேசங்களில் திருவாய்மொழி வழங்கு
கின்றதோவென்றுகேட்க, அவர் திருவாய்மொழியுடன் மற்ற
திவ்யப்ரபந்தங்களும்வழங்காமல் நெடுங்காலமாயிற்று. இப்போது அவ்
வழக்கத்தைப் பெறவேண்டுமானால் அடியேன் ஆசார்யராகிய
மதுரகவியாழ்வார், நம்மாழ்வார் விஷயமாக ஸாதித்தருளின கண்
ணிநுண்சிறுத்தாம்பென்னும திவ்யப்ரபந்தத்தை ஆழ்வார் ஸந்நிதி
க்குமுன் பன்னீராயிர முருச்சொல்லினால் ப்ரஸன்னராவாரெ
ன்று அருளிச்செய்தபடி நாம் செய்தால் ஆழ்வாரால் பெற்றுக்
கொள்ளலாமென்று சொல்ல நாதமுனிகளும அந்த திவ்யப்ரபந்
தத்தைப் பராங்குச தாஸரிடத்துப்பெற்று ஆழ்வார் ஸந்நிதிக்கெ
திராகப்பன்னீராயிர முருநியமத்தோடு அனுஸந்தானம் செய்து
கொண்டிருக்க பகவந்நியமனப்படி ஆழ்வாரும ப்ரஸந்நராய் நாத
முனிகளைக் குளிரநோக்கி உமக்கென்ன வேண்டுமென்று கே
ட்டருள நாதமுனிகளும ஆழ்வாரையடிபணிந்து திருவாய்மொழி
முதலான திவ்யப்ரபந்தங்களை அடியேனுக்கு க்ருபை செய்தருள
வேண்டுமென்று ப்ரார்த்திக்க, ஆழ்வாரும் ப்ரீதியுடன் அவருக்கு

ஜ்ஞான சக்ஷுஸ்ஸைக் கொடுத்தருளி திருவாய்மொழி முதலான
காலாயிரதிவ்யப்ரபந்தங்களையும அவைகளின் தாத்பர்யங்களையும
ஸமஸ்தவிசேஷார்த்தங்களையும உபதேசித்தருளப்பெற்று ஆனந
தத்துடன் அவ்விடத்தே ஆழ்வாரைச்சேவித்துக்கொண்டுஇருக்கி
ன்றநாள்களில், ஒருநாள் மன்னனார்ஸ்ரீமந்நாதமுனிகளுடையஸ்வ
ப்னத்தில்இந்தப்ரபந்தங்களை நம்ஸந்நிதியில் ஒருதரம்சொல்லுமெ
ன்று திருவாய்மலர்ந்தருள, நாதமுனிகள் ஆழ்வாரிடத்துவிண்ண
ஞ்செய்ய, ஆழ்வார் நீரேபோய் அந்தை ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும்
பியுமென்று விடைகொடுத்தருள, நாதமுனிகள் புறப்பட்டு
ர்க்கங்களிலுள்ள அந்தந்தத் திருப்பதிகளில் திவ்யப்ரபந்தானு
ானத்தோடு ஸேவித்துக்கொண்டு வீரநாராயணபுரத்தையடை
ந்து மன்னனாரை அடிபணிய,மன்னனார்கடாக்ஷித்தருளி திவ்
ரபந்தங்களை இயலுமிசையுமாகப் பாடுவிப்பீரென்று ஆக்ஞாபி
, நாதமுனிகள் தமது மருமக்களான கீழையகத்தாழ்வாரை
ருந் மேலையகத்தாழ்வாரையுங் கொண்டு அந்த ப்ரபந்தங்களைத்
தேவகானத்தினால் பாடுவித்தருளினார்.

அனந்தரம அத்தேசத்து ராஜனான சோழன் ஸமுகத்திலுள்
ளதாஸிகளிருவரில மனுஷ்யகானம பாடுவாளை யங்கீகரித்து, தேவ
கானமபாடுவாளைத்தவிர்க்க அவள் தேவாலயங்கள்தோறுமபாடிக்
கொண்டுவந்துமன்னனார்கோவிலிலுமபாட,நாதமுனிகள் அதைக்
கேட்டருளி ஸந்தோஷித்துப பலவரிசைகளுங் கொடுப்பித்தரு
ள இச்செய்தியை அரசனறிந்து நாதமுனிகளை உபசாரத்துடன்
தமதுஸமுகத்துக்கு எழுந்தருளப்பண்ணி தண்டன் ஸமர்ப்பித்து
ஸ்வாமி! இத்தாசிபாடுகின்ற தேவகானத்தை அறிவீரோவென்று
கேட்க நாதமுனிகள் அத்தாசிகள் இருவரையும் வருவித்துப் பாட
ச்செய்து இது மனுஷ்யகானம உமக்குத்தெரியும; இது தேவகா
னம தேவர்களுக்குத் தெரியுமென்றுசொல்லியருள அரசன் தே
வகானத்தை தேவரீர் அறிவீரெனபதை நாங்களெவ்வாறு அறிவ
தென்றுகேட்க, நாதமுனிகள் நூறுதாளங்களைவருவித்து ஏககா
லத்திலே தட்டுவித்து அதனதன் ஓசையைக்கொண்டு இது இது
இத்தனை இத்தனை இடையுள்ளதென்று அருளிச்செய்ய ராஜன்
இவைகளைப்பரிசோதித்து ஆச்சர்யப்பட்டு அவரதுதிருவடிகளில்
பணிந்து அநேகதிரவியங்களைக்கொடுக்க நாதமுனிகள் நமக்கொ

ன்றும் வேண்டுவதில்லையென்று அரசனையாசீர்வதித்து வீரநாராணபுரத்துக்கெழுந்தருளினார்.

இவர் திருவடிகளில் ஆச்ரயித்தவர்களாகிய - புண்டரீகாக்ஷர் - குருகைக்காவலப்பன் - நம்பிகருணாகரதாஸர் - ஏறுதிருவுடையார் - திருக்கண்ணமங்கையாண்டான் - வானமாதேவியாண்டான் - உருப்புட்டாச்சான்பிள்ளை - சொக்கத்தூராழ்வான் என்கிற எண்மர்களுக்கும் திவ்யப்ரபந்தங்களையும் வேதசாஸ்த்ரங்களையும் தாம்செய்தருளின ந்யாயதத்வம் யோகரஹஸ்யம் இதுகளையும் கற்பித்துவருகின்றகாலத்தில் நாதமுனிகள், முன்பு ஸ்ரீரங்கத்தில் திருமங்கையாழ்வார் செய்துவந்த திருவத்யயனோத்ஸவக் கட்டளைப்பாட்டைத் திருமபவும் ஜீர்ணோத்தாரணம் பண்ணும்படி நினைந்து அவ்விடத்திற்கெழுந்தருளி முன் ஆழ்வார் செய்வித்தபடி அந்த உத்ஸவத்தைச்செய்வித்தருளி இதுபோல் இன்னும் அநேகம ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாயங்களை யேற்படுத்திச் சிலநாளங்கிருந்துபின்புவிடைபெற்று அவ்விடம்விட்டுத் திருக்குடந்தைக் கெழுந்தருளி ஆராவமுதன் ஸந்நிதியில் நம்மாழ்வாரைத் திருப்பிரதிஷ்டைசெய்வித்து அவ்விடத்தில் திருவத்தியயனோற்சவத்தை நடப்பித்து இப்பிரபந்தத்தை நிலைநிறுத்தினவராகையாலே ஆராவமுதாழ்வாரென்று அவ்வெம்பெருமானுக்குத் திருநாமஞ்சாத்தி இச்சித்தாந்தப் பிரவர்த்தகர் இவரேயென்று மிகுந்த ஆனந்தத்தோடு பணிந்து நிற்க, [illegible]டபதியான ஆராவமுதாழ்வார் குளிரக்கடாக்ஷித்து தீர்த்தாதியப்பவரிசைகளையும் ப்ரஸாதிக்க, அதுகளைப்பெற்றுக்கொண்டு வீரநாராயணபுரத்துக் கெழுந்தருளி அங்குசிலகாலம யோகத்திலிருந்து குருகைக்காவலப்பனுக்கு யோகக்ரமங்களை அருளிச்செய்து திவ்யப்ரபந்தாதி ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாயங்களைத் தேசங்களில் ப்ரவசனஞ்செய்யும்படி உய்யக்கொண்டாருக்கு நியமித்தருளித் தமதுபுத்திரராகிய ஈச்வரமுனிகளைப்பார்த்து உமக்கு ஒரு புத்ரனுதயமாவர்; அவருக்கு யமுனைத்துறைவரென்று திருநாமஞ்சாத்துமென்று அருளிச்செய்து உய்யக்கொண்டாரையும் குருகைக்காவலப்பனையும் பார்த்தருளி உங்களுக்கு நாம்சொன்ன அர்த்தங்களையும் யோகக்ரமங்களையும் அந்த யமுனைத்துறைவருக்கு உபதேசியுங்களென்று நியமித்தருளி முன்போல யோகத்தில் எழுந்தருளியிருந்தார்.

பெருமாள் ஒருநாள் பரிவாரத்துடனே வேட்டையாடிப் போகின்றவர்போல்வந்து நாதமுனிகள் எங்கேயென்று அவர்புத்ரிகளைவினவிப்போக அப்பெண்பிள்ளைகள் நாதமுனிகளிடத்து வந்து ஸ்வாமி! நம்மகத்தில்ஒருகுரங்கும் இரண்டு வேடரும் ஒரு பெண்ணுடன்வந்து நாதமுனிகளெங்கேயென்று கேட்டுப்போயினார்களென்றுசொல்ல நாதமுனிகளும் அவர்கள் சக்ரவர்த்தித்திருமகனும்இளையபெருமாளும ஸீதாபிராட்டியா நம்சிறியதிருவடியுமாக இருக்கவேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டு அன்பும் அச்சமுங்கொண்டு எழுந்தோடி எதிர்வருகின்றவர்களையெல்லாம் இப்படிப்பட்டவர்கள் இவ்வழியில் போகக்கண்டீர்களோவென்று கேட்க அவர்களெல்லாம் போகின்றார்களென்று சொல்லக்கேட்டுக் கண்ணில்நீர்வடியக் கங்கைகொண்டசோழபுரத்தின் கீழ்வாசலளவாக ழுந்தருளி அங்குள்ளவர்களைக்கேட்க அவர்கள் கண்டதில்லையென்று சொல்ல அங்குநின்றவாறே கீழ்விழுந்து மோஹித்துக்கிடக்க, அப்போது பிராட்டியோடும இளையபெருமாளோடும் திருவடியோடுங் கலந்து சக்ரவர்த்தித்திருமகன் ஸேவைசாதித்தருள என்னமுதனைக்கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவேஎன்று அவன் திருவடியைத் தொழுது திருநாட்டுக் கெழுந்தருளினார். இவர் லீலாவிபூதியில்- ௩௪௦- திருநக்ஷத்ரமெழுந்தருளியிருந்தார்.

பின்பு இச்செய்தியை உய்யக்கொண்டார் - குருகைக்காவலப்பன் - ஈச்வரமுனிகள் முதலானவர்கள்கேட்டு சோகாக்ராந்தர்களாய்அவ்விடம்போய் ஈச்வரமுனிகளைக்கொண்டு ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரஞ்செய்வித்துப் பின்பு வீரநாராயணபுரத்துக்கு வந்து மற்றுஞ் செய்யவேண்டிய கர்மங்களையெல்லாம் செய்வித்தார்கள். நாதமுனிகளுடைய சிஷ்யரான உய்யக்கொண்டார்- திருநக்ஷத்ரம் சித்திரையில் கார்த்திகை. ஐயச்சேனரம்சம். இவர்திருவடிகளில் ஆச்ரயித்தவர்கள் மணக்கால்நம்பி - திருவல்லிக்கேணிப்பாண்பெருமாளரையர் சொட்டைப்பூசிச் செண்டலங்காரர் ஸ்ரீ புண்டரீகதாஸர் உலகுபெருமாள் நங்கையென்னுமைவர்களாம். இவர்களில் மணக்கால்நம்பி - உய்யக்கொண்டார் திருமாளிகையில் ஸகலவிதகைங்கர்யங்களையும்செய்துகொண்டிருந்து உய்யக்கொண்டார் திருநாட்டுக்கெழுந்தருளும் போது இனி தர்சனப்ரவர்த்தகராவார் ஆரென்று விண்ணப்பஞ்செய்ய அவர் நீரே தர்சநம் [illegible] பின்பு ஈச்வரமுனிகளுக்கு ஓர்புத்ரர் அவதரித்

ரிப்பர்; அவருக்கு நாதமுனிகள் நியமனப்படியே யமுனைத்துறைவரென்று திருநாமஞ் சாத்துவித்து தர்சனப்ரவர்த்தகராகும்படி ஸகல ரஹஸ்யங்களையும் உபதேசியும் அவர் தர்சனப்ரவர்த்தகராவரென்று நியமித்தெழுந்தருளினார். அவருக்கு ப்ரஹ்மமேத ஸம்ஸ்கார முதலான சரமகைங்கர்யங்களை மணக்கால்நம்பி செய்தருளினார். இவர் திருநக்ஷத்திரம் மாசிமகம். இவர் குமுதாய் இவர்கள் இப்படி தர்சன ப்ரவர்த்தனம் செய்துகொண்டிரு கள்.

டத் டுவா ஸ்த்ர ௧௯

ஸ்ரீமந்நாதமுனிகள்வைபவம்

முற்றிற்று.

---

ஆனிதனிலனுடத்திலவதரித்தான் வாழியே
ஆளவந்தார்க்குபதேசம் அருளிவைத்தான் வாழியே
பானுதெற்கிற்கண்டவன்சொல்பலவுரைத்தான் வாழியே
பராங்குசனார்சொற்பிரபந்தம்பரிந்து கற்றான் வாழியே
கானமுறத்தாளத்திற்கண்டிசைத்தான் வாழியே
கருணையினாலுபதேசக்கதியளித்தான் வாழியே
நானிலத்தில்குருவரையைநாட்டினான் வாழியே
நலந்திகழுநாதமுனிநற்பதங்கள் வாழியே.



யாமுநாசாரியரென்கிற

# ஸ்ரீ ஆளவந்தார் வைபவம்.

வீரநாராயணபுரத்தில் நித்யவாஸஞ் செய்துகொண்டிருந்த ஈச்வரமுனிகளுக்கு கலி-௪௲௰௭-மேல் தாது௵ ஆடி௴ பௌர்ணமி புதன்கிழமை கூடின உத்திராடநக்ஷத்திரத்தில் ஸிம்மாஸநாம்சரான ஒருகுமாரர் அவதரித்தருளினார். இவர் அவதரித்த செய்தியை மணக்கால்நம்பி கேட்டு வீரநாராயணபுரத்துக்கெழுந்தருளிவந்து ஈச்வரமுனிகளைக்கொண்டு ஜாதகர்மஞ்செய்வித்து யமுனைத்துறைவரென்று திருநாமஞ்சாத்தி அன்னப்ராசன முதலானவையுஞ் செய்வித்தருளித் தம்மிடத்துக்கெழுந்தருளினார்.

இவருக்கு உபநயநாதிகளைச்செய்வித்து வேதாத்யயனம் பண்ணிவைக்குங்காலத்தில் யமுனைத்துறைவர் ஸந்தை சொல்லுகின்றோர் ஓதினதே ஓதுகின்றார்களென்று போவதுதவிர்ந்து நிற்க ஈச்வரமுனிகள் அதுகண்டு நீரேன் ஓதப்போகாதிருக்கின்றீரென்றுகேட்க யமுனைத்துறைவர் அதுகேட்டு ஓதினதையே ஓதுகின்றவர்களிடத்துப் போவதேன் என்றுசொல்லி ஓர் ஸந்தையிலேயே வேதங்களையதிகரித்தருளினார். பின்பு ஈச்வரமுனிகள் யமுனைத்துறைவர்க்குத் திருக்கல்யாணஞ் செய்வித்தருளிச் சிலநாட்சென்றபின் திருநாட்டுக்கெழுந்தருளினார். அனந்தரம் யமுனைத்துறைவர் ப்ராஹ்மமேத ஸம்ஸ்காரமுதலான கைங்கர்யங்களை நடத்தியருளி மஹாபாஷ்யபட்டருடன் சாஸ்த்ராப்யாஸம் பண்

க்கொண்டிருந்தார். அவ்வாறிருக்குங்காலத்தில் அத்தேசத்தை ஆளும் அரசனுக்குப் புரோஹிதனான ஆக்கியாழ்வானுக்கு அத்தேசத்திலுள்ள வித்வான்களெல்லாம் இறை இறுத்துக்கொண்டு வருகையால் மஹாபாஷ்யபட்டரிடத்திலும் இறைக்குத் தாரு கடிதம்வந்தது. அதைக்கண்டு அவர் வ்யாகுலப்பட யமுனைத்துறைவர் அதனையறிந்து அக்கடிதத்தை யெடுத்துக்கிழித்தெறிந்து விட்டார். இதனை ஆக்கியாழ்வான்கேட்டு யமுனைத்துறைவரிடத்து நீர் வெறுங்கவியோ சாஸ்த்ர ப்ரவீணரோவென்று கேட்டுவர சிலரை யனுப்பினார். அவர்கள்வந்து கேட்க இவர நாம் சாஸ்த்ர ப்ரவீணருமன்று வெறுங்கவியுமன்று அகங்கரித்தவர்களை அடியறப் பிளக்கின்ற வலியுடையோமென்று எழுதியனுப்ப அதைக் கண்டறிந்த ஆக்கியாழ்வானும அதனை ராஜாவுக்கறிவித்து யமுனைத்துறைவர்க்கு ராஜஸபைக்கு வரும்படி சாஸன மனுப்பினவைக்க யமுனைத்துறைவர் அதனையும் கிழித்தெறிய அதனை யரசன் கேட்டுத் தண்டிகையனுப்ப அதில் ஆரோகணித்து ராஜ ஸபைக்கெழுந்தருளி நாலுதிக்கிலும என்போல் சாஸ்த்ரநிபுணர்இல்லையென்னும்குறிப்புத்தோன்ற ஓர் ச்லோகம்செய்தனுப்ப ஆக்கியாழ்வான் அதுகேட்டுக் கோபத்துடன் நான் இவரோடு சாஸ்த்ரப்ரஸங்கஞ்செய்யவேண்டுமென்று சொல்ல அப்போது ஸ்ரீமந்நாராயணனிடத்திலும் பாகவதர்களிடத்திலும் இடைவிடாத பக்தியைத்திருக்கும் ராஜபத்நியானவள் அரசனைப்பார்த்து இந்த யமுனைத்துறைவரே வெல்வாரென்றுசொல்ல அரசனும் அப்படி வென்றால் இவர்க்கு என் அரசாட்சியில் அரைப்பங்குதருவேனென்று சொல்லப் பின்பு இருவரும் ப்ரஸங்கஞ்செய்து ஆக்கியாழ்வான் தோல்வியடைய அரசன் மகிழ்ந்து யமுனைத்துறைவரை அனேக ஸம்ப்ரமத்துடன் வீதிவலம் செய்வித்துக்கொண்டு அரண்மனைக்கருகில் வரும்போது இராஜபத்நியானவள் வந்து எம்மை ஆளவந்திரோ வென்று யமுனைத்துறைவரை யெடுத் தணைத்துக்கொண்டாள். அதனால் அன்றுதொட்டு அவருக்கு ஆளவந்தாரென்று திருநாமம்வழங்கிற்று. பின்பு அரசனும் ஆளவந்தாருக்குப் பாதி ராஜ்யத்தைக் கொடுக்க ஆளவந்தாரும் தமது பத்னிகளை அழைப்பித்துக்கொண்டு அந்தராஜ்யத்தில் சுகமாக எழுந்தருளியிருக்கும் காலில் சொட்டைநம்பி தெய்வத்துக்கரசுநம்பி பிள்ளையரசுநம்பி திருவரங்கப்பெருமாளரையர் என்று நான்கு குமாரர்களைப் பெற்றார்கள்.

பின்பு மணக்கால்நம்பி இச்செய்தியைக் கேட்டுக் களிப்படைந்து அவரைக்காணும்படி வந்து ஆளவந்தாரிருக்கின்ற க்ருஹம அரசனரண்மனைபோலக் காவலாளர்கள் சூழ்ந்து காத்திருக்கின்றதைக்கண்டு உட்புகுவதற்குக்கூடாமையால் அங்கு ஓரிடத்தில் எழுந்தருளியிருந்து ஆளவந்தார் திருமாளிகையில் திருமடைப்பள்ளிகைங்கர்யம் பண்ணுகின்ற ஸ்ரீவைஷ்ணவர்களால் அவர்க்குத் தூதுவேளையினிடத்து இஷ்டமென்பதையறிந்து ஆறுமாதம்வரையில் நாள்தோறும் தாமே தூதுவேளையை ஆளவந்தார் க்ருஹத்துக்குக்கொடுத்துவந்தவர் இன்னும் ஆளவந்தாரைக் காணப்பெற்றிலோமே யென்னும் சோகத்தினால் நான்குதினம் தம்மை மறந்தவராகத் தூதுவேளை கொடுப்பது விட்டிருந்தார். ஆளவந்தார் தூதுவேளையில்லாமலிருப்பதேனென்று ஸ்ரீவைஷ்ணவர்களைக்கேட்க அவர்கள் ஒருவ்ருத்த ஸ்ரீவைஷ்ணவர் நித்தியமுங்கொடுத்துவந்தார். எதுபற்றியோ நாலுநாளாக வாராமலிருக்கின்றாரென்று விண்ணப்பஞ்செய்ய அதுகேட்டு ஆளவந்தார் அவரினிவந்தால் நமக்கு அறிவியுங்களென்னப் பின்பு சோகந்தெளிந்தவராய் மணக்கால்நம்பியும் முன்போல தூதுவேளைகொண்டுவர அவர்வந்ததை ஆளவந்தாருக்கு அறிவிக்க ஆளவந்தார் வந்து நம்பியைக்கண்டு எழுந்தருளப்பண்ணுவித்து ஸ்வாமி! இத்தனைநாளாய் அடியேனுக்குத் தூதுவேளைகொண்டுவந்து கொடுத்தது தேவரீரடியேனிடத்தில் அர்த்தம்வேண்டியோ அல்லது க்ஷேத்ரம் வேண்டியோ எதுபற்றியோ திருவாய்மலர்ந்தருளவேணுமென்று கேட்க மணக்கால்நம்பியும் அடியேனுக்கு வேண்டுவதொன்றுமில்லை தேவரீர் பெரியவர்கள் தேடிவைத்த மேலாகிய அர்த்தமும் க்ஷேத்ரமும் நமதுபக்கலிருக்கின்றது; அதனை அடியேனறிவிக்கத் தேவரறிந்துகொள்ளுமளவும் தேவரிடத்து அடியேன்வரும்படி செய்விக்கவேண்டுமென்றுசொல்ல ஆளவந்தாரும் மகிழ்ந்து அவரைத்துதித்து அவ்வாறேசெய்விக்க நம்பியும் அன்றுமுதல் ஆளவந்தாரிடத்தில் வந்து ஸ்ரீகீதார்த்தத்தை ஆளவந்தாருக்கு அருளிச்செய்ய அவரும் அதை நாள்தோறும் ச்ரவணஞ்செய்து தெளிந்து விரக்தியுடையவராக அவரிடத்தில் பஞ்சஸம்ஸ்கார முதலான ஸகலவிசேஷார்த்தங்களையும்பெற்று இருக்குங்காலத்தில்மணக்கால்நம்பி ஒருநாள் அவரை அழைத்துக்கொண்டு கோயிலுக்கெழுந்தருளி பெரியபெருமாள் திருவடிகளைக்காட்டி முன்சொன்ன மேலானபொருள் இதுதானென்றுகாண்பிக்க ஸேவித்து ஆனந்தபரவசராய் அந்தக்ஷணமே அநித்யமாகிய ப்ரபஞ்சத்தில் நிராசை[illegible]ள்ளவராய் ஸர்வஸங்க பரித்யாகஞ்செய்து ஸந்யாஸாச்ரமத்தை [illegible] எப்பொழுதும் பெரியபெருமாளை அகத்தும் புறத்துந் த்துறைவா[illegible]த்து ஆனந்தித்திருந்தார்.

[illegible]யருளி ம[illegible]

இவர்செய்தருளின ப்ரபந்தங்கள் ஆத்மஸித்தி-ஸம்வித்ஸித்தி-ஈச்வரஸித்தி-ஆகமப்ராமாண்யம் - புருஷநிர்ணயம் - சதுச்ச்லோகி-கீதார்த்தசங்கிரகம - ஸ்தோத்ர ரத்னம - மாயாவாதகண்டனம் முதலியவை. இவரது சிஷ்யர்கள் - பெரியநம்பி - திருக்கோட்டியூர்நம்பி - பெரியதிருமலைநம்பி - மாறனேர்நம்பி - திருக்கச்சிநம்பி - ஆளவந்தாராழ்வான் - திருமாலையாண்டான் - வானமாமலையாண்டான் - தெய்வவாரியாண்டான் - ஈசனாண்டான் - திருக்குருகூரப்பன் - திருமோகூர்நின்றான் - தெய்வப்பெருமாள் - திருக்குருகூர்தாஸர் - திருமாலிருஞ்சோலைதாஸர் - ராஜபத்தினியான திருவரங்கத்தம்மை என்று பதினாறு திருநாமங்கள். இவர்களில் பெரியநம்பி குமுதாக்ஷாம்சம். பெரியதிருமலைநம்பி சுமுகாம்சம். திருக்கச்சிநம்பி சங்குகர்ணாம்சம். திருக்கோட்டியூர் நம்பி புண்டரீகாம்சம். திருமாலையாண்டான் வாமனாம்சம். இவர்களைவரும் இனி பாஷ்யகாரருக்கு ஆசார்யராவார்கள். அன்றியும் ஆளவந்தார் புத்திரரான திருவரங்கப்பெருமாளரையரும ஆசார்யராவர். இவர்களில் பெரியநம்பி திருநக்ஷத்ரம மார்கழிமாஸம் கேட்டை. இவர் ஆளவந்தாருடைய நியமனத்தால் ஸ்ரீபாஷ்யகாரருக்கு பஞ்சஸம்ஸ்காரம் ஸாதித்தருளினார். மஹாபூர்ணரென்பதும் இவர் திருநாமமாம்.

இப்படி இவர்கள் சித்தாந்த ப்ரவசனஞ்செய்துகொண்டுவருங்காலத்தில் எம்பெருமான் ஸ்ரீபாஷ்யாதிமுகத்தாலே வேதாந்த மெய்ப்பொருள்களைத் தெளிவிக்கைக்காகத் திருவனந்தாழ்வானை நோக்கி புராணரத்னமென்கிற ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் ஸ்ரீபராசர ப்ரஹ்மரிஷி அனந்தன் முதலவதாரம், லக்ஷ்மணன் இரண்டாமவதாரம், பலபத்திரன் மூன்றாமவதாரம. நாலாமவதாரம கலியுகத்தில் ஒன்று உண்டாமென்று அருளிச்செய்தபடி நீர் பூமியில் அவதரிக்கக்கடவீரென்று நியமித்தருளினார். ஸ்ரீ ஆளவந்தார்லீலாவிபூதியில் - ௱௨௦ - திருநக்ஷத்ரம எழுந்தருளியிருந்தார்.

ஸ்ரீ ஆளவந்தார் வைபவம

முற்றிற்று.

---

மச்சணியும்மதிளரங்கம்வாழ்வித்தான் வாழியே
மறைநான்குமோருருவில்மகிழ்ந்துகற்றான் வாழியே
பச்சையிட்டராமர்பதம்பகருமவன் வாழியே
பாடியத்தோனீடேறப்பார்வைசெய்தோன் வாழியே
கச்சிநகர்மாயனிருகழல்பணிந்தோன் வாழியே
கடகவுத்திராடத்துக்காலுதித்தான் வாழியே
அச்சமறமனமகிழ்ச்சியணைந்திட்டான் வாழியே
ஆளவந்தார் தாளிணைகளனவரதம் வாழியே.

ஆளவந்தார் திருவடிகளேசரணம்.



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீ பாஷ்யகாரர்
## வைபவம்

ஸ்ரீயப்பதியான எம்பெருமான் நியமனப்படி அந்தத்திருவனந்தாழ்வான் கடல்சூழ்ந்த உலகத்திலுள்ள திவ்யதேசங்களில் சிறந்ததாகிற ஸ்ரீபெரும்பூதூரென்னும் திவ்யதேசத்தில் ஸதா பகவத் குணானுபவம் செய்துகொண்டிருக்கின்ற அரிதகோத்ரஜனிதரான ஆஸூரிகேசவப்பெருமாளுக்கு பூமிப்பிராட்டியாரென்னும் பத்தினியாரது திருவயிற்றில் உலகத்தவர்கள் உஜ்ஜீவிக்கும்பொருட்டுக் கலியுகத்தில் நாலாயிரத்தொருநூற்றுப் பதினெட்டுக்கு மேல செல்லாநின்ற பிங்களவருஷம் சித்திரைமாசம் சுக்லபஞ்சமி சக்ரவாரங் கூடின திருவாதிரைநக்ஷத்ரத்தில் திருவவதாரஞ் செய்தருளினார். மதித்து அளவிடப்படாத மஹாத்மியங்கள் விளங்க அவதரித்தருளின புத்ரசிரோமணியினது கோடி சூர்யோதயம்போல ப்ரகாசிக்கின்ற திவ்யதிருமேனியின்கண்ணுள்ள ஸௌந்தர்யத்தைப் பிதாவாகிய கேசவப்பெருமாள் கண்களும் மனமும் ஆனந்த மடையக்கண்டு எல்லையற்ற களிப்பையுடையவராய் மங்களம் பெருக ஜாதகர்மாதிகளைச் செய்தருளினார்.

இதுசெய்தியைப் பெரியதிருமலைநம்பிகேட்டுக் களிப்புடைந்து அவ்விடத்துக்கெழுந்தருளி ஸ்ரீமந்நாராயணனுடைய அநுக்ரஹத்தால் திருவுருக்கொண்டு ப்ரகாசிக்கின்ற அந்த புத்ரனைக்கண்டு

மகிழ்ந்து கேசவப் பெருமாளைக்கொண்டு இளையாழ்வாரென்று திருநாமஞ்சாத்தருளினார். பின்பு இளையாழ்வார் சீதளம்நிறைந்த வளர்பிறைபோல வளர்ந்து உபநயனகல்யாணஞ்செய்யப்பெற்று வேதமுதலாகிய கலைகளை யோதி ஸந்தேஹமறத்தெளிந்து பின்பு திருக்கல்யாணஞ்செய்துகொண்டு பெருமாள் கோவிலுக்கெழுந்தருளி எம்பெருமானை ஸேவித்துத் திருப்புட்குழியெனனும் ஸ்தலத்திலிருக்கின்ற யாதவப்ரகாசனென்னும் பெயருடைய ஏக ண்ட ஸந்நியாஸியினிடத்திலே வேதாந்த சாஸ்திராப்யா ல் செய்துகொண்டிருந்தார். டத்

பற்று இவ்வாறிருக்க, இவரது மாதாவின் உடன்பிறந்தவ ளில் பெரியபிராட்டியார் வயிற்றில் கமலநயனபட்டருக்கு கு டன் னவருஷம் - தைமாஸம் - பௌர்ணிமை - சோமவாரங்கூடின டிருந பூசநக்ஷத்திரத்தில் ஸௌம்யயாமசமான ஓர் புத்ரவதரி ருளி பிதாவாகிய கமலநயனபட்டர் ஜாதகாமம முதலிய கர்மங் பவாரா செய்து களித்திருக்கப் பின் இச்செய்தியறிந்து பெரிய திருமலைநம்பி யெழுந்தருளி கமலநயனபட்டரைக்கொண்டு கோவிந்தரென்று திருநாமஞ்சாத்துவித்தார். கோவிந்தரும் உபநயனவிவாஹம் பெற்று ஸகல சாஸ்த்ரங்களையுங் கற்று யாதவப்ரகாசனிடத்தில் இளையாழ்வார் சாஸ்த்ராப்யாஸஞ் செய்கின்றாரென்று கேள்விப்பட்டுத் தாமும் அவ்விடம்போய் அவருடன் சாஸ்த்ராப்யாஸஞ் செய்துகொண்டிருந்தார். அப்படியிருக்கின்ற நாள்களில் ஒரு நாள் யாதவப்ரகாசனுக்கு எண்ணெயிடும்போது இரண்டு சுருதி வாக்கியங்களுக்கு அபார்த்தமாகப் பொருள் வ்யவஹரிக்க இளையாழ்வார் அதுபொறாமல் அவ்வாசிரியன் தொடையில் கண்ணீர்த்துளியையுதிர்க்க அது நெருப்புப்பொறிபோல் சுருக்கிட்டு அவனிதுவென்னென்று கேட்க இளையாழ்வார் அந்த பகவத்விஷயமாகியவாக்கியங்களுக்கு ஸகுணமான பொருளிருக்க அதைவிட்டு நிர்க்குணமான அர்த்தஞ்சொன்னீர் அதனாலென்மனம் கரைந்துருகிவிழுந்ததென்றுசொல்ல யாதவப்ரகாசன் அதுகேட்டுக்கோபித்து ஆனால் நீர் நம்மிடத்து வாசிப்பதற்குத் தக்கவரல்லவென்று சொல்ல இளையாழ்வார் அன்றுதொட்டு அவனிடத்தில் வாசிப்பதைவிட்டிருந்தார். பின்பு யாதவப்ரகாசன் தனது சிஷ்யர்களுடன் ஆலோசனை செய்துகொண்டு இளையாழ்வாரைக் கபடத்தினால் மோசஞ்செய்யும்படி நிச்சயித்து நல்லவார்த்தையினால் இளையாழ்வாரைக் கோவிந்தருடன் அழைப்பித்து சிஷ்யர்களோடுங் கங்கா

யாத்ரை செய்துவருவோமென்று புறப்பட்டு இளையாழ்வாருடன் கோவிந்தரைச் சேராதபடி செய்துகொண்டேவந்தான்.

ஒருநாள் விந்த்யாடவியில் வழிநடக்கும்போது அல்பாசமனஞ் செய்யத் தீர்த்தமவேண்டி நின்றவிடத்தில் கோவிந்தபட்டர் இளையாழ்வாரைப்பார்த்து யாத்ரைக்குவந்த கபடமாகிய நிமித்தத்தைச்சொல்ல இளையாழ்வாரும வ்யாகுலப்பட்டு அவ்வழியை விட்டு ஒரு வ்ருக்ஷத்தினடியில் நிலைகுலைந்துநின்றார். அப்பொழுது பெருமாளும பிராட்டியும் ஓர் வில்லியும வேடுவிச்சியுமாக எதிர்வந்துநிற்க அவர்களைக்கண்டு நீங்களெங்கே போகின்றீர்களென்றுகேட்க அவர்கள் ஸத்யவ்ருத க்ஷேத்ரத்திற்குப் போகிறோமென்றுசொல்ல இவர் என்னையு மழைத்துக்கொண்டு போங்கோளென்ன அவர்கள் இவரையழைத்துக்கொண்டு விந்த்யாடவியைக் கடந்து அன்றிராத்திரி ஓர் மரத்தின்கீழ் இளையாழ்வாருடன் பட்டினியாகப்படுத்திருந்தார்கள். அப்போது வேடுவிச்சி வேடனைத் தண்ணீர்கேட்க எம்பெருமானாகிய வேடனும சமீபத்தே கிணறிருக்கின்றது விடிந்தபின்பு தண்ணீரெடுத்துக்கொடுக்கின்றேனென்ன இளையாழ்வாரதுகேட்டு ஐயோ! யான் இத்தேசத்திற்கு அன்யனாகையால் அந்தத்தண்ணீர் விஷயத்தில் இவர்கட் குபகரிப்பதற்குச் சக்தியில்லாதவனாக இருக்கிறேனேயென்று தம்மைத்தாமே வெறுத்துக்கொண்டு வ்யாகுலத்துடனிருந்தார். விடிந்தபின்பு விழித்துப்பார்க்க அவ்விருவரையுங்காணாது தேடிக்கொண்டு நாலடி நடந்துவர அவ்விடத்து ஓர் சோலையுங் கிணறும் சிலபேருமாக நிற்க அவர்களைப்பார்த்து இவ்விடம எந்தவூரைச்சார்ந்ததென்று கேட்க அவர்கள் இந்தஸ்தலம காஞ்சீபுரமென்றுசொல்ல இளையாழ்வார் அளவிடப்படாத ஆனந்தத்துடன் அதிசயித்துநின்று தம்முடன்வந்த வேடனையும வேடுவிச்சியையும் பெருமாளும பிராட்டியுமென்று அறிந்துகொண்டு-ஐயோ! கையிற்கிடைத்த கற்பகக் கனியை இறுமாப்பினால் இழந்துவிட்டேனேயென்று வியாகுலப்பட்டு, பெருமாள் கோயிலில்வந்து பேரருளாளரையும் பெருந்தேவித்தாயாரையும ஸேவித்து முன் தண்ணீர்கேட்டது நினைந்து திருவாராதனத்துக்குச் சாலைக்கிணற்றுத் தீர்த்தத்தை ஸமர்ப்பித்துக்கொண்டிருந்தார்.

பின்பு யாதவப்ரகாசனும் இளையாழ்வாரைத் தேடிக்காணாமல் வ்யாகுலமுடையவனாய் கோவிந்தபட்டருடன் சென்று கங்

நாநம் பண்ணினான். கோவிந்தபட்டர் கங்காஸ்நாநம் செய்
கையில் அவனுடைய மாயையால் ஒருலிங்கம் அவரதுகையில்
தோன்றினபடியால் அதுபற்றி உள்ளங்கைகொணர்ந்த நயினாரெ
ன்று அவர்க்குப் பெயராயிற்று. அதன பின்பு யாதவ ப்ரகாசன்
அங்குநின்று புறப்பட்டு காஞ்சீபுரத்தையடைந்தான். கோவிந்த
பட்டர் அவனனுமதிகொண்டு மழலைமங்கலத்தில் வந்து இந்த
லிங்கத்தை ப்ரதிஷ்டை செய்வித்துக் காளத்திநாதன கனவில்
வந்து திருக்காளத்திக்குத் தம்மைவரச்சொன்னபடி அவ்விடத்
திறசென்று தானத்துக்கு வேண்டிய முத்திரை மோதிரம்பெற்று
முக்யராயிருந்தார் பின்பு யாதவப்ரகாசன் பெருமாள கோயிலில்
இளையாழ்வாரைக்கண்டு ஆச்சர்யமடைந்து ஸந்தோஷத்துடன்
அவரையுபசரித்து அவருக்குப பாடத்தை நடத்திக்கொண்டிருந்
தான். இந்தச்செய்தியை ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ ஆளவந்தார் கேட்டருளி
இளையாழ்வாரைக் காணவேண்டுமென்னும விருப்பமுடையவரா
ய்ப் புறப்பட்டுப் பெருமாளகோயிலுக்கு எழுந்தருளி திருக்கச்சி
நம்பியை யழைத்துக்கொண்டு பேரருளாளரையும பெருந்தேவி
த்தாயாரையும் ஸேவித்துப்ரதக்ஷணமாக எழுந்தருளிவரும்போது
யாதவப்ரகாசன் கூட்டத்துடன்வரக்கண்டு ஆளவந்தார் திருக்கச்சி
நம்பியை நோக்கி இக்கூட்டத்தில இளையாழ்வார் யாரென்றுகேட்
க நம்பியும் இளஞ்சூர்யோதயம போலே ப்ரகாசிக்கின்ற சிவத்த
திருமேனியும் ஆஜானுபாகுவுமுடையவராய்ப்புருஷப்ரமாணத்து
க்குத்தக்கநெடுமையையுடையவராய் நடுவேவருகின்றவரென்று வி
ண்ணப்பஞ்செய்ய ஆளவந்தார் அவ்வடையாளத்தின்படி இளையா
ழ்வாரைக் கண்குளிரப் பார்த்தருளி அளவற்ற ஸந்தோஷத்தை
யுடையவராய் இவர்நமது தர்சனத்துக்கு முதல்வராவரென்று அ
னுக்ரஹஞ்செய்து மீண்டு அஸ்திகிரிக்கெழுந்தருளி பெருமாளை
ஸேவித்துப் புறப்பட்டு முதலிகளுந் தாமுமாக ஸ்ரீரங்கத்துக்
கெழுந்தளினார். பின்பு கச்சிநகரில் ராஜாவின் பிள்ளையை ஒருபி
ரஹ்மரக்ஷஸ் பிடித்துக்கொள்ள அதை யாதவப்ரகாசனுக்கறிவிக்க
அவன் உன்னை யாதவப்ரகாசன் போகச்சொன்னானென்று அத
ற்குச் சொல்லுங்கோளென்றனன். அப்படியேசொல்ல அந்தப்ர
ஹ்மரக்ஷஸ் நான் உன்னைப்போகச்சொன்னேனென்று யாதவப்ர
காசனுக்குச் சொல்லுங்கோளென்ன அதுகேட்ட யாதவப்ரகாசன்
கோபத்துடன்வந்து மந்த்ரோச்சாடனஞ்செய்ய பிரஹ்மரக்ஷஸும

ஆஹா! உன் மந்த்ரங்களையும அறிவேன்; உன் பூர்வஜன்மமுமறிவேன்; உன்னையுமறிவேன்; உனக்கென்னதெரியும்; இதோ உனது பூர்வஜன்மத்தின் அந்தரங்கங்களை வெளிப்படுத்துகிறேன். பூர்வத்தில் நீ மதுராந்தகத்தில் ஏரியிலுள்ள ஒரு புற்றிலே உடும்பாகஇருந்தாய்; அவ்விடத்தில் ஸ்ரீவைஷ்ணவர்கள் நீராடி யமுது செய்து சிந்தின ப்ரஸாதத்தைத் நீ ஸ்வீகரித்து இவ்வுயர்ந்தமனிதப்பிறப்பில் வித்வானுகப் பிறந்தாய். நானே பூர்வம ப்ராம்ஹணன்; யான் யாகஞ்செய்வதில மந்த்ரலோபம க்ரியாலோபம நேரிட்டதனால் பிரமராக்ஷஸ் ஆனேனென்றுசொல்லி அதைக்கேட்ட யாதவப்ரகாசன் நீயார்சொன்னாலே போவாயென்றுகேட்க, அது இளையாழ்வார் போகச்சொல்லி நியமித்தால் போவேனென்ன அப்போது அவர் யாதவப்ரகாசன் தாக்ஷிண்யமபற்றி அதனைப்போகச்சொல்ல, அது தேவரீர் திருவடிகளை அடியேன் சிரசின்மேல் வைத்தால்போகின்றேனென்ன அவ்வாறுசெய்ய அதுவும எழுந்திருந்து இளையாழ்வாரது உபயசரணாரவிந்தங்களையும் கண்களிலொற்றிக்கொண்டு அவர் நியமனத்தினாலே அடையாளத்துக்காக அருகிலிருந்த அரசமரத்தை முறித்துக்கொண்டு பிள்ளையை விட்டுப் போயிற்று. அதுகண்டு யாதவப்ரகாசன் அதிக ஸந்தோஷமும ஆச்சர்யமுமடைந்தான். இவ்வாறு சிலநாள் செல்ல யாதவப்ரகாசன் ஒருநாள் ஒருவாக்யத்துக்கு அவமாகிய பொருளை வ்யவஹரிக்க இளையாழ்வார் அதனைமறுத்து நற்பொருளை கூற அதுகேட்டு அவன் கோபங்கொண்டு பாடஞ்சொல்லுவதைத் தவிர்த்தான். இளையாழ்வார் அவனைவிட்டுத் திருத்தாயார் நியமனங்கொண்டு திருக்கச்சிநம்பியையசேவித்து அவரது நியமனத்தின்படியே பேரருளாளருக்கு முன்போலத் திருமஞ்சனம ஸமர்ப்பித்துக்கொண்டுவந்தார்.

இவர் யாதவப்ரகாசனைவிட்டு நீங்கினசெய்தியை ஆளவந்தார் கேட்டருளி பேரருளாளர் தமது ப்ரபத்தியை ஸபலமாக்கி அனுக்ரஹித்தாரென்று ஆனந்தித்து, தாம்செய்த ஸ்தோத்ரரத்னத்தைப் பெரியநம்பிகையிற்கொடுத்து நீர் எவ்விதத்திலும இளையாழ்வாரை நம்முடன்சேர்ப்பிக்கவேண்டுமென்று நியமித்துத் திருமேனி பாங்கில்லாமலிருந்தார். பின்பு பெரியநம்பியும் புறப்பட்டுப், பெருமாள்கோவிலுக்கு எழுந்தருளி எம்பெருமானை ஸேவித்து ஸ்தோத்ரரத்னத்தை அனுஸந்தித்துத் தீர்த்தப்ரஸாதமும்

வாங்கிக்கொண்டு மீண்டு இளையாழ்வார் எழுந்தருளிவருகிற சாலைக்கிணற்றுவழியில் ஆளவந்தாரது ஸ்தோத்திரரத்னத்தை அநுஸந்தித்துக்கொண்டேயிருந்தார். அதுவழியாக எழுந்தருளுகின்ற இளையாழ்வார் அவர் சொல்லிக்கொண்டிருக்கும் ஸ்தோத்ரரத்னத்தில் ஒரு சுலோகத்தைக்கேட்டு அதிசயமும் அன்புங்கொண்டு இதனை யருளிச்செய்தது யாரென்றுகேட்க அவர் ஆளவந்தார் அருளிச்செய்ததென்ன அதுகேட்டு ஆளவந்தாரை அடியேன் ஸேவிக்கவேண்டுமென்ன ஆனாலடியேனுடனே எழுந்தருளவேண்டுமென்று பெரியநம்பி இளையாழ்வாரை அழைத்துக்கொண்டு ஸ்ரீரங்கத்தினருகே சென்று திருக்காவேரித்துறையில் நின்றிருந்த கூட்டத்தவர்களால் ஆளவந்தார் திருநாட்டுக்கெழுந்தருளினாரென்று கேட்டு அளவிடப்படாத வ்யாகுலத்துடன் மனஞ்சோர்ந்து அழுதுகொண்டே நடந்து ஆளவந்தார் திருமேனியை ஸேவித்து மூன்று விரல்கள் மடங்கியிருக்கின்றதைக்கண்டு இவ்வாறு முன்னுள்ளதோவென்று கேட்க அங்கிருந்தவர்களெல்லாம் முன்பில்லை இப்பொழுதுதான் காணப்பட்டதென்று சொல்ல, அதுகேட்டு இளையாழ்வார் இவர் திருவுள்ளத்தில் யாதோ குறையுண்டாயிருக்கவேண்டுமென்று சிந்தித்து அங்குள்ள பெரியோர்களைக்கேட்க அவர்களும் வியாஸ பராசரருடைய திருநாமத்தைச் சாற்றிவைக்கவேணுமென்றும் வியாஸசூத்திரத்துக்கு விசிஷ்டாத்வைத பரமாகபாஷ்யஞ்செய்விக்கவேணுமென்றும் திருமந்திரார்த்த ப்ரதிபாதகமான திருவாய்மொழிக்கு ஒரு வியாக்கியானஞ்செய்விக்கவேணுமென்றும் ஆளவந்தார் திருவுள்ளமுடையவராயிருந்தாரென்று சொல்லக்கேட்டருளி இளையாழ்வார் அடியேனிடத்தில் ஆசார்யக்ருபையுண்டானால் இம்மூன்றையும் அவர் திருவுள்ளப்படியே செய்து முடிக்கக்கடவேனென்று திருவாய்மலர்ந்தருள உடனே அம்மூன்று விரல்களும் நிமிர்ந்திடக்கண்டு அங்குள்ளவர்கள் யாவரும் ஆச்சர்யமடைந்து தேவரீர் தர்சன ப்ரவர்த்தகராவீரென்று மங்களாசாஸனம் பண்ணினார்கள்.

பின்பு இளையாழ்வார் பெரியநம்பியை தெண்டன் ஸமர்ப்பித்து ஸ்ரீரங்கநாதனை ஸேவியாமல் பெருமாள் கோவிலுக்கெழுந்தருளி திருக்கச்சிநம்பியை சேவித்து இச்செய்தியை விண்ணப்பஞ்செய்ய அதுகேட்டு அவரும் மிகவுங்கிலேசமடைந்து ஸ்ரீசூர்ணபரிபாலனமும் திருவத்யயனமும் சிறப்பாகநடத்தியருளினார்.

இளையாழ்வார் திருக்கச்சிநம்பி திருவடிகளில் அத்யந்த பக்தியுடையவராய் அவரை ஆச்ரயிக்க எண்ணங்கொண்டிருந்தவர் திருக்கச்சிநம்பியை அமுதுசெய்யப் பண்ணுவித்துப் பின்பு தாம அந்த ப்ரஸாதத்தை ஸ்வீகரிக்கவேண்டுமென்றெண்ணி ஒருநாள் அவரைத்தமது திருமாளிகையில் அமுதுசெய்தருளவேண்டுமென்று ப்ரார்த்தித்துத் தாம திருமாளிகையில் அனேக பக்ஷியங்களோடு பெருமாளுக்காராதனஞ்செய்து பின்பு நம்பியை அழைப்பதற்குத் தெற்கு வீதியில் எழுந்தருளினார். நம்பியும் வேறு வழியாக இளையாழ்வார் திருமாளிகைக் கெழுந்தருளி திருவாலவட்ட கைங்கர்யத்துக்குப் போகவேண்டுமென்று கடுகியமுது செய்து எழுந்தருளினார்.

இளையாழ்வார்தேவிகள் நம்பி யமுதுசெய்த இலையைக் கோவிறைப்பள்ளிக் கோமயத்தாற் சுத்திசெய்து நீராடி நிற்கின்றவளவில இளையாழ்வார் நம்பியைத் தேடிக்காணாமல் மீண்டெழுந்தருளி தேவி நீராடினபடிகண்டு ஏனிப்பொழுது நீராடினையென்று கேட்க தேவியார் நம்பியெழுந்தருளி அமுதுசெய்து திருவாலவட்ட கைங்கர்யம செய்யும்படி கடுகியெழுந்தருளினார்; அவர் அமுதுசெய்த இலையைக்கோவிறைப்பள்ளிக் கோமயத்தால் ஸ்தலசுத்தி செய்து நீராடினேனென்றுசொல்ல அதுகேட்டு இளையாழ்வார் மனநொந்தித்துத் தேவியாரை மிகவுங் கோபித்துத் தமதிஷ்டம ஸித்தியாமையால் வ்யாகுலசித்தராய் நம்பியைச் சென்று ஸேவித்து அடியேன் சில எண்ணங்கள் எண்ணியிருந்தேன; அது குறித்துத் தேவரீர் பேரருளாளனுக்கு விண்ணப்பஞ்செய்து அவரருளிச்செய்ததை அடியேனுக்கு அருளிச்செய்யவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய நம்பியும அன்றிராத்திரியில் ஸ்ரீமந்நாராயணனது திவ்யமங்கள குணானுபவஞ்செய்துகொண்டு ஏகாந்தமாக இருக்கும்போது பெருமாள் நம்பிக்குமுன் ஸேவைஸாதித்தருளி உம்மை இளையாழ்வார் நம்மிடத்துக் கேட்கச்சொல்லியபடி - நாமே பரத்வம. தர்சனம் பேதமே. ப்ரபத்தியே உபாயம். அந்த்யகாலத்தில் நினைக்கவேண்டுமென்னும் நியமமில்லை. சரீரமுடிவில் மோக்ஷம். பெரியநம்பி திருவடிகளில் ஆச்ரயிக்கவேண்டும். என்னும் இவைகளைத் தெரிவிப்பீரென்று அருளிச்செய்ய நம்பியும் மகிழ்ந்து விடிந்தபின்பு எம்பெருமான் திருவாய்மலர்ந்தருளிய அவ்வாறு ரஹஸ்யங்களையும் இளையாழ்வாருக்கு அருளி

ச்செய்ய இளையாழ்வாரும் பகவன் நியமனத்தைக்கேட்டு மிகவும் உகந்தருளி நம்பியின் திருவடிகளில் தண்டன்ஸமர்ப்பிக்க, நம்பி எம்பெருமானது திருவுள்ளமும் இளையாழ்வாரது எண்ணமும் ஒன்றுபட்டிருந்ததேயென்று மிகவும் அத்புதமும் ஆனந்தமு மடைந்தருளினர்.

அப்போது ஸ்ரீரங்கத்தில் ஆளவந்தாருடைய ஸ்ரீபாதத்து முதலிகளெல்லாம் திரளாகக்கூடி பெரியநம்பியை நோக்கி இனி தர்சனத்துக்குப்ரவர்த்தகரெவரென்றுகேட்கப், பெரியநம்பி ஆளவந்தார் முன்பு அனுக்ரஹம்பண்ணியதும் திருவிரல்கள் நிமிர்ந்ததும் யாவர்க்குந் தெரிந்ததுதானே இதுகாரியத்தில் ஸந்தேகங் கொள்ளவேண்டுவதென்னவென்று சொல்ல, அதுகேட்டு முதலிகள்யாவரும் பெரியநம்பியைப்பார்த்து, தேவரீரே இளையாழ்வாரைக்கடாக்ஷித்து தர்சனத்துக்கு நடவராம்படி திருத்தி அழைத்துவரவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய நம்பியும் அப்போதே குடும்பஸமேதராய்ப்புறப்பட்டுப் பெருமாள்கோயிலுக்கெழுந்தருள இடையில் மதுராந்தகத்தில ஏரிகாத்தபெருமாள் கோவிலில் இறங்கியிருந்தவளவில் இளையாழ்வாரும் பேரருளாளர் நியமித்தபடியே பெரியநம்பிதிருவடிகளில்ஆச்ரயிக்கவேண்டுமென்றுபுறப்பட்டு மதுராந்தகத்தின் வழியாக எழுந்தருளி ஏரிகாத்தபெருமானை ஸேவிக்கும்பொருட்டு வரும்போது பெரியநம்பியைத் தூரத்திலேயேகண்டு ஆச்சர்யமடைந்து மிகவுமானந்தத்துடன் அநேகமாக தண்டன் ஸமர்ப்பித்து நிற்க நம்பியும் நமதுமனோபீஷ்டம் இதோ எதிரேவந்து லபித்ததென்று விரைந்துசென்று இளையாழ்வாரை வாரி எடுத்தணைத்துக் கொள்ள இளையாழ்வாரும் பேரருளாளர் நியமனத்தை விண்ணப்பஞ்செய்து அடியேனுக்குஇந்தக்ஷணமே தேவரீர் உபதேசஞ் செய்தருளவேண்டுமென்ன நம்பியும் பேரருளாளர் ஸந்நிதியிலே செய்கின்றோமென்ன இளையாழ்வார் காலம்போக்குதல் தகுதியன்றே - ஆளவந்தார் பக்கல்கண்டது அமையாதோவென்று விண்ணப்பஞ்செய்து இப்பொழுதே செய்தருளவேண்டுமென்று சொல்லித் திருவடிகளைப்பிடித்துக்கொள்ளப், பெரியநம்பிஇளையாழ்வாரைத் தமது திருக்கரங்களால் பிடித்தெடுத்து அழைத்துக்கொண்டுபோய் ஏரிகாத்தபெருமான்கோவிலில் மகிழமரத்தடியில் எழுந்தருளியிருந்து பஞ்சஸம்ஸ்காரங்களையும் மந்த்ரரத்னத்தையும் ப்ரஸா

தருளி இளையாழ்வாரை உடன்கொண்டுசென்று பெருமாள்கோயி லுக்கெழுந்தருளி பேரருளாளரை யடிபணிந்து இளையாழ்வார் திருமாளிகையில் குடும்பஸமேதராக எழுந்தருளி யிருந்துகொண்டு இளையாழ்வாருக்குத் த்ராவிடவேதங்களையும் வியாஸஸூத்ரார்த்தத்தையும் தர்சனரஹஸ்யங்களையுங் காலக்ஷேபஞ்செய்வித்துக்கொண்டிருந்தார்.

அந்நாள்களி லொருநாள் தமக்கு எண்ணெய்க்காப்புச் சாத்தின ஒரு ஸ்ரீவைஷ்ணவருக்குப் புராதனம் ஸாதியென்று தேவிகளுக்கு நியமிக்கத் தேவிகளும் இதிலில்லையென்றுசொல்ல அந்த விஷயத்தில் தமக்கு ஸம்சயமுண்டாகி தேவிகளை ஓர் காரியத்திலனுப்பிவிட்டுத் தாமுட்புகுந்து சோதித்துப் பாத்திரத்திலுள்ள புராதனத்தையெடுத்து தேவிகளையழைத்துக் காட்டி மிகவும் கோபமுடையவராக இருந்தார்.

பின்பு ஒருநாள் கிணற்றின் கரையில் இளையாழ்வார்தேவியருக்கும் பெரியநம்பிதேவிகளுக்கும் ஒருதோண்டிநிமித்தம் உண்டானசண்டையைப் பெரியநம்பி யறிந்தருளித் தமது தேவியைக் கோபித்து இளையாழ்வாருக் கறிவியாமல் தேவியுடன் ஸ்ரீரங்கத்துக்கெழுந்தருளினார். இளையாழ்வாரும் அனுஷ்டானஞ் செய்துகொண்டெழுந்தருளி பெரியநம்பியை ஸேவிக்கவந்த விடத்தில அவரைக்காணப்பெறாமல் அங்குள்ளவர்களை நோக்கிப் பெரியநம்பி எங்கேயெழுந்தருளியிருக்கின்றாரென்றுகேட்க அவர்கள் தோண்டிபற்றிநேரிட்ட சண்டையைக்குறித்துப் புறத்திலெழுந்தருளினாரென்று அறிவிக்க, அதுகேட்டுத் திடுக்கிட்டுத் திருவுள்ளங்கலங்கி தேவியைப்பார்த்து, முதலாவது திருக்கச்சிநம்பி விஷயத்திலும் இரண்டாவது எண்ணெயிடவந்த ஸ்ரீவைஷ்ணவர் விஷயத்திலும் மூன்றாவது பெரியநம்பிதேவிகள் விஷயத்திலும் அபசாரப்பட்டாய். ஆதலால் நீஇப்பொழுதே என்னைவிட்டு நீங்கவேண்டுமென்றுவெறுத்துப் பிறந்தகத்துக்கு அனுப்பிவிட்டுப் பின்பு பேரருளாளரை ஆசார்யராகக்கொண்டு த்ரிதண்டகாஷாயாதிகளையும் யதிராஜரென்னும் திருநாமமும்பெற்றுத் திருக்கச்சிநம்பியின் நியமனப்படி மடத்துக்கெழுந்தருளி பேரருளாளராலே மிகவுங் கடாக்ஷிக்கப்பட்டிருந்தார்.

பின்பு ஆளவந்தார் கருத்தினை நிறைவேற்றுகைக்குத் துணையாக ஸகலசாஸ்த்ர நிபுணனாயும் தேவதாந்தரபரனாயு மிருக்கி

ற உள்ளங்கைகொணர்ந்த நயினாரைத் திருத்தவேண்டுமெ று திருவுள்ளங்கொண்டு பெரியதிருமலைநம்பி ஸந்நிதிக்குத் தமது நத்தை விண்ணப்பத்திற்குறித்து அனுப்பி ஸ்ரீமந்நாராயணனு-டைய திவ்ய குணானுபவங்களை இடைவிடாது செய்துகொண்டிருந்தார்.

இவரிவ்வாறு ஆச்ரம ஸ்வீகாரஞ் செய்துகொண்ட செய்தியைக்கேட்டு, பாகினேயரான - முதலியாண்டானும - கூரத்தாழ்வானும்-பெருமாள்கோவிலுக் கெழுந்தருளி எதிராஜரை ஸேவித்து அவரது ஸந்நிதியில் பஞ்சஸம்ஸ்காரங்களைப்பெற்றுக் கொண்டார்கள். இவ்விருவரில் முதலியாண்டான் அவதாரகாலம்-சித்திரைமாஸம்-புனர்பூசநக்ஷத்ரம். அவதாரஸ்தலம் பச்சைவாரணப்பெருமாள் கோயிலென்கிற புருஷமங்கலம். இவர் பரியாயதிருநாமம் - தாசரதி - வாதூலதேசிகன்-ஸ்ரீவைஷ்ணவதாஸன்- இராமாநுஜபாதுகை. கூரத்தாழ்வான் அவதாரகாலம் தைமாஸம்-அஸ்தநக்ஷத்ரம். இவர் அவதாரஸ்தலம் - கூரம. இவர் - பிதா ராம ஸோமயாஜி. இவர் - ராமாம்சம. இவர்பரியாயதிருநாமம்-ஸ்ரீவத்ஸசின்னன். கடையாடுபதஞ்சலி எதீந்த்ரசரணன். இப்படிப்பட்ட முதலியாண்டானும கூரத்தாழ்வானும் எதிராசரைப் பிரியாமல் அடிமை செய்துஸேவித்துக்கொண்டிருக்கிற காலத்தில் யாதவப்ரகாசனுடைய மாதாவுக்குப் பேரருளாளரது நித்யஸேவையினால் இராமாநுஜரிடத்தில் அன்புண்டாகி அதுவேகாரணமாய் அவரது தர்சனத்தில் ருசி பிறந்து இத்தர்சனத்தில் யாதவப்ரகாசனும் உடன்பட்டானானால் க்ருதார்த்தனாவானென்று எண்ணிக்கொண்டு அஸ்திகிரியின் படியேறுநிற்க அப்பொழுது அது நன்றாவதாகவென்று உபச்ருதியுண்டாக அதுகேட்டுமகிழ்ந்து பின்பு இச்செய்தியைத் தன்புத்ரனான யாதவப்ரகாசனுக்குச் சொல்லி அப்பா நீயும் யதிராஜரிடத்தில் அன்புவைத்து அவரைப்போல் சிகை-உபவீதம்-த்ரிதண்டம முதலானவைகளைத் தரிக்கவேண்டுமென்ன, யாதவப்ரகாசனும் அதுகேட்டு இளையாழ்வார் அங்ஙனிலே தனக்கு நன்மையுண்டாகச்சொல்லிய நற்பொருள்கள் தனதுமனதிலே யழுந்தியிருக்கையாலும் கங்காயாத்ரைக்குப் போனபோது இளையாழ்வாருக்குப்பேரருளாளன் வேடனாகவந்து ஸஹாயஞ்செய்த மஹத்துவத்தைத் தான் அறிந்திருக்கையாலும் ப்ரஹ்மராக்ஷஸினால் தன்வரலாற்றையும் அவரதுபெருமையையும்

தெரிந்திருக்கையாலும் மாத்ருவாக்கியத்தை மறுக்கப்படாதென்பதினாலும் ஸம்மதித்து, அந்த உத்தமாச்ரமத்தை நானும் பெற்றுக்கொண்டு இராமாநுஜரிடத்தில் அன்புவைத்து ஸேவிப்பதற்கு இப்பொழுது என் பூர்வாச்ரமநிவர்த்திக்கு ப்ராயச்சித்தமாக பூப்ரதக்ஷணஞ்செய்யவேண்டியிருக்கிறது அதற்கு இப்பொழுது எனக்கு வார்த்திகதசையானதினால் சக்தியில்லையே என்னசெய்வேனென்று தாயாருடன் துக்கித்துக்கொண்டிருந்தார்.

பின்பு அன்றிரவில் பேரருளாளர் யாதவப்ரகாசனுடைய கனவிலெழுந்தருளி நீ நம்முடைய இராமாநுசனை ஒருதரம் ப்ரதக்ஷணம்பண்ணி அவரிடத்தில் முக்கோல்முதலானவைகளைப் பெற்று ஸந்யஸித்துக்கொள்ளென்று நியமித்து மறைந்தருளினார். யாதவப்ரகாசனும் அந்த நியமனத்தில் உறுதிகொள்ளாமல் திருக்கச்சிநம்பியைக்கண்டு நானொருஎண்ணங்கொண்டிருக்கின்றேன். அதுவிஷயத்தில் பெருமாள் திருவுள்ளமெப்படியிருக்கிறதோ, அதைப்பெருமாளிடத்தில் விண்ணப்பஞ்செய்து அவர் திருவுள்ளத்தை எனக்குத்தெரிவிக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்க நம்பியும் பெருமாளிடத்தில் யாதவப்ரகாசன் நினைத்திருக்கின்ற நினைப்பின் விஷயத்தில் தேவரீர் திருவுள்ளமெப்படியிருக்கின்றதென்று விண்ணப்பஞ்செய்துகொள்ள எம்பெருமான் அவனுக்குத் தன் தாய்சொல்லியதும் அதற்கவன்சொல்லியதும் பின்பு கனவில்தாம் போய்ச் சொல்லியதும் நம்பிக்கு அருளிச்செய்ய நம்பியுமவிடிந்த பின்பு இச்செய்தியை யாதவப்ரகாசனுக்குத் தெரியச் சொல்ல, யாதவப்ரகாசன் அதிசயித்து,நம்பிக்கையுடன் விச்வஸித்து அந்த க்ஷணமே அதிசீக்ரமாகவந்து இராமாநுசன் திருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பித்துத் தான்கண்ட கனவை விண்ணப்பஞ்செய்து அவரை ப்ரதக்ஷணமாகவந்து அவரநுமதிப்படி சிகை உபவீதம் த்ரிதண்டம் காஷாயம்முதலானவைகளைத்தரித்து ஸந்யஸித்துக்கொள்ள அவருக்கு இராமாநுசன் கோவிந்தஜீயரென்றுதிருநாமஞ்சாத்திப் பஞ்ச ஸம்ஸ்காராதிகளைச் செய்யப்பெற்றுத்தான்செய்த யதிதர்மஸமுச்சயமென்கிற க்ரந்தத்தைக்கடாக்ஷித்து ஸந்தோஷித்தருளவும்பெற்றார். இராமாநுசனால் இந்தப்ரகாரம் கடாக்ஷித் தருளப்பெற்ற கோவிந்தஜீயரென்பவரும் சிலகாலம் ஆசார்ய ஸந்நிதியிலேயிருந்து ஆசார்யநியமனப்படி பகவத்குணாநுபவங்களைச் செய்துகொண்டிருந்து சிலகாலையில் திருநாட்டுக்கெழுந்தருளினார்.

பின்பு ஸ்ரீரங்கநாதர் இராமாநுசனைத் தமக்குவேண்டு மென்று பேரருளாளருக்குத் திருமுகமனுப்பப் பேரருளாளரும் அதுகண்டு ஒருவர் தம்மபிமானத்தைப் புறம்பேபோகவிட்டால் நாமும் நமது இராமாநுசனைப் புறத்திற் போகவிடுவோ மென்று அருளிச்செய்தனுப்ப இதுசெய்தியைப் பெரியநம்பி முதலான முதலிகள் கேட்டு அதிசயங்கொண்டாலோசித்துத் தேவப்பெருமாள் கானரஸலோலராகையால் திருவரங்கப் பெருமாளரையர் எழுந்தருளி தேவகானத்தினாலேபாடி தேவப்பெருமாளை உகப்பித்து இராமாநுசனைத் தந்தருளவேண்டுமென்றால் தந்தருளுவாரென்று நினைத்து இதுகாரியத்தை அரையருக்கு விண்ணப்பஞ்செய்ய அரையரும் கோயிலில்நின்று மப்போதேபுறப்பட்டுப் பெருமாள்கோயிலுக்கெழுந்தருளி ஸமீபத்தே வரும்போது இவர்பந்துவாகிய பெருமாள்கோயில் வரந்தரும பெருமாளரையர் எதிர்கொண்டு ஆழ்வார்திருவரங்கப்பெருமாளரையரைத் தமதுதிருமாளிகையில் எழுந்தருளப்பண்ணி அமுதுசெய்வித்து மறுநாள் தேவப்பெருமாள் ஸந்நிதிக்கு அழைத்துக்கொண்டுபோக அரையரும் எம்பெருமானையடிபணிந்து தேவகானத்தினாற்பாடி அவர் திருவுள்ளத்தைமகிழ்விக்கப் பெருமாள் உவந்து கடாக்ஷித்தருளி உமக்குவேண்டுவதைச் சொல்லுவீரானால் தருகின்றோமென்ன, அரையர் இராமாநுசனைத் தந்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்யப் பெருமாள் திருவுள்ளம்வருந்தி அந்தப்படியே தந்தருள இராமாநுசனும் எம்பெருமானையடிபணிந்து அரையருடன் ஸ்ரீரங்கத்துக்கு எழுந்தருள அப்பொழுது நம்பெருமாள், சேனைமுதலியாரையும் - பெரிய நம்பியுள்ளிட்ட முதலிகளையும் மற்றபரிஜனங்களையும் இராமாநுசன் தூரத்தில்வரும்போதே எதிர்கொண்டழைக்கும்படி யனுப்பியருளித் தாமுந் திருக்கைத்தலத்தில் புறப்பட்டு அழகிய மணவாளன் திருமண்டபத்தளவும் எழுந்தருள இராமாநுசன் அதனைக்கண்டு விழுந்து விழுந்து பணிந்து மனமுருகிக் கண்களிலே ஆனந்தபாஷ்பஞ்சொரியத்தொழுது சென்று ஸந்நிதியிலே புகுந்து பெரிய பெருமாளை ஸேவித்துத் திருப்பரிவட்டமுதலான வரிசைகளைப் பெற்று அன்றுதொட்டு எம்பெருமான் திருவுள்ளப்படி கோயிற் காரியங்கள் முழுதும் சிறப்பாகத் தாமே நடத்திக்கொண்டு அகளங்கநாட்டாழ்வானைத் தமக்குசிஷ்யனாக்கிக் கோயிலுக்குப் புறக்காவலாகவைத்து எம்பெருமானது கைங்கர்யங்களில் எள்ளளவுங்

குறைவுநேரிடாதபடி அக்கைங்கர்யங்களுக்கு வேண்டிய உபகரணங்களைச் சேகரித்தலே காரியமாகக்கொண்டிருந்தருளினார்.

அந்தக்காலத்தில் கோவிந்தபட்டர் ஸ்ரீமந்நாராயணனது திருவடிகளில் மிகுந்த பக்தியைக்கொண்டு பெரியதிருமலைநம்பியினால் திருந்தினவராய் அவர்திருவடிகளை ஆச்ரயித்துப் பஞ்சஸம்ஸ்காரங்களைப் பெற்றுக்கொண்டு விசிஷ்டாத்வைதமே மேலான மார்க்கமென்று தெளிந்தசிந்தை யுடையவராயிருந்தார். அச்செய்தியை உடையவர் கேட்டு மிகவு முவந்தருளிப் பெரியநம்பியைத்தெண்டன்ஸமர்ப்பித்து, தேவரீர் திருவுள்ளத்திலுண்டான ரஹஸ்யங்களை அடியேனுக்கு அனுக்ரஹித்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்ய நம்பியும் சிலரஹஸ்யங்களையுபதேசித்து மற்றவைகளைத் திருக்கோட்டியூர்நம்பி ஸந்நிதியில் பெற்றுக்கொள்ளுமென்று நியமிக்க உடையவரும் திருக்கோட்டியூருக் கெழுந்தருளி நம்பியைத் தண்டன்ஸமர்ப்பித்து அடியேனுக்கு ரஹஸ்யார்த்தங்களை க்ருபைசெய்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய நம்பியும் இவருடைய அத்யவஸாயத்தை யறியவேண்டுமென்று முகங்கொடுத்து வார்த்தை சொல்லாம லிருக்க உடையவருங்கோயிலுக்கெழுந்தருளினார்.

பின்பு நம்பி உத்ஸவஸேவார்த்தமாகக் கோயிலுக்குவந்து மீண்டெழுந்தருளும்போது நம்பெருமாள் நம்மிராமானுசனுக்கு ரஹஸ்யார்த்தங்களை வெளியிடுமென்று நம்பிக்கு நியமிக்க, நம்பியும் ஸ்வாமி! ஒருவருஷம் சேவியாம லுபதேசிக்கப்படாதென்று சாஸ்த்ர முகத்தாலே தேவரீரே நியமித்திருக்க அந்த நியமனத்தை இப்போது தடுக்கப்போமோ வென்ன, பெருமாளும் சிஷ்யலக்ஷணம் நிரம்பாதவர்க்கே அந்தவிதியன்றி சிஷ்யலக்ஷணம் நிறைந்த நம்மிராமானுசனிடத்து அது வேண்டுவதில்லை யென்றருளிச்செய்ய நம்பியும் இராமானுசனை நோக்கித் திருக்கோட்டியூருக்கு வாருமென்று சொல்லி யெழுந்தருளினார். பின்பு இராமானுசரும் திருக்கோட்டியூருக் கெழுந்தருள நம்பியும் இதுதருணமன்று போய்வாருமென்ன இவருமீண்டு கோயிலுக்கு வந்து விட்டார். இந்தப்படி பதினெட்டு முறைவந்து போயின் பின்பு உடையவருங் கோயிலுக்கு வந்த நம்பி சிஷ்யர்களில் ஒருவர்முகமாகத் தம்முடைய ஆர்த்தியை விண்ணப்பஞ் செய்துபோகவிட நம்பியும் அதுகேட்டு உவந்தருளி, தண்டும் பவித்ரமுமாகத் தாமொரு

வருமே வரக்கடவரென்று சொல்லியனுப்ப உடையவரும் அதுகேட்டு மிகவும் மகிழ்ச்சியோடு கூரத்தாழ்வானையும் முதலியாண்டானையும் அழைத்துக்கொண்டு நம்பி ஸந்நிதிக்குச்சென்று தண்டன்ஸமர்ப்பித்து நிற்க நம்பியும் உம்மையொருவராக வரச்சொன்னதற்குமாறாக இவர்களை ஏன் அழைத்துவந்தீரென்ன உடையவரும் தேவரீர் தண்டும் பவித்ரமுமாகவர நியமித்தபடி தண்டும் பவித்ரமுமானவர்களை யழைத்துக்கொண்டு வந்தேனென்ன நம்பியும் இவருள் தண்டெவர்? பவித்ர மெவர்? என்று கேட்க உடையவர் முதலியாண்டானைத் தண்டென்றும் கூரத்தாழ்வானைப் பவித்ரமென்றும விண்ணப்பஞ்செய்ய நம்பியும இவர்கள்தவிர மற்றொருவர்க்குஞ் சொல்லவேண்டுவதில்லையென்று நியமித்துத் திருமந்த்ரார்த்தத்தை யுபதேசித்தருளினார்.

உடையவரும் அதன்பின்பு பிறர்போதிக்கும அனர்த்தங்களைப்பொறுக்க மாட்டாதவராகையால் திருவோலக்கத்திலிருக்கும் அநேகம ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அர்த்தரஹஸ்யார்த்தங்களை ஸாதித்தருளினார். நம்பியும் அதுகேட்டு உடையவரை அழைத்து என் நியமனத்தை மறுத்த உமக்கு இதில் பலனேதென்ன உடையவரும் எனக்கு நரகமேபலனென்ன, நம்பியும இதறிந்தும் இப்படிச் செய்யலாமோ வென்ன உடையவரும் நானொருவன்மாத்திரம் நரகானுபவஞ்செய்தாலும தேவரீர் திருவடி ஸம்பந்தத்தினாலே அந்த ஆத்மாக்களெல்லாம் உஜ்ஜீவிப்பார்களென்று சொன்னேனென்ன நம்பியும அதற்குமிகவும் உவந்தருளி எம்பெருமானாரே வாருமென்று எடுத்தணைத்துக்கொண்டு இன்னுமுமக்கு எதார்த்தங்களைச் சொல்லுகிறோம் இப்போதுபோய் மறுபடிநீரொருவராகவே வாருமென்ன உடையவருங் கோயிலுக்கெழுந்தருளிப் பின்பு திருக்கோட்டியூருக்குவர நம்பி யுவந்தருளி பரத்வப்ரதிபாதகமான சரமசுலோகார்த்தத்தை ஸாதித்தருள அதுகேட்டு மகிழ்ந்து கோயிலுக் கெழுந்தருளிப் பின்பு நம்பிநியமனத்தாலே கூரத்தாழ்வானை மாஸோபவாஸம்வைத்து இவ்வர்த்தங்களை அவருக்கருளிச்செய்ய முதலியாண்டானும் அடிபணிந்து அடியேனுக்கும் அருளிச்செய்யவேண்டுமென்றுகேட்க உடையவரும் ஆழ்வானொருவருக்குமே நம்பி நியமனம் ஆகலால் நீர் நம்பி ஸந்நிதிக்குப்போய்க் கேளுமென்ன ஆண்டானும் திருக்கோட்டியூருக்குப்போய் நம்பியை ஆறுமாஸம்வரையில் ஸேவித்துநிற்க ஒருநாள் நம்பி ஆண்டானைநோ

க்கி உம்மிடத்துள்ள முக்குறுமபும் நீங்கிஞல் எம்பெருமானுர் தாமேயருளிச்செய்வார் அவ்விடமேபோமென்று தம்முடைய திருவடிகளை ஆண்டான் திருமுடியில்வைத்து விடைகொடுத்தருள ஆண்டானும உடையவர் ஸந்நிதியில்வந்து தண்டன்ஸமர்ப்பித்து நிற்க உடையவர் உவப்புடன் ஆண்டானுக்கு அவ்வர்த்தத்தையருளிச்செய்து இப்போது நமக்கு தண்டும் பவித்ரமும் கையமர்ந்ததென்று களிப்புற்றிருந்தார்.

பின்பு சிலகாலையில் திருக்கோட்டியூர் நம்பி கோயிலுக்கெழுந்தருளித் திருமாலையாண்டானிடத்துத் திருவாய்மொழிக்கு அர்த்தங்கேளுமென்று உடையவருக்கு நியமித்துத் திருக்கோட்டியூருக்கெழுந்தருளினார். பின்பு எம்பெருமானாருக்குத் திருமாலையாண்டான திருவாய்மொழிக்கு அர்த்தங்களைச்சொல்லிவர உடையவர் சிலபாசுரங்களுக்கு நுட்பாகிய அர்த்தங்களைச்சொல்லத் திருமாலையாண்டான் இது ஆளவந்தாரிடத்தில் கேட்டதல்லவென்றுதிரஸ்கரித்து அன்றுதொட்டு திருவாய்மொழிசொல்லுவதைத் தவிர்ந்தார். பின்பு இதைத் திருக்கோட்டியூர்நம்பி கேட்டருளி கோயிலுக்குவந்து திருவாய்மொழி காலக்ஷேபம் நடக்கின்றதோவென்று கேட்டருளத் திருமாலையாண்டான நடந்தவிருத்தாந்தத்தைச்சொல்ல நமபியும உடையவர்சொல்லிய அர்த்தத்தை ஆளவந்தார் அருளிச்செய்ய நாம் கேட்டிருக்கிறோமென்றுசொல்லித் திருமாலையாண்டானையும் பெரியநமபியையுங்கூட்டிக்கொண்டு உடையவர்மடத்துக்கெழுந்தருளி முன்புபோல் திருவாய்மொழி காலக்ஷேபம நடக்கும்படி செய்வித்துத் திருக்கோட்டியூருக்கெழுந்தருளினார்.

மறுபடியும் திருவாய்மொழிகாலக்ஷேபம் நடக்கும்போது ஓர் பாசுரத்துக்கு ஆண்டான்சொன்ன அர்த்தங்கேட்டு ஆளவந்தாரிப்படி யருளிச்செய்யாரென்று உடையவர் விண்ணப்பஞ்செய்ய ஆண்டானும் நீர் ஆளவந்தாரைக் காணுதிருக்கவும் இவ்வாறு சொல்லுவதற்குக் காரணமேதென்ன உடையவரும் ஏகலவ்யனென்பவன் குருவைக்காணுமலிருந்தும் குருபக்தியினுல் வில்வித்தையிற் சிறந்தவனானதுபோல அடியேன் ஆளவந்தாரைக் காணுமலிருக்கினும அவரது அனுக்ரஹத்தால் கற்றுக்கொள்பவனுக இருக்கின்றேனென்றுசொல்ல அதனை யாண்டான்கேட்டருளி இவர் அவதாரபுருஷரேயென்று நிச்சயித்து உடையவரை அதிசயித்திருந்

பின்பு சிலநாளில் திருவாய்மொழி காலக்ஷேபம் முடிந்து பெரியநம்பி உடையவரைப்பார்த்து ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையரிடத்திலே இன்னுமொரு பொருளுண்டு அந்த [illegible]ர் பக்கல்சென்று கேளுமென்று அருளிச்செய்ய உடையவரும் அரையர் ஸந்நிதியில் ஆறுமாதங்காத்து அவரிடத்து சரமார்த்தங்களைக்கேட்டருளினார். பின்னர் ஒருநாள் உடையவர் மாதுகரம் பண்ணுகின்றபோது மாதுகரத்திலே விஷத்தைக்கலந்து கொடுக்கச்சொல்லி ஓர்பெண்பிள்ளையை அவளது புருஷனைக்கொண்டு ஒருவன்சொல்லுவிக்க அவளும் விஷங்கலந்த மாதுகரத்தையிட்டு, தண்டன்ஸமர்ப்பித்துப் போக உடையவர் அதினுண்மையை யறிந்து உபவாஸமாகவிருந்தார். இதைத் திருக்கோட்டியூர்நம்பி கேட்டு எழுந்தருளிக் கடிய வெய்யலில் திருக்காவேரியில் எழுந்தருளாநிற்க உடையவர் முதலிகளோடெழுந்தருளி தண்டன்ஸமர்ப்பித்துக்கொண்டிருக்க நம்பியும எழுந்திருக்கச்சொல்லாமலிருக்கக் கிடாம்பியாச்சானும இதென்ன ஆசார்ய சிஷ்யக்ரமம? பூமாலையை வெய்யலிலே போடுவார்களோவென்று உடையவரைப் பரிந்தெடுக்க நம்பியும் கிடாமபியாச்சானைப்பார்த்து உம்மைத் தான் நாம் தேடுகின்றோம். இன்றுமுதல் நீர் இருவருக்குத் தளிகைபண்ணி ஏகமாதுகரமாக ப்ரஸாதியுமென்று நியமிக்கக் கிடாம்பியாச்சானும் அந்தப்ரகாரஞ் செய்துகொண்டுவந்தார். பின்பு யக்ஞமூர்த்தியென்கின்ற மஹாவித்வான் கங்காஸ்நானஞ்செய்யப்போய் அங்குள்ள வித்வான்களை ஜயித்து மாயாவாத ஸந்யாஸியாய்க் கல்வியினாலும் சிஷ்யஸம்பத்தாலும மிகுந்தவனாய் உடையவருடைய வைபவத்தைக்கேட்டு அங்குநின்றும் புறப்பட்டுக் கோயிலுக்குவந்து உடையவரைநோக்கி என்னுடன் தர்க்கிக்கவேண்டுமென்ன இவருமப்படியே செய்கிறோம; நீர் தோல்வியடைந்தால என்ன செய்கின்றீரென்ன அவனும் நான்தோற்றால் உம்முடைய பேரையும் வைத்துக்கொண்டு உமது சித்தாந்தத்தில் புகுதக் கடவேனென்ன உடையவரும் நாம்தோற்றால் க்ரந்த ஸந்யாஸம் பண்ணித் தோற்படைந்தோமென்கிறோமென்ன அவனும் ஸம்மதித்துப் பதினெட்டுநாள்வரையெல்லையிட்டு வாதம்பண்ணுநிற்கப்பதினேழுநாள்வரையும் அவனது கக்ஷி ப்ரபலமாயிருந்ததை உடையவர் அறிந்து நாளைக்குவருவதாக எழுந்திருந்து அவனை யனுப்பித் தாம் வியாகுலசித்தராய் மடத்துக்கெழுந்தருளிப் பேரருளாளரையாராதித்து அமுதுசெய்வித்து, தொன்று தொட்டு விஜயத்துடன்

நடந்தேறிவந்த இந்த தர்சனம் என் காலத்தில் தோற்பது தகுதியோ என்று விண்ணப்பஞ்செய்து தாம் அமுதுசெய்யாதுவெறும்புடனே கண்வளர்ந்தருளப் பேரருளாளர் அவர்ஸ்வப்னத்திலெழுந்தருளி இராமானுசமுனியே உமக்குப்பெரிய சிஷ்யனைத் தந்தோம் நீர் ஆளவந்தார் செய்தருளின மாயாவாத கண்டனத்தைச்சொல்லி அவனை ஜெயிக்கக்கடவீரென்ன உடையவரும் விடிந்தபின்பெழுந்து நித்யகர்மானுஷ்டானஞ் செய்தருளிப் பேரருளாளரை ஸேவிக்க எழுந்தருளும்போது யக்ஞமூர்த்தி யிவருடைய திடத்தைக் கண்டு இவரே நம்மை ஜயிப்பாரென்று நினைத்து எழுந்திருந்து உடையவர் திருவடிகளிலே ஸேவித்துத் தேவரீருக்குத்தோற்றேனென்று ஸ்ரீபாதுகையை யெடுத்துக்கொண்டு அடியேனுக்கு இரங்கி அருள்செய்ய வேண்டுமென்ன உடையவரும் இது என்னென்று அதிசயித்து ஏன் தர்க்கியாமல் இவ்வாறு செய்தீரென்ன அவன் பெரியபெருமாளே தேவரீராகையாலே தேவரீர் திருமுன்பு வாய்திறக்க வலியுடையே னல்லேனென்ன உடையவர் ஆயினும்இதனைக்கேட்கக்கடவீரென்று மாயாவாதகண்டனத்தை உபன்யஸிக்க அதுகேட்டுஅவரும் வியப்படைந்து ஏகதண்டத்தை முறித்தெறிய உடையவரும் அவருக்கு த்ரிதண்டத்தையும் யக்ஞோபவீதத்தையும் தரிப்பித்துப் பஞ்சஸம்ஸ்காரங்கள் செய்தருளி அருளாளப்பெருமா னெம்பெருமானாரென்று திருநாமஞ்சாத்தியருளிப் பெரியபெருமாளையும் பேரருளாளரையும் ஸேவைசெய்வித்துத் தாமமுதுசெய்து அவருக்கு ப்ரஸாதம ஸாதித்து திவ்யப்ரபந்தங்களை யோதுவித்து சிலரஹஸ்யங்களை ஸாதித்தருளிப்பின்பு அனந்தாழ்வானையும் மருதூர்நம்பியையும் அருளாளப்பெருமானெம்பெருமானாருடைய திருவடிகளில் ஆச்ரயிப்பித்தருளி அனந்தாழ்வானைத் திருமலைக்கனுப்பிச் சிலநாள் சென்றபின்பு கோயிலினின்று புறப்பட்டுத் திருக்கோவலூராயனை ஸேவித்துப்பெருமாள்கோவிலுக்குஎழுந்தருளித் திருக்கச்சிநம்பியை ஸேவித்து அவரைமுன்னிட்டுப் பேரருளாளரையடிபணிந்து அங்குநின்றும் புறப்பட்டுத் திருமலைக்கெழுந்தருளும்போது வழிகாண்பித்தஏற்றமிறைப்பானை உகந்து திருமலைத்தாழ்வரையில் எழுந்தருளியிருக்கும பராங்குசபரகாலாதிகளான ஆழ்வார்பதின்மரையும் ஜீர்ணோத்தாரணம செய்வித்துத் திருப்பதியிலெழுந்தருளி விட்டல்தேவனைத்தமக்கு சிஷ்யனாக்கிக்கொண்டு தமதுசிஷ்யர்கள் முப்பதுதிருநாமங்களையு மத்திருப்பதியில் குடியேற்றி இளமண்டியம் என்கி

ன்ற க்ராமத்தைக் கைப்பற்றாகவிடுவித்து முதலிகள் வேண்டுதலால் திருமலையேறி திருவேங்கடமுடையானை ஸேவித்து இறங்கியருளிப் பெரியதிருமலைநம்பி ஸந்நிதியில் ஒருவர்ஷகாலம் ஸ்ரீமத்ராமாயண காலக்ஷேபஞ்செய்தருளி அவரிடத்திலிருந்த கோவிந்தபட்டரை யழைத்துக்கொண்டு திருப்புட்குழி வழியாகக் கச்சிநகரடைந்து பேரருளாளரையடிபணிந்து திருக்கச்சிநம்பி ஸந்நிதியில் எழுந்தருளியிருந்தார்.

அப்பொழுது கோவிந்தபட்டருக்குப் பெரியதிருமலை நம்பியைப் பிரிந்துவந்த க்லேசத்தினால் தேஹமுழுதும் வெளிறவுடைய அதனைக்கண்டு உடையவர் அவர் கருத்தின்படி திருமலைக்கனுப்பத் திருமலைநம்பியும் அவரைச் சேர்த்துக்கொள்ளாமல் திருப்பி அனுப்ப, கோவிந்தபட்டரும் உடையவர் ஸந்நிதியில்வந்து தன்னை ஸமர்ப்பிக்க உடையவரும் அவரையங்கீகரித்தருளி தம்மிடத்து அளவிறந்த பக்தியுள்ளவராயிருந்த அவரை உடனழைத்துக்கொண்டு கோயிலுக்கெழுந்தருளி அங்கிருக்கின்ற நாளில் கோவிந்தபட்டருடைய விரக்தியைக்கண்டு அவருக்கு ஸந்யாஸாச்ரம ஸ்வீகாரஞ்செய்வித்து எம்பெருமானாரென்று திருநாமஞ்சாத்த, கோவிந்தபட்டர் தேவரீருடைய திருவடிகளை யாச்ரயித்திருக்கின்ற அடியேனுக்குத் தங்கள் பெயரிட வேண்டுமென்ன உடையவரும் அப்பெயருள் இடைக்குறைசெய்து தலையுங் கடையுங் கூட்டி எம்பாரென்று திருநாமஞ்சாத்தியருளினார். பின்பு ஒருநாள் சிலதேசாந்திரிகள்வந்து அவ்விடத்திலுள்ளவர்களை எம்பெருமானார் மடமெங்கேயென்றுகேட்க அவர்கள் எந்த எம்பெருமானார் மடமென்று ஸம்சயிக்க அவர்கள் இரண்டெம்பெருமானாருண்டோவென்றுகேட்க அங்குள்ளார் அருளாளப்பெருமானெம்பெருமானாரும் ஒருவருண்டென்ன இவ்வார்த்தைகளைக் கேட்டிருந்த அருளாளப்பெருமானெம்பெருமானார் நாம் வேறாக ஓர்மடத்திலிருக்கையால் இவ்வாறு நேரிட்டதென்று தாமிருந்த மடத்தை யிடித்துவிட்டு உடையவர் திருவடிகளை யிறுகப்பற்றி இச்செய்தியை விண்ணப்பஞ்செய்து வ்யாகுலப்பட உடையவரும் அவரைப்பிரியாமல் தமதுமடத்திலேயிருக்கும்படி நியமித்தருளினார். அருளாளப்பெருமானெம்பெருமானாரும் உடையவர் ஸந்நிதியிலே அடிமைசெய்துகொண்டு - ஞானஸாரம் - ப்ரமேயஸாரம் என்கின்ற இரண்டு ப்ரபந்தங்களைச் செய்தருளினார். பின்பொருநாள்

உடையவர், கூரத்தாழ்வான் அருளாளப்பெருமா ளெம்பெருமானார் முதலியாண்டான் ஆகிய மூவரையும் சேர்த்துக்கொண்டு ஸ்ரீபாஷ்யஞ் செய்யத் திருவுள்ளம் பற்றினர். அப்பொழுது போதாயனவிருத்தி கிரந்தமில்லாமையை யுணர்ந்து விசாரித்து அது வடக்குத்திசையிலிருப்பதாகக் கேள்விப்பட்டு ஆழ்வானுடன் உடையவர் அங்கெழுந்தருளி உபாயத்தாலே அக்கிரந்தத்தை வாங்கிக்கொண்டு இருவருமாகத் திருக்கண்ணமங்கைக்கு அதனைக்கொண்டுவருகிறதாக யதந்த்ரம் போது அவ்விடத்தார் சிலர் அக்கிரந்தத்தை அபஹரித்துக்கொண்டு போக உடையவரும் அதனை யிழந்து வருந்தி யாதுஞ் செய்வதறியாதிருக்க ஆழ்வான் தேவரீர் கடாக்ஷத்தாலே அக்கிரந்தமெல்லாம் அடியேனுக்கு மனனமாயிருக்கின்றது [illegible] விண்ணப்பஞ்செய்ய உடையவரும் [illegible] ஆழ்வானுடனே கோயிலுக்கெழுந்தருளி ஸ்ரீபாஷ்யத்தை [illegible] முடித்தருளினார்.

பின்பு முதலிகளெல்லாருமாக உடையவரைத் தண்டனிட்டு [illegible] தேசாந்தரங்களிலுள்ள [illegible] அநேகங்களான திவ்ய தேசங்களையும் சேவிக்க [illegible] விண்ணப்பஞ்செய்ய உடையவர் அதனைத் [illegible] திருவுள்ளம் பற்றி [illegible] முதலிகளுடன் புறப்பட்டு [illegible] சோழமண்டலத்திலுள்ள திருக்குடந்தை முதலிய திவ்யதேசங்களை [illegible] திருமலை முதலான திருப்பதிகளை [illegible] சேவித்து [illegible] அங்குள்ள [illegible] ஆழ்வாரையடிபணிந்து [illegible] விண்ணப்பஞ்செய்து [illegible] திருப்பதிகளையும் சேவித்து அங்குள்ளபுறச்சமயங்களை நிரசித்துத் திருக்குறுங்குடிக்கெழுந்தருளி நம்பியைச் சேவித்து அவர் திருவுள்ளப்படியே அவரது திருச்செவியில் த்வயத்தை அநுஸந்தித்தருள நம்பியும் கரைகடந்த களிப்புடையவராகி இராமாநுசனையுடையோமென்றருளிச்செய்ய உடையவரும் அவருக்கு ஸ்ரீவைஷ்ணவநம்பியென்று தாஸ்ய நாமஞ்சாத்திப் பின்பு அங்குநின்றும் புறப்பட்டுத் திருவண்பரிசாரம் - திருவாட்டாறு முதலிய திருப்பதிகளை சேவித்துத் திருவ

னந்தபுரத்துக்கெழுந்தருளி எம்பெருமானை யடிபணிந்து அங்கே இராமாநுஜமடமென்று ஓர் மடங்கட்டுவித்து மலைநாட்டிலுண்டான திருப்பதிகளை ஸேவித்து அங்குள்ள புறச்சமயிகளை வென்று மேற்குச்சமுத்திரக் கரைவழியாக உத்தரதேசத்துக் கெழுந்தருளி வடமதுரை - ஸாளக்கிராமம் - த்வாரகை பதரிகாச்ரமம் - நைமிசாரண்யம் - புஷ்கரம் - கோகுலம் - கோவர்த்தனம் - பிருந்தாவனம் - திருக்கங்கைக்கரைக் கண்டம் முதலான திருப்பதிகளையும் ஸேவித்து அங்குள்ள புறமதங்களையும் ஜயித்துப் பட்டமண்டபத்தையடைந்து ஸரஸ்வதீபீடத்துக் கெழுந்தருளினர்.

அப்பொழுது ஸரஸ்வதி தேவியார் தாமே வாசற் கதவைத் திறந்துகொண்டெதிரே புறப்பட்டு வந்து உடையவரைப் பார்த்து ஒருசுருதிக்குப் பொருள் கேட்க உடையவரும் அதன் பொருளை விரித்துரைக்க அப்பொருளைக் கேட்ட ஸரஸ்வதி தேவி ஸந்தோஷித்து உடையவர் அருளிய ஸ்ரீபாஷ்யத்தைத் தம்முடைய முடியில் வைத்துக்கொண்டு ஸ்ரீபாஷ்யகாரரென்ற திருநாமஞ்சாற்றி அவருக்கு ஸ்ரீ ஹயக்ரீவனையும் ஆராதனம் செய்யும்படி கொடுத்து முன் இவ்விடம் வந்த சங்கரர் காணக்கேட்ட இந்த ச்ருதிவாக்கியத்துக்கு என் இருதயமறியாமல் பொருள் போதித்துப் போயினான். நீரறிந்து சொன்னீரென்று மிகவும் புகழ்ந்து மகிழ்ந்து கொண்டாடினாள். பின்பு உடையவர் அங்குள்ள புறச்சமயங்களையும் ஜயித்து அத்தேசத்தரசனையும் தமக்கு சிஷ்யனாக்கிக்கொண்டு அவ்விடத்துத் தமதுபேரில் யந்த்ரப்ரயோகம் பண்ணின வித்வான்களைப் பித்தேறித் திரியவும் அவ்வேதனை வென்று கோள்பற்றி அவர்களுக்கு அபயமீந்தத் தெளிவித்து சிஷ்யர்களாக்கிக்கொண்டு புறப்பட்டு வாரணாசிவழியாக ஸ்ரீ ஜகந்நாதத்துக்குவந்து எம்பெருமானை யடிபணிந்து அங்குள்ள புறச்சமயங்களை ஜயித்து அங்கு தம் பெயரால் ஓர் மடமுண்டாக்கி அதைவிட்டுப் புறப்பட்டு ஸ்ரீகூர்மம் ஸிம்ஹகிரி ஸ்ரீஅஹோபிலம் முதலிய திருப்பதிகளை ஸேவித்துக்கொண்டு திருமலைக்கெழுந்தருளியிருக்க அப்போது கபடிகளாகிய சிலசைவர்கள் வந்து திருவேங்கடமுடையானைத் தங்கள் தெய்வமென்று வழக்குப்பேச உடையவரும் சூலதமருகங்களையும் சங்கசக்ரங்களையும் ஸந்நிதியின் முன்வைத்து அவர் எவைகளைத் தரிக்கின்றாரோ அவைகொண்டு இன்னாரென்று அறிந்துகொள்ளலாமென்று அருளிச்செய்ய அவர்களும் ஸம்மதி

த்து அந்தப்ரகாரமே செய்யத் திருவேங்கடமுடையான் சங்கசக்ரங்களைத் தரித்திருந்தபடி கண்டு எல்லவருமானந்தித்து அர்ச்சைசவர்களை நிராகரித்து விட்டார்கள்.

எம்பெருமானைச் சங்கசக்ரங்களைத் தரிப்பித்தருளிய காரணம்பற்றி அன்றுதொட்டு அப்பனுக்குச் சங்காழியளித்தருளும் பெருமானென்றும் உடையவருக்குத் திருநாமமொன்றுண்டாயிற்று. பின்பு அங்குநின்றும் புறப்பட்டு மற்றுள்ள திருப்பதிகளை ஸேவித்துக்கொண்டு கோயிலுக்கெழுந்தருளி பகவத் குணானுபவஞ்செய்துகொண்டிருந்தார். அவ்வாறிருக்கின்ற நாள்களிலோர் நாள் ஆழ்வான் மாரிகாலத்தில் பகலெல்லாம் ஓயாது மழைபெய்தலால் உஞ்சவ்ருத்திக் கெழுந்தருளாமல் திருவாராதனஞ் செய்து தீர்த்தமும் துளஸியும் ஸ்வீகரித்துப் பட்டினியாக எழுந்தருளியிருக்க அன்று ராத்திரி பெரியபெருமாள் அமுதுசெய்யுங்காலத்தில் ஊதுந்திருச்சின்னவோசையைக்கேட்ட ஆண்டாள் பெருமாளை நோக்கி உம்முடைய பக்தர் பட்டினியாயிருக்க தேவரீர் அமுதுசெய்யலாமோவென்று விண்ணப்பஞ்செய்ய, பெரியபெருமாளும் திருவுள்ளமிரங்கி உத்தமநம்பியென்பவர்க்கு நியமிக்க அவரும் அக்காரவடிசில் முதலான ப்ரஸாதங்களை யெடுத்துக்கொண்டுபோய் நம்பெருமாள் நியமனத்தால் வந்த இதனை தேவரீர் ஸ்வீகரிக்க வேண்டுமென்றுசொல்ல ஆழ்வானும் இது மஹாப்ரஸாதமென்று அங்கீகரித்து ஆண்டாள் கருத்தைக் கேள்விப்பட்டு வெறுத்து அதிலோர் திரளை யமுதுசெய்து மற்றோர்திரளை ஆண்டாளுக்குங் கொடுத்தருளினார். பட்டரும் ஸ்ரீராமப்பிள்ளையும் அவதரிப்பதற்கு இத்திரளே காரணமாகும்.

பின்பு நம்பெருமாள் அநுக்ரஹத்தால் வைகாசி௴ அனுராதத்தில் ஆழ்வானுக்கு ஒருபுத்ரரவதரித்தார். அதுகேட்டு உடையவர் ஆழ்வான் திருமாளிகைக்கெழுந்தருளி எம்பாரைக்கொண்டு குழந்தையை யெடுப்பித்துவந்து குளிரநோக்கி எம்பாரைப்பார்த்து நீரே இக்குழந்தைக்கு ஆசார்யராகக்கடவீரென்று நியமித்து அந்தப் புத்ரருக்குத் தமது திருக்கைகளால் பஞ்சாயுத திருவாபரணங்களைச் சாத்தியருளி ஸ்ரீபராசரபட்டரென்று நாமகரணஞ் செய்து எம்பாரைக்கொண்டு திருவிலச்சினையுஞ் சாத்துவித்து ஆளவந்தாருடைய இரண்டாவது கருத்தைப் பூரித்தருளினார். இவர் ஸ்ரீரங்கநாதாம்சம். அனந்தரம் எம்பார் திருத்தம்பியாகிய

சிறியகோவிந்தப்பெருமாளுக்கு ஓர் குமாரரவதரிக்க உடையவர் கடாக்ஷித்தருளி அப்புத்ரருக்குப் பராங்குசநம்பியென்று திருநாமஞ்சாத்தி ஆளவந்தாருடைய மூன்றாங்கருத்தைப் பூரித்தருளினார். பின்பு நம்பெருமாள் பசுங்குழவியாகிய பட்டரை மஞ்சள்நீர் குடிப்பித்துப் புத்ரஸ்வீகாரம் பண்ணிக்கொண்டு தமது ஸந்நிதியில் தொட்டிலிட்டு நாய்ச்சியார் சீராட்டி வளர்க்க வளர்ந்துவந்தார். ஒருநாள் பெருமாளுக்குத் தளிகை ஸமர்ப்பித்திருக்கும்போது அப்ரஸாதத்தில் தமது சிறுகைகளால் அளைந்து அள்ளிக்கொண்டு அமுதுசெய்யப் பெருமாள் அதுகண்டு உவந்தருளித் தாமும் அமுதுசெய்தருளினார். பின்பொருநாள் உடையவர் அதிபாலயராயிருக்கின்ற பட்டர் திருக்கையில் ஓர் ச்லோகத்தைக்கொடுத்து வாசிக்கச்சொல்லப் பட்டரும் அருகிலுள்ளவர் அதிசயிக்கும்படி வாசித்தருள அதுகேட்டு உடையவர் மிகவு முவந்தருளி முதலிகளெல்லாரையு மழைப்பித்து நம்மிடத்தி லெவ்வாறிருக்கின்றீர்களோ அவ்வாறே இவரிடத்து மிருக்கக்கடவீர்களென்று நியமித்தருளினார்.

பின்பொருநாள் எம்பெருமானார் பட்டர் வாசிக்கின்றதைக்கேட்டு அத்புதமவிளங்கிய இக்குழந்தை யாருடைய தர்சனத்துக்குக் கீர்த்தியுண்டுபண்ணுவாரென்று சொல்லி மகிழ்ந்தருளினார். பின்பொருநாள் ஆழ்வான் திருவாய்மொழி யநுஸந்தித்துக்கொண்டிருக்கும்போது சிறுமாமனிசரென்றதை அஞ்சுவயதுள்ள பட்டர் கேட்டு சிறுமை பெருமை யொன்றிலே கூடுமோவென்று சங்கிக்க அதுகேட்டு ஆழ்வானுமுவந்தருளி சிறியாச்சானையும் அருளாளப்பெருமாளெம்பெருமானாரையுங் காட்டித் திருமேனி சிறுத்தும் ஞானம் பெருத்துமிருக்கின்ற இவர்களைக் கண்டீர் சிறுமாமனிசரென்றதென்று ஸமர்த்திப்பித்தருளினார்.

பின்பொருநாள் பட்டர் திருவீதியிலே புழுதியளைந்து விளையாடுகின்றபோது ஒருவன் ஸர்வஜ்ஞபட்டனென்று காளமூதிக்கொண்டுவரப் பட்டர் அதனைக்கேட்டு உடையவர் முதலானவர்கள் எழுந்தருளியிருக்கின்ற இவ்விடத்தில் இவனார் இந்தப்ரகாரம் ஊதிவருகின்றானென்று பார்த்து அவனது ஸமீபத்திற்போய் ஒரு கையில் புழுதியள்ளிக்கொண்டு நீ ஸர்வஜ்ஞனன்றோ? இது எவ்வளவு இதனைச்சொல்லுவாயென்று கேட்க அவன் அது விஷயத்தில் ஒன்றுஞ்சொல்லமாட்டாமல் தலை வணங்கிக்கொண்டிருக்க

பட்டர் அவனைப்பார்த்து ஓமோரா! இதொரு கைப்பிடியளவு புழுதியென்றுசொல்லி ஸர்வஜ்ஞனென்கிறபேரை நீ யுக்திக்கொள்ளமாட்டாமல் விழித்தபடி பேதையாயினையோ இவ்வளவுதானோ உனக்கு அறிவிருந்ததென்று இகழ்ந்து அந்தவிருதுகளைப்பார்த்து இவன் காளத்தைப்பறித்து விடுங்கோளென்று பழிச்சொல்லினால் மந்தஹாஸத்துடனே சொல்ல அதனை அவன்கேட்டு அச்சமும ஆச்சர்யமுமடைந்து அங்குள்ளவர்களைப்பார்த்து இவர் யாருடையபுத்ரரென்றுகேட்க அவர்கள் ஆழ்வானுடைய புத்ரரென்று சொல்லவதைக்கேட்டு - ஆ - பறப்பதினைக்குநத் தவறுமோவென்று வியந்து பட்டரைத் தனதண்டிகையின்மேல் வைத்துக்கொண்டு ஆழ்வான் திருமாளிகை வாசலிற்சென்றவளவில் இச்செய்தியறிந்து குழந்தையை நாய்ச்சியார் வாரியெடுத்து அணைத்துக்கொண்டு தண்டாலையிற்கொடுத்து ஸ்ரீபாதரீர்த்தத்தைத் தெளித்துக் கண்ணெச்சில்கழித்து மகிழ்ச்சியடைந்தாள். பின்பு சிலநாளாயிந்தவாறே பட்டருக்கு உபநயனஞ்செய்தருளி வேதமோதுவிக்கும்படி உபாத்யாயரிடத்திலேவிட அவரும் ஓதுவிக்கையிலே யாதி மறுநாள் உபாத்யாயரிடஞ்சென்று நேற்று ஓதுவித்ததையே இன்றும் ஓதுவிக்கின்றீரென்று அறிந்து மறுநாள் உபாத்யாயரிடத்திற் போவதைதவிர்த்து விளையாடிக்கொண்டிருக்க ஆழ்வானும் ஆண்டாளும் பிள்ளாய் ஓதுமிடத்திற்குப் போகாமல் விளையாடுகின்றாயே யென்றுகேட்க பட்டரும் அவர்கள் நேற்றோதியதையே பின்னும் ஓதுகின்றார்கள். அதனால் விட்டுவந்தேனென்று சொல்ல அதுகேட்டு அவர்கள் நேற்று ஓதியது உனக்குத்தெரியுமோ சொல்லென்ன பட்டரும் ஒன்றுவிடாமல் சொல்லக்கேட்டு அச்சர்யங்கொண்டு அன்றுமுதல் ஓதவிடாமல உபசரித்துவந்தார்கள். பின்பு பட்டருக்கு விவாஹஞ்செய்யும் பருவம் வரவும் தகுதியுள்ளகன்னிகை கிடைக்காமல் ஆராய்ந்துகொண்டிருக்கின்றபோது தகுதியாகிய கன்னிகையைப் பெற்றதாய்தந்தையர் ஸ்வப்னத்தில் பெரியபெருமாள் எழுந்தருளி உமதுகன்னிகையை அழைத்துக்கொண்டுபோய் நம்முடைய பட்டருக்குக் கல்யாணஞ்செய்துவையுங்கோளென்று திருவாய்மலர்ந்தருள அவர்களும் அந்தப்பகாரமே அழைத்துக்கொண்டுபோய் பட்டருக்கு விவாஹோத்ஸவத்தைச் செய்வித்தார்கள்.

இந்தப்ரகாரம் பட்டர் மணஞ்செய்யப்பெற்று உடையவர் முதலிய ஆசார்யர்களிடத்தில் பிரியாவன்புகொண்டிருந்தார். இவ்

வாழிருக்க, உடையவர் ஒருநாள் முதலிகளைப்பார்த்து நாம் நம்முதலியாண்டானை யொழிய ஸர்வஸங்க பரித்யாகம் பண்ணினோமென்றருளிச்செய்ய முதலிகள் இவ்வாறருளிச்செய்யலாமோவென்று கேட்க அதுகேட்டு உடையவர் நமது கையிலுள்ள த்ரிதண்டத்தை விட்டாலன்றோ நம் முதலியாண்டானை நாம் விடுவதென்று அருளிச்செய்தார் இப்ப்ரகாரம் முதலியாண்டான் ஆழ்வான் முதலாகிய முதலிகளுக்கு உடையவர் ஸ்ரீபாஷ்யகாலக்ஷேபம் ஸாதித்துக்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற காலத்தில் ஓர்நாள் சோழராஜன் சில ஞானசூந்யர்களாயுள்ள சிவனைவிட மேலான தெய்வமில்லையென்று எழுதுவித்துக்கொண்டு அறிவில்லாத பல முட்டாள்களிடத்தில் கையெழுத்து வாங்கியதுபோல் உடையவரையும் கையெழுத்திடும்படி ப்ரயத்னஞ்செய்வதற்கு உத்தேசித்ததை உடையவரறிந்து ஒருநாளிரவு லெவ்வாசனை கிராகரியாமல் அவ்விடம்விட்டுப்போகாநிற்க திருவுள்ளங்கொண்டு பெரியபெருமாளுடைய விண்ணப்பஞ்செய்து ஆழ்வான் வெள்ளைவஸ்த்ரத்தை தரித்துக்கொண்டு முதலியாண்டான் முதலான முதலிகளுடன் புறப்பட்டு மேற்கே யெழுந்தருளும்போது அதறிந்து அரசனது சேவகர்கள்பின்றொடர அதைக்கண்டு முதலிகள் மணலை அபிமந்த்ரித்துத் தூவி அவர்களை நெருங்கவொட்டாமல் தடுத்து நல்லானுடைய சிஷ்யரான வேடக்குடியிலெழுந்தருளி அங்கு நாலுதினமிருந்து சாத்தமுதலியவைகளைக் கற்றுக்கொண்டு வைணவபுரக்காகனென்கின்ற க்ராமத்தில் எழுந்தருளி அங்கே சிலகாலமிருந்து அங்கு நின்றும் புறப்பட்டு மிதுலை ஸாளக்ராமங்களுக்கெழுந்தருளி அங்கிருக்கிற இதரமதஸ்தர்களை முதலியாண்டானுடைய ஸ்ரீபாததீர்த்தவைபவத்தாலே திருத்தி சிஷ்யர்களாக்கிக்கொண்டு வடுகநம்பியிடத்தில் விசேஷகடாக்ஷஞ்செய்து சிங்கர்கோயிலில் சிலநாளிருந்து ஸ்ரீவைஷ்ணவவிரோதியான சோழன் க்ரிமிகண்டனாய் நசிக்கும்படி ஸங்கல்பஞ்செய்து தொண்டனூருக்கெழுந்தருளி அத்தேசத்துக்கதிபதியான தேவராஜன் மகளை பிசாசு பிடித்திருக்க தொண்டனூர் நம்பிமுகமாக ஆண்டானைக் கொண்டருளி ஸ்ரீபாததீர்த்தத்தை அப்பெண்ணின் தலையில் தெளித்து அதை நிவர்த்திசெய்வித்துத் தேவராஜனை சிஷ்யனாக்கிக்கொண்டு அவ்விடத்தெதிரிட்டு வாதஞ்செய்யவந்த துர்க்குணதங்களுடைய சமணர்களைத் திரையமைத்திருந்து திருவனந்தாழ்வானாக ஆயிரம் பணாமுகங்களாலும் உத்தரஞ்சொல்லி ஜயித்து அவர்களிலனேக

வித்த சிலரைத் தமக்கு சிஷ்யர்களாக்கிக்கொண்டு தேவராஜன்
மிகவுமுபசரிக்க எழுந்தருளியிருந்து தொண்டனூர்நம்பி அபிமா
னித்திருக்கிற எம்பெருமானுக்கு நம்பிசம்பிரானென்று திருநாம
முசாத்தித் திருமடமும் திருகாரிகாயிலுங்கு வந்து ஸ்ரீபாஷ்யகால
க்ஷேபஞ்செய்வித்துக்கொண்டிருக்கையிலே ஒருநாள் திருமண்கா
ப்பு செலவழிந்துபோனதற்கு சிந்தித்துக்கொண்டு கண்வளர
ஸ்வப்னத்தில் திருநாராயணப்பெருமாள் எழுந்தருளி யதுகிரியில்
உம்முடைய வரவுபார்த்துக்கொண்டிருக்கிறோம் உங்களிஷ்டமா
ன திருமண்காப்பு அங்குள்ளது கடுகவாருமென்று அருளிச்செய்
ய ஸ்ரீபாஷ்யகாரர் விழித்துக்கொண்டு தேவராஜனுக்கு விஷ்ணு
வர்த்தனராயனைக்கொண்டு அருகிலுள்ள பதியெட்டுவித்து வெ
குதான்யவர்ஷம் தைமாசத்தில் யதுகிரியேறி ஸ்வப்னத்திற் கண்
டபடி திருத்துழாய் மரத்தடியிற் புற்றிலிருக்கின்ற திருநாராய
ணப்பெருமானை மேல்சொன்ன மாசம் சுக்லபக்ஷம் சதுர்த்தசி வியா
ழக்கிழமை கூடின புனர்பூச நக்ஷத்ரத்தில் ஸாக்ஷாத்காரம்
பண்ணிப் பாலினால் திருமஞ்சனஞ்செய்தருளித் தமது சிஷ்யர்க
ளால் முனைநாள் திருவாராதனஞ்செய்து ஒருநாயகமென்கிற
திருவாய்மொழியை ஓதிச்சாற்றித் திருக்கல்யாணி வடமேற்கு
மூலையில் தரிகண்டத்திலே கிடந்த திருமண்துளையைக் கண்டுகொ
ண்டு மகிழ்ந்தருளி யதுகிரியில் கோயில்கட்டுவித்து ஊர்ப்படு
த்தித் திருநாராயணப்பெருமானுக்குப் பாஞ்சராத்ர விதியின்படி
ஸம்ப்ரோக்ஷணஞ்செய்வித்து உத்ஸவரில்லையென்று சிந்தித்திரு
க்கத் திருநாராயணன் அவரது ஸ்வப்னத்திலெழுந்தருளி உத்ஸவ
ராமப்ரியர் டில்லியிலிருக்கின்றார் அங்குசென்று எழுந்தருளப்
பண்ணிக்கொண்டு வாருமென்று நியமிக்க உடையவரும் டில்லிக்
கெழுந்தருள டில்லிராஜன் மகள் படுக்கையிட்டில் நின்று ராமப்
ரியரும் கிண்கிணி சதங்கை யொலிக்க எல்லவருங் காணும்படி
வந்து உடையவர் மடியிலிருக்க உடையவரும் ஆனந்தத்துடன்
என் செல்வப்பிள்ளையோவென்று அணைத்துக்கொண்டருளினார்.

அதனால் ராமப்பிரியருக்குச் செல்வப்பிள்ளையென்று திருநா
மமுண்டாயிற்று. பின்பு ஸ்ரீபாஷ்யகாரர் செல்வப்பிள்ளையை
யதுகிரியில் எழுந்தருளப்பண்ணி அவ்விடத்திலே தமதுபேரால்
ஓர்மடங்கட்டுவித்து அதில்தம்மைப்போல் ஓரர்ச்சாவிக்ரஹமெழு
ந்தருளப்பண்ணிவைத்து ஐம்பத்திருவருக்கு அத்திவ்யதேசத்தில்
கைங்கர்யங்களை நியமித்து அந்த திவ்யதேசத்துக்குத் திருநாராய

ணபுரமென்று திருநாமஞ்சாத்தியருளினார். இந்தப்படி பன்னிரண்டுவர்ஷம் மேல்நாட்டி லெழுந்தருளியிருந்து ஆழ்வான் முதலானோர் சேதியையும் சோழன் அவர்கள் விஷயத்தில் செய்த அபராதத்தையுங் கேட்டு க்லேசித்துச்சிறிதுநாளில் அச்சோழன் இறந்தானென்றுகேட்டுமிகவுமுவந்து கோயிலுக்கெழுந்தருள்வதாக நினைத்துத் திருநாராயணப்பெருமாளிடத்து அநுமதிகொண்டு கைங்கர்யங்களைக்கட்டளைப்படுத்தி அங்குநின்றும்புறப்பட்டுக் கோயிலுக்கெழுந்தருளி ஆழ்வானுடன் நம்பெருமாளைஸேவித்து அங்குநின்றும் கச்சிநகருக்கெழுந்தருளிப் பேரருளாளனையடிபணிந்து அதுவிட்டுப் புறப்பட்டுத் திருப்பதியில் தில்லைநகர்த்திருச்சித்ர கூடத்தெம்பெருமானை ப்ரதிஷ்டை பண்ணியருளி, திருவேங்கட முடையானை யடிபணிந்து மீண்டு கோயிலுக்கெழுந்தருளி காலக்ஷேபம் ஸாதித்துக்கொண்டிருந்து நாய்ச்சியார்திருமொழிப்ரஸ்தாபத்தில் அழகர்திருமலைக்கெழுந்தருளி நாய்ச்சியார் சொல்லியிருந்தபடி நூறுதடாவில் அக்காரவடிசில் அமுது செய்வித்து ஸ்ரீவில்லிபுத்தூருக் கெழுந்தருளி கோதையாரால் நங்கோயிலண்ணரென்று திருநாமம் பெற்றுத் திருநகரிக்கெழுந்தருளி ஆழ்வாரைஸேவித்து மீண்டு கோயிலுக்கெழுந்தருளி ஸ்ரீபாஷ்யகாலக்ஷேபஞ் செய்துகொண் டிருக்கும்போது ஒருநாள் பட்டருடைய உபன்யாஸ வைபவத்தைக் கேட்டருளியுவந்து பட்டருக்கு வேதாந்தாசார்யபதம் கொடுத்தருளினார். அன்றுமுதல் பட்டருக்கு வேதாந்தாசார்யரென்று திருநாம முண்டாயிற்று. பின்பு ஓர்காலத்தில் திருவத்தியயனோத்ஸவத்திற்காக நம்மாழ்வார் திருநகரியினின்று கோயிலுக் கெழுந்தருளும்போது வழியில் கள்ளர்கள்வந்து உபத்ரவம்பண்ணினபடியால் ஆழ்வாருடைய திருவடிநிலையாகிய ஸ்ரீமதுரகவிகள்கைதப்பிவிட்டது. ஆழ்வார்மாத்திரம் திருநகரிக்கெழுந்தருளிவிட்டாரென்று உடையவர் கேட்டுத் திருநகரிக்கெழுந்தருளி ஆழ்வார் திருவடிநிலையை ஏறியருளப்பண்ணுவித்து இன்றுமுதல் ஆழ்வார்திருநகரியைவிட்டுப் புறப்படவேண்டுவதில்லையென்று நியமித்துக் கோயிலுக்கெழுந்தருளி நம்மாழ்வார் விக்ரஹத்தை யெழுந்தருளப்பண்ணுவித்துத் திருவத்யயனோத்ஸவத்தை நடத்தியருளினார். பின்பு திருமங்கையாழ்வார் விக்ரஹம் முன்பு திருமங்கையாழ்வாரே செய்துவைத்திருக்கையால் அவரொழிந்த மற்றை ஆழ்வார்களையும் ஆண்டாளையும் அர்ச்சா விக்ரஹங்களாக எழுந்தருளப்பண்ணுவித்தார்.

பின்பு இப்படி குருபரம்பரை இடையறாமல் தர்சனம்வளர்ந்தேறும்பொருட்டுத் தமமுடைய ஸ்ரீபாதத்தில் ஆசிரயித்திருக்கிற முதலிகளில் சிலருக்கு ஆசாரியபதந் தந்தருளத்திருவுள்ளமபற்றி எழுபத்துநான்கு திருவாழிதிருச்சங்குகளைத்திருப்பிரதிஷ்டைசெய்து நாலு ஸ்ரீபாஷ்யகோசங்களை யேறியருளப்பண்ணித் தம் திருவாராதனமான பேரருளாளன் சந்நிதியில் சமர்ப்பித்து முதலிகளையழைத்தருளி ௭௪-திருநாமங்களுக்குத் திருவாழி திருச்சங்குகளையும் இவர்களில் நால்வருக்கு ஸ்ரீபாஷ்யகோசங்களையும் பிரசாதித்தருளிப் பின்னோர்களுக்குத் திருவிலச்சினை முதலாக உபயவேதாந்தங்களையும பிரசாதித்துத் திருத்தும்படி நியமித்தருளி-௭௪-வருக்கு சிம்ஹாஸனாதிபத்தியமும அதில் நால்வருக்கு பாஷ்யசிம்ஹாஸனாதிபத்தியமும் பிருதாக பிரசாதித்தருளினார்.

இவர்களன்றி எழுநூறு ஜீயர்களும-பன்னீராயிரம்-பரமைகாந்திகளும் திருமஞ்சன முதலானவை ஸமர்ப்பிக்கும அநேககைங்கரியபரர்களும சிலதாஸநம்பிகளும் பக்திபரரான அம்மைகளும் உடையவர் நியமனப்படித் தங்கள் தங்கள் கைங்கரியங்களைச் செய்துகொண்டிருந்தார்கள். அதிலும முந்திவந் தாசிரயித்தவர்களாயும் வயதில் முதிர்ந்தவர்களாயுமிருந்துள்ள கூரத்தாழ்வான் நடாதூராழ்வான் முதலியாண்டான் கிடாம்பியாச்சான் எம்பார்முதலான எல்லாமுதலிகளும் பின்பு ஞானபுத்திரராக ஸ்வீகரிக்கப்பட்டபிள்ளானையும பட்டரையும விசேஷமாக நினைத்து நடந்துவந்தார்கள். இப்படி இவர்களிருக்க உடையவர் சாஸ்திரானுமதமாயும் தம் திருவுள்ளத்துக்கு உவந்ததாயும அவர்களிருந்தபடியைக்கண்டு போரவுகந்தருளினார்.

### எழுபத்துநான்கு சிம்ஹாஸநாதிபதிகளென்கிற ஆசாரிய புருஷர்களுடைய

# திருநாமங்கள்.

ஸ்ரீ ஆளவந்தார்குமாரர் - சொட்டைநம்பி. ௧
பெரியநம்பிகுமாரர்-புண்டரீகாக்ஷர். ௨
திருக்கோட்டியூர் நம்பி குமாரர் தெற்காழ்வான். ௩
திருமாலையாண்டான் குமாரர் சுந்தரத்தோளுடையார் ௪
பெரிய திருமலைநம்பிகுமாரர்கள் திருக்குருகைப் பிரான் பிள்ளான். ௫
பிள்ளைதிருமலைநம்பி. ௬
கூரத்தாழ்வான். ௭
அவர் குமாரர் { ஸ்ரீபராசரபட்டர். ௮
{ சீராமபிள்ளை. ௯
முதலியாண்டான். ௧௦
நடாதூராழ்வான், ௧௧
எங்களாழ்வான்.
நடுவிலாழ்வான். ௧௩
கோமடத்தாழ்வான்.
திருக்கோவலூராழ்வான்.
திருமோகூர் ஆழ்வான்.
பிள்ளையாழ்வான்.
அனந்தாழ்வான். ௧௮
மிளகாழ்வான்.
நெய்யுண்டாழ்வான். ௨௦
சேட்டலூர் சிறியாழ்வான். ௨௧
ர்யாழ்வான. ௨௨
கோயிலாழ்வான். ௨௩
உக்கலாழ்வான்.
அரணபுரத்தாழ்வான். ௨௫
எம்பார். ௨௬
கிடாம்பியாச்சான். ௨௭
கணியனூர் சிறியாச்சான். ௨ [ஷு]
கொங்கிலாச்சான். ௨
ஈச்சம்பாடியாச்சான். நள்
திருமலைநல்லான். யரிட
வங்கிபுரத்தாச்சான். அநதப்
திருக்கண்ணபுரத்தாச்சா அவர்க
சிறியகோவிந்தப்பெருமா ளி
கிடாம்பிப்பெருமாள். ௩(
அம்மங்கிப்பெருமாள். ௩
அரூரிப்பெருமாள். ௩
பிள்ளையப்பன். ௩[அ]
வங்கிபுரத்துநம்பி. ௩௯
முடும்பைநம்பி. ௪௦
பராங்குசநம்பி. ௪௧
திருக்குருகைகுடிநம்பி, ௪௨
தொண்டனூர்நம்பி. ௪௩
அருணபுரத்துநம்பி. ௪௪
மருதூர்நம்பி. ௪௫
மழையூர்நம்பி. ௪௬
வடுகநம்பி. ௪௭
குரவிநம்பி. ௪௮
கந்தாடையாண்டான் ௪௯
சோமாசியாண்டான் ௫௦
ஜீயராண்டான் ௫௧
ஈசாண்டான் ௫௨
பெரியாண்டான். ௫௩
யாண்டான். ௫௪
அம்மங்கியாண்டான்,
ஆளவந்தாராண்டான. ௫௬
உக்கலம்மாள். ௫௭
பரித்திகொல்லையம்மாள். ௫௮

| | | | |
|---|---|---|---|
| வைத்தமாநிதியார். | ௫௯ | ஆர்க்காடுபிள்ளான். | ௬௭ |
| சிறுப்பள்ளி தேவராஜர். | ௬௦ | குமாண்டூர்பிள்ளை. | ௬௮ |
| பிள்ளையுறங்காவில்லிதாஸர்(?) பிள்ளையுறந்தையுடையார். | ௬௧ | அநந்தசோமயாஜியார். | ௬௯ |
| பிள்ளை திருவாய்மொழி யரையர். | ௬௨ | காஞ்சிசோமயாஜியார். | ௭௦ |
| பிள்ளைதிருநறையூரரையர். | ௬௩ | அலங்காரவேங்கடவர். | ௭௧ |
| பிள்ளைராஜமகேந்திரப் பெருமாளரையர். | | குஞ்சிப்பூர்சிறியாண்டான். | ௭௨ |
| அதிகாரிப்பிள்ளை. | ௬௫ | குமாண்டூர் இளையவல்லி. | ௭௩ |
| தாசரதிப்பிள்ளை. | ௬௬ | மாறொன்றில்லா மாருதியாண் | ௭௪ |
| | | ஆகசிம்ஹராஜநாதிபதிகள் | ௭௫ |

வருஸ்ரீரங்கநாராயணஜீயர். ஈச்சம்பாடிஜீயர். கோவிந்தஜீயர் சட்ஹாஸளிஜீயர். திருமழிசைஜீயர். திருவெள்ளறைஜீயர். திருப இவஜீயர். ஆட்கொண்ட வில்லிஜீயர். திருமாலிருஞ் சோலை ந்திகழ்வர்கள் முதலானஜீயர்கள் — எ௱ - நம்பிகுறுங்தேவர் முதலான பரமைகாந்தி ஸ்ரீவைஷ்ணவர்கள் - ௰௨௲ - தூயமுனிவேழன் முதலான கைங்கர்ய பரர்களும் திருவரங்கமாயோன் முதலான காவலதிகாரிகளும் பிள்ளையுறங்காவில்லிதாஸர் முதலான தாஸநம்பிகளும திருவநந்தபுரத்தம்மை முதலான அம்மைகளும உடையவர் திருவடிகளிலே பிரவணராய்த் தங்கள் தங்கள் கைங்கரியங்களில் ஊற்றமுடையவராயிருந்தார்கள்.

உடையவர் திருவடிகளிலசெய்த அடிமைவகை: கூரத்தாழ்வானும் - முதலியாண்டானும - நடாதூராழ்வானும் - பட்டவர்க்கமும ஸ்ரீபாஷ்யத்துக்கு உசாத்துணையாயிருந்தவர்கள். அருளாளப்பெருமா ளெமபெருமானார், உடையவர் நியமனத்தினால் பேரருளாளரைத் திருவாராதனஞ் செய்துவருவர். கிடாம்பியாச்சான், திருமடைபபள்ளி கைங்கர்யஞ்செய்துவருவார். பிள்ளையுறங்காவில்லிதாஸர், கருகூலம்நோக்குவர். அம்மங்கி, பாலமுதுகாய்ச்சுவர். உக்கலம்மாள், திருவாலவட்டம பரிமாறுவர். மாருதிப்பெரியாண்டான், திருக்கைச்செம்புபிடிப்பார். மற்றொன்றிலா மாருதிச்சிறியாண்டான், மடத்துக்கு அமுதுபடிகறியமுது பாலமுது நெய்யமுது முதலானவை நடத்திவருவர். தூய்யமுனிவேழம், திருமஞ்சனமெடுப்பர். திருவரங்கமாளிகையரையர், பண்டாரம்நோக்குவர். வண்டரும் செண்டரும் - கைக்காயிரமபொன்னுக்கு இராஜஸேவையண்ணி மடத்துக்குத் திருக்கைவழக்கஞ் செய்துவருவர். இராமா

ணுஜவேவுகாரர், திருமேனிக்காவலாயிருப்பர். அகளங்கநாட்டாழ்வான், ப்ரதிபக்ஷநிரஸனஞ்செய்துவருவர்.

இவர்களில் வடுகநம்பி, எம்பெருமானார் திருவடிகளே உபாயோபேயமென்று விச்வஸித்து அவர்திருவடிநிலைகளையேதிருவாராதனம செய்துவருவர். அனந்தாழ்வான். உடையவர் நியமித்தபடி திருமலையில் திருநந்தனவன கைங்கர்யஞ் செய்து வருவர். இந்தப்ரகாரம முதலிகளெல்லாம உடையவர்ஸந்நிதியில் கைங்கர்யஞ் செய்து வருகிறகாலத்தில் ஒருநாள் முதலிகளெல்லாம் உடையவரது ஞானபுத்ரரான திருக்குருகைப்பிரான் பிள்ளானை அநுவர்த்தித்து ஆழ்வார்கள் அருளிச்செயல்களில் அருமபொருள் தெரியும வ்யாக்யானஞ் செய்தருளவேண்டுமென்று உடையவரிடத்து விண்ணப்பஞ்செய்யும்படி ப்ரார்த்திக்கப் பிள்ளானும அந்தப்ரகாரமே விண்ணப்பஞ்செய்துகொண்டார். உடையவரும அவர்கள்ப்ரார்த்தனைப்படிக்குப் பிள்ளானையழைத்து ஆழ்வார்களருளிச்செயல்களையும் திருமந்த்ரமுதலானவேதாந்த ஸம்ப்ரதாயத்தையும் "நாதோபகம்யம்ப்ரவிரததம" என்னும்படி நமமாழ்வாரிடத்தில் பெற்று அவைகளை அவிச்சின்னகுருபரமபரையாலே நிலைநிறுத்தினநாதமுநிகள் வமசத்திற் பிறவித்துவக்காலும் ஆளவந்தார் நியமனத்தைத் தலைகட்டின பெரியதிருமலை நம்பிகுமாரராகையாலும் இயல்பாய்ப்பிரபந்தத்தில் ஊற்றத்தை உடையவராகையாலும் நீர்இப்போது திருவாய் மொழியில் அர்த்தானு ஸந்தானக்ரமத்தையறிந்தீர். ஆகையால் நாலாயிரத்தில் பிரதானமான திருவாய்மொழிக்குப்புராணரத்னம்போல் ஆறாயிரப்படியாக ஓர்வியாக்கியானம்பண்ணுமென்று நியமித்தருளப் பிள்ளானும் அந்நியமனப்படியே ஆறாயிரப்படி வியாக்கியானத்தைச்செய்தருளி ஸந்நிதியில் சமர்ப்பித்தார். உடையவர் அதைக்கடாக்ஷித்துப் போர உகந்தருளி ஆளவந்தார் நியமனத்தாலே திருக்குருகைப் பிரான்பிள்ளானென்று உமக்குத்திருநாமம் பிரஸாதித்தது பலித்ததென்றருளிச்செய்து அந்த ஆறாயிரப்படிக்கு பகவத்விஷயமென்று திருநாமஞ்சாற்றி நாமசெய்த ஸூத்ரபாஷ்யத்தைப்போல் காலக்ஷேபத்தில்வைக்கக்கடவதென்று நியமித்தருளினார். வடுகநம்பி இவ்வர்த்தங்களை யெல்லாஞ் சங்கிரகித்து யதிராஜவிபவத்தில் அருளிச்செய்தார். பின்னுமதாம்செய்தருளின கீதாபஷ்யம்-வேதாநதஸாரம்-வேதாந்ததீபம்-வேதார்த்தஸங்க்ரஹம் - சரணாகதிகத்யம்-ஸ்ரீரங்க

கத்யம் - ஸ்ரீவைகுண்டகத்யம்-நித்தியம் இவைகளையும் முதலிக ளுக்கு ப்ரசாதித்துக்கொண்டெழுந்தருளியிருந்தார்.

பின்புசிறிதுநாள்சென்று ஒருநாள்கூரத்தாழ்வான் பெரிய பெருமாளைத் திருவடிதொழுதுதன்னுடைச்சோதியை அடியேன் சேரும்படி கிருபை செய்தருள வேண்டுமென்று பிரார்த்திக்கப் பெருமாள் அப்படியே திருவுள்ளம்பற்றித் திருமாலைமுதலான வைகளைப்பிரசாதித் தருளினார். ஆழ்வான் உடையவரைத்திருவடி தொழுது அச்சேதியை விண்ணப்பஞ்செய்து ஸ்ரீபாததீர்த்தம்பி ரார்த்திக்க - அதைக்கேட்டுவெறுப்புடனே நானிருக்கையில் நீரிப் படிப்பெருமாளை பிரார்த்திக்கலாமோ வென்றுகேட்டருள, ஆழ் வான் அடியேன் தன்னுடைச் சோதியினின்று மெதிர்கொண்டு வந்து தேவரீரை எழுந்தருளப் பண்ணிக்கொண்டுபோவது ஸ்வரூ பமன்றோ வென்ன அங்குள்ளவர்கள் கேட்டு மிகவுமகிழ்ந்திருக்க உடையவர் அதிகிருபையுடனே துணிந்து ஸ்ரீபாததீர்த்தம பிரஸா தித்தருளி அவர்திருச்செவியில் துவயத்தையருளிச் செய்தார். ஆழ்வான்உடையவர் திருவடிகளைத்தியானித்துக்கொண்டு திருநா ட்டுக்கெழுந்தருளினார்.

பின்பு உடையவர்ஸ்ரீமந்நாதமுனிகள் நியமனப்படி ஸ்ரீசூர் ணபரிபாலனமுதலாக துவாதசாஹகிருத்யத்தையும் பட்டரைக் கொண்டு செய்வித்து அனந்தரம் கௌதமாதிகள் சொன்னபடி செய்யும் ஸம்ஹிதா பாராயணத்தில் திருவாய்மொழியையும் பிரதா னமாக அனுசந்தித்து தமதுவிஷயமாக அமுதனார் அருளிச்செய்த நூற்றந்தாதியைக்கொண்டு இயல்ஸேவைநடத்தும்படி நியமித்த ருளி அப்போது நமமாழ்வாருக்கு ஸமபாவனை ஸமர்ப்பிக்கும்படி க்கு நியமித்தருளினார். அப்படியேமுதலிகள் நடத்தி எம்பெரு மானுருக்கும் ஸம்பாவனை ஸமர்ப்பிக்க - உடையவரதைத்திருவுள் ளம்பற்றி யருளி இனிமேலும ஸ்ரீவைஷ்ணவர்கள் திருநாட்டுக் கெழுந்தருளினால் இப்படியே நடப்பிக்கவேண்டுமென்று நியமித் தருளினார்.—பின்பு பட்டரைநோக்கி மேல்நாட்டில் வேதாந்தி யென்றொரு பெரியவித்வான் இருக்கின்றானென்று கேள்விப்பட் டோம் - நீர் அவ்விடம்போய் அவனைத்திருத்தி தர்சனபரவர்த்த கனுக்குமென்று அருளிச்செய்து அவருடன் மடத்துக்கெழுந்த ருளி முதலிகளெல்லாரையும் நோக்கி நீங்கள் செய்யவேண்டிய கைங்கர்யம் ஆறுவகையுண்டு. அவை ஸ்ரீபாஷ்யத்தைதஅதிகரித்தல்

அதிகரிப்பித்தல், (க)திவ்யப்ரபந்தங்களை யோதுதல்·ஓதுவித்தல். (உ)திவ்யதேசங்களுக்கு அமுதுபடி சாத்துபடி முதலானவற்றை நடத்துதல்·(ங)திருநாராயணபுரத்தில் ஓர்குடிசையாயினுங்கட்டிக்கொண்டு வாஸஞ்செய்தல். (ச) த்வயத்தை யர்த்தத்துடன் அநுஸந்தித்தல். (ரு) ஓர்பாகவத னபிமானத்தில் ஒதுங்கியிருத்தல். (சா) இவ்வாறு கைங்கர்யங்களில் கிடைத்தமட்டுஞ் செய்துகொண்டு மூன்றுபசாரங்களும கிட்டாதபடி யிருங்கோளென்று நியமித்தருளி நடாதூராழ்வானைக் கடாக்ஷித்து அவருக்கு ஸ்ரீபாஷ்ய ஜ்ஞானத்தைக்கொடுத்தருளி ப்ரபத்தி பரமாய் முக்யப்ரமாணமான ஆழ்வார்களுடைய ஸ்ரீஸூக்தி சுஜ்ஞானத்தைப் பட்டருக்குக் கொடுத்தருளி பிள்ளானுக்குத் தமது சரமகைங்கர்யஞ் செய்யும் படிக்கும தமது திருபபள்ளி படுத்துமிடத்தில் ஓர் அர்ச்சா விக்ரஹத்தை ப்ரதிஷ்டைபண்ணுமபடிக்கும் நியமித்துத் திருக்குருகைப்பிரான் பிள்ளான் முதலான முதலிகளை நோக்கி பட்டரிடத்து ஆதரவுட னிருங்கோளென்று அருளிச்செய்து கோயிலிலுள்ளவர்களை யழைத்து பட்டர் திருக்கையி லொப்புவித்தருளி இன்னுஞ்செய்யவேண்டுவதுஞ் சொல்லவேண்டுவதுஞ் செய்துஞ் சொல்லியும எழுபத்துநாலு ஸிமஹாஸநாதிபதிகளைப் பார்த்தருளி ஸ்ரீபாஷ்யம அதிகரித்தும அதிகரிப்பித்தும திருவாய்மொழி வ்யாக்கியானம் ஓதியும் ஓதுவிப்பித்தும இருங்கோளென்று நியமித்தருளி விசேஷம் நடாதூராழ்வானுக்கு ஸ்ரீபாஷ்ய ப்ரவர்த்தனமும பட்டருக்கு ஸ்ரீஸூக்திப்ரவர்த்தனமும் நியமித்துப் பெரிய பெருமாளுடைய தீர்த்தப்ரஸாதங்களை ஸ்வீகரித்து ஆளவந்தாருடைய திருவடிகளை த்யானித்துக் கொண்டிருக்க பின்பு முதலியாண்டான் பிள்ளான் ஆச்சான் முதலான முதலிகள் உடையவரை மிகவும் திருவுளமகிழ்வித்து தேவரீர் அவதரித்தருளின ஸ்ரீபெரும்பூதூரிலும் தர்சனம நிர்வகித்த கோயிலிலும் ஜீர்ணோத்தாரணமசெய்தருளின திருநாராயணபுரத்திலும ஆழ்வார்களோபாதி திவ்யமங்களவிக்ரக ப்ரதிஷ்டையை நியமித்தருளவேணுமென்று ப்ரார்த்திக்க உடையவர் அப்படியேநியமிக்க முதலியாண்டான் திவ்யமங்கள விக்கிரகத்தை யேறியருளப்பண்ணி உடையவர் ஸந்நிதியில் கொண்டுவந்துவைக்க அத்துடன் முற்காலத்தில் நம்மாழ்வார் ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு உடையவருடைய பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தைக்கொடுத்தருள அது உய்யக்கொண்டார்-மணக்கால்நம்பி·ஆளவந்தார்-திருக்கோட்டியூர்நம்பி· அவர்குமார

த்தி அத்துழாயம்மன் இவர்களாலே ஆராதித்துவந்த விக்ரகத்தையும்கொண்டுவந்துவைக்க இவ்விரண்டு திவ்யமங்கள விக்ரகத்தையும் தாமாலிங்கனஞ்செய்துகொண்டு ஆண்டான்-பிள்ளான் இவர்களை அழைத்து இவ்விரண்டு விக்ரகத்தையும் அவர்களுக்கு பிரஸாதித்து ஒன்றை ஸ்ரீபெரும்பூதூரிலும் - மற்றொன்றைக் கோயிலிலும திருப்பிரதிஷ்டை செய்யும்படி நியமித்து ஆச்சானை நோக்கி நாம் ஜமபத்திருவருக்காகப் பிரசாதித்திருக்கிற நம்மர்ச்சாவிக்ரகத்தைத் திருநாராயண புரத்திலும் பிரதிஷ்டைபண்ணி வையுமென்று நியமித்து மற்றுமுள்ள திவ்யதேசங்களிலும் நம் அர்ச்சா விக்ரகத்தைப் பிரதிஷ்டை பண்ணும்படி நடாதூர் ஆழ்வான் முதலான முதலிகளுக்கு நியமித்தருளினார்.

தமது திருவாராதனமான பேரருளாளரையும்-ஸ்ரீ ஹயக்கிரீவரையும் பிள்ளானுக்குப் பிரசாதித்தருளிக் குளிரக்காக்ஷித்து பட்டர்முதலியாண்டான்முதலானவர்களுக்குவிசேஷார்த்தத்தைப்பிரசாதித்துப் பெரியநம்பி திருவடிகளை தியானித்துக்கொண்டு த்வயோச்சாரணத்துடன் பெருங்கூட்டமாகப் பெரியபெருமாள் ஸந்நிதியில்சென்று-பெரியபெருமாளையும ஸ்ரீஅழகிய மணவாளனையும் தாம்செய்த கத்தியப்படி மங்களாசாஸனஞ்செய்து அடியேனுக்கு நித்திய விபூதிக்கு நியமிக்க வேணுமென்று ப்ரார்த்திக்கப் பெருமாளும் திருமாலைமுதலான ஸகலவரிசைகளையும் பிரசாதித்துத் திருமுகம்வாடினவர்போல் ஸேவைஸாதிக்க அங்குள்ளமுதலிகள் அனைவரும் ஆச்சர்யப்பட்டு நிற்க உடையவர் பெருமாளை நோக்கித் திருவுள்ள மிரங்க வேணுமென்று பிரார்த்திக்கப் பெருமாளும அர்ச்சகமுகேன பெருவீடுதந்தோமென்று நியமிக்க அந்நியமனப்படி மடத்துக்கு எழுந்தருளி அவ்விடத்தில் ஆளவந்தார்திருவடி நிலையில் தீர்த்தஞ்சேர்த்து ஸ்விகரித்திருக்க அப்போது-பட்டர் - முதலியாண்டான்-பிள்ளான் - ஆச்சான் ஆழ்வான்-முதலானமுதலிகளும ஜீயர்களும் - மற்றுமுள்ளவர்களும் - ப்ரஹ்மவல்லி முதலான உபநிஷத் அநுஸந்தானத்தையும - சூழ்விசும்பணிமுகில்முதலான திருவாய்மொழியநுஸந்தானத்தையும நடத்த சக௵ ௲௫௯-வதான பிங்கள௵ மாசி௴ சுக்லதசமி திருவாதிரைதினம அபிஜித்துவேளையில் பரஹ்மரந்திரந்திறந்து எம்பெருமானார்-திருமாமணிமண்டபத்துக்கு எழுந்தருளினார். இந்தலீலா விபூதியில் உடையவர்-நூற்றிருபது திருநக்ஷத்திர மெழுந்தருளியிருந்தார்.

இன்றுலகீர் சித்திரையிலேய்ந்த திருவாதிரைநாள்
என்றையினுமின்றிதனுக்கேற்றமென்தான் — என்றவர்க்குச்
சாற்றுகின்றேன் கேண்மினெதிராசர்தம் பிறப்பால்
நாற்றிசையுங்கொண்டாடுநாள்.

எம்பெருமானார் தரிசனமென்றேயிதற்கு
நம்பெருமாள் பேரிட்டு நாட்டிவைத்தார் — அம்புவியோர்
இந்தத்தரிசனத்தையெம்பெருமானார் வளர்த்த
அந்தச்செயலறிகைக்கா.

அத்திகிரியருளாளரடிபணிந்தோன் வாழியே
அருட்கச்சிநம்பியுரையாறு பெற்றோன் வாழியே
பத்தியுடன் பாடியத்தைப் பகர்ந்திட்டான் வாழியே
பதின்மர்கலைப்பொருளைப் பரிந்துகற்றான் வாழியே
சுத்தமகிழ்மாறனடி தொழுதுய்ந்தோன் வாழியே
தொல்பெரியநம்பிசரணந்தோன்றினான் வாழியே
சித்திரையிலாதிரைநாள் சிறக்கவந்தோன் வாழியே
சீர்பெரும்பூதூர்முனிவன் திருவடிகள் வாழியே.

எண்டிசையெண்ணிலாயாழ்வாரெதிராசன் வாழியே
எழுபத்துநால்வர்க்குமெய்ம்முறையுரைத்தான் வாழியே
பண்டைமறையைத்தெரிந்தபாடியத்தோன் வாழியே
பரகாலனடியிணையைப்பரவுமவன் வாழியே
தண்டமிழ்நூல்நம்மாழ்வார்சரணானான் வாழியே
தாரணியும்விண்ணுலகுந்தானுடையோன் வாழியே
தெண்டிரைசூழ்பூதூரெம்பெருமானார் வாழியே
சித்திரையிற்செய்யதிருவாதிரையோன் வாழியே.

ஸ்ரீபாஷ்யகாரர் வைபவம் முற்றிற்று.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீபராசரபட்டர் வைபவம்.

பின்பு பிள்ளான் பட்டர் முதலான முதலிகள் ப்ரார்த்தித்துக் கிடந்து பெருமிடறு செய்து சோகித்துத் தாங்களே தேவப்பிள்ளானைக்கொண்டு பெரியபெருமாள் நியமனத்தினால் ஆவரணத்துக்குள் உடையவரைத் திருப்பள்ளிப்படுத்துவிக்க அப்போது அழகியமணவாளன் உபயநாய்ச்சிமாருடன் திருமஞ்சனங்கண்டருளினார். பின்பு சரமகைங்கர்யங்களையெல்லாம் ஸ்ரீஆளவந்தாருக்கு நடத்தினாற்போல் பரக்க நடப்பித்து உடையவர் நியமனப்படி திருவத்யயனத்தையும் இயலையும் நடப்பித்துத் தீர்த்தம் ஸ்வீகரித்தார்கள்.

பிள்ளான் பட்டர் இவர்கள் பக்கல் உடையவர் நியமனப்படி முதலிகள் பிரதிபத்தி பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

பின்பு உடையவர் நியமனப்படி முதலியாண்டான் ஸ்ரீபெரும்பூதூரிலும் பிள்ளான் கோயிலில் பெருமாள் நியமனப்படி திருப்பள்ளிப்படுத்தின இடத்திலும் கிடாம்பியாச்சான் நல்லான் முதலான சிலமுதலிகளை திருநாராயணபுரத்திலும் உடையவரது திவ்யமங்கள விக்ரஹத்தை மூலபேரத்தோடே திருப்பிரதிஷ்டை செய்துவைத்தார்கள். நடாதூராழ்வான் பெருமாள்கோயிலிலும் பிள்ளை திருமலைநம்பிகளை முதலியார் திருப்பதியிலும் திருமலையிலும் உடையவர் திவ்யமங்கள விக்ரஹத்தைத் திருப்பிரதிஷ்டை செய்துவைத்தார்கள்.

மற்றுமுள்ள திருக்குடந்தை முதலான திவ்யதேசங்களிலும் அங்கங்குள்ளார்கள் உடையவர் திவ்யமங்கள விக்ரஹத்தைப் பிரதிஷ்டை செய்தார்கள். இப்படி எம்பெருமானார் வைபவம் பகவத் வைபவம் போலே மட்டிடப்படாமலிருந்தது.

அங்கங்கே பட்டர் நியமனப்படி உடையவரது திருநக்ஷத்ரமான திருவாதிரையில் மாஸந்தோறும் மஹோத்ஸவமாக நடத்தி வந்தார்கள்.

பின்பு திருவேங்கடநாட்டிலிருந்து பிள்ளை திருமலைநம்பி அனந்தாழ்வான் முதலானவர்களும் கீழ்த்திசையிலிருந்த எச்சா

ன் முதலானோரும் மேல்நாட்டிலிருந்த ஸோமாசியாண்டான் - மருதூர்நம்பி - தொண்டனூர்நம்பி முதலானோரும் மற்றத்தேசாந்தரங்களிலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களும் திரண்டு பெருங்கூட்டமாகக் கோயிலுக்குவந்து உடையவரது பிரிவினால் மிகவும் க்லேசித்துப் பின்பு பட்டரை ஸேவித்துத் தங்கள் க்லேசங்களெல்லா நீர்ந்து பட்டரையே எம்பெருமானாராகக்கண்டு தங்கள் தங்களுக்குவேண்டிய இஷ்டார்த்தங்களை யெல்லாம் கேட்டுக்கொண்டு மனமகிழ்ச்சியால் ப்ரத்யக்ஷ ப்ரமாணம் அனுமானப்ரமாணம் சாஸ்த்ரப்ரமாணம் என்கின்ற ப்ரமாணங்களால் அன்யமதஸ்தர்களாகிற யானைகளது மஸ்தகத்தைப் பிளக்கின்ற ஸ்ரீபராசரபட்டரென்னும் சிங்கமானது விளங்குகின்றது என்கின்றதிவ்யார்த்தத்தையுடைய அநேக சுலோகமுதலானதுகளால் பட்டரைத்துதித்து அவரனுமதிகொண்டு தங்கள் தங்கள் ஊர்களுக்குச் சென்றார்கள். முன்பு உடையவர் நியமித்தபடி ஸ்ரீவிஜயயாத்ரைக்கெழுந்தருளி சாரதா பீடத்துக்குப்போய் சாரதாதேவிக்கு ஸ்ரீபாஷ்யத்தைக் காண்பித்து அவளால் ஸ்லாகிக்கப்பட்டு அவளனுமதிகொண்டு மீண்டுவரும்போது திருவேங்கடமுடையானை ஸேவித்து வழியில் ஓரிடைப்பெண்ணுக்குப் பரமபதம் கிடைக்கும்படி அனுக்ரஹஞ்செய்து கோயிலுக்கெழுந்தருளி உடையவரை ஸேவித்து நிற்க உடையவர் உவந்தருளி அர்ச்சகமுகேன வேதாந்தோதயாசார்யரென்று திருநாமஞ்சாத்தப் பின்பு கிடாம்பியாச்சானுக்கு பட்டர் ஆளவந்தார ஸ்தோத்ரத்தில் ஓர் சுலோகத்துக்கு நன்றாகப் பொருள் ஸாதிக்க அவர் கேட்டு பட்டரிடத்தில் மிகவும் ப்ரதிபத்திபண்ணினார்.

அப்பொழுது கிடாம்பியாச்சானுடைய சிஷ்யர்கள் ஏனிப்படி செய்கின்றீரென்று கேட்கக் கிடாம்பியாச்சான் அவர்களை நோக்கி உடையவர் நியமனத்தாலும் தர்சன ப்ரவர்த்தகரானதையிட்டும் நான் இவ்வாறு செய்தேனென்று அருளிச்செய்தார். பின்பொருநாள் பட்டர் திருநெடுந்தாண்டகத்தில் ஒரு பாசுரத்துக்கு இனிதாகப் பொருளுரைக்க அதுகேட்ட திருவாய்க்குலப்பெருமாளரையர் முன்பு அடியோம் ஆசார்யரிடத்திலும் இப்படிப்பட்ட பொருள் கேட்கப்பெற்றதில்லை இப்பொழுது பட்டரிடத்தில் கேட்கப்பெற்றோமென்று அவரிடத்தில் பேராப்ரதிபத்தி பண்ணினார். பின்பொருநாள் பட்டருடன் அநேக வித்வான்கள் வந்து தர்க்கிக்க ப

டரும் அவர்களெல்லாரையும் வென்றருளினார். பின்னும் அவர்கள் பட்டருடைய ஸர்வஜ்ஞத்வத்தைப் பரீக்ஷிக்கவேண்டுமென்று ஓர்குடத்தில் ஓர்பாம்பையடக்கி அதின்வாயைக்கட்டி இக்குடத்திலிருக்கும்வஸ்து என்னவென்று கேட்க, பட்டரும் அக்குடத்தில் பெருமாளுடைய திருவெண்குடையிருக்கின்றதென்று சொல்ல அவர்கள் சிரித்துக்குடத்தின் கட்டையவிழ்த்துவிட்டவளவில் பாம்பொன்று புறப்பட அதை நோக்கி இது குடையாமோவென்று அவர்கள்கேட்க பட்டரும் "சென்றால் குடையாம்" மென்று ஆழ்வார் அருளிச்செய்தபடியால் இது குடையாமேயென்ன அவர்கள் பட்டர் ஸர்வஜ்ஞரேயென்று ஆச்சர்யப்பட்டுத் துதித்துப் போனார்கள். பட்டர் சப்தாதிவிஷயங்களில் அத்யந்தவிரக்தராயிருக்கின்றதைக் கண்டு அதை நன்றாகத் தெரிவிப்பதற்காகச் சிலர் பட்டர் அமுது செய்கின்றபோது நெய்யமுதென்று வேப்பெண்ணெயைப் பரிமாற பட்டரும் அதுவிஷயத்தில் வெறுப்பின்றித் திருமுகமலர்ந்து அமுது செய்தருளக்கண்டு இவர் விரக்தரென்று ஆச்சர்யப்பட்டார்கள். பின்பு பட்டர் ஸ்ரீபாதத்து முதலிகளுடனே கூடப் பெருங்கூட்டமாக எழுந்தருளியிருந்து தர்சனம் நிர்வஹிக்கின்றபோது ஓர் தீர்த்தவாஸிப்ராமஹணன்வந்து பட்டரை ஸேவித்து பட்டர் அர்த்தம் ஸாதிக்கின்ற சாதுர்யத்தையும் கோஷ்டியின் வைபவத்தையுங்கண்டு மகிழ்ந்து பட்டரைப்பார்த்து ஸ்வாமி! மேல்நாட்டில் வேதாந்தியென்று ஒருபெரிய வித்வானிருக்கின்றான்; அவனுடைய கல்வியின் பெருக்கமும் அங்குள்ள கோஷ்டியின் பெருமையும் எவ்வாறிருக்கின்றதோ அவ்வாறு இவ்விடத்துமிருக்கக்கண்டேனென்றுசொல்ல, பட்டரும் அதைக்கேட்டு ஆஹா அப்படியொருவித்வானிருக்கின்றானோவென்ன அந்த ப்ராஹ்மணனும் இருக்கின்றானென்றுசொல்லி விடைபெற்று அங்குநின்றும் புறப்பட்டு மேல்நாட்டுக்குப்போய் வேதாந்தியை உம்முடைய கல்விக்கும் கோஷ்டிக்கும் ஒத்திருப்பாரொருவர் ஸ்ரீரங்கத்தில் பட்டரென்று இருக்கின்றாரென்று சொல்ல, அதைக்கேட்டு வேதாந்தியும் அந்த பட்டரென்பவர் நமக்கு ஒப்பாவரோவென்ன அவர் உம்மைப்பார்க்கிலும் மேற்பட்டிருப்பாரென்று சொல்ல வேதாந்தியும் அந்த பட்டருக்கு எந்தசாஸ்திரந் தெரிந்திருக்குமென்ன ப்ராஹ்மணனும் சப்ததர்க்க முதலான சாஸ்திரங்களெல்லாம் தெரிந்திருக்கின்றதென்ன வேதாந்தி அதுகேட்டு இவ்வுலகத்தில் நமக்கு ஒருவருமெதிரில்லையென்று ஆறுசாஸ்திரங்களையும் ஆறுஆஸ

ணமாகவைத்து அதன்மேல் உயர்ந்தவிருது கட்டிக்கொண்டிருக்கின்றும். இப்படி நம்மிலும் அதிகமானவர் ஒருவர் இருக்கின்றுரென்று இந்த ப்ராமஹணன் சொல்லுகின்றுரேயென்று க்லேசித்திருந்தார்.

பின்பு அந்தப்ராமஹணன் கோயிலுக்குத் திரும்பவும்வந்து பட்டர் ஸந்நிதியிலே நின்று ஸ்வாமி! உம்முடைய வைபவங்களையெல்லாம் வேதாந்திக்குச் சொல்லிவந்தேனென்று சொல்ல; பட்டரும் ப்ராமஹணனை நோக்கி நீர்சொன்னதற்கு அந்தவேதாந்தியென்ன சொன்னனென்று கேட்க வேதாந்தி பட்டருக்கு எந்த சாஸ்த்ரம்வருமென்று கேட்டார். சப்தர்க்கமுதலான ஸகலசாஸ்த்ரங்களும்வருமென்று சொன்னேனென்ன பட்டர் ப்ராமஹணனே நீயொன்றுகுறையச்சொன்னீர்; பட்டருக்குத் திருநெடுந்தாண்டகமும் வருமென்று சொல்லாதுவிட்டீரேயென்று அவனைச்சொல்லிப் போகவிட ப்ராமஹணனும்போய் வேதாந்திக்குச் செய்தியையெல்லாஞ்சொல்ல வேதாந்தியும் திருநெடுந்தாண்டகமென்னுஞ்சொல்லுக்குப் பொருள் தெரியவில்லையே அவரெப்படிப்பட்டவரோவென்று ஆச்சர்யப்பட்டுக்கொண்டிருந்தார். பின்பு பட்டரும் உடையவர் நியமித்தபடி வேதாந்தியைத் திருத்தவேண்டுமென்று நினைந்தருளிப் பெரியபெருமாளை ஸேவித்துத் தமது நினைவை விண்ணப்பஞ்செய்யப் பெருமாளும் திருவுள்ளமுவந்து நீங்கபோய் வேதாந்தியைத் திருத்திக்கொண்டு வாருமென்றருளிச்செய்து பாதமதுக்கிரமென்று யாவருமறிய ஆபரணம் வஸ்த்ரமுதலான செல்வங்களில் குறைவில்லாதுகொடுத்தருளத் தமது பரிகரங்கள் ஸாதனங்களுடன் கூட்டி விடை கொடுத்தருளினர்.

பட்டரும் அங்குநின்றும்புறப்பட்டு மேல்நாடுகுறித்து எழுந்தருளித் திருக்காவேரிக்கரையிலுள்ள சிறுபுத்தூரருகில் வரும்போது அவ்வூரிலெழுந்தருளியிருக்கும் அனந்தாழ்வான் பட்டர் வரவறிந்து திருக்காவேரிக்கரையில் பட்டரைக்கண்டு ஸேவித்து மஹாராஜபுத்ரரான நீர் காட்டிலும் கல்லிலும் வருந்தி இத்தனைதூரம் எழுந்தருளலாமோவென்று வருந்த பட்டரும் அனந்தாழ்வான் திருவடிகளில் விழுந்து ஸேவித்து எம்பெருமானார் நியமித்தபடியே நம்பெருமாளும் வேதாந்தியைத் திருத்தும் பொருட்டு விடைகொடுத்தருள வந்தோமென்று விண்ணப்பஞ்செய்ய அனந்தாழ்வானும்வந்து எங்கள்குடிக்காசே வாருமென்று பட்டரை

யெடுத்தணைத்துக் கொண்டார். அதனால் பட்டருக்கு எங்கள்குடி
க்கரசென்று திருநாமமுமுண்டாயிற்று. பின்பு அனந்தாழ்வான் பட்
டருடனே கூடப்புறப்பட்டு பட்டரை யதுகிரிக்கு எழுந்தருளப்
பண்ணுவித்துக்கொண்டுபோய்த் திருக்கல்யாணியில் நீராடி நித்ய
கர்மங்களைச் செய்துகொண்டிருக்க அங்குள்ள ஐம்பத்திருவர்
முதலான எல்லவரும் ஸ்ரீசடகோபம் முதலான வரிசைகளை எழுந்
தருளப் பண்ணுவித்துக் கொண்டெதிர்கொள்ள பட்டரும் ஸேவி
த்துக் கோயிலுக்குள் எழுந்தருளி உடையவரைத் தண்டன் ஸ
மர்ப்பித்து ஆழ்வார்களையடிபணிந்து செல்வப்பிள்ளையையும் ஸேவித்
து உட்சென்று திருநாராயணனையும் ஸேவித்து ஸகலவரிசைகளை
யும் பெற்று அவரனுமதிகொண்டு அனந்தாழ்வானுடன் புறப்ப
ட்டு வேதாந்தியிருக்கிற ஊருக்கு பட்டர்வந்தாரென்றும் ஆழ்வா
ன்குமாரர் வந்தாரென்றும் அணியரங்கன்குமாரர் வந்தாரென்றும்
வேதாந்தாசார்யர் வந்தாரென்றும் வேதியர்தனித்தலைவர் வந்தா
ரென்றும் ஸ்ரீபராசரபட்டர் வந்தாரென்றும்-பரவாதிமத்தஹஸ்தி
பஞ்சானனர் வந்தாரென்றும் பலவிருதுகளூதிக்கொண்டு மிரு
தங்க கோஷங்களுடன் எழுந்தருள அவ்வோசைகேட்டு இரண்டு
ப்ராமஹணர்களெதிர்வந்து பட்டரைப் பார்த்து தேவரீரநேக
ஆடம்பரங்களுடன் எங்கேயெழுந்தருளுகின்றீரென்ன பட்டர் நாம்
வேதாந்தியைத் திருத்தும்பொருட்டுப் போகின்றோமென்ன அவ
ர்களதுகேட்டு நீரிப்படி ஆடம்பரங்களுடன் போவீரானால்
வேதாந்திகளைக் காண்பதரிதாயிருக்கும். வேதாந்திகள் க்ரஹத்
துக்குள்ளேயிருப்பர். அவரதுசிஷ்யர்கள் மற்றமதவாதிகளுடன்
தலைவாயிலிருந்து எவ்வளவுகாலமாயினும் தர்க்கித்துத் தோற்ப
டையச்செய்துவெளிப்படுத்துவதேயல்லது வேதாந்திகளிடத்திற்
குப் போகச்செய்கின்றதில்லையென்று சொல்ல பட்டரும் அந்த
ப்ராமஹணர்களைப்பார்த்து ஆனால் நாம் வேதாந்தியைக்காணுமு
பாயம் யாதென்ன அவர்கள் வேதாந்திகள் அளவற்றபடி ப்ராம்
ஹணர்களுக்கு போஜனம்பண்ணுவிப்பார்; அந்தஸமயத்தில் புஜி
க்கும் ப்ராமஹணர்களோடு கலந்துசென்றால் வேதாந்திகளைக்
கண்டுகொள்ளலாமென்று சொல்ல பட்டரும் அதுகேட்டு இவ
ர்கள் சொல்லியது அவனைக் காணுதற்குத் தக்க உபாயவழி
யென்று திருவுள்ளங்கொண்டு தமமுடைய பரிகரங்களை யெல்
லாம் ஊர்ப்புறத்தில் நிறுத்தித் திருவாபரணங்கள் முதலிய
வைகளையும் களைந்துவைத்து ஒரு காவிவேஷ்டியுந் தரித்துக்

கமண்டலமுந்தாங்கி அனந்தாழ்வானும் தாமுமாய் ஊர்க்குட்சென்று உள்ளேபுகுந்து ப்ராமஹணர் புஜிக்கையைப் பார்த்துக் கொண்டு ஓர் மண்டபத்தில் ஆஸனத்தின்மேலிருக்கின்ற வேதாந்தியைக்கண்டு மற்ற ப்ராமஹணர்கள் போஜன சாலையில் புகுவதுபோலப் புகாமல் அவ்வேதாந்தியின் ஸமீபத்தில் எழுந்தருள வேதாந்தி அதுகண்டு எனிக்கு வருகின்றீரென்ன பட்டரும் பிக்ஷைக்கு வருகின்றோமென்ன வேதாந்தி அதுகேட்டு புஜிக்கின்றவிடத்தில் பிக்ஷைக்குப் போமென்ன பட்டர் எமக்கு அன்னபிக்ஷை வேண்டுவதில்லையென்ன வேதாந்தி இவர் சிறிது வித்வத்தன்மையுள்ளவராகவிருக்கின்றாரென்று நினைத்து வேறென்ன பிக்ஷையென்றுகேட்க பட்டரும வாதபிக்ஷையென்ன வேதாந்தி அதுகேட்டுத் திடுக்கிட்டு இவர் முன்பு தீர்த்தவாஸியாகிய ப்ராமஹணன் சொல்லிய பட்டராகவேண்டும அன்றி நமமுன் மற்றொருவரும் இவ்வாறு துணிந்து வாதபிக்ஷை கேட்கமாட்டார்கள். ஆகலா லிவ்வேஷம கபடமாக இருக்கின்றதென்று நிச்சயித்து நீர் பட்டரோவென்று கேட்க பட்டரும ஆமென்றுசொல்லியுடனே க்ரஹஸ்தாசிரமஸ்தராய் ஸகலமும்பூண்டு அந்த ஸபையில் கிஞ்சித்தேனும் மச்சமின்றி மஹாவேகமாக உபந்யஸித்தருள வேதாந்தி முன்பு பட்டர் வைபவங்களைக் கேட்டிருக்கினும் இவர் கல்வித்திறத்தை யாமறியவேண்டுமென்னும் விருப்பமுடையவராய் பட்டருடன் ப்ரஸங்கிக்க பட்டரும அவருடன் ஸகலரும திடுக்கிடும்படி தர்க்கஞ்செய்ய இவ்வாறு ஒருவருக்கொருவர் மதயானை போர்செய்வதுபோல ஒன்பதுநாள்வரையில் தர்க்கித்துப் பத்தாவது நாள் பட்டர் மாயாவாத ஸித்தாந்தத்தைக்கண்டித்து விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை ஸ்தாபித்தார.

பின்பு வேதாந்தி மனங்குன்றி வேறொன்றுஞ் சொல்வதற்குச் சக்தியில்லாதவராய் எழுந்திருந்து நமபெருமாளே நீரொன்று கட்டியணைத்துத் துதித்து பட்டர் திருவடிகளில் விழுந்து ஸேவித்து அடியேனையிரங்கியருள வேண்டுமென்று ப்ரார்த்திக்க பட்டரும தாமெண்ணி வந்தகாரியங் கடுகப்பலித்ததென்று மிகவுமுவந்து வேதாந்திக்கும அங்குள்ளார்க்கும பஞ்சஸமஸ்காரா[illegible] செய்வித்து, பாகவதோத்தமராக்கி வேதாந்தியைப்பார்த்து நீர் ஸர்வஜ்ஞராயிருக்கின்றீர் உமக்குத் தெரிவிக்க வேண்டுவதொன்றுமில்லை விசிஷ்டாத்வைதமேமேலானஸமயமாம;நீர் முன்பிடித்த

மாயாவாத வாஸனையைப் பற்றறவிட்டு நீ நம் திருவடிகளைப் பற்றி ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்தத்தை யநுஷ்டித்துங் கொண்டிருமென்றும் ஆழ்வார்கள் திவ்ய ப்ரபந்தங்கள் நாலாயிரமும் ஓதிக் கொண்டிருமென்றும் நியமித்தருளி அங்கு நின்றும் புறப்பட்டுப் போகின்றபோது பட்டருடைய பரிகரங்களெல்லாம் வந்து பட்டரைச் சூழ்ந்துகொள்ள பட்டருந் தமது பரிவாரத்துடன் கோயிலுக்கெழுந்தருளிப் பெரிய பெருமாளை ஸேவிக்கப் பெரியபெருமாளும் பட்டருக்குத் தீர்த்தம் சடகோபம் முதலிய ஸகலவரிசைகளையும் ப்ரஸாதித்துத் திருமாளிகையில் போகவிட்டருள பட்டரும் திருமாளிகையிலெழுந்தருளி தர்சன நிர்வாஹஞ் செய்து கொண்டெழுந்தருளியிருந்தார்.

மாயாவாதிகளாகிய அன்ய ஸித்தாந்தவாதிகளை வாதத்தில் ஜயித்துத் திருத்தி தர்சன ப்ரவர்த்தகராகும்படி பண்ணுகின்ற மஹத்வம் ஸ்ரீபாஷ்யகாரருக்கும் பட்டருக்குமே யுண்டு. மேல்நாட்டில் வேதாந்தி நெகலேயென்கின்ற ஊரில ததீயாராதனம் பண்ணிக்கொண்டிருக்கின்ற நாளில் இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் வேதாந்தியின திருமாளிகைக் கெழுந்தருளி பசி வருத்துகின்றதென்று சொல்ல வேதாந்தியின தேவிமாரிருவரும் எங்கள் வேதாந்திகள் தீர்த்தமாடப் போயிருக்கின்றார் இங்கொன்றுமில்லை அவரிடத்துப் போங்களென்று சொல்லி அநாதரம் பண்ணினார்கள். அந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் வேதாந்தி யண்டையில் வந்து இதனையறிவிக்க வேதாந்தி அதுகேட்டு வெறுத்துக்கொண்டு திருமாளிகைக் கெழுந்தருளி தேவிமாரிருவரையுங் கோபித்து அப்பொழுதே அங்கு நின்றும் கோயிலுக்குப் புறப்பட நினைத்தருள அவர்களதனையறிந்து வேதாந்திகளைப் போகவொண்ணாதென்று பலவகையாலுந் தடைசெய்ய வேதாந்திகளும் தமக்குண்டான அளவிறந்த த்ரவியங்களை மூன்றுகூறிட்டு இரண்டு தேவிகளுக்குங் கொடுத்து மற்றொருகூறு தம்முடைய ஆசார்யருக்கென்றெடுப்பித்துங் கொண்டு தம்தேசத்தைவிட்டு உத்தமாஸ்ரமத்தைப் பெற்றுத் திருக்காவேரிக்கரையில் சிறுபுத்தூரண்டையில் வந்து அனந்தாழ்வானை ஸேவித்து அவரருளிச்செய்த ப்ரபந்தத்தை யநுஸந்தித்துக்கொண்டு கோயிலுக்கெழுந்தருளி பட்டர் திருவடிகளை ஸேவித்து நிற்க, பட்டரும் மிகவுமுவந்தருளி நம்முடைய ஜீயர்வந்தாரென்று வாரியெடுத்தணைத்தருளினார். அதுமுதல்வேதாந்திகளுக்கு

நஞ்ஜீயரென்று திருநாமமுண்டாயிற்று. இவர்க்கு முன்புமாதவாசார்யரென்று திருநாமம். பின்பு வேதாந்தியென்று நாமதேயம். இப்போது நஞ்ஜீயரென்று திருநாமம். இப்படி பட்டநஞ்ஜீயரும் பட்டரை ஸேவித்துக்கொண்டு அவரைப் பிரியாமல் அடிமைசெய்துகொண்டு பட்டர் அருளிச்செய்த அர்த்தங்களை கேட்டுக்கொண்டெழுந்தருளியிருந்தார். பின்பு பட்டர் நஞ்ஜீயர்முதலான முதலிகளுடனே புறப்பட்டுத் திருவணையோடைத் திருமதிளெழுந்தருளுகின்றபோது ஸாயங்காலம் பாக்கியென்கின்ற ஒரு ஊரில் ஒரு வேடன்வீட்டில் இராத்திதங்கியிருக்கும்போது பட்டர் அவ்வேடனைப்பார்த்து இவ்விடத்து யாதாமொரு விசேஷமுண்டோ வென்று கேட்டருள வேடனும் ஸ்ரீரங்கநாதனை காட்டிலே வேட்டைக்குப்போய் அங்கோர் முயல்குட்டியைக் கண்டெடுத்தேன். அப்பொழுது அதன் தாய் என்னெதிரில் வந்து கூப்பிட்டுக்கொண்டு கிடந்தது அதைக்கண்டு எனக்கு இரக்கம் பிறந்து அதன் குட்டியைய விட்டுவந்தேனென்று சொல்ல அதைப்பட்டர் கேட்டருளி இவ்வேடனுக்கு சரணாகதியில் இரக்கம் பிறந்தபடி கண்டீர்களோ இதனால் நம்பெருமாளுக்குச் சரணாகதியினிடத்தில் இரக்கம் பிறக்கைக்கு வேறொரு சாஸ்த்ரம் வேண்டுமோ என்று அருளிச்செய்து அரும்பெறையத்தில் புறப்பட்டுக் கோயிலெழுந்தருளினார்.

பின்பொருநாள் பட்டர் நஞ்ஜீயரையழைத்துத் திருவாய்மொழியில் ஒரு பாசுரத்துக்கு இப்படிச் சொல்லுமென்று நஞ்ஜீயரும் தாம் த்ராவிடராகையால் த்ராவிடபாஷையில் நிபுணராயிருகையால் அந்தப்பாசுரத்துக்கு இன்னபொருளென்று சொல்ல பட்டரதுகேட்டருளி ஆச்சரியப்பட்டார். நஞ்ஜீயருடைய த்து இப்படிக்கிருக்கப்பட்டருக்கு அர்த்தவிசேஷங்களிலே ப்ரேமையோடு நெகிழ்ச்சியுள்ள திருவுள்ளத்தோடு இவைகள் கூடியோமோவென்று விண்ணப்பஞ்செய்தார். அக்காலத்தில் ஆழ்வானுடைய வீரசுந்தரப்ரஹ்மராயன் பெருமாளுக்குத் திருமதிள் கட்டுவிக்கும்போது நேரில் ஆழ்வானுடைய சிஷ்யரான பிள்ளைப்பிள்ளையாழ்வானுடைய திருமாளிகையகப்பட அதையிடித்து மதிள்கட்ட வேண்டுமென்று வீரசுந்தரப்ரஹ்மராயன் சொல்ல பட்டரும் அவனை நோக்கி உன்மனத்தில் இருள் சூழ்ந்துகொண்டதா? பெருமானுக்கு ரக்ஷகமாவது மஹானுபாவனான பிள்ளைப்பிள்ளையாழ்வானு மங்களாசாஸனமேயாகலால் அவர் திருமாளிகையைத்தவிர ஒரு

க்கைக்கட்டுவிக்கவேண்டும் முன்பு திருமங்கையாழ்வார் மதில்கட்டுவிக்கும்போது தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாளிகை நவிரவொழுக்கிக் கட்டுவித்தார். அதைத் திருத்தவேணுமென்று பணிச்செய்தார்.

வீரசுந்தரனும் பாகவதாபசாரஞ் செய்யலாகாதென்றும் ஆசார்யபுத்ரனென்றும் ஆழ்வானையும் பட்டர் அருளிச்செய்த வார்த்தையையும் உலகங்களை நலியத்து பிள்ளைப்பிள்ளையாழ்வான் திருமாளிகையையிடித்துத் திருமாளிகை ப்ரயாணமாக பட்டரைக் கோயிலிலிருக்கவொட்டாதபடி வருத்தப்பட்டவளவில் நின்றும் புறப்பட்டுத் திருக்கோட்டியூரெழுந்தருளும்போது நஞ்சீயரும் தொடர்ந்து பட்டருக்குத் தொண்டுசெய்துவர அவருடன் திருக்கோட்டியூரிலெழுந்தருளியிருக்கும்போது ஒரு ஸ்ரீவைஷ்ணவர் பட்டரை ஸேவித்து அடியேனுக்குத் திருவிருத்தமென்கிற திவ்யப்ரபந்தத்துக்கு அர்த்தம் ஸாதிக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துகொள்ள பட்டரும் நாம் ப்ராரப்த பாபத்தால் ஜீவனே எனக்குத் தம்கோயிலையும் பெருமாளையும் விட்டுப்பிரிந்ததின் துக்கத்திலே செவிகளிலே படுகின்றது; ஆகையால் வாய்வந்து ஒருவசனமாகிலும் வசனிப்பதற்கு சக்தியில்லை ஆகையால் நீர் நஞ்சீயருக்குத் திருவிருத்தத்தின் அர்த்தம் சொல்லுவாரென்று நியமிக்க நீயரும் அப்படியாகவே சொல்லிவருகிறபோது பட்டர் திருவுள்ளத்தை பரிபாலிக்கிற வீரசுந்தரன் பரித்தானென்று பிள்ளைப்பிள்ளையாழ்வான் திருக்கோட்டியூருக்கு வந்து அருளிச்செய்ய பட்டரும் கேட்டு ஸந்துஷ்டராய் பிள்ளைப்பிள்ளையாழ்வான் திருவடிகளையடிக்கடி வணங்கி அவருடன் கூட திருக்கோட்டியூரில் நின்றும் புறப்பட்டு கோயிலுக்கு எழுந்தருளி நம்பெருமாளை ஸேவித்து ஜந்மத்தை நிர்வஹித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

பின்பொருநாள் பட்டர் பெரியபெருமாளை ஸேவித்து நிற்கப் பெரியபெருமாள் பட்டருக்கு அருளப்பாடிட்டு உடையவர் ஸ்ரீபாஷ்யமும் கீதாபாஷ்யமும் செய்தருளினார். நீரும் நம்முடைய ஸஹஸ்ரநாமத்துக்கு பாஷ்யஞ் செய்யுமென்று நியமித்தருள பட்டரும் பெரியபெருமாள் நியமித்தபடி களிகூர்ந்து மிகவும் அத்புதமாக ஸஹஸ்ரநாமபாஷ்யத்தைச் செய்தருளினார். பின்பொருநாள் பட்டர் உடையவருக்குப் பின்பு விசிஷ்டாத்வைத ஸித்தா

நத்திற்கு ப்ரவர்த்தகரான பூர்வாசார்யர்களுக்கும் தாமாசார்ய ராகையால் அஷ்டச்லோகியென்று முறையில் மந்த்ர வ்யாக்யானத்தை யருளிச்செய்தார். இந்த வ்யாக்யானமே யெல்லாருஞ்செய்த மந்த்ர வ்யாக்யானங்களுக்கு முதலாயிருக்கும். முன்பு உடையவர் இவருக்கு சாத்தியிருந்த வேதாந்தாசார்ய ரென்கிற நாமதேயத்தை இவருடைய சாமர்த்யம் பெற்றிருக்கிற தாயில் பிள்ளைக்குப் பெரியபெருமாள் ஸாதிக்கையால் அவருக்கு வேதாந்தாசார்யரென்கிற திருநாம முண்டாகப்போகின்றது. தாயிலே பிள்ளை பட்டருடைய சாமர்த்யத்தை அனுபவிக்கத் திருக்குமென்பது தைத் தாயில் பிள்ளைவிஷயமான ஸ்ரூபது சுலோகத்தை வேதாந்ததீபிகாதபமென்கிற கிரந்தருள தாயில்பிள்ளையான வேதாந்தாசார்யரானவர் கூரத்தாழ்வான் புத்ரரான பட்டரை அநுஸரித்திருக்கிறாரென்று குறித்திருக்கின்றமைக்க ப்ரமாணமாகும்.

இப்படிப்பட்ட ஸகல பூர்வாசார்யர்களைக் காட்டிலும் மிகவும் மேன்மையையுடைய பட்டர் அருளிச்செய்த ப்ரபந்தங்கள் ஸஹஸ்ரநாமபாஷ்யம் - அஷ்டச்லோகி யென்கிற மந்த்ர வ்யாக்யானம் - தத்வரத்நாகரம் - ப்ரமாண விவரணம் - ஸ்ரீகுணரத்நகோசம் - ஸ்ரீரங்கராஜஸ்தவம் - க்ரியாதீபம் - தத்வத்ரயலோகமுதலியன பட்டருடையவையாய் ப்ரஸித்தங்களாய்ப்போல் மிகவும் ப்ரஸித்தமாயிருக்கின்றன. ஆயினும் அவற்றுள் இங்கு சில நாமமாத்ரமாயிட்டன. பட்டர் கடைசியாக்குப் பின்னான ப்ரயோகப்படியே கன்று ஸாதித்தருளினார். கடைசியாக அதனை கன்னட அதிசயித்த பட்டர் ஸம்ப்ரதாய ஆசார்யப்படிக்குள்ளவராய் ஸம்ப்ரதாய ப்ரதாயமாக அருளிச்செய்ததாக வியாக்கியானமென்று ப்ரகாசித்தது. பட்டர் ஸம்பந்த ப்ரதயத்தில் தாமே திருக்கைத்தலத்தில் சாத்தியிருந்த ஸம்ப்ரதாய ஆசார்யர் ஸாரஸம்ப்ரதாயத்தில் ஸகல ஸம்ப்ரதாயங்களை அர்த்தத்தை வாசித்தருளியபோது அந்தத்தாளப்ரமாணத்தில் ஒருப்பத்தின்கின்று பலமுகமாக அர்த்தங்களை அருளிச்செய்கின்றபடி கண்டு பெரியபெருமாள் மிகவும் உகந்து தாம் சாத்தியிருந்த திருமாலை பரிவட்டம் திருவாபரணம் முதலானவைகளைத் தம்மை ஸம்மானத்தையும் கொடுத்தருளி இன்றுமுதல் பட்டரே உமக்கு மேலவீடு கொடுத்தோமென்று அருளிச்செய்ய பட்டரும் இப்படிப்பட்ட பெரும் பேறு பெறப்பெற்றோமென்று பேரானந்தித்திருந்தார்.

அப்போதங்கிருந்த பெருங்கூட்டத் திருவோலக்கம் கடல்கலங்கி கோஷித்தாற்போல் கலங்கித்திடுக்கிட்டுநின்றது. பட்டர் ஆனந்தத்துடன் பெருமாளைஸேவித்துப் புறப்பட்டு பெருமாள் காது

வரிசைகளெல்லாவற்றுடன் ப்ரமஹஸதம் பண்ணுவித்துக் கோயில் அனந்தகிகாத்ரம ஸமஸ்தமான ஸ்ரீவைஷ்ணவர்களும் மற்றவர்களும் ஆனையிருந்து மேளவிசேஷமாக வெண்டியைப் திருமாளிகைக்கெழுந்தருளித் தமது தாயாரகிய ஆண்டாளை ஸேவித்து நிற்க ஆண்டாளும் உயர்ந்த பல்லக்கைத் தாராக்கடவதுவென்று ஆசீர்வதித்தாள். பட்டரும் அப்படியாவதேயானால் வேண்டியவே நீதியென்று வெளிநகளிக் கிருபாதயிறுளாளவர்களெல்லாம் திருமாளிகையில மங்களசெய்தபின்பு பெருங்கூட்டமாக வெழுந்தருளியிருந்த கியமனம்படி திருநெடுந்தாண்டகத்துக்கு அர்த்தமருளிச் செய்யும்போது ஸ்ரீவைகுண்டநாதன் பெரியதிருவடியின்மேல் வெழுந்தருளக்கண்டு அதனைத் திருப்பவளத்தால் வருளிச்செய்து திருக்கைகளை மலரவிரித்து புஷ்பங்கள் அஞ்ஜலிசெய்து கொண்டுநிற்க அப்போது அகப்பாட்டினை வழியாகத் திருநாட்டுக்கெழுந்தருளினார்.

நஞ்சீயரும் பட்டர் பிரிந்ததைப் பொறுக்கமாட்டாதிருக்கின்றதே ஏழுமாதமென்று புனைகங்களிலிருந்து ஆண்டாளும் அகிஞ்சிகேவாடித் தப்பிட்டு வயிற்றிலடித்து மார்பிலே அறைந்துகொண்டு வந்து மங்களங்களாலும் முகம்வாடாமலும் கண்ணீர் விடாமலும் உடையவர் உடைமையைக்கொண்டு தாங்கிப்பல் ஸ்ரீவைஷ்ணவர்களாகக்கொண்டு நிற்கக் கோயிலிலுள்ளாரெல்லாரும் கரைகடந்த துக்கங்களாலே நிலைகுலைந்தார்கள். நஞ்சீயரும் வேரற்ற மரம்போல் கதறிக்கிடந்து பின்பு பெருமாளும் நாய்ச்சிமாரும் - திருப்பல்லக்கு - சாமரம் - திருவெண்சாமரம் - திருவாலவட்டம் - திருவெண்குடை - திருவெண்முத்தின்கலசம் - திருச்சின்னம் - திருப்பக்ஷத்தியம் முதலாகிய தமது ஸர்வபரிச்சதங்களையும் கொடுத்தருளி பட்டர் ஆனபடியே திருக்கலையம் கொண்டாடினாற்போலே பட்டருக்கு ஆஸ்ரிதரும் கொண்டாடும்படிக்கு என்று வருளிச்செய்து பட்டருக்குத் திருக்கலைகளில் திருமஞ்சனமாடித் திருவுள்ளம் நொந்து தாம் புத்ரனைப் பிரிந்தோமென்று மிகவும் கலேசித்திருந்தார்கள். பட்டர் ஸ்ரீரங்கத்தில் - உஅ - திருநக்ஷத்ரம் வாழ்ந்தருளியிருந்தார்.

ஸ்ரீபராசரபட்டர் வைபவம் முற்றிற்று.

தென்னரங்கர் மைந்தனெனச் சிறக்கவந்தோன் வாழியே
திருநெடுந்தாண்டகப்பொருளைச் செப்புமவன் வாழியே
அன்னவயல் பூதூரன் அடிபணிந்தோன் வாழியே
அனவரதம் எம்பாருக்கு ஆட்செய்வோன் வாழியே
மன்னுதிருக்கூரனார் வளமுரைப்போன் வாழியே
வைகாசியனுடத்தில் வந்துதித்தான் வாழியே
பன்னுகலை நால்வேதப் பயன்தெரிந்தோன் வாழியே
பராசரனாம் சீர்ப்பட்டர் பாருலகில் வாழியே

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# நஞ்சீயர் வைபவம்.

பின்பு நஞ்சீயர்முதலான முதலிகளும் பட்டருக்குச்சீராமப் பிள்ளையைக்கொண்டு சரமகைங்கர்யங்கள் நடத்தியருளினார்கள். பின்பு சீராமப்பிள்ளை பெருமாளை ஸேவித்து நிற்கப் பெருமாளும் சீராமப்பிள்ளையை அருளப்பாடிட்டு பட்டரை யிழந்தோம் ஆகி லும் உமக்கு நாமிருக்கின்றோம். நீர் ஒன்றுக்கும் க்லேசிக்க வேண்டா மென்று அருளிச்செய்து பட்டருடைய வரிசைகளை யெல்லாம் கொடுத்தருளி ப்ரஸாதம் பண்ணுவித்துச் சீராமப்பிள் ளையைத் திருமாளிகைக்குப் போகவிட்டார். பின்பு சீராமப்பிள்ளை யும் க்லேசத்தோடே தர்சனம் நிர்வஹித்துக்கொண்டு எழுந்தருளி யிருந்தார். பின்பு நஞ்சீயரும் பட்டருடைய மதிகொண்டு ஸ்ரீபாஷ்யக ணங்கில் செய்த ஒன்பதினாயிரப்படியை பட்டோலைகொண்டு தாம் த்ராவிடபாஷையிலே நிபுணராயிருந்தாலும் நன்றாக எழுதப் பவரைக்கொண்டு எழுதுவிக்கவேண்டுமென்று நினைத்தருளி ஸ்ரீபா தத்து முதலிகளையழைத்து நன்றாக எழுதுவாருண்டோ வென்று கேட்க அவர்கள் திருக்காவேரிக்கரையில் நின்றும் நம்பூர்வரதராஜ ரென்பவ ரொருவர் நன்றாக எழுதுபவர், அவரும் காலையில் நித்து ருவரென்று விண்ணப்பஞ்செய்ய ஜீயரும் அங்கீகாரம் மறுநாள் காலையில்வந்த வரதராஜருக்குத் திருவிலச்சினையில்லாமையால் திருவாய்மொழி வ்யாக்யானத்தை அவர்கையாலெழுதப்படாதென நினைக்க அதையறிந்த வரதராஜரும் அடியேனைத் திருத்திப்பணி கொள்ள வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய ஜீயரும் உவந்து அப்பொழுதே அவருக்கு பஞ்சஸம்ஸ்காரஞ் செய்தருளி ஆறாயி ரமும் ஒன்பதினாயிரமும் அருளிச்செய்து ஒன்பதினாயிரத்தை எழுதும்படி நியமிக்க வரதராஜரும் அதனைவாங்கிக்கொண்டு அவ ரநுமதிபெற்று தம்மூருக்குப் புறப்பட்டுத் திருக்காவேரியி லெ ழுந்தருளும்போது நிறைவெள்ளத்தில் நீந்திப்போகவேண்டுகை யால் பட்டோலையைத் தம்முதிருமுடியின்மேல் கட்டிக்கொண்டு நீந்துமளவில் காற்றினால் போதிய நீர்ப்பெருக்கில் அகப்பட்டுப் பட்டோலை வெள்ளத்தில் வீழ்ந்துவிட வரதராஜர் வ்யாகுலப்பட்டு புக்கரைசேரித் திருமாளிகைக்கு வந்து பட்டோலையிலிருந்த

ஒன்றுங்குறையாமல் ஒன்பதினாயிரப்படியை யெழுதியருளித் தாம் தமிழில் நிபுணராகையால் மேலான டீகைகளில் விவரணமாக எழுதிக்கொண்டு ஜீயர் திருக்கையில் கொடுக்க அவரும் பார்த்துத் தாம் அருளிச்செய்தபடி யிருப்பதோடு மேலான டீகைகளின் படியும் சொற்பொருள்களை விரித்தெழுதியிருக்கையாலே மிகவும் திருவுள்ள முவந்து இத்தாலேயும் நன்றாயிருக்கின்றதென்று உவகையோடு வரதராஜரைக்கொண்டாடி சொல்லியருள அவரைத் தம் பொன்னான விளையாட்டு செய்யாதிருக்க ஜீயரும் பயப்பட வேண்டாம் நம்மையுமே சொன்னமையால் வரதராஜரும் நஞ்சீயரையே விண்ணப்பஞ் செய்ய ஜீயரேகேட்டருளி அவரை நன்றாகத் தம்முடைய திருவுள்ளமுவந்து சேர்த்தணைத்துக்கொண்டு தம்முடைய பிள்ளைத் திருக்கைகளாலே தாலாட்டியருளிச் செய்தார். அதனால் அவருக்கு நம்பிள்ளையென்று திருநாமமும் சாத்தினார். நம்பிள்ளையும் அன்று முதல் ஜீயரை ஆசார்யனாகப் பெற்றோமென்று உவகைகொண்டிருந்தார். ஜீயரும் நம்பிள்ளையைத் [illegible] தம் திருவடிகளைச் சாத்தி அநுக்ரஹித்தருளி நம்பிள்ளையை சதாசார்ய லக்ஷணங்களையும் பண்ணியருளினர்.

நம்பிள்ளை திருவாய்மொழிக்குப் [illegible] திருவிருத்தம் [illegible] வியாக்யானம் முதலான அநேகம் க்ரந்தங்கள். ஒரு காலம் நம்பிள்ளை [illegible] ஸ்ரீவைஷ்ணவர்கள் [illegible] நம்பிள்ளை திருவடிகளில் [illegible] பெருமாள் [illegible] நம்பிள்ளையை [illegible] அபராதப்பட்ட பெரியபெருமாள் [illegible] திருவுள்ளத்தில் [illegible] நம்பிள்ளையின் திருவடிகளைப் பற்றி நம்பிள்ளைக்கு லோகாசார்யனென்று திருநாமஞ் சாத்தியருளினார்.

பின்பொருநாள் கூரத்தாழ்வானுடைய திருப்பேரனார் ஸ்ரீராமப்பிள்ளை குமாரர் வடக்குத்திருவீதிப்பிள்ளைபட்டர் மிகுந்த கற்றறிவுள்ளவராயிருக்கும் நம்பிள்ளை கலவிக் கிடத்தைக் கண்டு

ஸஹிக்கமாட்டாதிருந்தனர். அந்த பட்டர் ஒருநாள் ராஜஸ்தான த்துக்கு எழுந்தருளும்போது வழியில் நம்பிள்ளை சிஷ்யரான பின்பழகிய பெருமாள் ஜீயரைக் கண்டு ஜீயரே நாம ராஜஸபைக் குப்போகிறோம் நீர் நம்முடன் வாருமென்றழைக்க ஜீயர் இவ ரும் நம்பெருமாளாயருக்கு ஸமமென்றே வென்று நினைத்து நடுவிற் திரு வீதிப்பிள்ளை பட்டருடன் ராஜஸபைக்கெழுந்தருளினார் ராஜாவும பட்டரை யெதிரே சென்று ஸேவித்துப் பெரியமேகாஸ்டியாக விரு த்து தானும் நந்த [illegible] கவிப்பிரியவுடையவரானதால் பட்டருடைய வைபவத்தை [illegible] காரியமாக நினைத்து ஸ்ரீராமாயணத் தில் [illegible] டரும் [illegible] கேட்டு [illegible] கிலவி [illegible] நம்பிள்ளை சிஷ்ய ரான [illegible] ஜீயரும் [illegible] க்குத் தில் [illegible] த்துக்கொண்டு [illegible] கேட்டு வந்த பட்டர் [illegible] நம்பிள்ளை ஸ்ரீ வாழைத்தாரும் ராஜாவுக்கு அருளிச்செய்தனர். அரசனோ [illegible] ஆசார்ய [illegible] வேண்டுமென்று தனது [illegible] பட்டர் திருவடி களில் விழுந்து ஸேவித்துக் கொண்டு [illegible] னரிறுனர்.

பின்பு பட்டர் அவைகளை யங்கீகரித்து நம்பிள்ளை சிஷ்யரா ன ஜீயரைக் கைப்பிடித்துக்கொண்டு அடியேனையும் இந்த தன மையும் நம்பிள்ளை திருவடிகளில் சேர்க்கவேண்டுமென்று சொ ல்லியுடன் கூடி நம்பிள்ளை ஸந்நிதியில் சென்று நம்பிள்ளையும் தம முடைய ஆசார்ய வம்சமென்று நடுவில் திருவீதிப்பட்டரை ஸேவி த்து அபிமானித்தருள நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டரும் நம்பிள்ளை யைப்பார்த்து தேவரீருடைய ஸ்ரீஸூக்தியில் பன்னீராயிரங்கோ டிபங்கில் சிறந்தவொருக்குப்பெற்ற தனமிதுவானதையால் இதனையும அடியேனையும அங்கீகரித்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்ய நம்பிள்ளையும அதற்குடன்பட்டவராக அருளிச்செய்ய நடு வில் திருவீதிப்பிள்ளை பட்டரும கண்களில நீர்விட்டுக்கொண்டு நம்பிள்ளை திருவடிகளைப்பணிந்து நிற்க நம்பிள்ளை வாரியெடுத்து

ஞானத்துங்கொண்டு விசேஷகடாக்ஷஞ் செய்தருளி அவருக்கு எல்லா அர்த்தவிசேஷங்களையும் ஸாதித்தருளினர். பின்பொருநாள் நம்பிள்ளையும் முதலிகளும் திருவெள்ளறை நாய்ச்சியாரை ஸேவித்துத் திரும்பவும் கோயிலுக்கெழுந்தருளும்போது திருக்காவேரியிருகரையும் நீர்கோத்துப் பெருகும்போது அஸ்தமித்து மழையுமிருட்டுமாய் இருந்தபடியால் கரைதெரியாமல் நீர்ப்பெருக்கால் தாழி முழுகும்படி நேரிட அத்தாழிக்காரன் இத்தருணத்தில் தாழியினின்று ஒருவராகிலும் இறங்கினால் கரைசேரலாம். இல்லாவிடின் அபாயம் நேரிடுமென்று கூக்குரலிட அப்பொழுதொரு ஸாதுவான அம்மையார் தாழிக்காரனைப்பார்த்து அப்பா நீ நூறுபிராயமிருப்பாய் உலகுக்கெல்லாம் உயிராகிய நம்பிள்ளையைக் கரையிற்கொண்டுபோய் விடவேண்டுமென்று அவனைவாழ்த்தி ஆற்றுவெள்ளத்திற் குதித்தாள். அவ்வளவுகொண்டு நம்பிள்ளையுங்கரையேறி அம்மையாரை யிழந்தோமே யென்னும் வியாகுலத்துடனிருக்க அம்மையாரும் நம்பிள்ளை திருவடிகளில்வைத்த விசுவாஸவைபவத்தால் ஓர்திடர் நேர்பட்டு அதில்நின்றாள். அப்பொழுது ஆசார்யரான நம்பிள்ளை அம்மையாரையிழந்துவிட்டதனால் கரையில்நின்று வாய்விட்டலறுகின்றதை அம்மையார்கேட்டு தேவரீர் வ்யாகுலப் படவேண்டாம். அடியேனும் தேவரனுக்ரஹத்தால் இங்கு உயிர்தரித்திருக்கின்றேனென்று வாய்விட்டுச்சொல்ல நம்பிள்ளை மனமகிழ்ந்து தாழிக்காரனைக்கொண்டு ஸகலருமதிசயிக்க அம்மையாரைத் தம்மருகே வருவித்தார்.

பின்பொருநாள் ஒரு ஸ்ரீவைஷ்ணவர் நம்பிள்ளையின் திருமாளிகையினருகே ஓர் அம்மையார் இருக்கின்ற கோல்குற்று நிவேசனத்தைக்கண்டு மனம்பொறாதவராய் அம்மையாரைநோக்கி அருகிலுள்ள நம்பிள்ளை திருமாளிகைக்குமிகவும் நெருக்கமாயிருக்கின்றது ஆகலால் இந்த நிவேசனத்தை ஆசார்யருக்கு ஸமர்ப்பித்துவிடுமென்று பலமுறையுஞ் சொல்லிவர அதற்கு அம்மையார் கோயிலிலே கோல்குற்றுநிவேசனமாக அடியேனுக்கன்றி மற்றையாருக்குக் கிடைக்கும் நான் சரீரத்துடனிருக்குமளவும் இதனை தேவரீர் நியமனப்படி கொடேனென்னத் திரும்பவும் அம்மையாரைநோக்கி உம்முடைய சரீரத்திற்குச் சிறிதிடம்போதும் மற்றதை முதலிகளுக்காகக்கொடுமென்றருளிச் செய்ய அம்மையாரும் அடியேனதப்ரகாரமே செய்கின்றேன் அடியேனுக்குப் பரமபத

த்தில் சேர்ந்த நிவேசனம் சமைத்தருளவேணுமென்ன அது கேட்டு நம்பிள்ளையும் வைத்தநாதன் நமக்குரியவனாகையால் அவனிடத்தில் விண்ணப்பஞ்செய்துகொண்டு அவ்வாறே தருகின்றேனென்றருளிச்செய்ய அம்மையாரும் அதனை யெழுதிட்டுத் தரவேண்டுமென்ன அம்மையார் நம்பிள்ளைக்கு மிகவுமுவந்தருளி அவ்வாறே தானருமித்தெழுதிட்டுக்கொடுக்க அம்மையாரும் அத்திருமுகத்தை முடியில் வைத்துக்கொண்டு அன்றையதினமும் மறுதினமும் நம்பிள்ளையை ஸேவித்துக்கொண்டிருந்து [illegible] வைராக்யமுந்தெரியும்படி பரமபதத்திற்குச் சென்றார். அப்பொழுது அங்குள்ளாரெல்லாரும் வைகுந்தத்திலிடங்கொடுப்பதாக எழுதிக்கொடுத்த சிறுமுறி செல்லும்படி நம்பெருமாளிடத்தில் அவ்வாறு பெற்றுக்கொண்ட நம்பிள்ளையினது வைபவத்தைக் குறித்து ஆச்சர்யமடைந்தார்கள்.

பின்பொருநாள் நம்பிள்ளை பெரியதிருவோலக்கத்தில் திருவாய்மொழிக்கு அர்த்தம் அருளிச்செய்துகொண்டிருக்க நம்பெருமாள் நம்பிள்ளை பக்கல் கடாக்ஷித்தருளி நின்றதிருமாடிப்பக்கத்திலிருந்து திருவாய்மொழியைச் சிரவணம் பண்ணுமென்று நியமிக்க நம்பிள்ளையும் எம்பெருமானே சோதியுடைய நியமனத்தைத் தள்ளவொண்ணாதாகையால் [illegible] துர்யோதனன் பற்றின விதுரனை [illegible] விண்ணப்பஞ்செய்யப் பெருமாளும் [illegible] திருப்படியில் திருவடிப்பக்கத்திலிருந்து திருவாய்மொழியை நிர்வஹியுமென்று நியமித்தருளினார். பின்பொருநாள் நம்பிள்ளை பெரியதிருவோலக்கத்துடன் திருவாய்மொழியை நிர்வஹித்துக்கொண்டிருக்கச் செல்வர் நித்தியப்படியாட்டில் திருவோலக்கம் பிரிந்துபோவதுபோல் அன்றும் செல்வர் எழுந்தருளினபோது கோஷ்டிகளைக்கண்டு நம்பெருமாள் நமக்கு இக்கட்டளைக்குப் பின்பு புறப்பாடு வேண்டுவதில்லையென்று மறுத்தருளினார். அன்றுமுதல் அவ்வாறே நடந்துவந்தது.

பின்பொருநாள் நம்பிள்ளை திருவாய்மொழி யருளிச்செய்யும்போது நம்பெருமாள் ஸிம்ஹாஸனத்தைவிட்டுவந்து ஸந்நிதி வாசற்படியைத் திருக்கைகளால் பற்றியுள்ளிருந்து நம்பிள்ளையை எட்டிப்பார்த்துக்கொண்டிருக்க அப்போது திருவிளக்குப் பார்க்கவந்த திருவிளக்குப்பிச்சன் நம்பெருமாளிடத்து மிகவும் பக்தியுள்ளவனாதலால் நம்பெருமாள் ஸிம்ஹாஸனத்தை விட்டு நிற்பது ஸகியாதவனாய் நம்பெருமாளை நோக்கி ஸ்வாமின்! தேவ

நீர் இக்காலத்தில் இப்படியும் நிற்கவோ சிம்ஹாஸனத்திற் போயெழுந்தருளியிரும் என்று அதிருத்த வார்த்தையாகச் சொல்லப் பெருமாள் திருவிளக்குப் பிச்சன் நம்மிடத்து வைத்த அன்புகுறித்து அவன் சொன்னதைச் செய்வதாகத் திருவுள்ளங்கொண்டிருந்தபடி அவனை நோக்கி நீ சொன்னதொக்குமாயினும் நம்பிள்ளை திருவோலக்கத்தைக் காணவேண்டுமென்று பார்த்து நின்றேன் நீ சொல்லியபடி இப்போது போகின்றேனென்று சிம்ஹாஸனத்துக்கெழுந்தருளினார். அதனைக்கண்ட அங்குள்ளவர்களுக்கெல்லாம் தெரிவிக்க அனைவரும் நம்பிள்ளையினது பெருமையையும் திருவிளக்குப் பிச்சனது பக்தியையும் நம்பெருமாளது க்ருபையையுங் குறித்து ஆனந்தமடைந்தார்கள். இந்தப்ரகாரம் நம்பிள்ளை மஹாவைபவத்தையுடையவராயிருக்கும்போது நஞ்சீயருக்கு தொண்ணூறு திருநக்ஷத்ரஞ் சென்று திருமேனியில் நோய் சாத்திக்கொண்டிருக்கத் நெற்காழ்வானும் பட்டரும் நஞ்சீயரைச் சேவித்து இப்பொழுது தேவரீர் நந்தா செய்யவேண்டியதென்னென்று கேட்க ஜீயர் அதுகேட்டு நீர் கோயிலுக்குக் கதிபதியாகையால் நமக்குப் பெருமாள் திருமேனியை மறைவறக்காட்டி யநுபவஞ் செய்வதற்கு ஸாவகாசமுண்டுபண்ணவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்யத் நெற்காழ்வானும் பட்டரும் இதனைப் பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்யப் பெருமாளும் புறப்பட்டருளி நஞ்சீயர் மடத்துவாயிலிற் சென்று அவருக்குத் தமது திருமேனியை மறைவறக்காட்டி யநுபவிப்பித்தருளினார். நஞ்சீயரும் - நெற்காழ்வான் - பட்டர் முதலானவர்களுக்கும் சில அர்த்தங்களையுபதேசித்து நம்பிள்ளைக்கு மருளிச்செய்து ஸ்ரீபராசரபட்டர் திருவடிகளை தியானித்துக்கொண்டு திருநாட்டுக்கெழுந்தருளினார். நஞ்சீயர் திருநக்ஷத்ரம் - பங்குனியுத்திரம். இவர் செய்தருளிய ப்ரபந்தம் திருவாய்மொழிக்கு ஒன்பதினாயிரப்படி. திருப்பாவைக்கும் கண்ணிநுண் சிறுத்தாம்புக்கும் வ்யாக்யானம். ஸ்ரீஸூக்தபாஷ்யம். இவரது திருநாமம் - வேதாந்தி - வேதியர் - மாதவாசார்யர் - நஞ்சீயர் - இவர் லீலாவிபூதியில் நூறு திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்தார்.

நஞ்சீயர் வைபவம் முற்றிற்று

தெண்டிரைசூழ் திருவரங்கம் செழிக்கவந்தோன் வாழியே
சீமாதவனென்னும் செல்வனார் வாழியே
பண்டைமறைத் தமிழ்ப்பொருளைப் பகரவந்தோன் வாழியே
பங்குனியிலுத்திரநாள் பாருதித்தான் வாழியே
ஒண்டொடியாள் கலவிதன்னை யொழித்திட்டான் வாழியே
ஒன்பதினாயிரப்பொருளை யோதுமவன் வாழியே
எண்டிசையும் சீர்பட்டர் இணையடியோன் வாழியே
எழில்பெருகு நஞ்சீயர் இனிதூழி வாழியே.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# நம்பிள்ளை வைபவம்.

பின்பு நம்பிள்ளை நஞ்ஜீயருக்குச் செய்ய வேண்டுவதெல்லாம் செய்தருளித் திருவாய்மொழி ச்ரவணித்தருளும்போது நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டர், பகலில் நம்பிள்ளை யருளிச்செய்த திருவாய்மொழி பதார்த்தங்களையெல்லாம் ஒன்றுதவறாமல் இரவு முழுதும் எழுதிமுடித்து அதனை நம்பிள்ளை ஸந்நிதியிற்கொண்டுபோய்வைக்க நம்பிள்ளையும் அதனை யவிழ்த்துப்பார்த்து அது லக்ஷத் திருபத்தையாயிரம் க்ரந்தமா யிருந்தபடி கண்டு வ்யாகுலப்பட்டு இந்தப்ரகாரம் திருவாய்மொழி அர்த்தங்களை வ்யாவஹரித்து வெளிப்படுத்தலாமோ இதனால் சிஷ்யாசார்ய க்ரமங்கள் கடப்பதரிதா யிருக்கும். ஆதலால் நாமநுமதிபண்ணவில்லையென்று அந்த க்ரந்தத்தில நீர் சொரிந்து புறவில்வைத்துக் கறையானுக்கு இரையாக்கினார் அந்தப்பொழுதே போயிற்று. பின்பு நம்பிள்ளை, தமக்குப் ப்ரியமுள்ள சிஷ்யரான பெரியவாச்சான்பிள்ளையை நியமித்தருளித் திருவாய்மொழிக்கு இருபத்துநாலாயிரப்படியைச் செய்வித்தருளினார். பின்பு நம்பிள்ளைக்கு அந்தரங்கசிஷ்யரான வடக்குத்திருவீதிப்பிள்ளையும் நம்பிள்ளை உபந்யாஸத்தைப் பகலெல்லாம் கேட்டுத்தரித்து இராத்திரியில் எழுதிமுடித்து நம்பிள்ளை ஸந்நிதியில் கொண்டுபோய்வைக்க நம்பிள்ளையுமதைப்பார்த்தருளி மிகவுஞ் சுருக்கமுமின்றி மிகவும் பெருக்கமுமின்றி நன்றாயிருக்கின்றது. ஆயினும் நமதநுமதியின்றி எழுதினீராதலால் அதனைக்கொடுமென்று வாங்கி உள்வைத்தருளினார்.

இதற்குப் பெரியபெருமாள் நியமனத்தினாலே சகலதேசங்களிலுமுள்ள சிஷ்டபரிக்ரஹம் உண்டாகப்போகின்றதென்று அறிந்து நம்பிள்ளை சிஷ்யரான ஈயுண்ணிமாதவப்பெருமாள் பலநாளும் பெருமாளை உபாஸனைசெய்து ப்ரார்த்தித்துக்கொள்ளப் பெருமாளும் ஈயுண்ணிமாதவப்பெருமாளை அருளப்பாடிட்டு உமதுகருத்தென்னவென்று கேட்டருள ஈயுண்ணிமாதவப்பெருமாள் நம்பிள்ளை சந்நிதியில் திருவாய்மொழியீடு முப்பத்தாறாயிரமென்கிற ஓர் வ்யாக்யானமிருக்கின்றது அதனை யவர் அடியேனுக்கு இரங்கியருளும்படி நியமிக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்யப்

பெருமாளும் திருவுள்ளங்கொண்டு ஒருநாள் நம்பிள்ளை எழுந்தருளினபோது அவருக்கு ஸகலவரிசைகளையும் ப்ரஸாதித்தருளி அர்ச்சகமுகத்தால் ஈயுண்ணி மாதவப்பெருமாளை விளையாடப்போந்த முடிக்கும்படி நியமனஞ்செய்ய அங்ஙனமே நம்பிள்ளையும் ஈயுண்ணிமாதவப்பெருமாளுக்கு முப்பத்தாறாயிரப்படியை ஸாதித்தருளினார். இவர் திருவவதாரம் கார்த்திகைமாஸம் கிருத்திகா நக்ஷத்ரம். இவரவதரித்தவூர் திருக்காவேரி தீரத்தில் நம்பூரென்னும் க்ராமம். இவர் திருநாமம் - வரதராஜர் - திருக்கலிகன்றிதாஸர் - கலிவைரிதாஸர் - லோகாசார்யர் - ஸ்ரீக்ருஷ்ண பாதர். இவர்செய்தருளின ப்ரபந்தம் நம்பிள்ளை ரஹஸ்யம் - திருவிருத்தவ்யாக்யானமுதலானவைகள். இவர் அவதரித்தகாலம் [illegible]-காலத்தான ப்ரபவ வருஷம் கார்த்திகைமாஸம் கிருத்திகாநக்ஷத்ரம்.

நம்பிள்ளை வைபவம் முற்றிற்று.

தேமருவுஞ்செங்கமலத் திருத்தாள்கள் வாழியே
திருவரையில் பட்டாடை சேர்மருங்கும் வாழியே
தாமமணிவடமார்வம் புரிநூலும் வாழியே
தாமரைக்கையிணையழகுந் தடம்புயமும் வாழியே
பாமருவுந் தமிழ்வடநூல் பயிலும்வாய் வாழியே
பாடியத்தின் பொருள்தன்னைப் பகருமவர் வாழியே
நாமநுதல் மதிமுகமுந் திருமுடியும் வாழியே
நம்பிள்ளை வடிவழகும் நாடோறும் வாழியே.

காதலுடன் நஞ்சீயர் கழல்பணிந்தோன் வாழியே
கார்த்திகைக் கார்த்திகை யுதித்தகலிகன்றி வாழியே
ஓதருமுடன் [illegible] பொருளுரைப்போன் வாழியே
பூதூரன் பாடியத்தைப் புகழுமவன் வாழியே
மாதகவால் வெவ்வுயிர்க்கும் வாழ்வளித்தான் வாழியே
மதிளரங்கர் கோயிற்கும் வளர்த்திட்டான் வாழியே
நாதமுனி யாளவந்தார் நலம்புகழ்வோன் வாழியே
நம்பிள்ளை திருவடிகள் நாடோறும் வாழியே

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# பெரியவாச்சான்பிள்ளை

## வைபவம்.

இவர் அவதரித்தகாலம் கலி - சாஉக - வது சர்வஜித்து வருஷம் ஆவணி மாசம் ரோகிணி நக்ஷத்திரம். இவர் தரிசனத்தில் பிரசித்தராய்ப் பின்பு நம்பிள்ளை நியமனத்தினால் திருவாய்மொழி யொழிந்த மற்ற இருபத்துநாலு பிரபந்தங்களுக்கும் வியாக்யானமும் ரஹஸ்யங்களை மந்த்ரார்த்தங்களையும் செய்தருளினார். முப்பத்தாறாயிரப்படி முதலான வியாக்யானங்களும் பிள்ளான்செய்தருளின ஆறாயிரப்படிக்குப் பின்பு மறைந்துபோனதாக [illegible] லை மூலமாகப் பற்றி. [illegible] பெருமையும் [illegible] இவை களுக்கெல்லாம் பட்டர் செய்தருளின [illegible] யென்று மந்த்ரவ்யாக்யானமும் ரஹஸ்யத்ரயமும் [illegible] முதலியவையிருக்கும். [illegible] இவர் [illegible] யபெருமாள் ஸந்நிதியில் சேவித்துக்கொண்டிருக்கையில் [illegible] ஸ்வாமின்! நீர் பரமகாருணிகராகையால் [illegible] ரஹஸ்யங்களையும் திருவாய்மொழி முதலிய திவ்யப்ரபந்தங்களையும் [illegible] ஸாக்ஷாத்காரமாக [illegible] சாதித்தருளி நாதமுனிகளைக்கொண்டு [illegible]. இந்த சாஸ்த்ர விஷயமாக [illegible] பூர்வாசார்ய ஸம்ப்ரதாயத்துக்கு விரோதமாக [illegible] கொண்டு [illegible] உபாஸனையால் [illegible] ஆசார்யர்கட்கு [illegible] கொண்டிருக்கின்றார். [illegible] பூர்வாசார்ய ஸம்ப்ரதாய [illegible] க்ரமமாக நியமித்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துகொண்டார்.

அப்போது பெரியபெருமாளும் அப்படியே [illegible] திருவுள்ளம் பற்றித் தூப்பில் பிள்ளைக்கு ஒருநாள் இராத்திரி ஸ்வப்னத்தில் ஸ்ரீரங்கதிவ்யநகரத்தில் தோரணங்கட்டி நிறைந்ததாக திருப்பிணையிட்டு அலங்கரித்துத் திருச்சின்ன முதலான வாத்யகோ

ஷங்களுடன் பூமழை பொழியவும் மங்களாசாஸனம் செய்யவும் தூபமேந்தல்முதலிய பலவுபசாரங்கள் பண்ணவும் ஜீயர்கள் ஸ்ரீவைஷ்ணவர்கள் முதலிய அனைவருங் கூடிப் பெரியவாச்சான்பிள்ளையை பரபத்தி பண்ணிக்கொண்டு பெரியபெருமாள் ஸந்நிதிக்கு எழுந்தருளப் பண்ணுவித்துக்கொண்டு திருக்கோபுரத்துக்கு ஸமீபமாக வரும்போது பெரியபெருமாள் நாய்ச்சிமார்களுடனும் நித்யமுக்தர்களுடனும் எதிர்வந்து பெரியவாச்சான்பிள்ளையையுள்ளே அழைத்துக்கொண்டு போகும்போது தூப்பில்பிள்ளை தாமும் மற்றவர்களைப்போல் உடன்புகுந்த வளவில் திருவாசற்காவல் முதலிகள் இவரை நோக்கி நீர் உட்புக வேண்டாம் பெரியபெருமாள் ப்ரவர்த்திப்பித்த ப்ரபன்னகாசன விஷயமாக நீர் அபசாரப்பட்டபடியால் பெருமாளுக்கு உமதுவரவில் திருவுள்ளமில்லை யாதலால் போமென்று சொல்லியதாகக் காண்பிக்கக் கண்டு தூப்பில்பிள்ளை விழித்துக்கொண்டு உள்நடுக்கத்துடன் இந்த ஸ்வப்னம் கண்டபடி யென்னவென்று சிந்தாக்ராந்தராய் விடிந்தபின்பு நித்யகர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு பின்பு திருமேனியில் நோய்சாத்திக்கொண்டிருக்கிற பெரியவாச்சான்பிள்ளைத் திருமாளிகைக் கெழுந்தருளி அவரை ஸேவித்துத் திருமேனியிருந்தபடி யென்னென்று வினவப் பெரியவாச்சான்பிள்ளையும் இவரைக் கடாக்ஷித்தருளி தூப்பில்பிள்ளாய் வாரீரென்று அழைத்து அருகிலிருக்கவைத்து நமக்கு லீலாவிபூதியிலே அர்ச்சாவதாரானுபவங்களெல்லாமாயிற்று. இனி நித்யவிபூதிக்குப் போகின்றோமென் றருளிச்செய்யத் தூப்பில்பிள்ளையும் தேவரீர் ஸகல வரிசைகளுடன் பெருமாளைத் திருவடிதொழுவதாக அடியேன் ஸ்வப்னங்கண்டே னென்று அருளிச்செய்யப் பெரியவாச்சான்பிள்ளையும் கேட்டருளி மிகவுமகிழ்ந்து மெய்மறந்து புளகாங்கித்துத் தம் கரத்தினால் தூப்பில்பிள்ளையை யணைத்து இப்போது நீர் சொன்ன நல்வார்த்தைக்கு ப்ரத்யுபகாரம் என்னசெய்வேனென் றருளிச்செய்யப் பின்னும் தூப்பில்பிள்ளை திருவாசல்காக்கும் முதலிகள் ஸந்நிதிக்குள்ளே போகவொட்டாமல் தம்மைத் தடுத்ததாகக் கண்டதையும் விண்ணப்பஞ்செய்து இனி அடியேன் செய்ய வேண்டுவதென்னென்றுகேட்கப் பெரியவாச்சான்பிள்ளையும் தூப்பில்பிள்ளையின் திருமுகநோக்கித் தம்முடைய அதிசயத்தை மறந்து உமக்கிதமாக ஒன்று சொல்லுகின்றோம் அதனைச்செய்வீரோ வென்று கே

ட்கத் தூப்பில்பிள்ளையும் தேவரீர் நியமித்தபடி செய்கின்றே
னென்று விண்ணப்பஞ்செய்ய அதுகேட்டருளியுவந்து நீர் அநு
கூலஸஹவாஸத்தைப் பண்ணாமல் அகங்காராதிகளால் இதரஸ
ஹவாஸத்தைப் பண்ணிக்கொண்டு ப்ரயோஜநாந்தரபரராய் வித்
யா நிமித்தமாக மந்த்ரார்த்தங்களை யுபதேசம் பண்ணிக் கொண்
டும் ஸ்ரீஹயக்ரீவோபாஸநைசெய்து அதனால்சில வித்யாகாவத்
தைப் பெற்றுமிருக்கின்றீர். உபாஸனையால்பெற்ற வித்யாதி
கத்துக்கு இதரமத நிரஸனமும் பூர்வாசார்ய ஸம்ப்ரதாய பரி
பாலனமும் ப்ரயோஜனமாக்காமல் பூர்வாசார்ய ஸம்ப்ரதாய விருத்
தமான அர்த்தங்களைக் கண்டித்து நூதனமாக ப்ரத்யர்த்தங்களை
ப்ரவர்த்திப்பிக்கின்றீர். இதுமஹா அபசாரமாதலால் பெரிய
பெருமாள் திருவுள்ளத்துக்கு உகப்பில்லாமலிருக்கின்றது. நீர்
இதனைத்தவிர்க்க வேண்டுமென்று அருளிச்செய்ய அதுகேட்டுத்
தூப்பில்பிள்ளை அடியேன் ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களையே ப்ரவச
னம் பண்ணிக்கொண்டு அதை அநுஸரித்து அடியேனுஞ் சில
க்ரந்தங்களைப் பண்ணி உலகத்தில் ப்ரவர்த்திப்பித்துக்கொண்டு
வந்தேனென்று விண்ணப்பஞ்செய்ய அதுகேட்டுப் பெரியவாச்
சான்பிள்ளை - தூப்பில்பிள்ளையை நோக்கி வாரீர் தூப்பில் பிள்
ளையே! நாம் உமக்கு முன்சொல்லியது ஸ்ரீபாஷ்யவிஷயமன்று.
அல்லது நீர் அதுவிஷயத்திலாவது அநுகூலஞ் செய்கின்றவராக
விருக்கின்றீரா இல்லையே. ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களில் சிறிதுகு
ற்றமுண்டென்று சிந்தித்து நீர் எழுதத்தொடங்கிய வளவில் ஸ்ரீ
பாஷ்யகாரர் - உம்முடைய ஸ்வப்னத்தில் சீறியருளினதினால்
உமக்கு பயபக்திகள் உண்டாகி அநுதாபம் பிறந்தது. பின்பன்
றோ அபராதக்ஷாபணார்த்தமாக எதிராஜஸப்ததி விண்ணப்பஞ்
செய்தீர். ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களைத்தானே ப்ரவசனம் பண்ண
த்தொடங்கினீர். ஆதலால் அதுநிற்கட்டும் நம்மாழ்வார் - நாதமு
னிகளுக்கு திவ்ய ப்ரபந்த விஷயமாகவும் ரஹஸ்யவிஷயமாக
வும் ஸாதித்தருளின அர்த்தவிசேஷங்களைக் கண்டித்து வேறே
சில அர்த்தங்களைக்கற்பித்து வ்யாக்யானத்தை விரித்து எழுதி
னீர் அதையன்றோ இப்பொழுது நாம் தவிரச்சொல்லுகின்றோம்
என்றருளிச்செய்தார்.

அதற்குத்தூப்பில்பிள்ளை நம்மாழ்வார், ரஹஸ்யங்களுக்கும்
திவ்யப்ரபந்தங்களுக்கும் விவரணஞ்செய்ததுண்டோ அஃதுண்

டாயினவென்று நான்செய்யுந்தகாது. பிற்காலத்தில் பட்டர்முத லிய ஆசார்யர்களருளிச்செய்ததாகவின் அதில்சில அர்த்தங்கள் ப்ரமாணங்களுக்குக் கொத்திராமையால் அதைவாமங்கண்டித்து எழு திறென்றுமென்று வினைப்பஞ்செய்ய அதற்குப் பெரியவாச்சான் பிள்ளை கலியுகாதியில் நம்மாழ்வார் மதுரகவிகளுமுகமாக ப்ரவர் த்திப்பித்த திருவாய்மொழி முதலானவை ஜீர்ணமாய்விட்டுப் போக; பெரியபெருமாள், அர்ச்சாவதாரமான நம்மாழ்வாரைக் கொண்டு நாதமுனிகளுக்கு ஸாக்ஷாத்காரமாக ப்ரஸாதித்த அந்த அர்த்தங்களையன்றோ இப்போது நமக்கெல்லாம் தெரி யும்படி பூர்வாசார்யர்கள் காலக்ஷேபஞ்செய்தார்கள். அவைகளை ஸ்வயமாக ஒன்றும் வியாக்யானஞ்செய்யவில்லை. ஆகையால் நீர் அவ்வாறு செய்வதைத் தவிரக்கடவீரென அருளிச்செய்ய அத ற்குக் கூரபிள்ளை யாதொன்றும் ப்ரமாண விரோதமாக ஸா திக்கவில்லையென்று கேட்க அதற்குப் பெரியவாச்சான்பிள்ளை ஆழ்வார் முகத்தாலேயிறே ப்ரமாணங்களையும் ஸாக்ஷாத்கரித்த திருத்தவராதலால் நாமறியவேண்டிய அர்த்தங்களை நாதமு னிமுகமாக ப்ரவர்த்திப்பித்தருளினார். ஆகையால் நமக்கு அநு கூலமான ப்ரமாணங்களை அவ்வாறுகொண்டு மற்றவைகளை விட்டுவிடுகின்றேன் கண்டதைக்கொண்டு நாலுதலைகொண்டுகற்பவை னைடி நாலுதலைகொண்டு கண்டதை யழுத்தப்படாமல் ஆளவந் தார்-எம்பெருமானார்-திருக்குருகைப்பிரான் பிள்ளான்-கிடாம்பி யாச்சான்-அருளாளப்பெருமாள் எம்பெருமானார்-பட்டர்-நஞ்சீ யர்-முதலானவர்களுடைய ப்ரபாவங்களைக் கேட்டறிந்தோம்? அவ ர்களுக்குத் தெரியாதபொருளொன்றும் உனக்குத்தெரி யுமோ? அவர்களெல்லாம் சாஸ்த்ரங்களை யெல்லாவற்றையும் பார்த் தவர்கள் ஆழ்வாருடைய ப்ரபந்தத்திற்கு ஒத்திருக்கின்ற சாஸ் த்ரங்கள் ப்ரமாணமாகையால் தத்வத்திலும் அநுஷ்டானத்திலும் நாதமுனிகள் முகமாக ஆழ்வார் அருளிச்செய்த கட்டளைப் படியே யுபதேசித்தார்கள். அதற்குப்பின்பு அதுவேஸத்யமெ ன்று நிர்ணயம்பண்ணிக்கொண்டு அதற்கொவ்வாதவசனங்களைக் கழித்து வசனங்களாகப் பூர்வாசார்யர்கள் அநுகூலவசனங்க ளை அவலம்பித்துக்கொண்டு பூர்வாசார்ய ஸம்ப்ரதாயார்த்தங்களை யே தங்கள்தங்கள் ஸ்ரீபாதமுடையார்க்கெல்லாம் உபதேசித்து வந்தார்கள். அதனால் சிஷ்டாசாரம் தவறுபடாமலிருந்தது. ஆத லால்நீரும் பூர்வாசார்ய ஸம்ப்ரதாயங்களுக்கு அநுகுணமான

ப்ரமாணங்களைக்கொண்டு அர்த்தநிர்ணயஞ் செய்துகொண்டு ஸாதனவழியை விட்டுவிடுமென்று அருளிச்செய்தார்.

பின்பு அதற்குத் தூப்பில்பிள்ளை ஸ்வயம் ஸர்வஜ்ஞராதலாலும் ஸ்வாநுபவத்தாலும் அனுதாபம்பிறந்து பூர்வாசார்யர்கள் வ்யாக்யானங்களையெல்லாம் ஆழ்வாருடைய பாக்யக்ஷமாகவந்த உபதேசபரம்பரையென்று அறியாமற்போய் விட்டேன். மற்றவ்யாக்யானங்களைப்போல் பூர்வாசார்யர்கள் தங்கள்தங்கள் பக்திக்கனுகுணமாகச்செய்ததென்றிருந்தேன். இப்பொழுது ஸ்வப்னத்தாலும் தேவரீர் அடியேனுக்கு அருளிச்செய்த அனுக்ரஹத்தாலும் உண்மையறிந்தேனென்று விண்ணப்பம் செய்துகொண்டு முன்பு தாமெண்ணின ஸாதனவழியான க்ரந்தங்களைப் பெரியவாச்சான்பிள்ளை திருமனைக்கு அருகுத்தந்து அங்குள்ளவர்களை நோக்கி இனியிந்த க்ரந்தங்களை யாவரும் பயவாதுபிடிக்க வேண்டாமென்று திருவாணையிட்டு அருளாயில தேசாந்தரங்களில் வழங்கிய ரஹஸ்யார்த்தங்களைக் குறித்தும் தம்மைத்தாமே நொந்துகொண்டு பெரியவாச்சான்பிள்ளையை ஆச்ரயித்தார். பெரியவாச்சான்பிள்ளையும் தூப்பில் பிள்ளையைத் திருக்கைகளால் லணைத்து உமக்கு அனுதாபம் பிறந்தபோதே ஸாஸ்த்ரபசாரங்களும் நீங்கிப்போயிற்று. ஆயினும் பெரியபெருமாள் - ஆழ்வார் - எம்பெருமானார் இவர்கள் ஸந்நிதியில் ஸத்காலக்ஷேபம் பண்ணிக்கொண்டு வாருமென்றார். தூப்பில் பிள்ளையும் அவ்வாறே செய்து பெரியபெருமாளைத் திருவடிதொழுது ஆழ்வார்கள் விஷயமாக ஓர் ப்ரபந்தம் விண்ணப்பஞ்செய்து பெரியவாச்சான்பிள்ளை ஸந்நிதியில் கொண்டுவந்துவைக்கப் பெரியவாச்சான்பிள்ளை திருவுள்ளமுவந்து தூப்பில் பிள்ளைக்கு ஸகல அர்த்தங்களையும் ஸாதித்தருளினார். அவரும் மனதுபெற்று க்ருதார்த்தராய் அடியேனுக்குத் திருவாராதனம் ஸாதித்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்யப் பெரியவாச்சான்பிள்ளை தமக்கு அந்தரங்கரான ஒரு ஸ்ரீவைஷ்ணவரைக் கொண்டு தமது கோயிலாழ்வார் திருக்காப்பைத் திறக்கச்சொல்லித் தூப்பில்பிள்ளையையழைத்து நீர்போய்க் கண்ணை மூடிக்கொண்டு ஒருவரையெழுந்தருளப் பண்ணிக்கொள்ளுமென்று நியமிக்க அவரும் ஸந்நிதியிலே போய் தண்டன் ஸமர்ப்பித்துத் தமது கண்களை மூடிக்கொண்டு ஒருவரையெழுந்தருளப்பண்ணிப் பார்க்குமிடத்தில் அந்தத் திருக்கோலம் திரு

ப்பாணாழ்வாராகவிருக்க அதனைக் கொண்டுவந்து பெரியவாச்சான்பிள்ளை ஸந்நிதியிற்காட்ட அவரும் உம்மைச்சோதிக்க எம்பெருமா னிவ்வாறு க்ருபைபண்ணினார். ஆகையினால் நீர் இவரை நித்யமாக ஆராதித்துக்கொண்டு இவருடைய ப்ரபந்தமான அமலனாதிப்பிரானுக்கு ஓர் வ்யாக்யானம் செய்யுமென்று ஸாதித்துத் தமது பாதுகைகளையும் ஸாதித்தருளினார். தூப்பில்பிள்ளையும் அதனைப்பெற்று அமலனாதிப் பிரானுக்கு ஓர் வ்யாக்யானஞ்செய்து பெரிவாச்சான்பிள்ளை ஸந்நிதியில் விண்ணப்பஞ்செய்ய அவரதனைக்கேட்டு மிகவு முவந்தருளினார். தூப்பில்பிள்ளை பெரியவாச்சான்பிள்ளையின் நியமனப்படி பூர்வாசார்ய ஸம்ப்ரதாய க்ரந்தங்களையே காலக்ஷேபஞ்செய்து கொண்டெழுந்தருளி யிருந்தார். பின்பு சிலநாளில் பெரியவாச்சான்பிள்ளை திருநாட்டுக்கெழுந்தருளினார். தூப்பில்பிள்ளையும் பெரியவாச்சானபிள்ளை ஸ்ரீபாதத்து முதலிகளைக்கொண்டு சரம கைங்கர்யங்களை நன்றாக நடத்தியருளினார்.

விசிஷ்டாத்வைத சித்தாந்தத்திலிருந்து ஸ்ரீவைஷ்ணவர்களாக உள்ளவர்களுக்குத் திருப்பல்லாண்டு முதலிய திவ்ய ப்ரபந்தங்களையொழிய வேறுகதியில்லை. அன்றியும பூர்வாசார்ய ஸம்ப்ரதாய பரம்பரையாகவந்த திவ்யப்ரபந்த தாத்பர்யங்களை யறிந்து கொள்வதற்குப் பெரியவாச்சான்பிள்ளை செய்தருளின வ்யாக்யானங்களையொழிய வேறுகதியுமில்லை. ஆகையால் ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாரும் பெரியவாச்சான்பிள்ளை ஸம்பந்தப்பட்டு அவருக்கு சிஷ்யகோடியாக விருப்பார்கள். பெரியவாச்சான்பிள்ளை செய்தருளின க்ரந்தம் தனிசுலோகி பரந்தபடி திரிமத சித்தாந்த ஸாரஸங்க்ரஹம கலியனருளப்பாடு முதலானவைகள்

பெரியவாச்சான்பிள்ளைவைபவம்.

முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம꞉.

# வடக்குத்திருவீதிப்பிள்ளை வைபவம்.

வடக்குத் திருவீதிப்பிள்ளை - திருநக்ஷத்திரம கலி - ௪௩௨௮-வதான சர்வசித்துவருஷம ஆனிமாசம் சுவாதி. இவர் சித்தாந்தத்தில் ப்ரசித்தராய் நம்பிள்ளை ஸந்நிதியில் ஸ்ரீபாஷ்யம் முதலான ஸகலக்ரந்தங்களையும் அதிகரித்துத் திருவாய்மொழிக்கு ஈடு முப்பத்தாறுயிரமும ஆசார்யஸமமதி முதலான அனேக ப்ரபந்தங்களும் செய்தருளி அவர் திருவடிகளிலே அடிமைசெய்திருக்கின்ற காலத்தில் நம்பிள்ளை தமக்கிஷ்டதெய்வமான பெரியபெருமாள் திருநாமஞ் சாத்தவேணுமென்று நினைப்பிட்டுக்கொண்டு வடக்குத் திருவீதிப்பிள்ளைக்கு ஓர் குமாரர் அவதரிக்கும்படி அனுக்ரஹஞ் செய்தருளினார்.

வடக்குத்திருவீதிப்பிள்ளைவைபவம்

முற்றிற்று.

ணிதனிற்சோதிநா ளவதரித்தான் வாழியே
ஆழ்வார்களகலைப்பொருளை யாய்ந்துரைப்போன் வாழியே
த ருகந்த நம்பிள்ளை தாளதொழுவோன வாழியே
சடகோபர்தமிழ்க்கீடு சாற்றினான் வாழியே
நா லத்திலபாடியத்தை நடத்தினன வாழியே
நல்லவுலகாரியனை நமக்களித்தான வாழியே
ஈ ரவெண்மையாளுமிறைவனா வாழியே
ககள்வடவீதிபிள்ளை யிணையடிகள் வாழியே.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# பிள்ளை லோகாசாரியர்

## வைபவம்

கலி-௪௩௬௭-வதான குரோதன ஐப்பசிமாசம் திருவோணத்தில் வடக்குத்திருவீதிப்பிள்ளைக்கு ஒரு குமாரர் அவதரித்தருளினார். அவரும் தம்முடைய ஆசார்யநிஷ்டைக்கு அனுகுணமாக அந்தக்குமாரருக்குப் பிள்ளைலோகாசார்யரென்று தமதாசார்யரான நம்பிள்ளையினுடைய திருநாமத்தையே சாத்தியருளினார். பின்பு நம்பிள்ளையும் இதனைக்கேட்டருளித் தாமது மனோரதம் சித்தியாமையால் வடக்குத்திருவீதிப்பிள்ளைக்குத் திருமாவும் ஓர் குமாரர் அவதரிக்கும்படி அனுக்ரஹஞ்செய்தருளினார். அப்படியே வடக்குத்திருவீதிப்பிள்ளைக்கு இரண்டாவது குமாரர் அவதரிக்க அவருக்கு நம்பிள்ளை யெழுந்தருளி அழகியமணவாளப்பெருமாள் நயினாரென்று - பெரியபெருமானுடைய திருநாமத்தைச் சாத்தியருளினார். பிள்ளைலோகாசார்யரும் அழகியமணவாளப்பெருமாள் நயினாரும் ஸகலசாஸ்த்ர நிபுணர்களாய்ப் பிதாவாகிய வடக்குத்திருவீதிப்பிள்ளையின்பக்கலில் ஸ்ரீபாஷ்யமுதலான க்ரந்தங்களையும் ஸேவித்து உபதேசபரம்பரையாற்பெற்ற அர்த்தவிசேஷங்களையெல்லாம் உலகத்திலுள்ள ஸகலாத்மாக்களும் உஜ்ஜீவிக்கும்பொருட்டுப் பலப்ரபந்தங்களாகச்செய்து வெளியிட்டருளினார்கள். பிள்ளைலோகாசார்யர் செய்தவை: ரஹஸ்யத்ரயம்-தத்வத்ரயம் - ஸாரஸங்க்ரஹம் - ஸ்ரீவசனபூஷணம் முதலிய பதினெட்டு ரஹஸ்யங்களும், த்வயத்ரயவ்யாக்யானம் தத்வத்ரயத்திற்குச் சிறியபடி பெரியபடி இரண்டு வ்யாக்யானமுதலானவையாம். அழகியமணவாளப்பெருமாள் நயினார் ஸ்ரீவசனபூஷணஸ்தாபனார்த்தமாக ஆசார்ய ஹ்ருதயமென்கிற ப்ரபந்தமுதலானவைகளைச் செய்தருளி நாதமுனிகள் முதலான பூர்வாசார்ய பரம்பரையாலே உபதேசமாக நடந்துவந்த ரஹஸ்யார்த்தங்களையும் திவ்ய ப்ரபந்தார்த்தங்களையும் ஸ்தாபித்தருளினார். ஒருநாள் நம்பெருமாளுடைய புறப்பாட்டில் தாப்பில் பிள்ளைக்கும் அழகியமணவாளப்பெருமாள் நயினாருக்கும் ஸ்ரீவசனபூஷண விஷயமாக ப்ரஸங்கம் வந்து ஒருவருக்கொருவர் ப்ரதிஜ்ஞைபண்ணி அழகியமணவாளப்பெருமாள் நயினார் உபந்யஸித்த அர்த்தங்களை நம்பெருமாள் அங்கீகரித்தால் தாப்பில் பிள்ளை நம்பெருமாள் ஸேவையை யிழந்து ஸ்ரீரங்கத்தைவிட்டுப் போவதாகவும் அவ்வாறவர் அங்கீகரியாவிட்டால் அழகியமணவாளப்பெருமாள் நயினார் க்ரந்தஸந்யாஸம்பண்ணுவதாகவும் நிர்ணயஞ்செய்துகொண்டு பெருமாளெழுந்தருளுகின்ற

நாலு வீதிகளிலும் நான்கு ப்ரகாரங்களாக அழகியமணவாளப் பெருமாள்நாயினார் உபந்யஸிக்கப் பெருமாள்சாத்திக்கொண்டிருந்த நாலுதிருமாலைகளும் ஒவ்வொருப்ரகாரங்களுக்கு ஒவ்வொரு மாலையாகக் கழன்று கீழ்விழும்படி பெருமாள் அநுக்ரஹம் செய்தருளி அழகியமணவாளப்பெருமாள்நாயினார் செய்தருளின ஆசார்ய ஹ்ருதயத்தையே அங்கீகரித்தருளினார். தாப்பில்பிள்ளையும் ப்ரதிஜ்ஞை பண்ணினபடி நம்பெருமாள் ஸேவையைவிட்டுத் தேசாந்தரத்துக் கெழுந்தருளினார். அழகியமணவாளப்பெருமாள் நாயினாரும் அதிவிரக்தராய் நைஷ்டிகப்ரஹ்மசாரியாயிருந்து உத்தமாச்ரமஸ்வீகாரஞ் செய்தருளி ஆசார்யஹ்ருதய முதலான ஸகலக்ரந்தங்களையும் தௌஹித்ரகுலோத்பவரான பெற்றாரென்பவருக்கு ப்ரஸாதித்தார். அவர் திருநாராயணபுரத்தாயிக்கு ப்ரஸாதித்தார். அழகியமணவாளப்பெருமாள்நாயினார் ஸந்நிதியில கிடாம்பியாச்சான் திருமருமானன-கிடாம்பித்திருமலைநயினாரென்பவர் ஸ்ரீபாஷ்யாதி ஸகல க்ரந்தங்களையும் அதிகரித்தார். அழகியமணவாளப்பெருமாள் நயினாரும் சிலகாலம் ஸந்யாஸாச்ரமத்தில எழுந்தருளியிருந்து திருத்தமயனாருக்கு முன்னமே திருநாட்டிற் கெழுந்தருளினார்.

ஸர்வஜ்ஞரான பிள்ளைலோகாசார்யர் திருவடிகளைப்பெரியவர்கள் பலரும் ஆச்ரயித்தார்கள். அவர்களுள் கூரகுலோத்தம தாஸர்-மணப்பாக்கத்துநம்பியார் கொல்லிகாவலதாஸர்-கோட்டியலண்ணர்-திருவாய்மொழிப்பிள்ளை-அவர்தகப்பனாரண்ணர்-அவர்திருத்தாயார்-விளாஞ்சோலைப் பிள்ளையென்பவர் இவர்களுள் முக்யராயிருந்தார் மணப்பாக்கத்துநம்பி. இவருடன் தேவப்பெருமாள் திருவாய்மலர்ந்தருளி சிலரஹஸ்யார்த்தங்களை ஸாதித்தருளிப் பின்னும் அவரைநோக்கி இன்னும்நாம் சொல்லவேண்டிய அர்த்தங்களைக்கோயிலிலேசொல்லுகின்றோம் அங்கேபோய் வாஸம்பண்ணிக்கொண்டிருமென்று நியமித்தருள மணப்பாக்கத்துநம்பியாரும் கோயிலில்வாஸஞ் செய்துகொண்டு தமக்குத்தேவப்பெருமாள் ப்ரஸாதித்த அர்த்தங்களைத்தனியிலேயிருந்துத்யானித்துக்கொண்டிருக்க ஒருநாள் பிள்ளைலோகாசார்யர் ஸ்ரீபாதத்து முதலிகளும் தாமுமாக ஓரிடத்திலிருந்துகொண்டு அதுகயில் மணப்பாக்கத்துநம்பியார் இருப்பதுதெரியாமல ஸ்ரீபாதத்து முதலிகளுக்கு ரஹஸ்யார்த்தங்களை ஸாதித்துக்கொண்டிருந்தார். அதனைமணப்பாக்கத்துநம்பியார் கேட்டுக்கொண்டிருந்து தமக்கு முன்பு தேவப்பெருமாள்ஸாதித்த அர்த்தங்களும் இப்போதுபிள்ளைலோகாசாரியர் அருளிச்செய்த அர்த்தங்களும் ஒன்றாயிருந்தபடி பார்த்து எழுந்துவந்து தேவப்பெருமாள் நீரானோவென்றுசொல்லிக்கொண்டு பிள்ளைலோகாசார்யர் ஸந்நிதியிலே ஸேவித்தார். பிள்ளைலோகாசார்யரும் அவரைத்திருக்கரத்தினாலே வாரியெடுத்த

ருளி நீர் ஆரென்றுகேட்டருள மணப்பாக்கத்து நம்பியாரும் தேவப்பெருமாள் நியமித்தபடியே விண்ணப்பஞ்செய்யப்பிள்ளைலோகாசார்யர் மிகவுமுவந்து அவரைத்தமக்கு அந்தரங்கசிஷ்யராகக்கொண்டு தேவப்பெருமாள் ஸாதித்த அர்த்தங்களுக்குமேல் ஸாதிக்கவேண்டு மர்த்தங்களையும ஸாதித்துக்கொண்டிருந்தார். பின்பு தேவப்பெருமாள் மணப்பாக்கத்து நம்பியாருடைய ஸ்வப்னத்திலெழுந்தருளி இந்த அர்த்தங்களை எல்லைக்கட்டளைப்பாடாக ஒரு ப்ரபந்தமாகச் செய்யும்படி பிள்ளைலோகாசார்யருக்கு விண்ணப்பஞ்செய்யுமென்று நியமித்தருளினர்.

அவரும் அதனைப் பிள்ளைலோகாசார்யருக்கு விண்ணப்பஞ்செய்யப் பிள்ளைலோகாசார்யரும் அந்நியமனத்தைச் சிரஸாவஹித்துக்கொண்டு உபதேசபரம்பரையால் வந்த அர்த்தங்களை நாதமுனிகள்முதலான பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகளைக் கொண்டு நிறைத்துப்ரதிபாதித்து அதற்கு ஸ்ரீவசனபூஷண மென்று திருநாமஞ்சாத்தியருளினர். இந்த ஸ்ரீவசனபூஷண ஸ்தாபனார்த்தமாக ஆசார்ய ஹ்ருதயம பிறந்ததென்று மேல்குறிக்கப்பட்டது. இவ்வாறு பிள்ளைலோகாசார்யர் மிகுந்த வைபவமுடையவராயும பெரியபெருமாளுக்கு பராணபூதராயும எழுந்தருளியிருக்கின்ற காலத்தில் துருஷ்கால கலஹமநேரிட்டுக் கோயிலிற்குடியிருக்கக்கூடாமையாயிருக்கபடியால் நம்பெருமாள் - நாய்ச்சிமாருடன் எழுந்தருளினர். பிள்ளைலோகாசார்யரும பெருமாளைப்பிரிந்துதரித்திருக்கமாட்டாமல்சிலமுதலிகளுடன பெருமாளைப்பின்தொடர்ந்துசென்றுதிருமேனிக்காவலாக எழுந்தருளியிருந்தார். அப்பொழுது சோதிடக்குடியென்கிற க்ராமத்தில எழுந்தருளியிருக்கும்போது பிள்ளைலோகாசார்யர் திருமேனி நோய்சாத்திக்கொண்டு தம்முடையசிஷ்யரான விளாஞ்சோலைப்பிள்ளையைத் திருவனந்தபுரத்தில் நித்யவாஸமபண்ணும்படி நியமித்தருளி ஆவணிமாஸம்-சுக்லபக்ஷம தசமியில் திருநாட்டிற்கெழுந்தருளினர்.

பிள்ளை லோகாசாரியர் வைபவம் முற்றிற்று.

அத்திகிரியருளாள ரனுமதியோன் வாழியே
ஐப்பசியிற்றிருவோணத் தவதரித்தான் வாழியே
முத்திநெறிமறைத்தமிழால் மொழிந்தருள்வோன் வாழியே
மூதறிவின்மணவாளன் முன்புதித்தான் வாழியே
நித்தியநம்பிள்ளைபதம் நெஞ்சில்வைப்போன் வாழியே
ஸ்ரீவசனபூடணத்தால் நியமித்தான் வாழியே
உத்தமமாமுடும்பைநக ருதித்தவள்ளல் வாழியே
உலகாரியன்பதங்க ளூழிதொறும வாழியே.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

# திருவாய்மொழிப்பிள்ளை

## வைபவம்.

பின்பு நம்பெருமாள் பிள்ளையைப்பிரிந்த க்லேசத்தினால் சோதிடக்குடியைவிட்டுத்திருமாலிருஞ்சோலையிற்சென்று அங்கு சிலநாளெழுந்தருளியிருந்து அவ்விடத்து அழகிய மணவாளன் கிணறென்று ஓர்கிணற்றையுண்டாக்கி அங்குநின்றும் புறப்பட்டுக்கோழிக்கோட்டுக்கு எழுந்தருளினார். மற்றும் திவ்யதேசத்தெம்பெருமான்களும் - நம்மாழ்வாரும் கோழிக்கோட்டுக்கு வலப்புறமாக எழுந்தருளினார்கள். அவ்விடத்துத் தேவப்பெருமாள் நம்மாழ்வாரை மிகவுமுவந்து தம்முடைய திவ்ய ஸிம்ஹாஸனமான வட்டமணையையும் - முத்தின்சட்டையையும் - தீர்த்தபடிக்கத்தையும் ஸாதித்தருளினார்.

அன்றுமுதல் தேவப்பெருமாளுக்கு வட்டமணை முதலானவைகளில்லை. நம்பெருமாளங்குநின்றும் புறப்பட்டு மேல்நாட்டில் திருநாராயணபுரத்துக்கெழுந்தருளி அங்குநின்றும் புறப்பட்டுத் திருவேங்கடமலைக்கெழுந்தருளி அவ்விடத்தில் சிலகாலமெழுந்தருளியிருந்தார். கோயிலைவிட்டு நம்பெருமாள் புறப்பட்டருளிய பின்பு விவேகசூன்யரான மிலேச்சர் ஆக்ரமித்துக் கோயிலில் ஓர் மதிலையிடித்துக் கண்ணனூரிற்கொண்டுபோய் அரண்மனைகட்டுவித்து அனேக உபத்ரவங்களையும் செய்யத்தொடங்கினார்கள். அப்பொழுது நம்பெருமாளுக்குரித்தாகிய அழகியமணவாளனென்னுங்கிராமத்தில் காணியாட்சி ப்ராஹ்மணருள் சிங்கப்பிரானென்னுமொரு ப்ராஹ்மணர் அந்த மிலேச்சர்வாசலில் காரியக்காரராய் நின்று அவர்களுக்கு அனுகூலம் செய்கின்றவர்போற்காண்பித்து அவர்கள் நினைத்தபடி உபத்ரவஞ்செய்யாமல் திருமதில் - திருமாளிகை-திருக்கோபுரம்-திருமாமணிமண்டபம் முதலானவைகளையும் பெரியபெருமாளையுங் காத்திருந்தார். அதையறிந்து அங்குள்ளவர்கள் யாவரும் அச்சிங்கப்பிரானுக்கு இனியவார்த்தைகளோடு உபசாரஞ் செய்துகொண்டுவந்தார்கள். பின்பு திருவாய்மொழிப்பிள்ளை திருத்தாயார் நம்முடைய ஆசார்யரான பிள்ளைலோ

காசார்யரைப்பிரிந்து எவ்வாறிருப்போமென்று வருந்தி பரமபதத்தையடைந்தாள். அவர்குமாரரான திருமலையாழ்வானென்னும் திருவாய்மொழிப்பிள்ளையைச் சிறியதாயார் போஷித்துக்கொண்டிருந்தாள். பின்பு - திருமலையாழ்வான் பருவம் நிறைந்தவளவில் தமிழ் விதக்தராயிருந்தார். அப்பொழுது பிள்ளைலோகாசார்யருடைய சிஷ்யராகி மிகுந்த வைபவத்தைப்பெற்ற கூரகுலோத்தமதாஸரென்பவர் கோயிலில் மந்த்ரவ்யாக்யானத்தை எல்லார்க்கும் ப்ரவசனம்பண்ணி தர்சனத்தை ப்ரவர்த்திப்பித்துக்கொண்டிருந்து திருமலையாழ்வானைத் திருத்தி தர்சனப்ரவர்த்தகராகும்படி செய்ய நினைத்து அவர்செவிப்படும்படி திருவிருத்தத்தை அநுஸந்திக்கத் திருமலையாழ்வானும் அதற்குப் பொருளென்னவென்று கேட்கக் கூரகுலோத்தமதாஸர் அவரைநோக்கி உமக்கிதைச்சொல்லலாகாதென்று மறுக்க இவ்வார்த்தையைச் சிறியதாயாருக்கறிவிக்க அம்மையாரும் திருமலையாழ்வானைநோக்கி நீர் பிள்ளைலோகாசார்யர் திருவடிகளை அதிபால்யத்திலாச்ரயித்திருந்தீர்; இப்பொழுது அதினின்றும் வேறுபட்டாயினீரென்று லோகாசார்யர் ஸம்பந்தத்தை நினைப்பித்தாள். திருமலையாழ்வானும் ஆசார்யரைப்பற்றுதலில் அபிமுகராகவிருந்தார். அப்பொழுது மேற்குறித்த சிங்கப்பிரான்செய்த உபகாரத்துக்கு ஆசார்யர்களெல்லாரு முவந்து அவருக்குத் திருமணத்தூணம்பியென்று திருநாமஞ்சாத்தினார்கள்.

பின்பு அவருக்கு அங்குள்ளவர்களெல்லாரும் அர்த்த விசேஷங்களைத் தனித்தனிசொல்ல அச்சிங்கப்பிரான் பலருஞ் சொல்லுகையால் தெளிவுபிறக்கவில்லை செவ்வையாகத்தெரிவிக்கத்தக்க ஒருவராலடியேனுக்குக் கற்பிக்கவேண்டுமென்ன அவர்களும் திருமலையாழ்வாரை நியமிக்க அவரும் சிங்கப்பிரானுக்கு ஸகல அர்த்தங்களையுஞ் சொல்லிக்கொண்டிருக்கும்போது அதில் சிலது அஸம்ப்ரதாயமாக இருப்பதையறிந்து கூரகுலோத்தமதாஸர் திருமலையாழ்வாருக்கு ஸம்ப்ரதாயார்த்தங்களையும் பிள்ளை லோகாசாரியர் தமக்கு ஸாதித்த ஸ்ரீவசன பூஷண முதலான ரஹஸ்யார்த்தங்களையும் ஸாதித்து அவரை தர்சனப்ரவர்த்தகராக்கினார். அதனால் கூரகுலோத்தம தாஸருக்கு உதாரரென்று திருநாமமுண்டாயிற்று. பின்பு கூரகுலோத்தமதாஸர் தம்முடைய அந்தியகாலத்தில் திருமலையாழ்வாரை யழைத்தருளி நீர் விளாஞ்சோலைப

பிள்ளையிடத்தில் இன்னுஞ்சில ரஹஸ்யங்களையும் திருக்கண்ணங்குடிப்பிள்ளையிடத்தில் திருவாய்மொழியையுங் கேளுமென்று நியமித்துத் திருநாட்டுக்கெழுந்தருளினார். திருமலையாழ்வாரும் திருக்கண்ணங்குடிப் பிள்ளையினிடத்தில் திருவாய்மொழி சேவிக்கும்போது அவர் முக்யதாத்பரியமே சொல்லிவந்தார். இவரும் அதை சப்தார்த்தமாக மீண்டும் சொல்லவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்யத் திருக்கண்ணங்குடிப்பிள்ளையும் திருப்புட்குழி ஜீயர்சந்நிதிக்குப்போமென்று நியமித்தார். அவரும் திருப்புட்குழிக்குவந்து ஜீயர் திருநாட்டுக்கெழுந்தருளி பன்னிரண்டுநாளாயிற்றென்றுகேட்டுத் துக்கித்துக்கொண்டிருந்தார். அங்கு நம்பிள்ளை சிஷ்யரான ஈயுண்ணிமாதவருடைய சிஷ்யப்ரசிஷ்யராகிய நயினாராச்சான்பிள்ளையினது திருவடிகளில் சேவித்துத் தாம் வந்தகாரியத்தை விண்ணப்பஞ்செய்ய அவரும் அங்கீகரித்தருளி நாமேயுமக்குத் திருவாய்மொழியாவும் சாதிக்கின்றோமென்று அருளிச்செய்து அவ்வாறே நடத்திவந்தார். பின்னைத் திருநாராயணபுரத்து ஆயிப்பிள்ளை முதலானவர்கள் கேட்டு எம்பெருமானுடைய திருமுகமெழுதி நயினாராச்சான்பிள்ளையைத் திருநாராயணபுரத்துக்கெழுந்தருளும்படியனுப்ப அவரும் ஸ்ரீமுகத்தைத் தலையில் வைத்துக்கொண்டு உவந்து திருமலையாழ்வாரையுங் கூட்டிக்கொண்டு திருநாராயணபுரத்துக்கெழுந்தருளி உடையவருக்கு உபயபாக ஆயிப்பிள்ளை - திருமலையாழ்வார் முதலானவர்க்கு ஈடுமுப்பத்தாறாயிரத்தை ப்ரசாதித்துத் திருமலையாழ்வாருக்குத் தம்முடைய திருவாராதனமான கண்ணனையும் ப்ரசாதித்தருளினார்.

திருமலையாழ்வாரும் அதனைப்பெற்று க்ருதார்த்தராய் நம்மாழ்வாரை ஸேவிக்கவேண்டுமென்கிற அபிநிவேசத்தால் அங்கு நின்றும் புறப்பட்டு மேல்நாட்டில் திருக்கணம்பியென்னும் ஊருக்கெழுந்தருளி நம்மாழ்வாரை ஸேவித்து அவர் அநுமதிகொண்டு தாம் முன்னதாகத் திருநகரிக்கெழுந்தருளிக் காடுவெட்டி நாடாக்கிக் குடியேற்றித் திரும்பவும் திருக்கணம்பிக்குவந்து ஆழ்வாரை யெழுந்தருளப்பண்ணுவித்துக்கொண்டு திருநகரியில் ப்ரதிஷ்டைசெய்வித்துத் திருக்கோபுரமுதலானவைகளைக் கட்டுவித்து நித்யோத்ஸவாதிகளை நடப்பித்தருளினார். அப்பொழுது நம்மாழ்வார் மிகவுமுவந்து திருமலையாழ்வாருக்குச் சடகோபதாசனென்று திருநாமஞ்சாத்தியருளினார். பின்பு திருமலையாழ்வார் திருவனந்தபுரத்

தில் விளாஞ்சோலைப்பிள்ளை ஸந்நிதியிற்போய் அவரைஸேவித்து அவரிடத்தில் விசேஷார்த்தங்களைப்பெற்று அவர் விஷயமாகத் தனியனும் விண்ணப்பஞ்செய்து திருநகரிக்கெழுந்தருளினார். பின்பு சிலநாளில் விளாஞ்சோலைப்பிள்ளை திருநாட்டிற்கெழுந்தருளின செய்தியைக்கேட்டு அவருக்குச்சிஷ்யர்கள் செய்யுங் கிருத்தியங்களையெல்லாஞ் செய்தருளினார். பின்பு சிறிதுநாளில் திருமலையாழ்வார் தமது மருமகனைப் புத்ரனாகப்பெறவுக்கொண்டு தேவப்பெருமாளென்று - நாலூராச்சான்பிள்ளை திருநாமஞ் சாத்தியருளினார். பிள்ளைலோகாசார்யருடைய சிஷ்யரான கொல்லிக்காவலதாஸரென்கிற-கோட்டூரழகியமணவாளப்பெருமாள்பிள்ளையும் லோகாசார்யர் தமக்கு ஸாதித்தருளின அர்த்தவிசேஷங்களையனுசந்தித்துக்கொண்டு சிக்கில்கிடாரமென்கிற ஊரிலெழுந்தருளியிருந்தார். அதன்பின்பு எழுபத்துநான்கு ஸிம்ஹாஸனஸ்தர்களில் கோமடத்தாழ்வாருடைய திருவம்சஸ்தரான திருநாவுடையபிரான்தாஸரென்பவர் கொல்லிக்காவலதாஸருடைய திருக்குமாரத்தியாரை விவாகம்பண்ணிக்கொண்டு சிக்கில்கிடாரத்திலே அவர் திருமாளிகையிலே யிருந்துகொண்டு அவர் ஸந்நிதியில் ஸகலரஹஸ்யங்களையும் அதிகரித்து அவரை லோகாசார்யராகவே யனுசரித்துக்கொண்டிருந்தார்.

பின்பு கொல்லிக்காவலதாஸரும் சிலநாளிருந்து திருநாட்டுக்கெழுந்தருளினார். பின்பு திருநாவுடையபிரான்தாஸரண்ணர் தேவிகளையழைத்துக்கொண்டு திருநகரிக்கெழுந்தருளியிருந்தார். அக்காலத்தில் நம்மாழ்வாராதியாக வருகிற ப்ரபத்திஸம்ப்ரதாயங் குறைந்துவருகிறதைக்கண்டு பெரியபெருமாள் எம்பெருமானாரைப்போல ஆத்மாக்களை உஜ்ஜீவிக்கச்செய்யும்படி யொருவரை அவதரிப்பிக்கச்செய்வோமென்று நினைப்பிட்டுத் திருவனந்தாழ்வானைப் பார்த்தருளி நீர் போய் உம்முடைய அவதாரமான திருப்புளியாழ்வானிருக்கின்ற திருநகரியிலே திருநாவுடையபிரான்தாஸரண்ணருடைய தேவிகள் கர்ப்பத்தையடைந்து லோகோஜ்ஜீவனார்த்தமாகவும் சேதனஸம்ரக்ஷணார்த்தமாகவும் அவதரியுமென்று நியமித்தருளத் திருவனந்தாழ்வானும் நியமனப்படியே அண்ணருடையதேவிகள் கர்ப்பத்தையடைந்தார்.



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீமணவாளமாமுனிகள்

## வைபவம்.

எம்பெருமான் நியமனப்படி கலியுகாதி நாலாயிரத்து நானூற்றெழுபத்திரண்டாவதான சாதாரண வருஷம் ஐப்பசிமாசம் சுக்லபக்ஷம் சதுர்த்தசி வியாழக்கிழமைகூடின மூல நக்ஷத்திரத்தில் அவதரித்தருளினார். அன்னையரும் குமாரருக்கு ஜாதகர்மம்பண்ணி பனிரண்டாநாள் திருவிலச்சினையும் ஸாதித்துக் குமாரருடைய வடிவழகும் பெருமானுடைய அழகு ஒத்திருந்தமையால் அழகியமணவாளனென்று திருநாமஞ்சாத்தி இவர் ஸாமான்யரல்லரென்று நிச்சயித்திருந்தார்.

பின்பு அழகிய மணவாளரென்கின்ற அந்தப்புத்திரரும் சிக்கில் கிடாரமென்கிற ஊரில் அம்மான் திருமாளிகையில் வளர்ந்துகொண்டிருக்கிறநாளில் தகப்பனாரான அண்ணரும் சாஸ்த்ரவிதிப்படி அன்னப்ராசனம் சௌளம் உபநயனம் முதலானவைகளைச்செய்வித்து வேதசாஸ்த்ர முதலானவைகளை யதிகரிப்பித்துக்கொண்டிருந்தார். இவர் திருவனந்தாழ்வான் அம்சமானவராதலால் பலரு மதிசயிக்கத்தக்க பேரறிவும் நற்செய்கையு முடையவராய்த் திருப்பாற்கடலுஞ் சந்திரமண்டலமு மொளி மழுங்கத்தக்க வெண்ணிறத்தையுங் குறைவுபடாத முப்பத்திரண்டு லக்ஷணங்களையும்பெற்று அழகிற்சிறந்த வடிவத்துடனெழுந்தருளி

யிருந்தார், இங்ஙனிருக்கச் செஞ்சியில் பிரதானியாயிருந்த கோபணார்யரென்பவர் பிரபுவின் அநுமதிப்படி நம்பெருமாளைத் திருமலையில் நின்றுஞ் செஞ்சியி லெழுந்தருளப் பண்ணுவித்து அங்கு சிலகாலமாராதித்துக் கொண்டிருந்து துருஷ்கரையெல்லா மடித்துத் துரத்தி அழகியமணவாளரவதரித்த சாதாரண வருஷத்திற்கு முன்னான பரிதாபிவருஷம் வைகாசிமாசம் பதினேழாவதுநாளில் செஞ்சியில்நின்றும் நம்பெருமாளைக் கோயிலுக்கெழுந்தருளப்பண்ணுவித்தார். நம்பெருமாளும் கோயிலி லெழுந்தருளித் தமது திருநோக்கத்தை நேராகத் தென்றிசையிலுள்ள சிக்கில் கிடாரத்தில் வளர்கின்ற அழகிய மணவாளப் பெருமாளைக் கடாக்ஷித்துக்கொண்டிருந்தார். அண்ணரும் தமது குமாரரான அழகிய மணவாளப்பெருமாளுக்குத் திருக்கல்யாணஞ் செய்வித்துச் சிலநாள்கழிந்தவாறே திருநாட்டுக்கெழுந்தருளினார்.

அவருக்கு அழகிய மணவாளப்பெருமாள் செய்யவேண்டிய உத்தரக்ரியைகளைச் செய்தருளினார். அக்காலத்தில் திருநகரியி லெழுந்தருளியிருக்கிற திருமலையாழ்வார் இனி தர்சனப்ரவர்த்தகராவார் ஆரென்று நினைத்துக் கொண்டிருக்கும்போது அழகியமணவாளப்பெருமாள் தமது ஜனனபூமியான திருநகரிக்கெழுந்தருளி திருமலையாழ்வார் திருவடிகளை யாச்ரயித்து அவரது ஸந்நிதியில் த்ராவிடவேதார்த்தங்களை யெல்லா மறிந்து அதில் நிர்வாஹகராயிருந்தார். திருமலையாழ்வாரும் திருவாய்மொழியினுடைய ரசாநுபவத்தில் மிகவும் ஏற்றமுடையவராயிருக்கையால் அவருக்குத் திருவாய்மொழிப்பிள்ளையென்று திருநாமமுண்டாயிற்று. பின்பு திருவாய்மொழிப்பிள்ளையும் அழகியமணவாளப்பெருமாளுடைய நிஷ்டாவிசேஷத்தை மிகவுமுகந்து அவருக்கு உடையவர் திருவடிகளைத் தந்தருளினார். அப்பொழுது திருவாய்மொழிப்பிள்ளை திருநகரியில் உடையவருக்குத் தனிக்கோயில் கட்டுவித்து உடையவர் கோயிலைச்சூழ இராமாநுஜ சதுர்வேத மங்கலமென்கிற அக்ரஹாரமுங் கட்டுவித்து அதில் பாகவதர்களைக் குடியேற்றுவித்தார்.

பின்பு அழகியமணவாளப்பெருமாளும் அவ்வுடையவர்திருவடிகளில் பிரியாவன்பில் ப்ரவீணராய் அவர்விஷயமாக யதிராஜவிம்சதியென்கிற ஓர் க்ரந்தத்தை விண்ணப்பஞ் செய்தார். அதனால் அழகிய மணவாளப்பெருமாளுக்கு யதீந்த்ரப்ரவணரென்று திருநா

மமுண்டாயிற்று. ஆனுலிவர் வடதேசயாத்ரை செய்யுமுன்பே பாண்டியதேசத்தில் ஆழ்வார் திருநகரியில் சதுர்வேதமங்கலத்தில் எழுந்தருளியிருக்கிற திருநகரி எம்பெருமானார் விஷயமாக இந்த யதிராஜ விம்சதியைச் செய்ததல்லது ஸ்ரீபெரும்பூதூரில் வந்து செய்ததில்லை. இந்த யதிராஜவிம்சதியைத் திருவாய்மொழிப் பிள்ளை கேட்டருளி மிகவுமுவந்து திருப்புளியாழ்வாரடியிலே தாம்கண்ட தம்முடைய உடையவரை யிவரைத்திருவாராதனஞ்செய்யும்படி கொடுத்தருளி ஓரிடத்தில் பகவத்யானஞ் செய்துகொண்டிருந்தார். அப்பொழுது திருவாய்மொழிப்பிள்ளையினுடைய ஸ்ரீபாதத்து முதலிகளுக்கு யதீந்த்ரப்ரவணரிடத்தில் சிறிது அசூயையுண்டாக அதனை ஸர்வஜ்ஞரான திருவாய்மொழிப்பிள்ளை யறிந்தருளி அவர்களபசாரப்படாதபடி இவர் சேஷபூதராமென்று சமாதிகொள்ளும்படி முகந்திரித்துக்காட்டி அசூயையைத் தவிர்ப்பித்து இவரிடத்திலே அவர்களுக்கு ப்ரேமத்தையுமுண்டாக்கியருளினார்.

பின்பு யதீந்த்ரப்ரவணருக்குக் குமாரரவதரிக்க அவருக்குத் திருவாய்மொழிப்பிள்ளை நியமனத்தினால் இராமாநுஜஜீயரென்று திருநாமஞ்சாத்தியருளினார். திருவாய்மொழிப்பிள்ளை தமது திருவாராதனமான கண்ணனிடத்திலே ஈடுபாடுடையவராயிருக்கையால் கண்ணனைச் சிறப்பித்துக் காட்டுகின்ற பெரியாழ்வார் திருமொழிக்கு வியாக்யானஞ்செய்தருளிப் பின்பு சில நாளில் திருநாட்டிற் கெழுந்தருளவேணுமென்னும் வாஞ்சையுடையவராய்த் திருமேனியிலே நோய் சாத்திக்கொண்டிருக்க அப்பொழுது அவர் திருவுள்ளத்தில் சிறிது குறையுண்டானதாக அறிந்து யதீந்த்ரப்ரவணர் முதலான முதலிகள் சந்நிதியில்வந்து திருவாய்மொழிப்பிள்ளையை ஸேவித்துத் திருவுள்ளத்தில் குறையென்னவென்று கேட்க அதற்குத் திருவாய்மொழிப்பிள்ளை இந்தக்காலங்கலியாதலால் ஆழ்வார்கள் ஸ்ரீஸூக்திகளை பக்திவிச்வாசங்களோடே வளர்த்துக்கொண்டிருப்பாராரென மிகவுங் கிலேசமாயிருக்கின்றதென்று அருளிச்செய்தார். அதுகேட்ட யதீந்த்ரப்ரவணரும் அவர் திருவடிகளைச்சேவித்து அடியேன் அவ்வாறு செய்கின்றேனென்று விண்ணப்பஞ்செய்யத் திருவாய்மொழிப்பிள்ளை இதுவிஷயத்தில் வார்த்தாசாத்யத்தாலே போதாதென்ன யதீந்த்ரப்ரவணரும் திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளைத்தொட்டு அடியேன் ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளைக்கொண்டு காலக்ஷேபம்பண்ணுகிறேனெ-

ன்று விண்ணப்பஞ்செய்தார், திருவாய்மொழிப்பிள்ளை திருவுள்ள
முவந்து நீர் கீர்வாணசாஸ்த்ரங்களில் பலகாலங்களைச் செலுத்தா
மல் எம்பெருமானாருக்கு உகப்பாக ஸ்ரீபாஷ்யத்தை யொருகால்
கேட்டு நமக்கும் எம்பெருமானாருக்கும மிகவும் ப்ரீதராகவிருமெ
ன்று ஆஜ்ஞாபித்து ஸ்ரீபாதத்து முதலிகள் முதலானவர்களை
யழைத்தருளி யதீந்த்ரப்ரவணர்கையி லொப்புவித்து அவர்களை
ப்பார்த்து இவரவதாரவிசேஷத்தை நீங்களறிந்திருக்கின்றபடியால்
நம்மைப்போ லிவரைக் கண்டுகொண்டிருங்கோளென்று நியமித்
துப் பிள்ளைலோகாசாரியர் திருவடிகளை த்யானித்துக்கொண்டு
வைகாசிமாஸம க்ருஷ்ணபக்ஷம அஷ்டமியில் திருநாட்டிற கெழு
ந்தருளினார். இவரவதாரகாலம வைகாசி விசாகம. அவதரித்த
ஸ்தலம குருகிநகரம். திருநாமம திருமலையாழ்வார்-ஸ்ரீசைலேசா-
திருவாய்மொழிப்பிள்ளை - ஸ்ரீசடகோபதாஸர் - காடுவெட்டியை
யன். இவர்செய்தருளின ப்ரபந்தம் பெரியாழ்வார் திருமொழி
வியாக்கியானம. ஸ்ரீவசனபூஷண வியாக்கியானம, வ்யாபதி
அநுசந்தான முதலான க்ரந்தங்கள்.

திருவாய்மொழிப் பிள்ளை வைபவம

முற்றிற்று.

---

வையகமெண்சடகோபன் மறைவளர்த்தோன்வாழியே
வைகாசிவிசாகத்தில் வந்துதித்தான் வாழியே
ஐயனருண்மாரிகலை யாய்ந்துரைப்போன்வாழியே
அழகாருமெதிராச ரடிபணிவோன்வாழியே
துய்யவுலகாரியன்றன் துணைப்பதத்தோன்வாழியே
தொல்குருகாபுரியதனைத் துலக்கினான்வாழியே
தெய்வநகர்குருகிதன்னில் சிறக்கவந்தோன்வாழியே
திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகள்வாழியே.

பின்பு யதீந்த்ரப்ரவணர் திருவாய்மொழிப்பிள்ளையினுடைய
சரமகைங்கர்யத்தைப் பரக்க நடத்தியருளினார். பின்பு யதீந்த்ரப்
ரவணர் திருநகரியில் தர்சனத்தை நிர்வகித்துக்கொண்டிருக்கிறகா
லத்தில் அழகியவரதர்கோன்முதலியாரண்ணர் முதலானவர்கள்
இவர்வைபவத்தைக் கேட்டுவந்து இவர்திருவடிகளில் ஆச்ரயித்தா
ர்கள். இவர்களில் அழகியவரதர் ஸந்யாஸாச்ரமத்தைப் பெற்று
இராமாநுஜஜீயரென்று திருநாமத்தையுடையவராய் யதீந்த்ரப்ரவ
ணருக்குப் பாதரேகையாய்ப் பிரியாமல் அடிமைசெய்துகொண்

டிருந்தார். பின்பு சிலநாளில் யதீந்த்ரப்ரவணர் நம்பெருமாளுக்கு மங்களாசாஸனம்பண்ணவேண்டுமென்று திருவுள்ளம்பற்றி ஆழ்வார் திருமுன்பே சென்று ஸேவித்து விரோதிகளையெல்லாம் நசிப்பித்துத் திருவரங்கத்திருப்பதியில் நம்பெருமாள் பரங்காக முன்போலெழுந்தருளி யிருக்கின்றார். அவரை யடியேன்ஸேவிக்க விடைகொடுத்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துகொள்ள ஆழ்வாரும் விடைகொடுத்தருளினார். பின்பு யதீந்த்ரப்ரவணர் முதலிகளுடன் திருநகரியினின்றும் புறப்பட்டு ஸ்ரீவில்லிபுத்தூருக்கெழுந்தருளி ஆண்டாளையும் பெரியாழ்வாரையும் வடபெருங்கோயிலுடையானையும்ஸேவித்து அங்குநின்று திருமாலிருஞ்சோலைக்கெழுந்தருளி அழகரைச்சேவித்து அங்குநின்றும் புறப்பட்டுக் கோயிலுக்கெழுந்தருளினார். அப்பொழுது கோயில்பரிவாரங்களெல்லா மெதிர்கொண்டுவந்து சேவித்து உள்ளேயழைத்துக்கொண்டுபோக இவரு மேழுதிருவீதிகளையும் வலமாகவந்து கோடியிலண்ணர் திருமாளிகைக்கெழுந்தருளினார். கோடியிலண்ணரென்பவரைப் பிள்ளை லோகாசார்யருடைய சிஷ்யரென்று மேற்குறித்திருக்கின்றது. இவர் நம்பெருமாள் கோயிலைவிட்டுப் போனபோது தாமுங் கோயிலைவிட்டுத் திருமெய்யத்திலேபோய் இருபத்துநாலாயிரப்படியை பாராயணம் பண்ணிக்கொண்டிருந்தார். பெருமாள் திரும்பவுங் கோயிலுக்கெழுந்தருளின பின்பு தாமுங் கோயிலில் குடியேறி யெழுந்தருளியிருந்தார்.

இவர் தமது திருமாளிகைக்குவந்த யதீந்த்ர ப்ரவணரைக் கண்டு மிகவு முவந்து அவதார விசேஷமென்று ஆதரித்துப் பெருமாளைச் சேவிக்கப்பண்ணுவித்தற்காகக் கோயிலுக்கதிபதியாக விருக்கின்ற திருமாலேந்தபெருமாளென்கிற பட்டரனுமதிக்காக அவர் திருமாளிகைக்கு இவரை யெழுந்தருளப்பண்ணிக்கொண்டு போகப் பட்டரும் யதீந்த்ரப்ரவணரைக்கண்டு மிகுந்த ஆதரவுடனெழுந்தடிபணிந்து ஆஸனத்தி லெழுந்தருளப் பண்ணுவித்துத் திருவாய்மொழியி லொவ்வொருபாசுரத்துக்குப் பொருளருளிச்செய்யவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய யதீந்த்ர ப்ரவணரும் அந்தப்ரகாரமே ஸாதித்தருளினார். பட்டருங் கேட்டருளி ஆச்சர்யப்பட்டு யதீந்த்ர ப்ரவணருக்கு முப்பத்தாறாயிரப் பெருக்கரென்று திருநாமஞ்சாத்தித் தமது ஸந்நிதியாரையும் பரிஜனங்களையுமுடன்கூட்டி நம்பெருமாளை யடிபணிந்து மிகவு மானந்தித்து மங்

களாசாஸனம் பண்ணியருளி, கோடியி லண்ணருடனேகூட அவ
ர்திருமாளிகைக்கெழுந்தருளினர். பிள்ளைலோகாசார்யர் முத
லான பூர்வாசார்யர்களுடைய வைபவங்களைக் கோடியி லண்ண
ரருளிச்செய்யக் கேட்டுக்கொண்டு பூர்வாசார்யர்க ளெழுந்தருளி
யிருந்த திருமாளிகைத் திருவாசல்களை ஸேவித்து மிகவு மாதர
வுட னவர்களையே நினைத்துக்கொண்டு எழுந்தருளி யிருந்தார்.
பின்பொருநாள் யதீந்த்ரப்ரவணர் நம்பெருமாளை ஸேவித்து நிற்
கும்போது பெருமாள் யதீந்த்ரப்ரவணரைக் கடாக்ஷித்துத் திருப்
பவளவாய்திறந்து நம்முடையவரைப்போல நீரும் நமது கோயில்
காரியத்தையும் தர்சனத்தையும் செவ்வனே நடத்திக்கொண்டு
சரீராவஸானத்தளவு மிங்கிருமென்று நியமித்தருளினர். யதீ
ந்த்ரப்ரவணரும் நியமித்தபடி யெழுந்தருளியிருந்தார். அவரெ
ழுந்தருளியிருந்த காலத்தில் பூர்வாசார்யர்கள் செய்தருளிய ப்ரப
ந்தங்களையெல்லாம் திருத்தமாக்கி ஜீர்ணோத்தாரணஞ் செய்த
ருளித் தாமேயனவரதம் பெருமாளைக்கொண்டு உகந்தருளிய
னென்கின்ற வார்த்தைக்கேற்ப நியமிப்பித்துத் திருப்பணி திருவாரா
தனம் முதலியவைகளைப் பெருக்க நடத்தியருளிப் பின்பு திருமலை
முதலாகிய வடதிசையிலுள்ள திருப்பதிகளை ஸேவிக்கத் திருவு
ள்ளமாய் நம்பெருமாளை யாராதித்துக்கொண்டு பெருங் கூட்டத்துடன்
புறப்பட்டுத் திருவெள்ளறை முதலிய திவ்ய தேசங்களை ஸேவித்
துத் திருமலைக்கெழுந்தருளித் திருவேங்கடமுடையானை யடிபணி
ந்து அங்குநின்றும் புறப்பட்டுப் பெருமாள் கோயிலுக் கெழுந்த
ருளித் திருவனந்தசரஸில் நீராடி ஆழ்வாராதிகளை யடிபணிந்து
கரியமாணிக்கப்பெருமாளையும் - அழகியசிங்கரையும் - பெருந்தே
வித்தாயாரையும் ஸேவித்து அஸ்திகிரியேறியருளிப் பேரருளாள
ரை ஸேவித்து நிற்கப் பேரருளாளரும் திருப்பவள வாய்திறந்து
நம்மிராமாநுஜனைப் போன்றிருப்பீரென்றருளிச்செய்து சகலவரி
சைகளையும் சாத்தி விடைகொடுத்தருளினர்.

பின்பு அங்குள்ள மற்றைத் திருப்பதிகளையும் ஸேவித்து அ
ங்குநின்றும் புறப்பட்டு ஸ்ரீபெரும்பூதூருக்கெழுந்தருளி ஸ்ரீபாஷ்
யகாரரை யடிபணிந்து ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபத்திற் கனுமதிகொ
ண்டு மீண்டும் பெருமாள் கோயிலுக்கெழுந்தருளிக் கிடாம்பியாச்
சான் திருவம்சஸ்தரான ப்ரமஹதந்த்ரஜீயர் ஸந்நிதியில் ஸ்ரீபாஷ்
யகாலக்ஷேபஞ்செய்து லோகாசார்யருடைய திருத்தம்பியாரான

அழகியமணவாளப்பெருமாள்நயினார் ஸந்நிதியில் ஸகலரஹஸ்யங்
களையும் முப்பத்தாறாயிரப்படி முதலான ஸகலசம்பிரதாயக்ரந்த
ங்களையும் சேவித்துக்கொண்டு சாபிடக்குவந்து ஆஶ்ரயித்த பெ
ரியவர்களுக்கெல்லாம் உபயவேதாந்தங்களையும் ஸாதித்துக்கொ
ண்டு சொன்னவண்ணஞ்செய்தவராகிய பேதைபிரான் ஸந்நிதியி
லே சிலகாலமெழுந்தருளியிருந்து பின்பு கோயிலுக்கெழுந்தருளி
நம்பெருமாள் நியமனத்தினால் நித்யவாசம்பண்ணிக்கொண்டெழு
ந்தருளியிருக்க ஒருநாள் பெருமாளுடைய சேவைக்குத்தடையாக
ஆசௌசத்தைச் சொல்லிவைப்பருசெய்ய யதீந்த்ரப்ரவணர் அது
கேட்டு நம்பெருமாள் சேவைக்குத் தடையாயிற்றென்று சோகாக்
ராந்தராய் அப்பொழுதே தமக்குமையய ஆசார்யரான திருமலையாழ்
வாருக்குச் சிஷ்யரான சடகோபஜீயர் ஸந்நிதியில் ஆஶ்ரமஸ்வீகா
ரஞ்செய்துகொண்டு சடகோபஜீயரென்று திருநாமம்பெற்று நம்
பெருமாளை ஸேவித்துநிற்கப் பெருமாளும் ஆதரித்தருளித் தமது
திருநாமமாகிய முக்கிய திருநாமத்தையே ஸாதித்தருளித் தம்மு
டைய அழகியமணவாளஜீயரை பல்லவராயன் மடத்திற்கு ஸகல
வரிசைகளோடும் அழைத்துக்கொண்டுபோய் இருக்கவைத்து
வாருங்களென்று உத்தமநம்பிமுதலான பரிசாரகர்களுக்கு நியமி
த்தனுப்பியருள அவர்களுமவ்வாறே ஜீயரை ஸேவித்துக்கொண்
டு மடத்திலெழுந்தருளப்பண்ணுவித்தார்கள்.

பின்பு அழகியமணவாளஜீயரும் இராமானுஜஜீயர் முதலான
முதலிகளைக்கொண்டு மடத்தைப் புதுக்குவித்துத் திருவாய்மொ
ழிப்பிள்ளை திருநாமத்தில் திருமலையாழ்வாரென்று வ்யாக்யான
மண்டபத்தைப் புகுத்துப்பண்ணி ரஹஸ்யங்கள் விளைந்தவிடமான
லோகாசார்யர் திருமாளிகை நிலத்திலுண்டான மண்ணினால்
அம்மண்டபத்திற்குத் திருப்பூச்சுப் பூசுவித்து அவ்விடத்தை
குருகுலவாஸமாக எண்ணிக்கொண்டு திருவாய்மொழிப்பிள்ளை
திருவடிச்சாயையிலிருந்து காலக்ஷேபம் ஸாதித்துக்கொண்டு
பெரியபெருமாளுக்கு மங்களாசாஸனத்தைப் பண்ணிக்கொண்டு
பெரியஜீயரென்று திருநாமத்தைப்பெற்று அங்குள்ள பெரியவர்
களால் ஆஶ்ரயிக்கப்பட்டிருந்தார். கோவிந்ததாஸரப்பனென்று திரு
நாமத்தையுடைய பட்டரான ஜீயரும் - பெரியஜீயர் திருவடிகளை
யாஶ்ரயித்துப் பிரியாமலடிமைசெய்து கொண்டிருக்கப் பின்பு
பெரியஜீயர் பெரியபெருமாளுடைய நியமனத்தினால் ஸ்ரீரங்கநா
தனைத் தமக்குத் திருவாராதனமாக ஸ்தாபித்து திருவோணத்தில

ப்ரதிஷ்டை பண்ணுவித்து ஆராதித்துக்கொண்டு ஆசார்ய ஸந்நிதிக்கிருப்பிடமாயிருந்தார். அப்பொழுது அத்தேசத்தாரெல்லாருமிவருடைய வைபவத்தைக் கண்டுங் கேட்டும் திரள் திரளாக வந்து இவர் திருவடிகளை யாஶ்ரயித்தார்கள். அன்றியும் அந்தவிடத்திலும் ப்ரதேசங்களிலுமுள்ள பெரியோர்களுக்கெல்லாம் பெரிய பெருமாளுந் திருப்பவளந் திறந்து ஸ்வப்நமஸாதித்துப் பெரிய ஜீயர்நாமாக விருக்கின்றோமாகையால் அவரை யாஶ்ரயியுங்களென்று நியமித்தருளினார்.

அந்நியமனப்படி கந்தாடையாண்டானை முதலான ஆசார்ய புருஷர்களும் அளவிறந்த அன்புகொண்டு ஆஶ்ரயித்திருக்கின்ற காலத்தில் க்ருஷ்ணாநந்தனென்கிற ஏகதண்ட ஸந்யாஸி கோயிலுக்கு வந்து தன்னோடு சாஸ்த்ரவாதம் பண்ணுவதற்கழைக்கப் பெரியஜீயரும் அவ்வாறு அவனோடு வாதம்பண்ணும்போது மங்களாசாஸனத்திற்கு விரோதமாகிறதே வாதம்பண்ணாவிடில் விரோதி நிரஸனம் ஸித்தியாதே என்செய்வோமென்று சிந்தித்துக் கொண்டிருக்கும்போது பெரியபெருமாள் நியமனத்தால் வேடலப்பாவுக்குப் பெரிய பெருமாள் ஸ்ரீமுகத்தைப் பெரிய ஜீயா முதலானோர் அனுப்புவிக்க முதலியாண்டான் திருவம்சஸ்தராய் மஹாவைபவமுடையவரான வேடலப்பாவும் ஸ்ரீமுகத்தைச் சிரஸாவகித்துத் தம்முடைய ஸந்நிதியில் சாஸ்த்ரங்களையதிகரித்து மிருக்கநிர்வாஹியான தாசரதியாச்சானையுமுடன்கொண்டு நம்பெருமாளை மங்களாசாஸனம்பண்ணி ஸகலவரிசைகளையும் பெற்று பில்வவிருக்ஷ ஸமீபத்திலெழுந்தருளச்சே அப்போது அவ்விடத்திலிருந்த ஏகதண்டியானவன் இவர்களைக்கண்டு எழுந்து தனக்குச் சகல சாஸ்த்ரங்களையும் படிப்பித்து வைத்த வேடலப்பாவைத் தண்டன் ஸமர்ப்பித்துநிற்க அவரும் அவனைப்பார்த்து இவ்விடம்வந்த காரியமென்னென்று வினவ அவனும் அக்காரியத்தைச்சொல்ல வேடலப்பாவும் அதுகுறித்தன்றோ நாமிங்குவந்ததென்று அருளிச்செய்ய ஏகதண்டியும் அபசாரப்பட்டேனென்று பயப்பட்டு அடிபணிந்து நின்றான். வேடலப்பாவும் அண்ணன் திருமாளிகைக்கெழுந்தருளித் தாமும் அண்ணரும் தாசரதியாச்சானும் அமுது செய்து பின்பு க்ருஷ்ணாநந்தனென்கிற ஏகதண்டிக்கு ப்ரஸாதம் ஸாதித்து விடைகொடுத்தருளினார். பின்பு மூவருமாகப் பெரியஜீயர் ஸந்நிதிக்கெழுந்தருளித் தண்டன் சமர்ப்பித்துக் க்ருஷ்

ஞனந்தன் போய்விட்டசெய்தியை விண்ணப்பஞ்செய்யப் பெரியஜீயரும் மூவரையும் கடாக்ஷித்து மிகவுமுவந்து முதலியாண்டான் திருவடிவிஷயமாக இரண்டு ச்லோகத்தை யருளிச்செய்து வேடலப்பாவையும் தாசரதியாசசானையும் ஸந்நிதியில் நித்யவாஸம்பண்ணும்படி நியமித்தருள வேடலப்பாவும வார்த்திகரானபடியால் தாசரதியாச்சானை அவவிடத்திருக்கும்படி நியமித்து பெரியஜீயர் ஸந்நிதியில் மந்த்ராக்ஷதை பெற்றுக்கொண்டு வேடலுக்கெழுந்தருளினார். பின்பு தாசரதியாச்சானும அவ்வாறே சந்நிதியிலிருந்து கொண்டு ஸகலரஹஸ்யங்களையு மதிகரித்திருந்தார். பின்பொருநாள் பெரியஜீயர் அவரை ஏகாந்தத்தில் கடாக்ஷித்தருளி நீர் வந்து நெடுநாளாயிற்றே அண்ணனையும் ஸேவித்து வாருமென்று பூபாலராயனால் திருவாராதனங்கண்டருளின ஸ்ரீரங்கராஜன் திவ்யமங்களவிக்ரஹத்தை நாய்ச்சிமாருடன் ப்ரஸாதித்து விடைகொடுத்தருளிப் பின்பு டாஜிவாதி பயங்கரம அண்ணனென்பவர் பெருமாள் கோயிலில் மஹாவாக்மியா யிருக்கின்றாரென்று கேட்டு அவருக்கு அர்த்தவிசேஷங்களை ஸாதித்து பூர்வாசார்ய ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகராகும்படி பண்ணவேண்டுமென்று நினைத்து ஸ்ரீமுகம விடுத்தருள அண்ணனும் அதைச்சிரஸாவஹித்துக்கொண்டு கோயிலுக்கெழுந்தருளி மடத்துக்குவந்து பெரியஜீயரை ஸாஷ்டாங்கமாக தண்டனஸமர்ப்பித்து நிறக அவரு முவந்தருளி குளிரநோக்கி முப்பத்தாறாயிரப்படியில் ஒருவிடத்தைப பலமுகமாக விரித்துக்காட்ட அது கேட்டு மிகவு மாச்சர்யபபட்டுப் பெரியஜீயர் ஸந்நிதியில் பஞ்ச ஸமஸ்காரமபெற்று முதலியாண்டானுடைய திருநாமமாகிய ஸ்ரீவைஷ்ணவதாஸரென்கிற திருநாமத்தையும அவர் திருப்பவளத்தால் ஸாதிக்கப்பெற்று மிகவும அந்தரங்கராகி எழுந்தருளியிருந்தார். அப்போது பூர்வாஸ்ரமத்துக் குமாரரான இராமானுஜாரயனுக்குத் தீர்த்தக்கரையில் அழகிய மணவாளப பெருமாள் நயினாரென்கிற ஓர் குமாரரவதரித்தார். பின்பு இராமானுஜருக்கு ஸ்ரீவில்லிபுத்தூரில பிறந்த குமாரருக்குப பெரியாழ்வாரென்று திருநாமஞ்சாத்துங்களென்று பெரியஜீயர் நியமித்தருள அவ்வாறே சாத்தியருளினார். அந்தக் குமாரர்கள் பருவம வந்தபின்பு பெரியஜீயர் திருவடிகளை யாஸ்ரயித்தார்கள். அதுமுதல் குமாரர் ஜீயர் நாயனாரென்று திருநாமமபெற்று தர்சனப்ரவர்த்தகரா யெழுந்தருளியிருந்தார்கள். சிலநாள் சென்றபின்பு பெரியஜீயர் பெரியபெருமாள் அனுமதிகொண்டு திருநகரிக்கெழு

ந்தருளி ஆழ்வாரை மங்களாசாஸனம் செய்தருளி அங்கு தம்மு
திருவடிகளை யாஶ்ரயித்தவர்களை யாதரித்து அங்குசிலநாள் எழுந்
தருளி ஆசார்ய ஹ்ருதயத்துக்குப் பொருள் கேட்பதற்காகத் திரு
நாராயணபுரத்தாயி ஸந்நிதிக்கெழுந்தருளி ஆசார்ய ஹ்ருதயத்தை
யதிகரித்து ஆயியால் இவர் ஓர் அவதார விசேஷமென்று மிகவு
மாதரிக்கப்பட்டெழுந்தருளியிருந்தார். அப்பொழுது பெரியஜீய
ரிடத்தில் சிலர் பொறாமைகொண்டு அவரிருக்குங் கூரையில் நெ
ருப்பைவைத்தார்கள். பெரியஜீயரும் திருவனந்தாழ்வானாகையால்
அத்திருவுருக்கொண்டு ஓர் கோமுகச்சாரியாக வெளியிற் புறப்ப
ட்டெழுந்தருளினார். பின்பு இதனை யரசனறிந்து அவர்களைத் த
ண்டிக்கக்கண்டு இரக்கங்கொண்டு அவர்களைத் தண்டனையினின்று
நீக்கியருளி அவர்களிற் சிலர் பெரியஜீயர் திருவடிகளை யாஶ்ரயித்து
அபராதக்ஷாமணம் பண்ணிக்கொண்டார்கள். பின்னர் பாண்டிய
தேசத்துக்கு ப்ரவர்த்தகனாயிருக்கின்ற வொருவன் பெரியஜீயர்
வைபவத்தைக்கண்டு அவர் திருவடிகளிலாஶ்ரயித்தான். அவனுக்கு
ப்பஞ்சஸம்ஸ்காரங்களைச் செய்தருளி சடகோபதாஸனென்று திரு
நாமஞ்சாத்தியருளிப் பின்பு திருநகரியில் பெரியஜீயர் திருமண்ட
பத்தையும் திருவீதிகளையும் அழகியமணவாளன் மண்டபத்தையும்
சீர்திருத்தியருளிப் பின்பு திருக்குறுங்குடிக்கெழுந்தருளி அங்கு
திருவேங்கடமுடையானென்கிற ப்ராமணனை ஶிஷ்யனாக்கிக்
கொண்டு அவருக்குத் திருவேங்கடதாஸனென்று தாஸ்யநாமஞ்
சாத்தி அவனைத் திருக்குறுங்குடி ஸந்நிதியில் கைங்கர்யத்தில் நிய
மித்து, நின்றநம்பி - இருந்தநம்பி - கிடந்தநம்பி திருப்பாற்கடல்
நம்பி திருமலைநம்பியென்கிற ஐந்துபெருமாளுக்கும் கர்ப்பக்ருஹ
முதலானவைகளைச் செய்வித்து அங்குநின்றுங் கோயிலுக்கெழுந்
தருளிப் பெருமாளை ஸேவித்திருக்க அக்காலத்தில் எறும்பியப
ப்பாவென்பவர் கோயிலுக்கெழுந்தருளிப் பெருமாளை ஸேவித்துக்
கொண்டு அங்கிருந்த கந்தாடையாண்டானுக்குத் திருமேனிபந்து
வாகையால் அண்ணனோடுகூட ஜீயர்ஸந்நிதிக்கெழுந்தருள ஜீய
ரும் அப்பாவை மஹாவித்வானென்றறிந்து திருவாய்மொழியில்
ஓரிடத்துக்கு ஆயிரம்படியாக அர்த்தம் ஸாதிக்க அப்பாவுங்கே
ட்டு ஆச்சர்யப்பட்டுக்கொண்டிருந்தும் விதிகூடாமையால் ஜீயர்
திருவடிகளையாஶ்ரயியாமலே ஊருக்கெழுந்தருளித் தம்முடைய
திருவாராதனமான சக்ரவர்த்தித் திருமகனைத் திருவாராதனம் பண்
ணுவதாகக் கோயிலாழ்வார் திருக்காப்பை நீக்கப்புக அது அனே

கவுபாயங்களாலும் திறக்கப்படாமையால் அவர் அமுதுசெய்யாதிருந்தார். அன்றிராத்திரி அவரது ஸ்வப்னத்தில் முறைப்படித் திருவனந்தாழ்வானைப் பெரியஜீயராகக்காண்பித்துப் பின்பவரையே இளையபெருமாளாகக்காண்பித்துத் திரும்பவும் அவரையே பெரிய ஜீயராகக்காண்பித்துச் சக்ரவர்த்தித்திருமகன் இவரை நோக்கி நீர் கோயிலுக்குப்போய் பெரியஜீயரை யாச்ரயித்துவந்தாலொழிய நாம் உம்முடைய கையால் ஆராதனைகொள்கின்றதில்லை; கடுகப்போவீரென்று நியமித்தருள அப்பாவும் கண்விழித்து மிகவும் ஆச்சரியப்பட்டு அப்போதே புறப்பட்டுக் கோயிலுக்கெழுந்தருளி அண்ணன் புருஷகாரமாகப் பெரியஜீயர் திருவடிகளை ஆச்ரயித்து மிகவும் அந்தரங்கராய் வரவரமுனிதாஸரென்று திருநாமம்பெற்றிருந்தார். பின்பு அண்ணனும் வரவரமுனிதாஸரும் பெரியஜீயர் ஸந்நிதியில் முன்பொருக்கால ஸ்தாலீபாகத்துக்காகத் தாமும் ஸ்ரீரங்கராஜருடைய விவாஹ தேசமான லாடபுரத்துக்கு அவருடன் போக அவ்விடத்து ஸ்தாலீபாகம் நடந்த அந்த தினத்தில் அதங்ககாயத தளிகைபண்ணினது மன்றியும் மரபு வழுவாக வ்யவஹரித்தார்கள். அதுகுறித்துத் தமக்கும் ஸ்ரீரங்கராஜருக்கும் லாடபுரத்து ஸம்பந்தத்தில் வெறுப்புநேரிட்டு அதைக் கழிக்க வேண்டுமென்று எண்ணமுண்டாயிருக்கின்றதை விண்ணப்பஞ் செய்துகொண்டார்கள். ஜீயரதுகேட்டுத் திருக்குடந்தையில் அப்பாவண்ணனையும் வேடலப்பாவையும் தாசரதி ஆர்சானையும் ஸ்ரீமுகத்தால் அழைப்பித்தருளிக் கந்தாடையாண்டானையும் எறும்பியப்பாவையும் கூட்டியருளி முதலியாண்டான் ஸந்ததியான வாதூல கோத்ரமும் உடையவருடைய திருவம்சமான ஹரீதகோத்ரத்தார் முதலான ஆறுகோத்ரத்தாரும் தங்களுக்குள்ளாக ஸம்பந்தம்பண்ணிக்கொள்ள வேண்டும். இதற்குக்கவறினவர்கள் நம்மாணையைக் கடந்தவர்களாவாரென்று திருமுகப்பட்டோலையெழுதியருளி தேசாந்தரந்தோறும் உடையவர் திருவம்சத்தாருக்கும் முதலியாண்டான் திருவம்சத்தாருக்கும் அனுப்பியருள அவர்களெல்லாம் ஸ்ரீமுகத்தை சிரஸாவஹித்துத் திருமுகத்தின்படி நடந்துகொண்டார்கள். அதுமுதல் இதுவரையிலும் அவ்வாறே நடந்துவருகின்றது. வாதூலகோத்ரம் முக்யமானதால் அதனைப்பெயரா முதலிட்டமைத்த அறுவகைக்கோத்ரக்காருக்கும் கந்தாடையாரென்று வழங்குகின்றது. இவர்களில் எழுபத்துநான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளுள் பரிகணிதமாயிருக்கிற முதலியாண்டானும்ம

லைபாப்பி·முடும்பையம்மாள் - நடாதூரார் - ஆசூரிப்பெருமாள் - கிடாம்பிப்பெருமாள் - குமாண்டூர் இளையவல்லி ஆச்சான் வங்கிபுரத்துநம்பி இவர்களுடைய சந்ததியார் இவ்வெழுவகைக் கோத்திரத்திலே யிருப்பது. இம்முறை பெரியஜீயர் நியமனப்படி நடந்து வருகின்றது. பின்பொருநாள் பெரியஜீயர் பெரியபெருமாளை ஸேவித்துக்கொண்டு நிற்கத் திருவாலவட்டகைங்கர்யஞ் செய்துகொண்டிருக்கிற உத்தமநம்பி திருவனந்தாழ்வான் திருவவதாரமான பெரியஜீயருடைய பாலின்வண்ணமான திருமேனிநிறத்தை அன்யதாசங்கைபண்ணிக்கொண்டு பெரியஜீயரைப்பார்த்து நெடும்போதாயிற்றேயென்று விண்ணப்பஞ்செய்ய பெரியஜீயரும் அவர்கருத்தையறிந்து நல்லது ஸ்வாமி! இதோ விடைகொள்ளுகிறோமென்று மடத்துக்கெழுந்தருளினார். அவ்வளவில் உத்தமநம்பி நின்றுகொண்டு ஆலவட்டம்பரிமாறுகையுடனே நித்ராவசத்தராய்ப் பலகணிக்கதவில் சாய்ந்து நிற்கப் பெரியபெருமாளும் அவர் கனவில் எழுந்தருளித் திருவனந்தாழ்வானைக்காட்டி இவனைத்தானும் பெரியஜீயராக அவதரித்தானென்று குறிப்பித்தருளினார். உத்தமநம்பியும் கண்விழித்து மிகவும் நடுங்கி அக்ஷணமே மடத்துக்குவந்து பெரியஜீயர் திருவடிகளை ஸேவித்து அபசாரக்ஷாமணம் பண்ணிக்கொண்டார். பின்பொருநாள் சடகோபக் கொற்றியென்று திருநாமத்தையுடைய அம்மையாரொருத்தி பகல் திருவோலக்கங்கலைந்து திருமலையாழ்வாரென்கிற வ்யாக்யானமண்டபத்திலே திருக்காப்புச்சேர்த்துக்கொண்டு ஏகாந்தமாகத் தம்மைமறந்து ஆனந்தவைபவத்தோடு யோகத்திலே யெழுந்தருளியிருந்த பெரியஜீயருடைய திருமேனி அனந்தாழ்வானுடைய திருமேனியாக இருந்ததைக் கதவின் புரையிற்கண்டு திகைத்திருந்தனள். பின்பு பெரியஜீயரும் யோகத்தினின்றும் நீங்கி முன்போலுருவுகொண்டெழுந்து தமதுண்மையை யம்மையாளறிந்தாளென்று அறிந்து அம்மையாரையழைத்து நீ யிதனை வெளிப்படுத்த வேண்டுவதில்லையென்றருளிச் செய்தார்.

இவ்வாறு திருமேனி நிறத்தாலும் பெரியபெருமாளுக்குரிய அடிமைகளைச் செய்கையாலும் தர்சன நிர்வாஹத்தாலும் திருக்கரியிலே தாம்பின்வழியாய்ச் சேஷனுக்கொண்டு புறப்பட்டமையாலும் எறும்பியப்பாவுக்குச் சக்ரவர்த்தித் திருமகன் ஸ்வப்னத்தில் அருளிச்செய்கையாலும் உத்தமநம்பிக்குக் கனவில் பெரியபெருமாள் அருளிச்செய்கையாலும் பின்பு கொற்றியம்மை

யார் பகலில் ப்ரத்யக்ஷமாகக் கண்டமையாலும் பெரியஜீயர் சேஷாவதாரமென்பது லோகப்ரஸித்தமாகக் காணப்பட்டது. இப்படிப்பட்ட பெரியஜீயர் தம்முடைய ஸ்ரீபாதத்து முதலிகளுடன் பெரியபெருமாளைப் பவித்ரோத்ஸவத்தில் திருவோலக்கமாக மங்களாசாஸனம் பண்ணிக்கொண்டிருக்கப் பெரியபெருமாள் பெரியஜீயருக்கு நாளைமுதல் நம்முடைய பெரிய திருமண்டபத்தில் திருவாய்மொழிப் பொருள் முப்பத்தாறாயிரப்படியை நடத்துமென்று நியமித்தருளப் பெரிய ஜீயரும் அதனைச் சிரஸாவஹித்து மற்றைநாள் பெரிய திருமண்டபத்துக் கெழுந்தருளினார்.

அப்போது பெருமாள் உபயநாய்ச்சிமாருடன் தோளுக்கினியானில் ஏறியருளிச் சேனைமுதலியார் ஆழ்வாராதிகள் இவர்களோடே அம்மண்டபத்துக் கெழுந்தருளிப் பெரியஜீயருக்கு அருளப்பாடிட்டு நம் முப்பத்தாறாயிரத்தையும் தொடங்குவித்துத் திருச்செவிசாத்தியருளி மிகவுமுவந்து இவ்வாறே ஒருவருஷம் நடக்கவேண்டுமென்று நியமித்து எழுந்தருளினார். பின்பு பெரியஜீயரும் அப்படியே ஒருவருஷம் ஓரிடையூறுமில்லாமல் ஈடு முப்பத்தாறாயிரத்தையும் நடத்திக்கொண்டுவந்தார். பின்பு சாத்துமுறைக்கு முந்தியதினம் கந்தாடையண்ணனும் வானமாமலைஜீயரும் பரவஸ்துபட்டர்பிரான் ஜீயரும் தம்முட்கலந்துகொண்டு பெரியஜீயர்விஷயமாக இருவரிரண்டடியும் ஒருவரிரண்டடியுமாக மூவரும் நாலடியான ஓர்தனியனைச் செய்து அந்தரங்கமாகமனதில்வைத்து நாளைச் சாத்துமுறை முடிவில் பெரிய திருமண்டபத்தில் பெரியபெருமாளுடைய பெரியதிருவோலக்கத்தில் விண்ணப்பஞ்செய்வதாக எண்ணங்கொண்டிருந்தார்கள். மறுநாள்பெருமாள் முன்போலத்தோளுக்கினியானிலேறியருளி முதலியார் முதலானவர்களோடு கூடப் பெரியதிருமண்டபத்தில் எழுந்தருளியிருந்து பெரியஜீயருக்கு அருளப்பாடு ஸாதித்தருளிச் சாத்துமுறை நடக்கவென்று நியமிக்கப் பெரியஜீயரும் அவ்வாறே நடத்தியருளக் கந்தாடையண்ணன் முதலான முதலிகள் மூவரும் முன்சிந்தித்திருந்த தனியனை விண்ணப்பஞ்செய்யக் கருதியிருக்கும்போது மிகவும் அழகுள்ளவனாயிருக்கிற ஐந்து வயதுள்ளவோர் குமாரன் பெருமாள் திருமுன்பே வந்துநின்று ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம் - யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் என்கிற ச்லோகத்தைச்சொல்லி

ஒருவருக்குந் தெரியாதபடி மறைந்துபோயினான். அதைக்கண்டு திருவோலக்கத்திலுள்ள எல்லாரும் மிகவு மாச்சரியப்பட்டார்கள். கந்தாடையண்ணன் முதலான மூவரும் பிறரொருவருமறியாது தம்முள்ளிருந்த இந்தத்தனியனை நமக்குமுன்வந்து சொன்னபடியால் இதுசொன்னவன் ஸர்வாந்தர்யாமியாகிய ஸ்ரீரங்கநாதனேயென்று நிச்சயித்து ஆச்சரியத்துடன் அங்குள்ளாரெல்லாருக்கும் தாங்கள் நினைத்திருந்த செய்தியைமிகுந்தகளிப்புடன் சொன்னார்கள். அப்பொழுது நம்பெருமாள் பெரியஜீயருக்குத்தீர்த்தப்ரஸாதம - ஸ்ரீசடகோபம - முதலானவரிசைகளை ஸாதித்தருளியிருந்த வுவப்பால் ஸ்ரீவைஷ்ணவர்களனைவரையுங்குறித்து நமதுகோயில் முதலிய திருப்பதிகளெல்லாவிடத்திலும் இந்தத்தனியனை முதலாகக்கொண்டு ப்ரபந்தாநுஸந்தானமபண்ணுங்களென்று நியமித்தருளினார். அந்தப்ரகாரம அன்றுமுதல் இன்றுவரைக்கும் தமிழ்வேதமாகிய திவ்யப்ரபந்தம நடத்துகின்றபஞ்சதிராவிடம் - பஞ்சகௌடம - என்கிற பத்துவகையாகியபாஷைகள் வழங்குகின்றதேசங்கள் முழுதும் இந்தத்தனியன் நடந்துவருகின்றது. இதனுடைய விரிவுமேலெழுதப்படும். இராமாநுஜரென்பவரொருவர் பதரிகாச்ரமத்துக்குப்போய்ப் பதரிநாராயணனைஸேவித்து உபாஸித்துக் கொண்டிருக்கும்போது பதரிநாராயணன் ப்ரஸன்னராய் அவருக்கு இத்தனியனை யுபதேசித்தருளினார். அவருமதனை அதிரஹஸ்யமாகப் பெற்று அநுஸந்தித்துக்கொண்டு சிலகாலிருந்து தென்றிசையிலுள்ள திவ்யதேசயாத்திரைக்குப் புறப்பட்டுத் திருமலைக்குவந்தவிடத்தில் இந்தத்தனியனையும் அதன்வரலாற்றையும அவ்விடத்திற்கேட்டு மிகவு மாச்சரியப்பட்டுத் தமக்கிறைவனாராயணன் பூர்வமுபதேசித்தபடியே நினைத்து நினைத்துச் சொல்லிச் சொல்லி ஆனந்தமடைந்தார்.

இந்தப்ரகாரம் இத்தனியனை முதலில் மூவர்சிந்தித்து வைத்திருந்தபடியால் அவர்கள் செய்ததென்றும பெரியபெருமாள் பாலரூபமாகவந்து உரைத்தபடியால் ஸ்ரீரங்கநாதன் செய்ததென்றும் பதரிநாராயணன அயோத்தி இராமாநுஜருக்கு உபதேசிக்கையால் பதரிநாராயணன் செய்ததென்றும் லோகத்தாரால் சொல்லப்படுகின்றது. இந்த நியாயம் இதிஹாஸ புராணங்களுக்குமுண்டு. எப்படியெனில் அஷ்டாதச புராணங்களும் தனித்தனியொவ்வொரு ரிஷிகள் செய்ததென்றும் வியாஸரொருவரேசெய்

தென்றும் முகபேதத்தினால் வழங்கிவருகின்றதை யாவரும் நிர்வஹித்தார்கள். இப்படியே வேதத்திலும் வழங்கி வருகின்றது. இப்படி இந்தத் த்னியனுக்கும் முகபேதத்தால் பலர் செய்ததென்று வழங்கும் வழக்கம் கூடுமானதே.

கோயில் கந்தாடையண்ணன் செய்த பத்துப்பாட்டிலும் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணன்செய்த பதிகப்பாட்டிலும் இதன் வைபவம் சொல்லியிருக்கின்றது. பெரியஜீயரும் பெரியபெருமாளால் மிகவும் ஆதரிக்கப்பட்டு லோகாசார்யர் அருளிச்செய்த ரஹஸ்யங்களுக்கு வ்யாக்யானங்களும் இவையன்றி யனேக க்ரந்தங்களுஞ் செய்தருளினார். அவை ரஹஸ்யத்ரய வ்யாக்யானம் - தத்வத்ரய வ்யாக்யானம் - ஸ்ரீவசனபூஷண வ்யாக்யானம் - ஆசார்ய ஹ்ருதய வ்யாக்யானம் - பெரியாழ்வார் திருமொழி வ்யாக்யானம் - நூற்றந்தாதியுரை - ஞானஸாரவ்யாக்யானம் - ப்ரமேயஸார வ்யாக்யானம் - ஏழுபாட்டு வ்யாக்யானம் - கீதாதாத்பர்யதீபம் - தத்வத்ரயத்திற்குப்ரமாணத்திரட்டு - முப்பத்தாறாயிரப்படிக்கு ப்ரமாணத்திரட்டு - உபதேசரத்னமாலை - திருவாய்மொழி நூற்றந்தாதி யதிராஜ விம்சதி - தனிக்கவிகள் - விடுதி சுலோகங்கள் - இயல்சாற்று - ஆர்த்திப்ரபந்தம் முதலியவைகளாம்.

பெரியஜீயர் தமது மடத்திற்குரிய க்ஷேத்திரங்களையெல்லாம் பெருமாளுக்கு ஸமர்ப்பித்துத் தமது பண்டாரத்திலிருந்த பொருள்களெல்லாவற்றையும் பெருமாள் பொக்கிஷத்தில் சேர்த்துவிட்டார். இவரொருநாள் தமது திருவடிகளை யாசிரயிக்கவந்த பெருமாள்பிள்ளை தனியேவந்தாரென்று வெறுத்து ஆறுமாதம் சோதித்து அங்கீகரித்தருளி நீர் தீக்ஷையோடிருக்கின்றது என்னென்றுவினவ அவருமுள்ளபடி விண்ணப்பஞ்செய்ய அதுகேட்டருளி இன்று திருமுடிவிலக்கு வைத்துக்கொள்ளுமென்று நியமித்தருள அவரு மவ்வாறேசெய்ய அப்பொழுதே அவர்தேவி ப்ரஸவித்துப் பத்துநாளாயிற்றென்றுசெய்திவர அதுகேட்டு அவரும் மற்றவர்களும் பெரியஜீயரது ஸர்வஜ்ஞதையைப் புகழ்ந்து ஆச்சர்யமடைந்தார்கள். பின்பு பெருமாள்கோவில் திருமலைமுதலாகிய திவ்யதேசங்களைச்சேவிக்க வேண்டுமென்று அண்ணன்முதலான முதலிகளோடு புறப்பட்டுப் பெருமாள்கோவிலுக்கெழுந்தருளி தேவப்பெருமாளைச்சேவித்துச் சிலநாளெழுந்தரு
த்து வைசாகோத்ஸவத்தில் பெரியதிருவடியின்மேல் சே

ளெழியருளிக் கங்கைகொண்டான் திருமண்டபத்துக் கெழுந்தருளப் பெரியஜீயரும் மங்களாசாஸனம் பண்ணிக்கொண்டே கூடவெழுந்தருளும்போது திருநாள் சேவிக்கவந்த எறும்பியப்பா ஜீயரை மறந்து சேவித்துப் பின்பு நினைந்து உடனே ஜீயரை சாஷ்டாங்கமாகச் சேவித்து அவர் புருஷகாரமாகப் பெருமாளை மீண்டும் சேவித்தார்.

பின்பு பெரியஜீயரும் மற்ற உத்ஸவத்தையும் சேவித்து அப்பாவையுமுடன்கொண்டு புறப்பட்டுத் திருப்புட்குழி வழியாகக் கடிகாசலத்திற்கெழுந்தருளி அழகியசிங்கரை மங்களாசாஸனஞ் செய்து பின்பு எறும்பி யென்கிற வூருக்கு வடதிருவரங்க மென்றும் குளத்திற்குத் திருக்காவேரியென்றும் அப்பாவுக்கு அழகியமணவாள தாஸரென்றும் அபிமானித்துத் திருநாமஞ்சாத்தி அங்குநின்றும் திருப்பதிக்கெழுந்தருளி உடையவரையும் கோவிந்தராஜரையும் சேவித்து அங்குள்ள ஆழ்வார்கள் பதின்மரையும் ஸேவித்துத் திருமலையேறியருளி அங்குள்ள ஜீயர்கள் முதலானவர்கள் எதிர்கொண்டுவந்து ஸேவிக்க அவர்களையுபலாளித்து ஸேவாக்ரமத்திலுட்புகுந்து திருவேங்கடமுடையானை ஸேவித்துத் தீர்த்தப்ரஸாதமுதலான ஸகலவரிசைகளையும் பெற்று அங்கு கோயில்காரியத்தை நடத்துவதற்காக இளங்கேள்வி எம்பெருமானார் ஜீயரை நியமித்தருளி அங்குநின்றும் புறப்பட்டுத் திருவெவ்வுளூர் திருநின்றவூர் திருமழிசை பச்சைவாரணப்பெருமாள்கோவில் பூவிருந்தவல்லி திருவல்லிக்கேணி திருநீர்மலை ஸ்ரீபெரும்பூதூர் முதலிய திவ்யதேசங்களை ஸேவித்துக்கொண்டு திரும்பவும் பெருமாள்கோவிலுக்கெழுந்தருளி, பேரருளாளரை மங்களாசாஸனம்பண்ணி ஸ்ரீமதுராந்தகத்தில் சக்ரவர்த்தித் திருமகனையும் வகுளவிருக்ஷத்தையும் ஸேவித்துத் திருவஹீந்திரபுரத்துக்கெழுந்தருளி தெய்வநாயகனை ஸேவித்துத் திருவாலிதிருநகரியில் திருமங்கையாழ்வாரைத் திருவடிதொழுது மற்றைத்திருப்பதிகளையும் ஸேவித்துத் திருக்கண்ணபுரத்தில் சௌரிராஜரை ஸேவித்து அங்குநின்றும் புறப்பட்டுத் தென்துலவையிற்சென்று மன்னனாரை மங்களாசாஸனம் செய்து மாசறுசோதியென்பதை நித்யாநுஸந்தானம் பண்ணும்படி நியமித்துத் திருக்குடந்தைமுதலான திருப்பதிகளை சேவித்துக் கோயிலுக்கெழுந்தருளி யதிராஜனையும் பெரியபெருமாளையும் சேவித்துத் தாம்கொண்டுவந்த திவ்யாபரணங்கள் சக்ர

சாமரங்கள முதலானவைகளை ஸமர்ப்பித்து மடத்திலெழுந்தரு ளியிருந்தார்.

பின்பு எறும்பியிலெழுந்தருளியிருந்த அப்பாவும் ஆசார்ய ரைப்பிரிந்து ஸஹியாதவராய் ஜீயருடைய தின சரித்திரங்களை நினைந்து அனுபவித்துக்கொண்டு தினசரியையென்கின்ற ப்ரபந் தத்தைச் செய்துமுடித்து ஜீயர்சந்நிதியில் வெளிப்படுத்த ஜீயரும் கடாக்ஷித்து ஆசார்யவிஷயத்தில் அப்பாவினிடத்திலுள்ள நிஷ்டை யைக்குறித்து மிகவு முகந்து அப்பாவை வரும்படிக்கு ஸ்ரீமுக மனுப்பி யருள இவரும அதனைச் சிரசாக வஹித்து அதிக ஆனந் தத்துட னதிசீக்கிரத்தில கோயிலுக்கெழுந்தருளி ஜீயரை யடிய ணிந்து வ்யாக்யானகோஷ்டியில் ஜீயர் திருமுக மண்டலத்தை ஸேவித்துக்கொண்டிருந்தார். அக்காலத்தில கந்தாடையண்ணன் திருமாளிகைச் செல்வம அழகியசிங்கர் ஆராதனவிஷயத்தில் மிக வு முபயோகிக்கப்பட்டு நாளுக்குநாள் குறைந்து வருகின்றபடி யைப் பெரியஜீயர்கண்டருளித் திருமனைக் காணிக்கையாகவந்த திரவியத்தை நித்தியம கந்தாடை யாண்டானுக்குக் கொடுக்கும் படி நியமித்தருளினார். பின்பு சிலநாளில் எறும்பியி லப்பாவுக்கு த்தமது திருமேனி ஆகாரமான அர்ச்சாவிக்ரகத்தை ப்ரஸாதித்து மிகவும் நிர்ப்பந்தித்து ஊருக்கனுப்பியருளினார்.

பின்பு அழகிய வரதரான இராமாநுஜஜீயரும வானமாமலை ஸ்ரீகாரியத்திற்காக விடைகொடுத்தருளவேண்டுமென்று விண்ண ப்பஞ்செய்ய ஜீயரும் அரங்கநகரப்பனைத் திருவாராதனமாக ஸாதி த்து வானமாமலைக்கனுப்பியருளினார். அவரும் வானமாமலைக்கதி பதியாயிருந்தலால் வானமாமலை இராமாநுஜஜீயரென்று திருநாம ம்பெற்றார். பின்பு பெரியஜீயர் கோவிந்தராஜப்பரை விசே ஷமாக ஸம்மானஞ்செய்து அழகியமணவாளப்பெருமாளை இவரு க்குத் திருவாராதனமாக ப்ரஸாதித்தார். பின்பு கோவிந்தராஜப் பர் ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாளுடைய உத்ஸவத்தைச் செவ்வ னே நடத்திக்கொண்டிருந்து திருவாடிப்பூரத்தில் ஆண்டாளுடை ய தீர்த்தப்ரஸாதத்தை மிகவுமாதரவுடன் கொண்டுவந்து பெரிய ஜீயருக்கு ஸமர்ப்பிக்க ஜீயர் மிகவுமுவந்தருளி ஆண்டாளுக்குவ ப்புண்டாக கோவிந்தராஜப்பருக்குப் பட்டர்பிரான் தாஸரென்று திருநாமம் ஸாதித்தார்.

பின்பு அவரும் மஹா விரக்தராய் ஜீயர் ஸந்நிதியில் ஆசிர மஸ்வீகாரஞ்செய்துகொண்டபடியால் திரும்பவும் பட்டர்பிரான்

ஜீயரென்று அவருக்குத் திருநாமமுண்டாயிற்று. பின்பு பெரிய ஜீயர் நம்மாழ்வாரை ஸேவிப்பதாகப் பெருமாளனுமதிகொண்டு மதுரையிற்சென்று கூடலழகரை மங்களாசாசனஞ்செய்து அன்றைக்கு அங்கெழுந்தருளி யிருந்தபோது அத்தேசத்தரசனான மஹாபலிவாணராயன் வந்து திருவடிகளில் ஆசிரயிக்கப் பெரிய ஜீயரும் அவனுக்குப் பஞ்ச ஸம்ஸ்காரஞ் செய்தருளி மறுநாள் வைகறையில் ப்ரயாணப்பட்டு மணித்திருப்பல்லக்கைப் பனிவிழாதபடி மூடுவித்து ஏறியருளி ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்ரீபாதந்தாங்கிக்கொண்டு இருகாதவழிவரையில் வந்து விடிந்தபின்பு வைகையாற்றின்கரையி லிறங்கியருளினார். அப்போது இராஜாவும் அரையிற் கச்சைக்கட்டும் வேர்த்தவுடம்புமாகித் திருவடிகளைப் பணிய ஜீயரும் இப்படிச்செய்வதென்னென்று ஆச்சரியப் பட்டருளினார். பின்பு அப்பொழுதிறங்கிய முத்தரசு என்கிற கிராமத்தை யங்கீகரிக்கவேண்டுமென்று அரசன் மிகவும் பிரார்த்திக்க அவனுடைய பிரார்த்தனைப்படி அதனையங்கீகரித்தருளி அதற்கு அழகியமணவாள நல்லூரென்று திருநாமஞ்சாத்தி அரசனுக்கு விடைகொடுத்துத் திருப்புல்லாணிவழியாக முதலிகளுந் தாமுமாக நிழல்குறித்துவரும்போது அங்கோர் பெரிய புளியமரமானது நன்றாக நிழல்செய்திருக்கக்கண்டு அந்த நிழலில் எழுந்தருளி ஶ்ரமந்தீர்ந்து புறப்படுமளவில் முதலிகளெல்லாரும் நமக்குபகாரஞ்செய்த விருக்ஷத்திற்குக் கிருபைசெய்தருளவேண்டுமென்று ஜீயரை ப்ரார்த்திக்க அவரும் தமது திருக்கையாற்றடவி மோக்ஷமடையக் கடவையென்று அருளிச்செய்ய அம்மரம் அந்த க்ஷணமே உதிர்ந்துபோய்விட்டது. அன்றிரவு அம்மரத்திலிருந்து ஒருபிரகாசந்தோன்றி ஆகாயமார்க்கமாகச்சென்றது. அதுகண்டெல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். பின்பு திருநகரிக்கெழுந்தருளி ஆழ்வாரை மங்களாசாஸனஞ்செய்து அங்கு சிலநாளெழுந்தருளியிருந்து அங்குநின்றும் புறப்பட்டு ஸ்ரீவில்லிபுத்தூர் எம்பெருமானை ஸேவித்துத் திருமாலிருஞ்சோலைமலைக்கெழுந்தருளி மூலவரை மங்களாசாஸனஞ்செய்து கலகத்தால் அழகர் திருக்குறுங்குடியி லெழுந்தருளி யிருக்கின்றதைக்கேட்டுக் கிலேசித்து மூலவருக்குப் பலவுபசாரங்களைச்செய்து அங்குநின்றும்புறப்பட்டுக் கோயிலுக்கெழுந்தருளிப் பெரியபெருமாளுக்கு முன்போல [illegible]ளாசாஸனஞ்செய் [illegible]

பின்பு அழகர் திருக்குறுங்குடியினின்றும் திருமாலிரு சோலைமலைக்கெழுந்தருளிப் பெரியஜீயருக்கு நீர் நினைத்தபடி நாம் திருக்குறுங்குடியில் நின்று திருமாலிருஞ்சோலைமலைக்கு வ தோம். நம்முடைய ஸ்ரீகாரியத்தை நன்றாகநடத்தும் ஒருவன அனுப்பவேண்டுமென்று ஸ்ரீமுகத்தோடு தீர்த்தப்ரஸாதமனுப்ப ஜீயர் மிகவுமுவந்தருளி அத்தியந்தம் விரக்தராகிய யதிராஜஜீ ரைப்பார்த்தருளி நீர்போய்த் திருமாலிருஞ்சோலைமலையில் அழக ஸ்ரீகாரியத்தைச் செவ்வனேநடத்துமென்று விடைகொடுத்தருள அவருமதைச் சிரஸாவஹித்துச்சென்று அழகர் ஸ்ரீகாரியத்தை நன்றாகநடத்திவந்தார். அப்பொழுது முன் ஜீயர் திருவடிகளை ஆசி ரயித்த மஹாபலிவாணராயன் பெரியஜீயருடைய நியமனத்தால் அழகருக்குத் திருக்கோபுரம் மண்டபம் ப்ராகாரமுதலான ஸகல கைங்கர்யங்களையும் நன்றாகச்செய்தான். ஜீயரதுகேட்டு மிகவு முவந்தருளினார். அப்பொழுது தேசாந்தரங்களிற் றிரிகின்றவனு கிய ஓர் சிறுபிள்ளைவந்து ஜீயர் திருவடிகளை யாசிரயிக்க அவனை யங்கீகரித்து இராமாநுஜதாஸனென்று தாஸ்யநாமஞ் சாத்தியரு ளி இவனால் அநேக திருப்பதிகளில் கைங்கர்யங்கள் நடக்குமெ ன்று அருளிச்செய்ய அப்படியே பெருமாள்கோயில்முதலாகிய ருப்பதிகளில் பகவத்கைங்கர்யங்களெல்லாம் நடந்தருளப்பெற் று. பெரியஜீயர் பெரியாழ்வார் திருமொழிக்குப் பெரியவாச்சா பிள்ளை செய்தருளின வியாக்கியானத்தில் நாலூறுபாட்டுக்கு றைஜீர்ணமாய் விட்டபடியால் அது தாமசெய்வதாகத் திருவு ள்ளம்பற்றி அதற்குத்துணைக்காரணமாகத் தமிழ்விரகராகிய திரு ப்பாணாழ்வார் தாதாநாயனாரையும் கூட்டிக்கொண்டு வ்யாக்யா னம் நாலாம்பத்தளவாகச்செய்தருளினார்.

அப்போது அதிபால்யராயிருக்கிற கந்தாடைநாயன் அங்கெ ழுந்தருளி ஜீயர் வ்யாக்யானத்தையும பெரிய வாச்சான்பிள்ளை வ்யாக்யானத்திலே சேஷதாநுமென்னும முதன் மொழியையு டையபாசுரமுதல பத்துப்பாசுரத்தின் வ்யாக்யானத்தையும் பார் த்துப் பெரியஜீயர் திருவடியைப்பணிந்து ஸ்வாமின்! இந்தநாலு று பாட்டுக்கும் வியாக்கியானம் விசேஷித்திருக்கின்றதேயென் று சொல்ல. ஜீயரதுகேட்டு ஆனந்தித்து நாயனை அவதாரவிசேஷமெ ன்று அணைத்துக்கொண்டருளிப் பின்புதிருப்பாணாழ்வார் தாதா நாயனாருக்குப் பிள்ளைலோகாசாரியர் திருவாராதனமான [illegible] நஜலர ப்ரஸாதித்துவிட, [illegible]

ஷத்துக்கு வ்யாக்யானஞ்செய்வதாகத் திருவுள்ளங்கொண்டு திரு
மேனி ஆயாஸமும் பாராமல் திருமணையிலே சாய்ந்தருளினபடி
திருக்கழுத்துநோவ ஏட்டிலெழுதுவதைக் கந்தாடையண்ணன் க
ண்டு தேவரீரிவ்வாறுப்ரயாஸைப்படுவது எதுபற்றியென்று விண்
ணப்பஞ்செய்ய ஜீயரும் உமது புத்ராதிகளைப்பற்றி யென்றருளி
ச்செய்து வ்யாக்யானத்தை முடித்துப் பரமதநிரஸநபூர்வகமாக
ஸ்வமதஸ்தாபநம் பண்ணியருளினார்.

அக்காலத்தில் திருமலைநம்பி திருவம்சஸ்தரான வேட்டூர்
சிங்கராசாரியர் திருவடிகளிலேவந் தாசிரயிக்க அவரையு மங்கீக
ரித்துப் பஞ்சஸம்ஸ்காரங்களைச் சாத்தியருளி அவர்மூலமாகவந்த
த்ரவியங்களைத் திருநகரியில் ஆழ்வார் திருக்கோபுர கைங்கர்யத்
துக்குப் போகவிட்டருளிச் சிறிது குறையிருந்ததைத் திருப்பே
ரரான ஜீயர்நயினாரால் முடிப்பித்தருளினார்.

இவ்வாறு திருக்குறுங்குடிமுதலாகிய திருப்பதிகளில் ஜீயர்
செய்தருளின விமானகோபுரமண்டப ப்ராகாரமுதலாகியதும்
அவர்நியமித்த ஸ்ரீகாரிய கர்த்தரும் கட்டளைப்பாடுகளும் இதுவ
ரையும ப்ரகாசிக்கின்றது. எண்ணிறந்த ஆசார்ய புருஷர்களாலே
ஆசிரயிக்கப்பட்டிருக்கின்ற பெரியஜீயர் திருவடிகளை ஆசிரயித்த
அஷ்டதிக்கஜங்களாகிய வானமாமலைஜீயர்-திருமலை எம்பெருமா
னார்ஜீயர் - பட்டாபிரான் ஜீயர்-கோயில்கந்தாடையண்ணன்-எறு
ம்பியப்பா-அப்பிள்ளை-அப்பிள்ளான்-ப்ரதிவாதிபயங்கரமண்ணன்
ஆகிய இவ்வெட்டுத் திருவர்க்கங்களுள் கோயில் கந்தாடையண்
ணனையும் ப்ரதிவாதிபயங்கர மண்ணனையும் தமது திருப்பேரரான
ஜீயர்நயினாருக்கு ஈடும் ஸ்ரீபாஷ்யமும ஸாதிக்கும்படி நியமித்த
ருளினார்.

இப்படியே பெரியஜீயர் தமதுதிருவடிகளை ஆசிரயித்தும்
தம்மிடத் துபதேசம்பெற்றும் தமதுகடாக்ஷத்திற் கிலக்காகியும்
தமது திருமேனியைச் சேவித்தும் தம்முடைய தீர்த்தப்ரசாதங்
களை ஸ்வீகரித்தும் தம்முடைய திருவடிகளிலே ஆத்மஸமர்ப்ப
ணம்பண்ணியும் தம்முடைய திருநாமத்தைக் கீர்த்தித்தும் தமது
கல்யாணகுணங்களைக் கேட்டும் தாமிருந்த திக்கைநோக்கித் தண்
டனிட்டும் தம்முடைய வைபத்தை நினைத்தும் தம்மடியார்க்கடி
யாரோடு ஸம்பந்தப்பட்டும் தம்முடைய பாததூளிபட்ட பூதலத்
திலே பிறந்தும் இருக்கின்றவர்கள் உஜ்ஜீவிப்பைப் பெறும்படி
செய்து ஸமீபஸ்தர் தூரஸ்தர் இனிவருவோர் இவர்களியாவரும்

உய்யும்படி தம்மைப் பெரிய பெருமாள் நியமித்த அவதாரகாரியும் தலைக்கட்டின பெரியஜீயர் இனி பரமபதத்திற்போய் அடிமை செய்யவேண்டுமென்று திருமேனியில் நோய்சாத்திக்கொண்டிருக்கும்போது நம்பெருமாள் திருத்தேரிலேறிப் புறப்பட்டருளி மடத்துவாயலிற்சென்று ஸேவைசாதித்தருள ஜீயரும் ஸேவித்துத்தமமுடைய ஆர்த்திதீருமபடியாய்ப் பெருமாளையநுபவித்துப் பின்பு மிகவுந்தளர்ச்சிகொண்டிருக்க நம்பெருமாள் திரும்பவுமொருநாள் புறப்பட்டு மடத்துவாயலி லெழுந்தருளி நிற்க, ஜீயரும திருக்கைத்தலத்திலெழுந்தருளிப் பெருமாளை ஸேவித்து மிகவு மானந்தத்தை யநுபவித்துப் பின்பு வானமாமலைஜீயர் முதலானவர்களுக்குத் திருமுகம் போகவிட்டருள அவர்களும் கடுகப்புறப்பட்டுவந்து திருவடிகளை ஸேவித்துக்கொண்டு இருந்தார்கள்.

அப்போது திருமேனிநோவு சிறிது சமித்திருந்ததைக் கண்டு வானமாமலைஸ்ரீகாரியத்தினவஸரத்தால் மீண்டுவருகின்றேனென்று விண்ணப்பஞ்செய்து ஜீயாநுமதிகொண்டெழுந்தருளினார். பின்பு சிலநாளில் ஜியருக்கு முன்புண்டான பரமபதவாஞ்சை மிகுந்து ஆர்த்திபிறந்து அதனை அருபது பாசுரமாகச்செய்தருளினார். அது ஆர்த்திப்ரபந்தமென்று பெயர்பெற்றது. அப்போது மேல்நாட்டுத்தோழப்பரும அவர்தமையன் அழகியமணவாளப் பெருமான் நயினாரும் பட்டர்பிரான் ஜீயர் புருஷகாரமாகப் பெரியஜீயரை சேவித்துப்போய் இவர்க்காகத் திருநாராயணபுரத்தில் நித்யவாசத்தை யேற்றுக்கொண்டார்கள்.

பின்பு திருமலை நல்லான் திருவம்சஸ்தராயும் பரமதகண்டராயும் திருவேங்கடமுடையானுக்குப் புரோஹிதரா ப்ரபாவ சாலியாயுமிருக்கிற அண்ணராய சக்ரவர்த்தி ர் பட்டர்பிரான் ஜீயர் புருஷகாரமாக ஜீயர் திருவடிக ந்துநிற்க ஜீயரும் தமது திருவடிகளை யவர் திருமுடி வைத்தருளி அவரைப்பார்த்து நீர் நம்முடைய திருமலை னார் ஜீயரைத் திருவேங்கடத்தில் பிணிகள் நலியாதபடி ரக்ஷித்தும் நமது தர்சனத்துக்கான காரியங்களையும் செவ்வனே நிர்வஹித்தவரன்றோ?—என்றருளிச் செய்து பட்டர்பிரான் ஜீயர் திருக்கைகளால் பஞ்ச ஸம்ஸ்காரங்களைச் செய்வித்து தர்சனப்ரவர்த்தகராகும்படி செய்தருளினார். பின்பு மடத்தில் பிள்ளையும் ஜீயர் நயினாரும் பெரியஜீயர் திருவடிகளைப்பணிந்து சேவி

ருண்டிய அர்ச்சாரூபமான விக்ரஹம அடியேங்களுக்கு வேண்டுமென்று ப்ரார்த்திக்க ஜீயரும் அநுமதி பண்ணித் தம்முடைய திருக்கைச்செம்பை அநுசெய்தற்குக் காரணமாக ஸாதித்தருள அவர்களும் ஜீயருடைய அர்ச்சாவிக்ரஹம இரண்டு திருக்கோலமேறியருளப் பண்ணிக்கொண்டார்கள். பின்பு பரமபதத்திற்கெழுந்தருள்வதற்கு நாலுநாளமுன்பாக திவ்யப்ரபந்தம நாலாயிரத்தையும பெரிய திருவோலக்கமாகக் கேட்டருளி அதிகசந்தோஷத்தோடு முதலிகளுக்கெல்லாம ஹிதம சொல்லியருளித் தமது திருவாராதனமான உடையவரையும ஸ்ரீரங்கராஜரையும் ஸ்ரீகோசங்களையும் நமபெருமாளாதீனமாக்கி லோகாசாரியர்திருவடிகளைத் தியானித்துக்கொண்டு, ருத்ரோத்காரிவர்ஷம - மாசிமாஸம் - கிருஷ்ணபக்ஷம - துவாதசி - திருவோணம - இந்த திவ்யதினத்தில் பெரியஜீயர் திருநாட்டுக் கெழுந்தருளினர். இந்தலீலாவிபூதியில் பெரியஜீயர் எழுந்தருளி யிருந்தது - ௭௩ - திருநக்ஷத்ரம.

ஸ்ரீமணவாளமாமுனிகள்வைபவம்

முற்றிற்று.

இப்புவியிலரங்கேசர்க் கீடளித்தான்வாழியே
எழில்திருவாய்மொழிப்பிள்ளை யிணையடியோன்வாழியே
ஐப்பசியில்திருமூலத் தவதரித்தானவாழியே
அரவரசப்பெருஞ்சோதி யநந்தனென றும்வாழியே
எப்புவியும்ஸ்ரீசைல மேத்தவந்தோன்வாழியே
ஏராருமெதிராச ரெனவுதித்தான்வாழியே
முப்புரிநூல்மணிவட முககோல்தரித்தான்வாழியே
மூதரியமணவாள மாமுனிவன்வாழியே.

செந்தமிழ்வேதியர்சிந்தைதெளிந்து சிறந்துமகிழ்ந்திடுநாள்
சீருலகாரியர்செய்தருள் நற்கலை தேசுபொலிந்திடுநாள்
மந்தமதிப்புவிமானிடர்தங்களை வானிலுயர்த்திடுநாள்
மாசறுஞானியர்சேரெதிராசர்தம் வாழ்வுமுளைத்திடுநாள்
கந்தமலர்ப்பொழில சூழ்குருகாதிபன் கலைகள்விளங்கிடுநாள்
காரமர்மேனியரங்கநகர்க்கிறை கண்கள்களித்திடுநாள்
அந்தமில்சீர்மணவாளமுனிப்பரன் வந்தருள்செய்யுநாள்
அழகுதிகழ்ந்திடும் ஐப்பசியில் திருமூலமதெனுநாளே.

ஸ்ரீவரவரமுநயேநம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

பின்பு முதலிகளெல்லாரும் ஜீயர் நயினாரைக் கொண்டு சரம கைங்கர்யத்தை உடையவருடைய சரமகைங்கர்யம்போல நடத்தி ஆதிகேசவப்பெருமாள் திருவடிக்கீழாக வடபொன்னித் தென்பாவில் திருப்பள்ளிபடுத்தார்கள். பின்பு ஜீயர் நயினார் கந்தாடையண்ணன் முதலான முதலிகளெல்லாரும் சிஷ்ய க்ருத்யமாகத் திருமுடி விளக்குவித்துக்கொண்டு அவப்ருதம் கொண்டாடினார்கள். பின்பு செய்யவேண்டிய கைங்கர்யங்களெல்லாம் செய்து ஜீயர் வைபவத்துக்குத் தகுதியாகும்படி பெருக்கத் திருவத்யயனம் நடத்தி நம்பெருமாள் ஸந்நிதியிலிருந்து ஜீயர் நயினாருக்குத் திருமாலை திருப்பரியட்டம் சடகோபமுதலானவைகளை ப்ரஸாதிப்பித்து ஜீயர் திருவாராதனங்களையும் மடத்தையும் அவர் வசம் பண்ணி வாழ்வித்தருளினார்கள்.

பின்பு கந்தாடையாண்டானும் ஆசார்ய நியமனத்தின்படியே ஜீயர் திருப்பேரரான ஜீயர் நயினாருக்கு ஈடுமுப்பத்தாறாயிரமும் ஸாதித்தருளினார். ப்ரதிவாதிபயங்கரம அண்ணனும் அப்படியே ஸ்வாசாரிய நியமனத்தால் ஜீயர் நயினாருக்கும கந்தாடை நாயனுக்கும் ஸ்ரீபாஷ்யம் ஸாதித்தருளி இதிலே நமக்குக் கர்த்ருத்வமில்லை ஆசாரியரான பெரியஜீயரே இதற்குக் கர்த்தாவென்றருளிச்செய்தார்.

ப்ரதிவாதிபயங்கரம அண்ணனும் கந்தாடைப் போளிபாக்கம் நயினார் முதலானவர்களுக்கு ஸ்ரீபாஷ்யம ஸாதித்தருளினார். இந்த கந்தாடைப் போளிபாக்கம நயினார் அஷ்டகோத்ர நிபந்தனம செய்தருளினார். பின்பு வானமாமலை ஜீயர் பெரியஜீயர் திருநாட்டுக் கெழுந்தருளினசெய்தியைக்கேட்டு மிகவும் கிலேசித்து கைங்கரியத்துக்காகக்கூடிய த்ரவியங்களை யெல்லாங்கொண்டு கைங்கரியங்களை மஹாவிபவமாகச் செய்து தம்மையாஸ்ரயித்த சிலர்க்கு ஈடு முப்பத்தாறாயிரத்தை நடத்திக்கொண் டெழுந்தருளி யிருந்தார்.

அப்போது வாதூலகோத்ரரான தோட்டையங்காரப்பையும் அப்பாச்சியண்ணாவும் வானமாமலை ஜீயர்திருவடிகளை யாச்ரயித்தார்கள். இவருள் தோட்டையங்காரப்பை சோளஸிம்ஹபுரத்தில் வியாபகராக எழுந்தருளியிருந்தார். அப்பாச்சியண்ணா பெருமாள்

கோவிலில் பேரருளாளரைவிடாம லிருந்து கொண்டு அவர் திருக்கோயிலில் சூடிக்கொடுத்த நாய்ச்சியார் ஸந்நிதியையும் திருமண்டபத்தையும் கட்டுவித்தார். அந்தமண்டபத்தில் அடிப்பாதத்துடன் கூடின திருமணகாப்பு இன்றையவரைக்கு மிருக்கின்றது என்று பிரசித்தம்,

பட்டர்பிரான் ஜீயரும் திருமலையி லெழுந்தருளி யிருந்து அண்ணராய சக்ரவர்த்தி முதலானோரை தர்சன ப்ரவர்த்தகராக்கி அந்தியோபாய நிஷ்டையென்கிற ப்ரபந்தத்தையுஞ் செய்தருளினார். பின்பு பட்டர்பிரான் ஜீயர் திருவடிகளை யாச்ரயித்த மேல்நாட்டுத்தோழப்பரும் அவர் தமையனாரும பெரிஜீயர் நியமனத்தின்படியே திருநாராயண புரத்திலிருந்துகொண்டு திருநந்தவன முதலான கைங்கரியங்களைச் செய்துகொண்டு அங்கிருக்கின்றவர்களைப் பெரியஜீயர் அம்மானகத்திலேயே யிருக்கும்படி திருத்திக்கொண்டு ஸ்ரீசைலத்துக்கு மேற்கும் ஸ்ரீசைலேச தயாபாத்ர வைபவத்தை வளர்த்திக்கொண்டு ஸ்வாமி மடத்துக்குப் பின்னண்டையி லெழுந்தருளியிருந்தார்கள்.

பின்பு அவர்கள் ஸந்தான பரமபரையிலுண்டான ஐயன் முதலானோரும இந்தக் கைங்கரியங்களை நடத்திக்கொண்டு வந்தார்கள். ஸ்ரீவரவரமுனி தாஸரான எறும்பியப்பாவும் - வரவரமுனி விஷயமாகக் காவியம் சுப்ரபாதம் தினசரியை சம்பு ப்ரபந்தம் முதலானவைகளைச்செய்து பின்பு பெரியஜீயரைப் பிரிந்திருக்கமாட்டாது ஆர்த்திப்ரபந்த மருளிச்செய்தார். பின்பு ஜீயர் திருநாட்டிற்கெழுந்தருளி ஒருஸமவத்ஸரமாகி மாசிகிருஷ்ண துவாதசியில் ஜீயருடைய திருவத்யயனத்தை நம்பெருமாள் தம்சந்நிதியிலிருந்து தீர்த்த ப்ரஸாதம திருப்பணியாரம முதலான ஸகலவரிசைகளையும் மடத்துக்கு அனுப்பியருள ஜீயர்நயினார் கந்தாடையண்ணன்முதலான முதலிகளுக்கு நியமித்து நடத்தியருளினார். அது இன்றுவரையில் நடந்துவருகின்றது. ஜீயர்சேஷாவதார் மாகையால் ஒவ்வொருகாலங்களில நிஜவடிவு தோன்றப்பால்முதுசெய்வதற்குக்கட்டியிருந்தகல்தொட்டியில் ஸம்பந்தப்பட்ட ப்ரஸாதமுதலான உச்சிஷ்டத்தை சிஷ்யர் புசிக்கின்றது முறையாதலால் அவ்வாறே அதுமுதல் அனுஸரித்துக்கொண்டு அந்த ப்ரஸாதத்தை ஸகலமானசிஷ்யர்களும் பெரியஜீயர் திருவத்யயனத்தில விநியோகப் படுத்திக்கொண்டு வருகிறார்கள். பொன்னிறுலும்

வெள்ளியினாலுஞ் செய்ததைக் காட்டிலும், கல்லாற்செய்த பாத்திரம் விசேஷமாகும். இப்படி பெரியஜீயருடைய வைபவமானது உடையவர் வைபவம்போலவும் பட்டர் வைபவம்போலவும் மிகவும் விஸ்தாரமாகப்பூர்வர் கிரந்தங்களில் சொல்லியிருக்கின்றார்கள். இங்கு ஸங்க்ஷேபமாக எடுத்தெழுதப்பட்டது.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

வாநமாமலை ஜீயருக்குத் திருவவதாரஸ்தலம - வாநமாமலை. திருநக்ஷத்ரம - புரட்டாசியில் புநர்பூசம். ஆசாரியர் - பெரியஜீயர். திருவாராதநம்-அரங்கநகரப்பன். சிஷ்யர்-ஆத்தான் ராமாநுஜன்பிள்ளை முதலானவர்கள். திருநாமங்கள் - பூர்வாஸ்ரமத்தில் அழகியவரதன். பின்பு வாநமாமலை ஜீயர், ராமாநுஜஜீயர், வாநாத்ரியோகி, ராமாநுஜமுநி, இத்யாதிகள்.

பட்டர்பிரான்ஜீயருக்குத் திருவவதாரஸ்தலம்-திருமலை திருப்பதி. திருநக்ஷத்ரம்-கார்த்திகையில் புநர்பூசம். திருத்தகப்பனார்-அரணபுரத்தாழ்வான் வம்ஸ்யரான மதுரகவியய்யர். மூலம் - வடமாள். பாரத்வாஜகோத்ரம். ஸாமசாகை. த்ராஹ்யாயண ஸூத்ரம். குலவ்யவஹாரம-பத்தங்கி பரவஸ்து, ஆசாரியர் - பெரிய ஜீயர். திருவாராதநம-அழகியமணவாளர். சிஷ்யர்-பூர்வாச்ரமத்தில் பித்ருவ்ய புத்ரரான கோயிலப்பன் குமாரரான கோயிலப்பன, பரவஸ்து அண்ணன், பரவஸ்து அழகியமணவாளஜீயர், அண்ணராய சக்ரவர்த்தி, மேல்கோட்டுத்தோழப்பர், நைனார் முதலானவர்கள். இவர் செய்தருளின க்ரந்தம்-அந்திமோபாயநிஷ்டை. திருநாமங்கள்-பூர்வாஸ்ரமத்தில் கோவிந்த தாசரப்பன், கோவிகதர், பட்ட நாதர், பின்பு பட்டர்பிரான்ஜீயர், பட்டநாதமுநி இத்யாதிகள்.

திருவேங்கடஜீயர்க்குத் திருவவதாரஸ்தலம்-திருமலை, ஆசாரியர்-பெரியஜீயர். திருநாமங்கள்-வேங்கடயோகி, திருவேங்கடஜீயர், திருவேங்கட ராமாநுஜஜீயர்.

கோயில்கந்தாடை அண்ணனுக்குத் திருவவதாரஸ்தலம்-கோயில். திருநக்ஷத்ரம -புரட்டாசிமாசத்தில் பூரட்டாதி. ஆசார்யர்-பெரியஜீயர். சிஷ்யர்-கோயில் கந்தாடை அப்பன், நாயன்பிள்ளை, அப்பா முதலானவாகள். திருநாமங்கள் - அண்ணன், வரத நாராயணர்.

ப்ரதிவாதி பயங்கரம அண்ணாவுக்குத் திருவவதாரஸ்தலம்-பெருமாள்கோயில், திருநக்ஷத்ரம்-ஆடிமாசத்தில் புஷ்யம். குடி-மூடும்பை. ஸ்ரீவத்ஸகோத்ரம். யஜுர்ஸ்ஸாகை. பஞ்ச சம்ஸ்காரங்கள் ஸ்ரீபாஷ்யம் சாதித்தருளின ஆசார்யர் - வேதாந்தாசார்யர் குமாரரான நைனார். சிஷ்யர்-குமாரர், அண்ணனப்பா, அனந்தாசார்யர், அழகிய மணவாளப்பெருமாள் நைனார். திருநாமங்கள்-ஹஸ்திகிரிநாதர், அண்ணா ப்ரதிவாதி பயங்கரர், பரவாதிபயங்கரர்.

எறும்பியிலப்பாவுக்குத் திருவவதாரஸ்தலம்-எறும்பி. திருநக்ஷத்ரம்-அற்பிசிமாசத்தில் ரேவதி. குலம்-வடமாள். குடி-மூடும்பை. ஸ்ரீவத்ஸகோத்ரம். ஆபஸ்தம்பஸூத்ரம். திருவாராதனம்-சக்ரவர்த்தித்திருமகனார். திருத்தகப்பனார் - பெரிய சரண்யாசார்யர். ஆசார்யர்-பெரிஜீயர். சிஷ்யர்-குமாரர் பெரியவப்பா. அவர் செய்தருளின க்ரந்தங்கள்-வரவரமுனிசரித்ரம், பூர்வதிநசர்யை, உத்தர திநசர்யை, முதலானவை. திருநாமங்கள், அப்பா, தேவராஜர்.

அப்பிள்ளை, ஜீயர் நியமனத்தாலே அஞ்சு திருவந்தாதிக்கும் உரை யருளிச்செய்து யதிராஜவிம்சதிக்குப் பரக்க வ்யாக்யாநமருளிச்செய்தார்.

அப்பிள்ளாணுக்குத் திருவாராதனம - ஆசார்யர் பெரிஜீயர்.

கந்தாடை போரேற்றுநாயனாருக்கு ஆசார்யர்-பெரியஜீயர். ஸ்ரீபாஷ்யம் ப்ரஸாதித்தருளினவர் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணா.

எட்டூர் சிங்கராசார்யருக்குத் திருவவதாரஸ்தலம்-எட்டூர். திருநக்ஷத்ரம்-ஆடிமாசம் உத்திரட்டாதி. திருத்தகப்பனார் - திருமலைநம்பி வம்ஸ்யரான எட்டூர் ஸ்ரீநிவாஸாசார்யர். திருக்குமாரர் எட்டூர் வேங்கடாசார்யர். திருப்பேரனார் அத்தங்கி சிங்கராசார்யர். குலம்-வடமாள். குடி-சொட்டை. சடமர்ஷணகோத்ரம். யஜுஸ்ஸாகை. திருநாமங்கள், ந்ருசிமஹகுரு, பஞ்சாநந ப்ரியதேசிகர், குமாரர் தாதாசார்யர். பஞ்ச ஸமஸ்காரங்களும், ஸ்ரீபாஷ்யமும், ஸ்ரீராமாயணாதிகளும் ஸாதித்த ஆசாரியர் திருத்தகப்பனார். ஈடு முதலான வ்யாக்யாநங்களும் ரஹஸ்ய க்ரந்தங்களும் ஜீயர் ஸந்நிதியிலே. சிஷ்யர்கள், குமாரர், எங்களாழ்வான் வம்ஸ்யரான ராமாநுஜாசார்யர், சேஷய்யங்கார், முதலானவர்கள். திருவாராதநம் அழகியசிங்கர், மலைகுனியநின்றானும், வெண்ணெய்க்காடும் பிள்ளையும். எம்பெருமானார்க்குகப்பாகஜ்ஞாநபுத்ரவம்ஸ்யரான கீரொருவ்யாக்யாநம் செய்யுமென்று நியமிக்கையாலே ராமாநுஜ நூற்றந்தாதி

க்கு வ்யாக்யாகம் செய்தருளினார். ஜீயருக்கு நாதவம்ஶ்யரென்று இவரிடத்தில் விசேஷாதரம் நடந்துபோரும்,

ஜீயர் நைனாருக்குத் திருத்தகப்பனார்-பெரிய ஜீயர். பூர்வாஶ்ரமத்தில் குமாரர்-ராமாநுஜ ஜீயர். திருவாராதநமும் ஆசார்யரும் பெரியஜீயர். இவருக்குத் திருவாய்மொழி ஈட்டை ப்ரஸாதித்தருளினவா-கோயில்கந்தாடை அண்ணன். ஸ்ரீபாஷ்யம் ப்ரஸாதித்தருளினவர்-ப்ரதிவாதிபயங்கரம அண்ணா. திருநாமங்கள் அழகிய மணவாளப்பெருமாள் நைனார், ஜீயர் நைனார், அபிராமவரர் இத்யாதிகள்.

ஆத்தான் ராமாநுஜப்பிள்ளைக்கு குடி-முடும்பை. ஸ்ரீவத்ஸ கோத்ரம. யஜுஶ்ஶாகை. திருநக்ஷத்ரம பங்குனியில் புநர்பூசம்.

பரவஸ்து அண்ணனுக்குக் குடி-ஆனியூர் குலம்-வடமா கர்ககோத்ரம். யஜுஶ்ஶாகை. திருநக்ஷத்ரம-தைமாஸத்தில் புநர்பூசம். திருத்தகப்பனார்-நடுவிலாழ்வான் வம்ஶ்யரான ஆனியூரழகியமணவாளர். குமாரர்-திருவாய்மொழிப்பெருமாளநைனார். இவர் ஸ்வீக்ருதபுத்ரர், ஸிஷ்யர், முடும்பை பட்டர்பிரான் ஜீயர் முதலானவர்கள்.

பரவஸ்து அழகிய மணவாளஜீயருக்குத் திருவவதாரஸ்தலம்-திருமலை திருப்பதி. திருநக்ஷதரம்-ஆனியில் அஶ்வினி. குலம்-வடமாள். பாரத்வாஜகோத்ரம. ஸாமசாகை. திருத்தகப்பனார்-கோவிந்ததாஸரப்பனுக்குப்பித்ருவ்யபுத்ரரானகோயிலப்பன். தமயனார்-கோயிலப்பன். ஆசார்யர் பட்டர்பிரான் ஜீயர். ஸ்ரீபாஷ்யத்தையும,திருவாய்மொழியினீட்டையும ப்ரஸாதித்தருளினவர் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணா. மூவாயிர வ்யாக்யாநங்களும்,ரஹஸ்ய வ்யாக்யாநங்களும பரசாதித்தருளினவர்-பரவஸ்து அண்ணன். ஸிஷ்யர்-அண்ணன்குமாரரான திருவாய்மொழிபபெருமாள்நைனார்,கோவிந்ததாஸரப்பன்,திருப்பேரனாரான பெருமாளய்யங்கார் முதலானவர்கள், இவர் செய்தருளின க்ரந்தங்கள், குருமுக்தாவ்ளி, பட்டநாத[illegible]வம் முதலானவை.

[illegible]ஸத்வமண்ணனுக்குத் திருவாய்மொழியினீடு ப்ரஸாதித்தவர்-வாநமாமலை ஜீயர்.பொழில்பாக்கத்துப் போற்றி நைனாருக்குமப்படியே.

கோயில் கந்தாடை நாயனுக்குத் திருத்தகப்பனார் கோயில் கந்தாடை அண்ணன். திருநக்ஷத்ரம் மார்கழியில் உத்திரட்டாதி.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# குருபரம்பரா ஸங்க்ரஹம்.

பெரியபெருமாள் தொடங்கிப் பெரிய ஜீயர்வரைக்கும் குருபரம்பராக்ரமம். எம்பெருமான் பெரியபிராட்டியார் சேனைமுதலியார் நம்மாழ்வார் நாதமுநிகள் உய்யக்கொண்டார் மணக்கால் நம்பி ஸ்ரீ ஆளவந்தார் பெரியநம்பி உடையவர் எம்பார் பட்டர் நஞ்ஜீயர் நம்பிள்ளை வடக்குத்திருவீதிப்பிள்ளை பிள்ளைலோகாசாரியர் திருவாய்மொழிப்பிள்ளை பெரியஜீயர். இது உலகத்திலே பிரசித்த ..ரயண பரம்பரை. இன்னும் எழுபத்துநாலு ஸிம்மாசநாதிபதிகளுடைய வம்சஸ்தருக்குத் தனித்தனியே உடையவர் தொடங்கி ஆச்ரயண குருபரம்பரைகள் உண்டாயிருக்கும். குருபரம்பரையானது ஆச்ரயணபரம்பரையும் கிரந்தபரம்பரையுமாக இரண்டாயிருக்கும், அதில் கிரந்தபரம்பரையானது இரகசிய கிரந்த பரம்பரையும் திவ்யப்பிரபந்த வியாக்யான பரம்பரையும் ஸ்ரீபாஷ்ய சுருதப்பிரகாசிகா கிரந்த பரம்பரையுமாக மூன்று வகைப்பட்டிருக்கும்.

அதிலே ரகசிய க்ரந்தபரம்பரையானது உடையவர் எம்பார் பட்டர் நஞ்ஜீயர் நம்பிள்ளை வடக்குத்திருவீதிப்பிள்ளை பிள்ளைலோகாசாரியர் கூரகுலோத்தமதாசர் திருவாய்மொழிப்பிள்ளை பெரியஜீயர் வரையிலிருப்பதாகும். திவ்யபிரபந்த வியாக்யானபரம்பரையானது, உடையவர் திருக்குருகைப்பிரான்பிள்ளான் எம்பார் பட்டர் நஞ்ஜீயர் நம்பிள்ளை ஈயுண்ணிமாதவர் ஈயுண்ணிபத்மநாபர் கோலவராகநயினார் நாலூர் தேவராசர் திருவாய்மொழிப்பிள்ளை பெரியஜீயர். இதிலே உடையவரெம்பாரென்றே கிரமம். பிள்ளானும் ஆழ்வானும் உபகாரகதையைக்கொண்டு இதிலே அடைப்புண்டிருப்பர். பட்டர் நஞ்ஜீயர் நம்பிள்ளை பெரியவாச்சான்பிள்ளை அவர் குமாரர் நயினாராச்சான்பிள்ளை வாதிகேசரி அழகிய மணவாளஜீயர் அவர்சிஷ்யர் திருமாலையாண்டான் திருவம்சஸ்தரான வாதிகண்டீரவர் இத்தியாதியாக ஒரு அவாந்தரப்பிரிவுமுண்டு. இதிலே நயினாராச்சான்பிள்ளை செய்தருளின பிரபந்தங்கள் முக்தபோகாவலி - தத்வசங்கிரகம - ஞானார்ணவம்- சரமோபாய நிர்ணயம் முதலாகப் பலவுமுண்டு. வாதிகேசரிகள் செய்தரு